In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"க$_{3}$ாயத்ரீ"யின் ஒளி

ஆசிரியர்

Delhi. T. ராகவேந்திரன்

கோயம்புத்தூர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"காயத்ரீ"யின் ஒளி

ஆசிரியர்

டெல்லி T. ராகவேந்திரன்

"PADMALAYA"

G-1/ Marutham Elegance,

171, Chinnammal Street,

K.K. Pudur, Coimbatore - 641 038

Ph : 0422 - 6547418, 98947 09531

Email : traghavendran@yahoo.com

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"கூாயத்ரீ" யின் ஒளி

ஆசிரியர் : டெல்லி T. ராகவேந்திரன்

© All Rights Reserved

பக்கங்கள்	:	160+xx
முதற் பதிப்பு	:	செப்டம்பர் 2009
பிரதிகள்	:	1000
விலை	:	ரூ.100 + Postage ரூ.20/-
வெளியிடுபவர்	:	டெல்லி T. ராகவேந்திரன்
புத்தகம் கிடைக்குமிடம்	:	'Padmalaya', G-1/ Marutham Elegance, 171, Chinnammal St, K.K. Pudur, Coimbatore - 641 038 Ph : 0422 - 6547418, 98947 09531
அச்சிட்டோர்	:	ஸ்ரீ சக்தி பிரமோஷனல் லித்தோ பிராசஸ் 54 இராபர்ட்சன் ரோடு, இர. ச. புரம் கோயம்புத்தூர் - 641 002 தொலை பேசி : 0422 - 2450133

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீமத்ஹனுமத்பீம மத்வாந்தர்கத
ராமக்ருஷ்ண வேதவ்யாஸாத்மக
லக்ஷ்மி ஹயக்ரீவாய நம:

ப்ரதமோ ஹனுமன் நாம
த்விதீயோ பீம ஏவ ச |
பூர்ணப்ரஜ்ஞ த்ரீதியஸ்து
பகவத் கார்யஸாதக: ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

SHRI RAGHOOTTAMA TEERTHA

VRINDAVANA, MANAMPOONDI TIRUKKOILUR



यद्वृंदावन पूर्वतः फलवती धात्रीजगत्पावनी याम्यायांतुपिनाकिनी चळदळो मूर्तित्रयादिष्ठितः
वारुण्यांदिशिवामतः प्रतिकृतौछायाकृता तिंत्रिणी तद्वृंदावनमध्यगो गुरुवरो भूयात्सनः श्रेयसे ॥

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ ஜகத்குரு மத்வாசார்யரின் மூல சம்ஸ்தானம் ஆன ஸ்ரீஉத்தராதி மடத்தின் பரம்பரையில், தற்பொழுது பீடாதிபதிகளாய், பிரகாசிக்கின்ற, ஞான, பக்தி, வைராக்யமே உருவமாக உள்ள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ 1008 ஸ்ரீ ஸத்யாத்மதீர்த்த ஸ்ரீபாதங்களவர்

மோத$_3$தீர்த்தகராப்ஜோத்த ஸத்யாத்ம யதிஸேகரம் |

நமாமி அனிஷம் ப$_4$க்த்யா தத்வஞானார்த ஸித்த$_4$யே ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Shri Bhandarakeri Mutt, Udupi

Sri Bhagavatha Niketana, # 1343, 1st H Main Road,
8th Cross 2nd STAGE, GIRINAGAR, BANGALORE 560085
Phone: 26721527, 26721068, Mobile: 9448381527

' ಹೃದಯವಾಣಿ "

ಶ್ರೀ ಗಾಯತ್ರೀ ಮಂತ್ರವು ವೇದಗಳ ಮಾತಾ ಎಂಬುದಾಗಿ ಪ್ರಖ್ಯಾತವಾಗಿದೆ.ಅರ್ಥಾತ್ ಗಾಯತ್ರೀಮಂತ್ರದಿಂದ ಸಕಲ ವೇದಗಳು ಅಭಿವ್ಯಕ್ತಿಯನ್ನು ಹೊಂದಿದೆ.ಇಂತಹ ಗಾಯತ್ರೀ ಮಂತ್ರದಿಂದ ಪ್ರತಿಪಾದ್ಯನು ಸೂರ್ಯಮಂಡಲ ಮಧ್ಯಲ್ಲಿರುವ ಶ್ರೀಮನ್ನಾರಾಯಣನೆ ಎಂಬುದಾಗಿ ನರಸಿಂಹ ಪುರಾಣ ತಿಳಿಸಿದೆ.ಆದುದರಿಂದ ಶ್ರೀಮನ್ನಾರಾಯಣನೆ ಗಾಯತ್ರೀ ಎಂದು ತಿಳಿದು ಶ್ರೀ ಮನ್ನಾರಾಯಣನನ್ನೆ ಮಂತ್ರದಿಂದ ಉಪಾಸನೆ ಮಾಡಬೇಕು.ಭಗವದ್ಗೀತೆಯಲ್ಲಿ ಭಗವಾನ್ ಶ್ರೀಕೃಷ್ಣನೇ ಗಾಯತ್ರೀ ಛಂದಸಾಮಹಮ್ ಎಂಬ ಭಗವದ್ಗೀತಾ ವಚನದಲ್ಲಿ ತಾನೆ ಗಾಯತ್ರೀ ದುಹೇಳಿಕೊಂಡಿದ್ದಾನೆ.ಗಾಯತ್ರೀ ಮಂತ್ರದಿಂದ ತನ್ನ ಗುಣಗಾನಮಾಡುವ ಭಕ್ತರನ್ನು ಸಂರಕ್ಷಣೆ ಮಾಡುವದರಿಂದ ಭಗವಂತನಿಗೆ ಗಾಯತ್ರೀ ಎಂದು ಹೆಸರು. ಪುರುಷನಾಗಿದ್ದರೂ ಭಗವಂತನಿಗೆ ಗಾಯತ್ರೀ ಎಂಬ ಸ್ತ್ರೀ ಲಿಂಗ ಶಬ್ದವು ಯುಕ್ತವೆ ಆಗಿದೆ.ಏಕೆಂದರೆ ಸಾಕ್ಷಾತ್ ತನ್ನ ದೇಹದಿಂದಲೆ ಬ್ರಹ್ಮ,.ಇಂದ್ರ ,ಅಗ್ನಿ ಮುಂತಾದ ದೇವತೆಗಳನ್ನು ಸೃಷ್ಠಿ ಮಾಡುವ ಸಾಮರ್ಥ್ಯ ಭಗವಂತನಿಗೆ ಇ ದೆ.ಸಾಕ್ಷಾತ್ ದೇಹದಿಂದ ಸೃಷ್ಠಿ ಮಾಡುವ ಸಾಮರ್ಥ್ಯವೆ ಸ್ತ್ರೀತ್ವ.ಸಇದನ್ನು ಪಡೆದವನಾಗಿರುವುದರಿಂದಲೆ ಅವನಿಗೆ ಗಾಯತ್ರೀ ಎಂಬ ಸ್ತ್ರೀ ವಾಚಕ ಶಬ್ದ ಸಮಂಜಸವೇ ಆಗಿದೆ.ಇದಲ್ಲದೆ ಕುದುರೆಮುಖವುಳ್ಳ ಭಗವಂತನ ಸ್ತ್ರೀ ರೂಪವು ಗಾಯತ್ರೀ ಎಂದು ಕರಸಿ ಕೊಂಡಿದೆ.ಸೃಷ್ಠಿ ಕರ್ತನಾಗಿರುವದಿಂದ ಸವಿತಾ ಎಂದು ಕರೆಸಿಕೊಳ್ಳುವ.ಸೃಷ್ಟ್ಯಾದಿಗಳನ್ನು ಲೀಲೆಯಿಂದ ಮಾಡುವದರಿಂದಲು 'ದೇವ' ಎಂದು ಕರೆಯಿಸಿಕೊಳ್ಳುವ.ಭಗವಾನ್ ನಾರಾಯಣನ ಸ್ವರೂಪವು ಭರ್ಗಎನಿಸಿದೆ.ಪ್ರಕಾಶ,ಆನಂದ,ಜ್ಞಾನ ಸ್ವರೂಪವಾದದರಿಂದ ಭರ್ಗ ಎಂದು ಕರೆಸಿಕೊಳ್ಳುತ್ತದೆ.ಗಾಯತ್ರೀ ಮಂತ್ರವನ್ನು ಭಕ್ತಿಯಿಂದ ತನ್ನ ಉಪಾಸನೆ ಮಾಡುವ ಭಕ್ತ ಜನರ ಪಾಪವನ್ನು ಸುಟ್ಟು ಭಸ್ಮ ಮಾಡುವದಿಂದಲು ಆ ರೂಪವು ಭರ್ಗ ಎನಿಸಿದೆ.ಇಂತಹ ಭಗವಂತನ ಸ್ವರೂಪವನ್ನು ಸದಾ ಧ್ಯಾನಿಸ ಬೇಕು.ನಮಗೆಲ್ಲರಿಗು ಸದ್ಬುದ್ಧಿಯನ್ನು ಪ್ರೆರಣೆ ಮಾಡಲಿ ಎಂದು ಪ್ರಾರ್ಥಿಸ ಬೇಕು.ಇಂತಹ ಮಹತ್ವವುಳ್ಳ ಗಾಯತ್ರೀ ಮಂತ್ರದ ಜಪದ ಕ್ರಮವನ್ನು ಮತ್ತು ಸಂಧ್ಯೂಪಾಸನೇಯ ವ್ಯಶಿಷ್ಯವನ್ನು ತತ್ವ ಜಿಜ್ಞಾಸುಗಳಾದ ಟಿ.ರಾಘವೇಂದ್ರ ರಾಯರು "ಗಾಯತ್ರೀಪ್ರಕಾಶದಲ್ಲಿ" ನಿರೂಪಿಸಿದ್ದಾರೆ.ಈ ಗ್ರಂಥವನ್ನು ಯಶಸ್ವಿಯಾಗಿ ಪ್ರಕಾಶಪಡಿಸಿ. ಅವರು ಜನತೆಯ ಹೃದಯಾಕಾಶದಲ್ಲಿ "ಗಾಯತ್ರೀ ಪ್ರಕಾಶವನ್ನು" ಬೀರಿ ಅಲ್ಲಿರುವ ಅಂಧಕಾರವನ್ನು ತೊಲಗಿಸಲಿ.ಜಿಜ್ಞಾಸುಗಳು ಈ ಗ್ರಂಥದ ಉಪಯೋಗ ಪಡದು ಕೃತಾರ್ಥರಾಗಲಿ.ಶಾಸ್ತ್ರ ರುಚಿ ಶೀಲರಾದ ಟಿ.ರಾಘವೇಂದ್ರ ರಾಯರು ಈ ಗ್ರಂಥದ ರಚನೆಯಿಂದ ಶ್ರೀ ಹರಿ ವಾಯು ಗುರುಗಳ ಪ್ರೀತಿಗೆಪಾತ್ರರಾಗಲಿ ಎಂದು ನಮ್ಮ ಉಪಾಸ್ಯ ಮೂರ್ತಿಯಾದ ಶ್ರೀ ರಾಮಚಂದ್ರದೇವರನ್ನು ಪ್ರಾರ್ಥಿಸುತ್ತೆವೆ

ಭಂಡಾರಕೇರಿ ಮಠ

ಉಡುಪಿ

ಇತ್ಯನೇಕ ಸಪ್ರೇಮ ನಾರಾಯಣ ಸ್ಮರಣೆಳು

ಶ್ರೀ ವಿದ್ಯೇಶ ತೀರ್ಥರು

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ காயத்ரீ என்பது வேத மாதா என்று பிரசித்தமாயுள்ளது. அதாவது காயத்ரீ மந்திரத்தின் மூலமே அனைத்து வேதங்களும் வெளிப்படையாயின. இப்பேர்ப்பட்ட காயத்ரீ மந்திரத்தினால் அறியப்படுவன் சூர்ய மண்டலத்திலிருக்கும் ஸ்ரீமன் நாராயணனே என்று நரஸிம்ம புராணம் கூறுகிறது. ஆகவே, ஸ்ரீமன் நாராயணனே 'காயத்ரீ' என்று தெரிந்து, காயத்ரீ மந்திரத்தை உபாஸனை செய்ய வேண்டும். பகவத் கீதையில் காயத்ரீ "சந்தஸாமஹம்" என்று வசனத்தில் ஸ்ரீ கிருஷ்ணன் 'நானே காயத்ரீ மந்திரம்' என்று கூறியுள்ளான். காயத்ரீ மந்திரத்தால், தன்னுடைய கல்யாண குணங்களை உபாஸிக்கும் பக்தர்களை தான் ரக்ஷணை செய்வதால் பகவானுக்கு 'காயத்ரீ' என்று பெயர். ஆகவே ஸ்ரீமன் நாராயணன் புருஷனாயிருப்பினும் 'காயத்ரீ' என்ற பெண் சொல் பொருத்தமாகிறது. ஏனென்றால் தன் தேகத்திலிருந்தே ப்ரஹ்மா, இந்திரன், அஃனி முதலிய தேவதைகளை ஸ்ருஷ்டி செய்யும் அவன் ஸாமர்த்யமே, இதற்குச் சான்று. ஆகையால் 'காயத்ரீ' என்ற வாசகம் பகவானுக்கு மிகவும் பொருத்தமே. மேலும் குதிரைமுகமுள்ள தன்னுடைய ஸ்த்ரீ ரூபத்தினால் பகவான் 'காயத்ரீ' என்ற பெயரால் அழைக்கப்படுகிறான்.

ஸ்ருஷ்டிக்குக் காரணமாயிருப்பதால் 'ஸவிதா' என்ற பெயருடையவனாகிறான். ஸ்ருஷ்டி முதலிய காரியங்களைச் செய்வதனால் 'தேவ' என்ற பெயருடையவனாகிறான். பகவான் நாராயணனின் ரூபம் 'ப$_4$ர்க' என்று சொல்லப்படுகிறது. ஆனந்தம், ஞானம் மற்றும் தேஜஸ் (ஒளி) ஆகியவற்றையே தன்னுடைய தேகமாயிருப்பதனால் 'ப$_4$ர்க' என்ற பெயரால் அழைக்கப்படுகிறான். காயத்ரீ மந்திரத்தை பக்தியுடன் உபாஸனை செய்யும் ப$_4$க்தர்களின் பாவங்களை சுட்டு பஸ்மம் செய்வதனால், பகவானின் ரூபம் 'ப$_4$ர்க' என்றழைக்கப்படுகிறது. இப்பேர்ப்பட்ட பகவானின் ரூபத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எப்பொழுதும் த்யானம் செய்ய வேண்டும். பகவான் நம் எல்லோருக்கும் நல்ல புத்தியை ப்ரேரணை செய்யுமாறு அவனிடம் ப்ரார்த்தனை செய்ய வேண்டும். பிரசித்தமாயுள்ள இந்த 'காயத்ரீ' மந்திரத்தின் மஹத்துவம், அதை ஜபம் செய்யும் விதிமுறைகள் மற்றும் ஸந்த்யோபாஸனையின் முக்யத்துவத்தையும், தத்வ சிந்தனையுள்ள T. ராகவேந்திரன் அவர்கள் 'காயத்ரீ ஒளி' என்ற புத்தகத்தில் மிகவும் விளக்கமாக நிருபித்துள்ளார். இந்நூலை அனைவருக்கும் பயன்பெறும் வகையில் வெளிக்கொணர்ந்ததின் மூலம் ஜனங்களின் ஹ்ருதய ஆகாயத்தில் 'காயத்ரீ' ஒளி பரவி அங்கிருக்கும் அஜ்ஞானம் என்ற இருளைப் போக்கடிக்கட்டும். தத்வ சிந்தனையாளர்கள் இந்நூலை உபயோகப்படுத்தி மேன்மை அடைவார்களாக. ஸாஸ்த்ர சிந்தனையில் மிகவும் ஈடுபாடு கொண்ட T. ராகவேந்திரன், இப்புத்தகத்தை எழுதியதன் மூலம் ஸ்ரீ ஹரி வாயு குருகளின் ப்ரீதிக்குப் பாத்ரராக அனுக்ரஹிக்குமாறு நாம் உபாஸிக்கும் மூர்த்தியான ஸ்ரீ ராமசந்திர தேவனிடம் ப்ரார்த்திக்கிறோம்.

கோயம்புத்தூர்
22.08.2009

இப்படிக்கு
ஸ்ரீ நாராயண ஸ்மரணகளு
ஸ்ரீ வித்யேஷதீர்த்த
ஸ்ரீ பண்டாரகேரி மடம்
உடுப்பி

(கன்னடத்திலிருந்து தமிழாக்கம், Delhi -T. Ragavendran)

முகவுரை

In Public domain: Digitization Muthulakshmi Research Academy

டி.எஸ். ராகவேந்திரன்
எம்.ஏ.பி.எல். அட்வகேட்

விட்டல் விஹார்
45 பாரதி பார்க் கிராஸ் ரோடு-3,
கோயமுத்தூர் 641 011
தமிழ்நாடு

டெல்லி திரு. T. ராகவேந்திரன் அவர்கள் எழுதியுள்ள 'காயத்ரீயின் ஒளி' மற்றும் அதற்கு சம்பந்தப்பட்ட விஷயங்களின் தொகுப்பைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். ஆசிரியர் அவர்கள் டெல்லியிலிருந்து ஓய்வு பெற்று நம் கோவை மாநகரில் வசிப்பது, தமிழ் நாட்டிற்கு ஒரு நல்ல பாக்யம் என கருதுகிறேன்.

(2) இந்த புஸ்தகத்தில் இரண்டு பாகங்கள் உள்ளன. முதல் பாகத்தில்

பாகம் 1

1. காயத்ரீயின் மஹிமை
2. காயத்ரீ மந்திரத்தில் பிரார்த்தனை செய்ய வேண்டிய தெய்வம் யாது ?
3. காயத்ரீயினால் பயனடைந்தவர்கள்
4. ஸந்த்யா ரகசியம்
5. ஸந்த்யா விஷயத்தில் பிரமாணங்கள் (ஆதாரங்கள்)
6. ஸ்நானம், குளியல், ஆசமனம் - விவரங்கள்
7. ப்ராணாயாமம்
8. காயத்ரீ சப்தத்தின் விமர்சனம்
9. வ்யாஹ்ருதி விசாரம்
10. காயத்ரீயைப் பற்றி ஸ்ம்ருதிகளின் விளக்கம்
11. காயத்ரீ வர்ணமாலா ஸ்தோத்திரம்
12. ஸந்த்யோபாசனையை புறக்கணிப்பதால் ஏற்படும் தீய விளைவுகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாகம் 2

13. ஸந்த்யா வந்தனம்

(3) பரவித்யாவில், அதாவது பிரம்ம சூத்திரத்தில் முதல் அத்தியாயத்தில் முதல் பாதத்தில் 25-வது சூத்திரம் (1-1-25)

"छन्दोऽभिधानान्नेति चेत्, न, तथा चेतोऽर्पण निगदात् तथा हि दर्शनम्"

என்று உள்ளது. அங்கு ஸாந்தோக்ய உப நிஷத்தில் 3-12-1 மந்திரத்தில் 'காயத்ரீ' என்ற பதம் காணப்படுகிறது. அந்த ஸப்தம் 'காயத்ரீ' என்ற 24 வர்ணங்கள் (அஷரங்கள்) வ்ருத்தத்தைக் கூறுகிறதா அல்லது ஸ்ரீ விஷ்ணுவைக் கூறுகிறதா, என்ற சந்தேகத்திற்கு <u>அந்த 'காயத்ரீ' பதம் விஷ்ணுவைத் தான் குறிக்கிறது என நிருபணம் செய்யப்பட்டுள்ளது</u>. ஏனென்றால் அவர் 'காயத்ரீ' பதத்தின் அர்த்தமாயுள்ள குணங்களின் ஸ்வரூபி என்று நம் மனதை அவரிடம் சமர்ப்பணம் செய்ய வேண்டும் என உபாசனையின் பொருட்டு கூறப்பட்டுள்ளது.

"गायति त्रायति च" इत्यादि [छां 3.12.1].

எல்லாவற்றையும் விஷ்ணு காப்பாற்றுகிறார். ஆகையால் அவர் 'காயத்ரீ' என்ற பதத்தால் மிக முக்கியமாக கூறப்படுகிறார். இம்மாதிரியாக மனதில் ஜபம் செய்து 10,000 வருடங்கள் காயத்ரீ ஜபம் செய்து விஸ்வாமித்ர முனிவர் அவர்கள் பரமாத்மா காயத்ரீயை குதிரை வடிவில் (ஹயவதன) தர்சனம் செய்தார் எனக் கூறப்பட்டுள்ளது. விஸ்வாமித்ரர் ஒரு அதிசய சரித்திரத்தை படைத்தவர். அவர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஷத்திரியராக சந்திர வம்சத்தில் பிறந்து தன்னுடைய காயத்ரீ ஜப வலிமையால் அதே ஜன்மத்தில் ப்ராமணராக மாறினார். இது அவர் செய்த காயத்ரீ ஜப மஹிமை - வலிமை. இது ஒரு மிக சிறந்த எடுத்து காட்டு

4. காயத்ரீ ஜபத்தை அநேக மதத்தினர் செய்து வருகிறார்கள். ஜீவன், ப்ரஹ்மம் ஒன்று என கூறுகிறவர்கள். ஜீவன் ஆனந்தம் மோக்ஷத்தில் வித்தியாசம் கிடையாது என கூறுகிறவர்கள். எல்லோரும் இந்த காயத்ரீ ஜபத்தை செய்கிறார்கள், அவர்களுக்கும் இந்த ஜபத்தால் பயன் உண்டா என ஆராய்ந்து பார்த்தால், அவர்களுக்கு எந்த பயனும் கிடையாது என்று அநேக ஆதாரங்களினால் தெரிய வருகிறது. இதை நான் அநேக வருஷங்களாக கூறி வருகிறேன். ஆசிரியர் திரு. T. ராகவேந்திரன் அவர்கள் எனக்கு இதை எழுத ஒரு வாய்ப்பு கொடுத்த இதற்கு நான் மிகவும் கடமைப்பட்டுள்ளேன்.

5. இந்த காயத்ரீ ஜபத்தால் மிக அதிக பயன்அடைய வேண்டும் என்றால், ஜகத் குரு ஸ்ரீ மத்வாசாரியர் அவர்கள் இயற்றியுள்ள அனுவ்யாக்யானம் என்ற மிக அரிய நூலில் உள்ள இரண்டு ஸ்லோகங்களை கூறிவிட்டு ஜபத்தை ஆரம்பிக்க வேண்டும். ஆச்சாரியார் அவர்கள் காயத்ரீ மந்திரத்தின் ஸாரத்தை அங்கு விளக்கி உள்ளார்கள்.

ஸ்லோகம் : 9 [ओतत्वाची ह्योङ्कारो वक्त्यसौ तद्गुणोन्नाम् । स एव ब्रह्मशब्दार्थो नारायणपदोदितः ॥ स एव भर्गशब्दार्थो व्याहर्तान् च भूमतः । भावनाच्चैव सुत्वाच्च सोऽयं पुरुष इत्यपि ॥]

स्लोகம் : 10 ॥ स एव भर्गशब्दार्थो व्याहर्तान् च भूमतः । भावनाच्चैव सुत्वाच्च सोऽयं पुरुष इत्यपि ॥]

1) பிரம்மா (பரமாத்மா) 'ஓம்' காரத்தின் அர்த்தம்.
2) ஏனென்றால் அவன் எல்லா விதத்திலும் பூர்ணமானவன் (Res Complete)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3) அவன் சுகஸ்வரூபி. அவனிடம் அளவிடமுடியாத (மஹாலக்ஷ்மியால் கூட) ஆனந்தம், இன்பம் உடையவன்.

4) அவனை அந்த மூன்று வ்யாஹ்ருதிரிகள் கூறுகின்றன. (பூ$_4$: பு$_4$வ: ஸீவ:)

5) 'பர்க' என்று அவன் தான் அழைக்கப்படுகிறான்.

6) அவன் தான் முக்கியமாக புருஷன் என்ற பதத்தால் குறிக்கப்படுகிறான்.

6. இந்த புனிதமான காயத்ரீ மந்திரத்தை அர்த்தம் தெரிந்து கொண்டு ஒரு தடவை கூறினால், அனந்த (infinite) வேதங்கள் பாராயணம் செய்த பயன் அடையலாம். இதை மனதில் கொண்டு ஆசிரியர் திரு. T. ராகவேந்திரன் அவர்கள் மிகவும் சிரமப்பட்டு இந்த அரிய புஸ்தகத்தை எழுதியுள்ளார்கள். அன்னார் அவர்கள் தன்னுடைய புகழுக்காகவோ, வருமானம் அடையவோ, இதை எழுதவில்லை. பக்தர்களுக்கு நல்லபடியாக சேவை செய்ய வேண்டும், எல்லோரும் பயன் அடைய வேண்டும் என்ற ஓரே குறிக்கோளுடன் மிக நேர்த்தியாக எழுதி உள்ளார்கள். வீட்டில் ஸ்வாமியின் விக்ரஹம் அல்லது படம் அல்லது சாலிக்கராமம் எவ்வாறு தவறாது வைத்து இருக்க வேண்டுமோ, அதே மாதிரியாக இந்த புஸ்தக பொக்கிஷத்தை எல்லோரும் வைத்து கொள்ள வேண்டுமென நான் விரும்புகிறேன்.

7. அநேகர் சந்த்யா வந்தனம், காயத்ரீ ஜபம் செய்யாமல் இருப்பதற்கு காரணம், அவர்கள் அதன் அர்த்தத்தை தெரிந்துகொள்ளாததே ஆகும். அவர்களுக்கு கற்பிக்கும் தகுதி உள்ளவர்களும் பலர் கிடையாது. இந்த சூழ்நிலையில் இனிய தமிழில் எல்லோருக்கும் எளிதில் புரியும்படியாக ஆசிரியர் திரு T. ராகவேந்திரன் இந்த புத்தகத்தின் மூலம் மிகப் பெரிய, அரிய பணியை செய்துள்ளார்கள். தமிழ் அறிந்த அனைவரும், அன்னாருக்கு கடமைப்பட்டு இருத்தல் அவசியம் என்பதை உறுதி கூறுகிறேன்.

8. காயத்ரீயினால் பயனடைந்தவர்கள் என்ற தலைப்பில் பல ஆஸ்சர்யமான, வியக்கதக்க மனதை ஈர்க்கும் விஷயங்களை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தந்துள்ளார்கள். அதே மாதிரியாக ஆதாரங்கள் - சந்த்யா விஷயத்தில் - பல உபனிஷதத்துகள், இதர பிராமணங்களை தொகுத்துக் கூறி உள்ளார்கள். மற்றும் ப்ராணாயாமம் என்பது ஒரு மிக மிக முக்கியமான செய்கை. அதனால் ஏற்படும் நன்மைகள் அநேகம். இவைகளை மிக அழகாக விஷ்ணு தர்மோத்தர புராணம், மற்றும் தந்த்ரசாரம் என்ற ஆதார நூல்களின் வாயிலாக விளக்கியுள்ளார்கள்.

காயத்ரீ சப்ததின் விமரிசை மிக நேர்த்தியாக செய்யப்பட்டுள்ளது. பாகம் இரண்டில் ஸந்த்யா வந்தனம் குறித்து மிக அழகாக, தெளிவாக, விஸ்தாரமாக சுமார் 30 பக்கங்களுக்கு மேல் விளக்கி, மிகப்பெரிய சேவை செய்துள்ளார்கள். ஏனென்றால் ஸந்த்யா வந்தனம் செய்யாமல் வேறு எந்த சேவை செய்தாலும் அதற்கு அதிக பயன் கிடையாது. எல்லோரும் நல்ல பயன் அடைய வேண்டும். மற்றும் ஸந்த்யா வந்தன மந்திரத்தைப் புரிந்து கொண்டால், எல்லா சாஸ்த்ரங்களையும் புரிந்து கொண்ட வகையாகும் என்ற வாக்கிற்கு எடுத்து காட்டாக, நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ள மிக நேர்த்தியான புஸ்தகத்தை என்னுடைய அருமை நண்பர் திரு T. ராகவேந்திரன் படைத்ததற்கு நன்றியை தெரிவிக்கும் வகையில், இந்த முகவுரை ஸ்ரீ ஹரிவாயுகளின் பாத கமலங்களில் வினயத்துடனும், பயபக்தியுடனும் சமர்ப்பணம் செய்கிறேன்.

டி.எஸ். ராகவேந்திரன்
எம்.ஏ.பி.எல். அட்வகேட்

விரோதி வருஷம்
பாத்ரபத மாதம் சுக்லக்ஷம் ப்ரதமை
வெள்ளிக்கிழமை 21.08.2009

இன்று சந்திர தர்சனம் நாள். அந்த தேவதையை பார்க்கும் போது எவ்வாறு மனதிற்கு இன்பம், குளுமை, சந்தோஷம் ஏற்படுகிறதோ, இம்மாதிரியாக இந்த புத்தகம் அமைந்துள்ளது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்வர்கீய ஸ்ரீ K.V. தாந்தோணிராவ் மற்றும் அவருடைய தர்மபத்னி ஸ்ரீமதி பத்மாவதி ஆகிய என் பெற்றோர்களின் மூலம் ஸ்ரீ ஹரி, வாயு, குருக்களுக்கு இந்நூல் சமர்ப்பிக்கப்படுகிறது.

— ஆசிரியர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆசிரியர் முகவுரை

ஜாதி, மத, இன வேறுபாடின்றி அனைவரும் விரும்புவது சுகம். இதை அடைவதற்குப் பல வழிகளில் மனித சமுதாயம் அயராது பாடுபடுகின்றது. சுகம் கிடைத்து விட்டதாக எண்ணும் மறு விநாடியே துக்கம் பின் தொடர்வதைப் பார்க்கிறோம். சுகம் துக்கம் இவை யிரண்டும் நமது அனுபவங்களே. மனிதனின் குணாதிசயங்களைப் பொறுத்து ஒருவனுடைய சுகானுபவத்திற்குக் காரணமாக இருப்பது மற்றவனுக்கு சுகானுபவத்திற்குக் காரணமாக வேண்டும் என்ற அவசியமில்லை. இந்த முரண்பாடாகத் தோன்றும் உண்மைக்கு (Paradox) எப்படி விளக்கம் அளிப்பது ?

சுகம் (அ) துக்கம் இவற்றிற்குக் காரணங்கள் இந்திரியங்களின் விஷயங்களாயிருப்பின், அவை நித்யமில்லாது முரண்பாடு-டையவையாகின்றன. ஏனெனில் இந்திரிய விஷய அனுபவங்கள் ஜீவனுக்கு, 'நான்' 'எனது' என்ற பிரமிப்பை ஏற்படுத்துகின்றன. இதையே, ஒரு ஞானியின் கண்ணோட்டத்தில் பார்ப்போமாகில், சுகம் (அ) துக்கம் அவனை பாதிப்பதில்லை. ஏனெனில், 'நான்' 'எனது' என்ற எண்ணத்தை மீறி யாவும் பகவானின் செயல் என்று எண்ணுவர். இந்த மன நிலை (புத்தி) ஒருவனுக்கு ஏற்பட பகவதனுக்ரஹம் தேவைப்படுகிறது. பகவதனுக்ரஹம் எவ்வாறு கிடைக்கிறது? பகவத் ஸ்மரணையின் மூலமே.

அநாதி காலந்தொட்டுப் பாப புண்யங்களின் வசத்தால் கட்டப்பட்ட ஜீவனை பகவத் ஸ்மரணையில் ஈடுபடுத்துவது எப்படி? இது கடினமாயிருப்பினும் அதனுடைய பாதையில் மெல்ல மெல்லச் செல்லும் பொழுது நாளடைவில் பழக்கமாய் விடுகிறது. எந்த ஒரு பழக்கமும், பழகப் பழக நிலைத்து விடுகிறது. அந்தப் பாதை எது என்பதை சாஸ்த்திரங்கள் எடுத்துரைக்கின்றன. அவற்றை அறிஞர்களிடமிருந்து தெரிந்து கொள்ள முயல்வதே முதல்படி. நம்மிடையே மத குருமார்களும், சாஸ்த்திரம் அறிந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
வல்லுனர்களும் இருக்கிறார்கள். அவர்களை அணுகுவதில் தயக்கம் காண்பிக்கக்கூடாது. சாஸ்திரங்களின் கூற்று யாது ?

உடலில் உள்ள அசுத்தத்தை தினமும் குளிப்பதின் மூலம் அகற்றாவிட்டால், அந்த அசுத்தமே நோய்களுக்குக் காரணமாகின்றது. அது போலவே, தினசரி சேர்ந்து கொள்ளும் பாவங்களைக் களைய முற்பட வேண்டும். பாவ கர்மங்களைச் செய்வது மனித இயல்பு.

'தா$_3$க்ஷிண்யாத$_3$ர்த$_2$லோ$_4$பா$_4$த்$_3$ வா ப$_4$யாத்$_3$வா து$_3$ஷ்டஸங்க$_3$தே :|
தயா க்ருதாஶ்ச மே பாபம் கு$_1$ரு மாத$_4$வ ரக்ஷணம் ||

— வாயுபுராணாம்

பிறரைச் சிறுமைப்படுத்தவோ அல்லது பணம் மற்றும் இதர சுகசாதனங்களின் மீது பொறாமைக்காகவோ அல்லது மற்றவர்களின் மீது அச்சத்தினாலோ அல்லது தீயவர்களின் நட்பினாலோ, ஒருவன் பாவ கர்மங்களைச் செய்ய நேரிடுகிறது. இதை உணர்ந்தபின் அவன் பாவ மன்னிப்புக்காக, பகவானைச் சரணடைகிறான். பாவம் செய்தவர்கள் அனுபவிக்க வேண்டிய பல தரப்பட்ட நரகங்களை பாகவதத்தின் ஐந்தாவது அத்யாயத்தில் ஸ்ரீ ஶுக முனி விவரித்ததையடுத்துப் பரீக்ஷித் கேட்கிறான்.

'அது$_4$நேஹ மஹாபா$_4$க$_3$ யதை$_2$வ நரகான்னர : |
நாநோக்$_3$தயாதனான்னேயாத் தன்மே வ்யாக்$_2$யாதுமர்ஹஸி ||"

ஓ ! ஆச்சார்யரே ! எந்த விதமான செயல்களை மேற்கொண்டால், மேற்சொன்ன நரக வேதனையிலிருந்து மனிதன் தப்பித்துக் கொள்ள முடியும் ?

ஸ்ரீ ஶுகமுனி சொல்கிறார்

'தஸ்மாத் புரைவாஷ்விஹ பாபநிஷ்க்ருதா
யதேத ம்ருத்யோரவி பத்$_4$யதா$_3$த் மன:|

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தே$_3$ாஷஸ்ய த்$_3$ருஷ்ட்யா கு$_3$ருலாக$_4$வம் யதா$_2$
பி$_4$ஷக் சி கித்ஸேத ருஜாம் நித$_3$ானவித் ||

பிராயச்சித்தம் செய்து கொள்வதன் மூலம் பாவங்களைக் களைந்து நரகத்திலிருந்து தப்ப இயலும் என்று ஸ்ரீஶுகமுனி கூறுகிறார். நோயை ஆராய்ந்து அறிந்து அதற்குரிய மருந்தைக் குறிக்கும் மருத்துவர் போல, ஒருவன் பாவத்தின் தன்மையை நன்கு அறிந்து அதற்காகக் குறிப்பிட்டுள்ள பிராயச்சித்தத்தைச் செய்ய வேண்டும்.

பரீக்ஷித் வினவுகிறான்
'ப்ராயச்ஶித்தமதோ$_2$ பார்த$_2$ம் மன்யே கு$_1$ஞ்ஜர ஶௌசவத் | "

"ப்ராயச்சித்தத்தினால் என்ன பயன் ? யானை நீராடியபின், மண்ணைத் தன் உடலின் மீது மறுபடியும் இறைத்துக் கொள்வது போல, மனிதன் ப்ராயச்சித்தத்தின் பிறகும் மறுதினமே பாவம் செய்ய நேரிடுகிறதே." இதற்கு ஸ்ரீஶுகாசார்யர் பதிலளிக்கிறார்.

ஸ்ரீ ஶுக உவாச :
தபஸா ப்$_3$ரஹ்மசர்யேண ஶமேன ச த$_3$மேன ச |
த்யாகே$_3$ன ஸத்யஶௌசாப்$_4$யாம் யமேன நியமேன ச ||
தேஹவாக்$_3$ பு$_3$த்திஜம் தீ$_4$ரா த$_4$ர்மஜ்ஞா :
ஶ்ரத்$_3$த$_4$யான்விதா: |
க்ஷபத்யங்க$_3$ம் மஹத$_3$பி வேணுகு$_3$ல்மமிவானல : ||
கேசித் கேவலயா ப$_4$க்த்யா வாஸுதே$_3$வபராயணா: |
அக$_4$ம் து$_4$ன்வந்தி கார்த்ஸ்ன்யேன நீஹாரமிவ ப$_4$ாஸ்கர : ||
— இதி பா$_4$கவதே |

பொருள் : தபசு, த்யானம், ப்ரம்மச்சர்யத்தின் அனுஷ்டானம், இந்திரிய நிக்ரஹம், தர்மம் செய்வது, பொய் கூறாமை, உடல் மற்றும் மனத் தூய்மை, அஹிம்ஸை, குரு, பெரியவர்கள் மற்றும் பெற்றோர்களின் பணிவிடை, விரத அனுஷ்டானம் முதலியவைகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மிகக் கொடிய பாவங்களையும் அழிக்க வல்லவை. அடர்ந்த காடும் தீயினால் அழிவது போல, மேற் கூறிய செயல்களினால் பாவங்கள் மறைகின்றன. சிலர் பகவான் வாசுதேவனின் பாத கமலங்களில் சஞ்சலமற்ற பக்தியின் மூலம் தங்களை அர்ப்பணித்துக் கொள்கின்றனர். பனி சூரியனைக் கண்டு விலகுவதுபோல, அவர்கள், தங்கள் பாவங்களை முழுவதுமாகக் களைய முடிகிறது. மற்றும் சிலர் ஸ்ரீக்ருஷ்ணனின் பக்தர்களுக்குப் பணிவிடை செய்வதின் மூலம் பாவங்களைக் களைந்து கொள்கின்றனர்.

' யத்$_3$ராத்ர்யா பாபமகாரிஷம் | மனஸா
வாச$_1$ா ஹஸ்தாப்$_4$யாம் பத்ப்$_4$யாம் உத$_3$ரேண
ஶிஶ்னா ராத்ரிஸ்தத$_3$வலும்பது யத்திஞ்ச
து$_3$ரிதம் மயி | இத$_3$மஹம் மாமம்ருதயோனௌ
ஸர்வே ஜ்யோதிஷி ஜுஹோமி ஸ்வாஹா ||

— ஸந்த்$_4$யோபாஸனை |

பகலில் செய்த தீய செயல்களால் பாவங்கள். குவியாமலிருக்கட்டும். சூர்யனில் இருக்கும் ஆதித்ய பகவானுக்கு இந்த எல்லாச் செயல்களும் அர்ப்பணிக்கப்படுகின்றன. இவ்வாறு சூர்யனுக்கு ஆஹுதி கொடுக்கப்படுகிறது.

காயத்ரீ மந்திரத்தின் மஹிமையை அறியும் பொழுது, காயத்ரீ மந்திரம் சகல பாவங்களையும் அழிக்க வல்லது. அம்மந்திரத்தினால் அழிக்க முடியாத பாவங்கள் ஏதும் இல்லை. ஸந்த்$_4$யோபாஸனையின் ஓர் அங்கமான காயத்ரீ மந்திரம் நடைமுறையில் கடைப்பிடிக்கப் படவேண்டிய ஒரு பிராயச்சித்தமாகும். ஸந்த்$_4$யோபாஸனையினால், ஞானம் பக்தி மற்றும் வைராக்யம் அதிகரித்து பகவானின் அருளுக்குப் பாத்திரராகி மோட்சத்தையும் அடைவோம்.

இந்நூலைத் தொகுத்து அளிப்பதில், ஸ்ரீபாண்டுரங்காச்சார்ய ஸ்ரீனிவாஸாசார்ய வாக்கர் அவர்களின் The Glories of Gayatri என்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆங்கில புத்தகம், ஸ்ரீ மாஹு லீ கோபாலாசார்யா வெளியிட்ட 'ஸந்த்$_4$யா ரஹஸ்ய' என்ற தமிழ்ப் புத்தகம் மற்றும் மத்வ ஸித்தாந்த பாரதி என்ற (இரு மாதங்களுக்கு ஒரு முறை வருகின்ற) பத்திரிகை முதலியவைகள் எனக்குக் கருவியாக அமைந்துள்ளன. இந்நூல் மாத்வ சமுதாயத்திற்கு மட்டுமின்றி மனித சமுதாயத்திற்கே விழிப்பூட்டுவதாக அமையட்டும் என்ற எண்ணத்தில் தொகுத்தளித்திருக்கிறேன். இந்த ஒரு மிகச் சிறிய சேவையின் மூலம் குர்வந்தர்க$_3$த முக்$_2$யப்ராணாந்தர்க$_3$த - பகவான் லக்ஷ்மீநாராயணன் பிரசன்னமாகட்டும் என்று பிரார்த்திக்கிறேன்.

இந்நூலை எழுதுவதற்கு எனக்கு மிகவும் உறுதுணையாக இருந்த என் மனைவி ஸ்ரீமதி லலிதா என்கிற பரிமளாவின் பணி மிகவும் போற்றத்தக்கது.

இந்நூலைப் பரிசீலனை செய்து தமிழ்மொழிக்கு மெருகேற்றிய ஓய்வு பெற்ற பள்ளி ஆசிரியர் ஸ்ரீ C.H. ரகூத்தம ராவ் M.Sc., B.T., கோயம்புத்தூர், அவர்களுக்கு நான் என்றும் கடமைப்பட்டவனாயிருக்கிறேன்.

இந்நூலிற்குத் தனது சிறந்த முகவுரையை (Forward) அளித்தமைக்கு ஸ்ரீ T.S. ராகவேந்திரன் M.A.B.L.Advocate (T.S.R) அவர்களுக்கு எனது மனப்பூர்வமான நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கோயம்புத்தூரில் சாதுர்மாஸ்ய வ்ரதம் அநுஷ்டித்து வரும் ஸ்ரீ ஸ்ரீ ஸ்ரீ வித்யேஷ தீர்த்த ஸ்ரீ பாதங்களவர்கள், இப்புத்தகத்தின் ஸேவையைப் பாராட்டி, தனது அநுக்ரஹ வசனத்தை தந்துள்ளார். அவர்களுக்கு என் அனந்த ப்ரணாமங்கள்.

எனது ஆப்த நண்பரும் ஷாஸ்த்ர சிந்தனையுள்ள வருமான ஸ்ரீ குருராஜன், ஆற்றிய உதவிக்கு கடமைப்பட்டவனாயுள்ளேன்.

இந்நூலை குறித்த நேரத்தில் மிக அழகாக அச்சிட்ட திரு. சா.ராஜசேகரன், ஸ்ரீ சக்தி பிரமோஷனல் லித்தோ பிராசஸ் நிறுவனத்தார் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றிகள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நூலில் குற்றங்குறைகளிருப்பின் எனக்குத் தெரிவிக்கும்படி வாசகர்களை வேண்டிக் கொள்கிறேன்.

Delhi T. ராகவேந்திரன்

கோயம்புத்தூர்

03.09.09

உச்சரிப்பு முறைகள்

எழுத்து	உச்சரிப்பு	உதாரணம்
க1	Ka	கடவுள், கப்பல்
க2	Kha	தித்திக்க
க3	ga	கருடன், கணபதி
க4	gha	கடம் Ghatam
ச1	Cha	சந்திரன் chandiran
ச2	Chha	அச்சம்
ஜ	Ja	ஜடை
ஜ4	Jha	ஜ்ஜ
ட1	ta	பட்டம்
ட2	tta	அட்டகாசம்
ட3	da	உடல், கடல்
ட4	ddha	ட்ட
த1	tha	தரம், தமிழ்
த2	thha	அத்தை, அத்தனையும்
த3	dha	தயவு, தேவர்
த4	dhha	தர்மம்
ப1	Pa	பழம், படம், பண்டிகை
ப2	Pha	பப்படம்
ப3	ba	பயம்
ப4	bha	பானு bhanu
ஸ	Sa	ஸங்கல்பம், ஸோபானம்
ശ	Ssa	ശங்கரன், ശോபானம்
ஷ	sha	ஷண்முகன், ஷோபானம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளடக்கம்

பாகம் - I

"காயத்ரீ"யின் ஒளி

அத்தியாயம்	தலைப்பு	பக்கம்
1.	'காயத்ரீ' - ஒரு தினசரி ப்ரார்த்தனை	1
2.	'காயத்ரீ' - மந்திரத்தின் ப்ரமாணங்கள்	8
3.	'காயத்ரீ'யினால் பயனடைந்தவர்கள்	14
4.	ஸந்த்யா ரகசியம்	26
5.	ஸந்த்யா விஷயத்தில் ப்ரமாணங்கள்	39
6.	ஸ்நானம் (குளியல்) ஆசமனம்	51
7.	ப்ராணாயாமம்	55
8.	'காயத்ரீ' ஸப்தார்த்த விசாரம்	67
9.	'வ்யாஹ்ருதி' - விசாரம்	81
10.	'காயத்ரீ' பற்றி ஸ்ம்ருதிகளின் குறிப்புரை	89
11.	'காயத்ரீ' வர்ணமாலா ஸ்தோத்ரம்	98
12.	ஸந்த்யோபாசனையைப் புறக்கணிப்பதின் விளைவுகள்	105
	பாகம் - II	
13.	ஸந்த்யா வந்தனம் - விதிகள்	111

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளுதவி செய்தவர்கள்

(1) ஸ்ரீ K.R. குருப்பிரசாத், மும்பை

(2) ஸ்ரீ K.R. கேசவன், மும்பை

(3) ஸ்ரீ S. ரவீந்த்ரநாத், சென்னை

இவர்களுக்கு, பரமாத்மனைக் குறித்த சரியான ஞானம் மற்றும் அவரில் பக்தி முதலியவைகளை நன்றாக வளர்த்து, பரமாத்தனனின் அநுக்ரஹத்திற்கு பாத்ரராகுமாறு ஸ்ரீ ஹரி, வாயு குருகளிடம் ப்ரார்த்தனை செய்கிறேன்.

ஆசிரியர்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

|| हरि: ॐ ||

" ஸ்ரீமத் த₄னுமத்₃-பீ₄ம-மத்₄வாந்த₁ர்க₃த-
ஸ்ரீ-ராம-க்ருஷ்ண-வேத₃வ்யாஸாத்மக-
ஸ்ரீ-லக்ஷ்மீ-ஹயக்₃ரீவாய நம : "

"கா₃யத்ரீ" யின் ஒளி

அத்தியாயம் - 1

'காயத்ரீ' ஒரு தினசரி ப்ரார்த்தனை

ஹரி : ஓம்

" ஸ்துதா மயா வரதா₃ வேத₃மாதா |
ப்ரசோத₃யந்தா₁ம் பாவமானீ
த்₃விஜானாம் | ஆயு : ப்ராணம் ப்ரஜாம் பஶும்
கீர்தி₁ம் த்₃ரவிணம் ப்₃ரஹ்மவர்ச₁ஸம் |
மஹ்யம் த₃த்வா வ்ரஜத ப்ரஹ்மலோகம் | "

அத₂ர்வவேத₃ம் 19-71-1

வேதமாதா காயத்ரீயைக் குறித்த பிரார்த்தனையே இந்த வேத மந்திரம்.

வரமளிக்கும் காயத்ரீ தேவீயே | எனது பிரார்த்தனைக்கு மனமிரங்குவாயாக. அனைத்து அந்தணர்களிடமும் தர்ம சிந்தனையை வளர்ப்பாயாக. உன் கருணைப்பார்வை இவ்வுலகில் உன் அடியார்களுக்கு உயர்ந்த பண்பு, புகழ், பெரும்திறமை, ப்ரஹ்ம ஞானியைப் போன்று முகத்தின் பொலிவு ஆகியவற்றை அடைவதற்குப் பேருதவியாக இருக்கும். உயர்வான வாழ்க்கை, மேழிச் செல்வம், செல்வச் செழிப்பு இவைகளைத் தந்தருளி, முடிவில் உன் அடியார்களை விஷ்ணுவின் இருப்பிடமான வைகுண்டத்திற்கு அழைத்துச் சென்று அருள்புரிவாயாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்வே-ஸ்வே கர்மண்யபி$_4$ரத:

ஸம்ஸித்$_3$தி$_4$ம் லப$_4$தே நர : (கீ$_3$தா. 18-45)

ஸ்வகர்மணா தமப்$_4$யர்ச்ய

ஸித்$_3$தி$_4$ம் விந்த$_3$தி மானவ : (கீதா. 18-46)

தனக்குரிய கர்மத்தில் களிப்புறும் மனிதன் நிறைநிலை-யெய்துகிறான். தனக்கு விதிக்கப்பட்ட கர்மங்களை இறைவனின் பூஜையாக எண்ணிக் கடமையை செய்வதன் மூலம் மனிதன் மோட்சத்தை அடைகிறான்.

உலகில் இறைவன் இருக்கிறான் என்கிற உணர்வுள்ள பல நாடுகளில், இந்தியா (பாரத தேசம்) மிகவும் பழமையானதும் மற்றும் ஆன்மீகத்தில் மற்றவர்களுக்கு முன்னோடியாகவும் விளங்குகிறது. நம் முன்னோர்களில் ரிஷிகள், சந்நியாசிகள் க்ருஹஸ்தர்கள், பிரம்மச்சாரிகள் போன்ற பலர் ஆன்மீக மார்க்கத்திற்கும் தத்துவ சிந்தனைகளுக்கும் தங்கள் வாழ்க்கையை அர்ப்பணித்துள்ளனர். சில உயர்ந்த ஜீவர்கள், இறைவனைத் தங்கள் ஹ்ருதய கமலத்தில் நேராகக் கண்டார்கள்; மற்றும் சிலர் வெளியில் கண்டார்கள். இறைவனை காண்பதற்கு அவர்கள் எவ்வித முயற்சியில் ஈடுபட்டனர்? அவர்களின் வாழ்க்கையின் அணுகுமுறை எவ்வாறு இருந்தது? உயரிய ஞானம், பண்பு, காந்தி, சுகம் மற்றும் மனத்திருப்தி (போதும் என்ற மனம்) இவைகளை எவ்வாறு அடைந்தனர்? தங்களுக்கு விதித்துள்ள கர்மங்களை, பலன் கருதாமல் கடவுளின் பூஜையாக அவர்கள் செய்து வந்ததே இதன் ரகசியம், என்பது இதற்குப் பொருத்தமான பதிலாகும். குறிப்பாக, அந்தணர்கள் தங்களுக்கு, விதிக்கப்பட்டிருக்கும் காயத்ரீ உபாஸனை செய்வது ஒரு முக்கிய காரணம் எனலாம்.

' சாதுர்வர்ண்யம் மயா ஸ்ருஷ்டம்

கு$_3$ண-கர்ம-விப$_4$ாக$_3$ஶ:' (கீதா)

"குணத்திற்கும், கர்மத்திற்கும் ஏற்ப நான்கு வர்ணங்களை நான் படைத்தேன்" என்று க்ருஷ்ண பகவான் பகவத் கீதையில் சொல்கிறார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தங்களுடைய இயற்கையான ஸ்வபாவத்தின் படி, பிராம்மண, க்ஷத்ரிய, வைஸ்ய மற்றும் சூத்ர (பணியாளர்) ஆகிய வகுப்பினர்களாவர். முதல் மூன்று வகுப்பினர் 'த்₃விஜர்கள்' (இருமுறை பிறப்பவர்கள்) எனப்படுபவர்கள். இந்த வகுப்பினர்களில், எட்டு வயது நிரம்பிய அனைத்துச் சிறுவர்களுக்கும் உபநயனம் என்கிற ஆன்மீக ஸம்ஸ்காரம் கட்டாயமாகும். இந்த ஸம்ஸ்காரம் செய்து கொண்டவர்களே 'த்விஜர்கள்' என்று அழைக்கப்படுகின்றனர். அவர்கள் வேதங்களைக் கற்கத் தகுதி பெறுகின்றனர். இந்தச் சமுதாய பழக்கமானது, இன்றும் மற்றும் வருங்காலங்களிலும் பின்பற்றக்கூடிய ஒன்றாகும்.

உபநயன ஸம்ஸ்காரத்திலிருந்து விலக்கப்பட்ட நான்காவது வகுப்பினர்கள், "பகவானின் நாமத்தைக் கீர்த்தனை செய்வதும் மற்ற மூன்று வகுப்பினர்களுக்கு உறுதுணையாகப் பணிசெய்வதும் கடவுளின் பூஜை" என்று எண்ணுவதன் மூலம் முக்தியடைவதற்குத் தகுதி பெறுகிறார்கள். பகவான் கிருஷ்ணன் கூறியுள்ள படி, தங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மங்களைக் கடவுளின் பூஜையாகச் செய்பவன் வாழ்க்கையிலிருந்து விடுபட்டு முக்தி ஸ்தானத்தை அடைகின்றான். வாழ்க்கையிலிருந்து விடுபடுவதற்கு எல்லா வகுப்பினர்களுக்கும் போதிய சந்தர்ப்பங்கள் இருக்கும் பொழுது, ஒருவரை விட மற்றவர் உயர்ந்தவர் என்று எப்படி சொல்லாம் ? குஹனின் பணிவிடைகளை ஏற்ற பகவான் ஸ்ரீராமர் மகிழ்ச்சியடையவில்லையா? குயவனான பீமா என்பவனுக்கு மிக உயர்ந்த ஸ்தானமான ஸாயுஜ்ய முக்தியை கொடுத்ததாக வேங்கடேஶ மாஹாத்ம்யத்தில் நாம் கேட்கவில்லையா ?

" ஸ்வவிஹிதவ்ருத்₁யா ப₄க்த்யா
ப₄கவத₃ாராத₄னமேவ பரமோ த₄ர்ம : "

— கீதா-தாத்பர்ய-நிர்ணயம் |

வெவ்வேறு வகுப்பினைச் சார்ந்த மக்கள், தங்களுக்கு விதிக்கப்பட்ட கர்மங்களைக் கடவுளின் பூஜையாக எண்ணி செய்ய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வேண்டும். இதுவே ஒருவர் பின்பற்ற வேண்டிய மிக உயர்ந்த சாஸ்திரமாகும்.

உயர்ந்தவர் - தாழ்ந்தவர் என்ற மனப்பான்மை ஒரு வீண் சிந்தனையே. மற்றும் அவரவர்களின் பலவீனத்தைக் காட்டுவதாகும். அதே மாதிரி அரசாங்கப் பணிகளிலும் நான்கு பிரிவுகள் உள்ளன. திறமை மற்றும் பண்பின் அடிப்படையே இந்த பிரிவுக்குக் காரணம். ஒவ்வொருவரும் தமக்கு விதிக்கப்பட்ட செயல் செய்வதனால் மட்டுமே கடமையைச் சரிவர ஆற்ற முடியும். முன்னேற்றம் அடையலாம். இல்லையெனில் குழப்பமே மிஞ்சும். இவையெல்லாம் வாழ்க்கையின் உண்மைகள். இப்பொழுது நாம் விஷயத்திற்கு வருவோம்.

ஸந்த்₄யா-வந்தனம் அல்லது காயத்ரீ-உபாஸனை செய்வதற்கு ஒருவனுக்கு தகுதி அளிப்பதே உபநயன ஸம்ஸ்காரத்தின் (பூணூல்) தனிப்பட்ட குறிக்கோளாகும். மேலும் வேதம், வேதாங்கங்களைக் கற்பது, கற்பிப்பது, யாகங்களைச் செய்வது, மந்திர ஜபம் செய்வது, த்யானம், தபசு, நியமங்களை அனுஷ்டிப்பது முதலியவைகளைச் செய்வதற்கு அதிக சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. காயத்ரீ -உபாஸனை அல்லது ஸந்த்₄யா- வந்தனம் என்பது மோட்சத்தின் கதவுகளுக்குத் திறவு கோலாகும்.

ஒரு நாட்டை நிர்வகிப்பதும், காப்பதும் க்ஷத்ரியர்களின் தலையாய கடமையாகும். வியாபாரம், வேளாண்மை, கால்நடை பேணல் முதலியவை வைசியர்களின் கடமையாகும். இவ்வேலைகளைச் செய்வதற்கு அவர்களுக்கு மிகுந்த கால அவகாசம் தேவைப்படுவதால், ஜபம், தபசு, வேதங்களைக் கற்பது முதலியவைகளுக்கு அவகாசம் கொடுக்க முடியாமல் போகிறது. பிராம்மண வகுப்பினரால், வேதம் மற்றும் புராணங்களில் விதிக்கப்பட்டுள்ள, விரதம், ஜபம், தபசு, த்யானம் முதலிய மதசம்பந்தமான கர்மங்களைச் செய்வதற்கு அவகாசம் ஒதுக்கப்படுகிறது. வேதங்களைக் கற்பதில் தங்களுடைய வாழ்நாளின் பெரும்பகுதியைக் கழிப்பதால், அவர்கள் பகவானின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கருணைக்குப் பாத்திரமாவதுடன், வியக்கத்தக்க சக்தியும் பெறுகின்றனர்.

காலப்போக்கில், அரசியல் மற்றும் சமூகப் புரட்சிகள், மற்றும் சில தனிப்பட்ட நடவடிக்கைகள் ஆகியவை சில மாற்றங்கள் உண்டாவதற்குக் காரணங்களாயின. இருப்பினும் வேதங்களை மனனம் செய்யும் முறையில் எவ்வித மாற்றமும் இன்றளவும் ஏற்படவில்லை. வேதம் என்ற செல்வம் மிகவும் கவனமாகக் காப்பாற்றப்பட்டு அதன் பாரம்பரியம் மாறாமல் வைக்கப்பட்டுள்ளது. கற்பவர்களின் எண்ணிக்கை குறைந்து வருவதனால், அதன் பெரும்பகுதி மறைந்து வருகிறது. அவைகளில் சில கிளைகளே கற்று வரப்படுகின்றன. இது போலேவே, -காயத்ரீ-உபாஸனையும், ஸந்த்யாவந்தனமும் இருக்கின்றன. ஆனால் இதை அனுஷ்டிப்பவர்களின் எண்ணிக்கை மிக வேகமாக குறைந்து வருகிறது.

ஸந்த்யா- உபாஸனை எவ்விதம் நமக்குக் கிடைத்தது என்பதைக் கீழ்வரும் வாக்யம் விளக்குகிறது :-

"யாவந்தோ$_1$ஸ்யாம் விகர்மஸ்த$_2$ா :
ப்ருதி$_2$வ்யாம் ப$_3$ாலிஶா த்$_3$விஜா :|
தே$_1$ஷாம் பாவித்ர்யஸித்$_3$த்$_4$யர் தம்
ஸந்த்$_4$யா ஸ்ருஷ்டா ஸ்வயம்பு$_4$வா || "

(ஸந்தியாபா$_4$ஷ்யம்)

அறியாமையினாலோ அல்லது வேறு காரணங்களினாலோ, வேதத்தில் விதிக்கப்பட்டுள்ள கர்மங்க்களை மீறும்பொழுது, பிராம்மணர்கள் பாவிகளாக ஆக நேரிடுகிறது. அவர்களது பாவங்களை நீக்கிப் புனிதப்படுத்தி அவர்களை உயர்த்துவதற்கு நான்முகன் (ப்$_3$ரஹ்மா) மிகுந்த கருணையினால் சுலபமாக அன்றாடம் செய்யத்தக்க பழக்கத்தை, அதாவது ஸந்த்$_4$யோபாஸனையை ஸ்ருஷ்டி செய்தார்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வாழ்நாள் முடியும் மட்டும் செய்யப்பட வேண்டிய ஒரு தினசரி கர்மம் ஸந்த்யாவாகும். எட்டு வயதிற்குள் ஒரு பாலகனுக்குச் செய்யப்படும் உபநயனம் எனும் சடங்கு சந்த்யாவைச் செய்வதற்கு அவனுக்குத் தகுதியளிக்கிறது. அவன் பிரம்மச்சாரி (வடு) என்றழைக்கப்படுகிறான். தற்காலத்தில் இந்த வயது வரைமுறையை மீறி, திருமண வயது வருவதற்கு முன் இந்த ஸம்ஸ்காரத்தை செய்கின்றனர். இது மிகவும் தவறான செயலாகும். இதை அவ்வளவு தொலைவிற்குக் கொண்டு செல்லலாகாது. இதன் பிறகு இரண்டாவது நிலை, திருமண வாழ்க்கை (க்ருஹஸ்தாശ்ரமம்). குடும்பத்தில் இருந்து கொண்டே வைராக்ய வாழ்க்கையை அனுஷ்டிப்பது மூன்றாவது நிலை. குடும்ப வாழ்க்கையைத் தியாகம் செய்வது நான்காவது நிலை. அதாவது சந்நியாஸம் மேற்கொள்வது, எந்த நிலையில் ஒருவன் மாறினாலும், தினசரி செய்யப்பட வேண்டிய சந்த்யா காயத்ரீ உபாஸனை தொடர்ந்து கொண்டிருக்கும். கீழ்வரும் ശ്லோகம் இதை விளக்குகிறது :-

' மௌஞ்ஜீ-ப₃ந்த₄னமாரப்₄ய
ஸாயம் ப்ராதஶ்ச காலயோ:|
மாத்யானே ऽபி ச கர்த₁வ்யம்
யாவத்ப்ராணவிமோக்ஷணாத்.||'

(ஸந்த்₄யாப₄ாஷ்யம்)

பிரம்மச்சாரி நிலையிலிருந்து வேறு எந்த நிலைக்கு மாறினாலும், தினசரி மூன்று காலங்களிலும், வாழ்நாள் முடியும் மட்டும் அனுஷ்டிக்க வேண்டியது இந்தக் கர்மம். தினசரி அனுஷ்டிக்க அவசியமில்லாத சில ஆன்மீக கர்மங்களை வேண்டுமானால், தவிர்க்க முடியாத காரணங்களினால், தற்காலிகமாக விடுவதோ அல்லது தள்ளிப்போடுவதோ செய்யலாம். ஸந்த்₄யா உபாஸனை என்பது ஒரு கட்டாய கர்மமாகும். தினசரி மூன்று முறை செய்யப்பட வேண்டியது என்று சாஸ்திரங்களில் குறிப்பிட்டுள்ள இக்கர்மத்தை எக்காரணத்திலும் புறக்கணிக்கக்கூடாது. வாழ்க்கையில் அன்றாடம் செய்யும் மற்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

செயல்களின் நேர அவகாசத்தைக் காட்டிலும் சந்த்யா உபாஸனையின் நேர அவகாசம் குறைந்ததே.

நேர அவகாசம் எத்தனை முறை காயத்ரீ மந்திரத்தை ஜபிக்கிறோம் என்பதைப் பொறுத்து இருக்கிறது. 'ஸந்த்யா' என்பது ஒரு நிகரற்ற (இணையற்ற) உபாஸனை / ஜபம் / மற்றும் பிரார்த்தனை என்று நம் முன்னோர்களால் வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. இதை அனுஷ்டிப்பது ஒருவரின் அவசியமான கடமையாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் - 2

'காயத்ரீ' மந்த்ரத்தின் ப்ரமாணங்கள்

இந்த முன்னுரையில், காயத்ரீ என்பது வழக்கமான நிகரற்ற ஒரு தினசரி பிரார்த்தனை என்று வலியுறுத்தியுள்ளோம்.

ஆனால் இதைச் செய் என்று நமக்கு யார் சொன்னது? பிரார்த்தனை செய்யப்பட வேண்டிய தெய்வம் எது? இதை அனுஷ்டித்துப் பலன் பெற்றவர் இதற்கு முன்னோ அல்லது தற்காலத்திலோ இருந்திருக்கிறார்களா? அல்லது நாம் தான் முதலில் இதைப் பரீக்ஷித்து பார்ப்பவர்களா? உபநயனம் ஆகிய சிறுவர்களின் மனதில் இவை போன்ற பல ஆர்வம் மிகுந்த நடைமுறைக்கு ஒத்த கேள்விகள் அடிக்கடி வருகின்றன. இவை போன்ற கேள்விகளுக்கு, நம் முற்கால ரிஷிகள் விடையளித்துள்ளனர். பதில்கள் கேள்விகளுக்காகக் காத்திருக்கின்றன.

வேதங்களே ஸந்த்ய$_4$ாகர்மத்தை விதித்துள்ளன.

" அஹரஹ : ஸந்த்$_4$யாமுபாஸீத |
ப்ராதருத்த$_2$ாய ஸந்த்$_4$யாமுபாஸீத |
ய : ஸந்த்$_4$யாமுபாஸதே$_1$ த$_1$ஸ்யைவ
ஸமுபாஸதே " (ருக்$_3$ வேதம்)

சந்த்யா- உபாஸனையை தினசரி அனுஷ்டிக்க வேண்டும். காலை, மதியம், மற்றும் சாயங்காலங்களில் இதை அனுஷ்டிக்க வேண்டும். யாரொருவர் இதை அனுஷ்டிக்கிறாரோ அவர் மிகவும் உன்னதமான பிரார்த்தனை செய்தவர் என்று கருதப்படுவார். அதாவது பிரம்மோபசனை அவர் செய்தார் என்று சொல்லலாம். இது வேதங்களின் கட்டளை

இதற்காக வேதங்களை ஏன் ஒப்ப வேண்டும் என்கிற வினா (கேள்வி) இந்நிலையில் எழுகிறது. இதற்கு பதில் பின்வருமாறு :

மனிதனின் புலன்களுக்கு (இந்திரியங்களுக்கு) எட்டாத தர்மம் / அதர்மம் ; பாவம் / புண்யம் ; ஸ்வர்க்கம் / நரகம் ; தேவதைகள் / கடவுள்;

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலிய விஷயங்களில் வேதங்களே உத்தமமான ப்ரமாணம் என்று நம் முன்னோர்களான ஞானிகளால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. தெரிந்து கொள்வதற்கு (அறிவதற்கு) ஒரு நம்பத்தகுந்த மூலம் வேதங்கள். அவை எக்காலத்திலும் உள்ளவை.

அவைகள் ஓர் ஆசிரியரால் எழுதப்பட்டவை அல்ல. தர்மம் / அதர்மம் என்பவை புலன்களின் பார்வைக்கு எட்டாதவை மற்றும் தர்க்கத்தினாலும் யூகத்தினாலும் அறிய முடியாதவை.

' நேந்த்$_3$ரியாணி நானுமானம்

வேத$_3$ாஹ்யைவைனம் வேத$_3$யந்தி$_1$ |

(கடே$_2$ாபநிஷதம்)

' தெய்வீக விஷயங்களை, மனித அறிவினாலோ அல்லது தர்க்கவிதிகளாலோ அறிய முடியாது. வேதங்கள் மட்டுமே இவற்றைத் தெரிவிக்கின்றன.

அறிவிற் சிறந்த மனிதர்கள் பொதுவாகச் சரியான முறையில் பாகுபாடு படுத்திப் பார்க்கும் திறன் பெற்றிருப்பர். ஒருவர் யூகிப்பது மற்றொருவருக்குச் சம்மதமில்லாமல் இருக்கலாம். வேறொருவர் நேர் எதிராக யூகம் செய்யலாம். இம்மாதிரியாக யூகம் செய்யப்பட்ட விஷயம் நிலை நிறுத்தவோ அல்லது புறக்கணிக்கவோ முடியாமல் போகிறது. ஆகவே, மனித சமுதாயம் சரியான வழி தெரியாமல் தத்தளிக்க நேரிடுகிறது. தெய்வீக விஷயங்களில், பகுத்தறிவோ அல்லது யூகமோ விவரமறிந்த ஒருவரைத் திருப்தி செய்ய முடிவதில்லை . ஆகவே இவைகளை ஆதாரபூர்வமான மூலம் என்று எண்ணுவதற்கில்லை.

தர்க்கம், பகுத்தறிவு, யூகம் இவைகள் ஸ்வதந்தரப்ரமாணங்கள் அல்ல. தர்க்கஶாஸ்த்ரம் ஒரு முடிவை உணர்த்த வேண்டுமானால், லௌகீக விஷயங்களில் ப்ரத்யக்ஷத்தின் ஸஹாயமும், ஆத்மாஸம்பந்தப்பட்ட விஷயங்களில் வேதங்களின் உதவியும் அதற்கு தேவைப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ந ச அனுமானாதீ$_3$னாம் ஆக$_3$மம் வினா

ப்ராமாண்யம் த$_1$த$_3$கே$_3$ாசரத்வாத்'

(விஷ்ணுதத்வவினிர்ணயம்)

'தர்மம், அதர்மம் முதலியவைகள் ப்ரத்யக்ஷத்திற்குரிய விஷயங்களல்ல. ஆகவே, வேதங்களின் உறுதுணையில்லாது ஒருவருடைய பகுத்தறிவு ப்ரமாணமாகாது.'

'ப்ரத்யஅக்ஷாக$_3$ம-மாஹாத்ம்யாத$_3$னுமானம் ப்ரமாணதாம் |

யாதி நைவான்யத$_2$ா தஸ்ய நியதத்வம் க்வசித்ப$_4$வேத் ||'

(வி.த. நிர்ணயம்)

'தர்க்கம் ப்ரமாணமாக வேண்டும் என்றால், இந்திரியங்களின் அனுபவமோ அல்லது வேதங்களோ உறுதுணையாக இருக்க வேண்டும். அவ்வாறு இல்லாமல், கற்பனையின் மீது எழுதப்படும் தர்க்கம் வலுவில்லாததாகும்.'

' ந ச பௌருஷேயேண வாக்யேன தத்சித்$_3$தி$_4$:

அஜ்ஞான விப்ரலம்ப$_4$யோ : ப்ராப்தே:'

(வி.த. நிர்ணயம்)

'எந்த ஒரு மனிதனும் முழுமை பெறாமலும் மற்றும் தன்னலமுள்ளவானவாகவும் இருப்பதனால், மனிதனுடைய அபிப்ராயத்தாலும் வார்த்தைகளாலும் தர்மம் முதலியவைகளை நிலைநிறுத்த முடியாது'

' ந ச த$_1$த$_3$ர்த$_2$த்வேன ஸர்வஜ்ஞ : கல்பேத

அன்யத்ராத்$_3$ருஷ்டஸ்ய ஸர்வஜ்ஞஸ்ய கல்பனம்

தஸ்ய அவிப்ரலம்ப$_4$கத்வ-கல்ப$_1$னம் தஸ்ய தத்க்ருதத்வ-கல்பனம் |

சேதி கல்பனாகௌரவப்ராப்தே : '

(வி.த. நிர்ணயம்)

ஒருவருடைய வார்த்தைக்கோ அல்லது எழுத்திற்கோ ப்ராமாண்யத்தை ஏற்க வேண்டும் என்றால், அம்மனிதன் குறைவற்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மற்றும் முழுமையான ஞானம் உள்ளவன் என்றும், ஏமாற்றும் எண்ணம் இல்லாதவன் என்றும் மற்றும் அவனே அதை எழுதியவன் என்றும் பலவற்றைக் கற்பனை செய்ய நேரிடுகிறது. இப்படி ஒரு கோட்பாட்டை முடிவு செய்வதற்குப் பல யூகங்களை ஏற்றுக்கொள்ள வேண்டிவருவது, கல்பனா கௌரவம் என்ற தோஷமாகும். அக்குறை வருவதால், வேதங்கள் பௌருஷேயம் என்பதை ஏற்றுக் கொள்ளமுடியாது.

'யஸ்ய தௌ₁ள நாபி₄மதௌள நாஸௌள ஸமயீ
ஸமயப்ரயோஜனாப₄ாவாத் '

(வி.த. நிர்ணயம்)

இக்காரணங்களால், எந்த ஒருவருக்கு தர்மமும், அதர்மமும் ஏற்க முடியாதவையோ அவர் ஒரு ஸமயாவாதியே ஆக மாட்டார். அவருக்கு ஸமயத்தின் பலன் கிடைக்காது போய் விடும். ஆதலின் வேதங்களின் அடிப்படைத் தன்மை யாதெனில் :

' அகர்த்₁ருகத்வ-ப்ரஸித்₃தி₄மத்த்வ₁ம் வேத₃த்வம் '.

எந்த வாக்யத்தொகுதிக்கு 'இயற்றியர் இவர்' என்று ப்ரஸித்தி இல்லையோ, அத்தகைய வாக்ய தொகுதியே வேதம் எனப்படும்.

அதாவது வேதங்களுக்கு ஆசிரியர் உண்டு என்பதற்கோ அல்லது வேதங்கள் அப்ரமாணமானவை என்பதற்கோ சான்று ஏதும் இல்லை. "ஶ்ருதத்வாத் ஶ்ருதி:- ஒருவரிடமிருந்து மற்றொருவரால் கேட்கப்படுவதால் இவை 'ஶ்ருதி' என்றழைக்கப்படுகின்றன. இந்த ஶ்ருதிக்கு ஆசிரியர் எவரும் இருந்ததாகத் தெரியவில்லை. இக்காரணங்களால், தர்மம், பகவான் முதலிய விஷயங்களுக்கு அதிகாரபூர்வமான ஒரே மூலம் வேதங்களே.

தர்மத்தின் பொதுவான விளக்கத்தை ஸ்ரீமத் பாகவதம் கீழ்வருமாறு விளக்குகிறது.

'வேத₃ப்ரணிஹிதோ த₄ர்ம: அத₄ர்மஸ்த₃த்₃விபர்யய':

(ஸ்ரீமத்₃ பா₄கவதம்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'வேதங்களில் கடைப்பிடிக்கப்பட வேண்டியவை என்று விதித்துள்ளவை தர்மம் ; விலக்கப்பட வேண்டியவை என்று விதித்துள்ளவைகள் அதர்மம், என்று ஸ்ரீமத் பாகவதத்தில் சொல்லப்பட்டுள்ளது.

வேதங்களில் விதித்துள்ள காம்ய கர்மங்களைத் தகுதியுள்ளவன் செய்யும் பொழுது பெரும்பாலும் அவைகளில் குறிப்பிட்டுள்ள பலன்கள் கிடைத்துவிடும். ஒருகால் பலன் கிடைக்கவில்லையெனில், குற்றம் வேதங்களினுடையது அன்று. அவற்றைச் செய்பவரின் தகுதியிலும் மற்றும் செய்த முறையிலும் உள்ள குறைகளே காரணமாகும். இதுவே நம் முன்னோர்களின் அனுபவம். பாரத தேசத்தில் கன்னியாகுமரியிலிருந்து இமயம் வரை வேதங்களில் விதித்துள்ள செயல்பாட்டு முறைகள் பழக்கத்தில் இருந்து வருகின்றன. ஒன்றுக்கொன்று சம்பந்தம் உள்ள வேத மந்திரத்தின் தனிச்சிறப்பிற்குக் காரணமான நான்கு காரணிகள் பின்வருமாறு :-

ரிஷி :	யாராலும் எழுதப்படாத வேதத்தைக் கண்டுணர்ந்த ரிஷியின் பெயர்
தே$_3$வதா	மந்திரத்தில் துதிக்கப்பட்ட தேவதையின் பெயர்
ச$_2$ந்த$_3$ஸ்	மந்திரத்தில் உள்ள எழுத்துக்களின் எண்ணிக்கை
வினியோக :	பிரயோகிக்கும் விதம்

ஸந்த்யா-உபாஸனையில் வரும் முதல் மார்ஜன மந்திரத்தில் இதை பார்க்கலாம்.

ரிஷி :	ஸிந்து$_4$த்$_3$வீபருஷி :
தேவதா	ஆபோதே$_3$வதா
ச$_2$ந்த$_3$ஸ்	அனுஷ்டுப் ச$_2$ந்த$_3$:
விநியோக$_3$:	மார்ஜனே விநியோக$_3$:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதுவே 'ருஷ்யாதி$_3$ - சதுஷ்டயம்' என்றழைக்கப்படும்.

இதனால் காயத்ரீ ஜபம் ஒரு மிக உயர்ந்த ஆன்மீகச் செயல் என்ற அறியமுடிகிறது. ஆயினும், இதனை அனுஷ்டிப்பதன் மூலம் யாராவது பயனடைந்துள்ளனரா என்று அறிய, மந்திரத்தால் பயனடைய விரும்புபவரின் மனதில் சந்தேகம் எழுகிறது.

பயனடைந்தவர்களைப் பற்றி அறிந்தபின் தினசரி ஸந்த்யோ பாசனை செய்வதில் நம்பிக்கை பன்மடங்கு அதிகரிக்கும்.

"பஹு"வக்தஸம்வா$_3$தாதே$_3$வ

த$_3$ார்ட்$_4$ய-ஹேதுத்வாத் "

(வி.த. விநிர்ணயம்)

அம்மாதிரி மனிதர்கள் பலர் இருப்பின், அதுவே துணைபுரியும் ஆதாரமாக விளங்கி, புதியவர்களுக்கு ஸ்திரமான நம்பிக்கையை வளர்த்து, சாதனையை ஆரம்பிக்க உதவுகிறது. சரி. அம்மாதிரி பயனடைந்த மனிதர்களுள் சிலரைப் பற்றி அடுத்த அத்தியாயத்திலே பார்ப்போம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் - 3

காயத்ரீயினால் பயனடைந்தவர்கள்

'ஶ்ருங்கி' யின் சக்தி : 'காயத்ரீ' மந்திரத்தால் சக்தி அடைந்தவர்களுள் முதலில் நம் நினைவிற்கு வருபவன் 'ஶ்ருங்கி' என்கிற பத்து வயது பாலகன், 'ஶமீகர்' என்கிற ரிஷியின் மகன். ஸ்ரீமத் பாகவதத்தின் முதல் ஸ்காந்த₄தித்தின் முடிவில் இவர்களைப் பற்றிய தகவல்கள் வந்துள்ளன. கு₁ரு வம்சத்தில் மஹா பாரதயுத்தத்திற்குப் பிறகு பாண்டர்வர்களின் ஒரே வாரிசான அர்ஜுனனின் பேரன் 'பரீக்ஷித்' சக்ரவர்த்தியாக இருந்தான். ஒருமுறை 'பரீக்ஷித்' அரசன் வேட்டையாட சென்றான். வேட்டை முடிந்து திரும்பும் பொழுது மதிய வேளையாதலால், மிகவும் தாகம் உண்டாயிற்று. நீரைத்தேடி வரும்பொழுது சந்நியாஸிகளின் ஆஶ்ரமங்கள் புலப்பட்டன. ஓர் ஆஶ்ரமத்தை அணுகி நீர் கேட்க, பதிலேதும் வராததால் சற்று உள்ளே சென்று பார்க்க அங்கு ஒரு ரிஷி (ஶமீகர் என்ற பெயர்) பத்மாஸனத்தில் அமர்ந்து நிஷ்டையில் இருக்கக் கண்டான். பரீக்ஷித் உரத்த குரலில் நீர் கேட்டான். ரிஷி நிஷ்டையில் (த்யானம்) இருந்ததால் பதில் கிடைக்கவில்லை. இதைக் கண்ட பரீக்ஷித் பொறுமையிழந்தவனாய் சினம் (கோபம்) கொண்டான். அந்த ஆஶ்ரமத்தில் அவனுக்கு நீர் கிடைக்கவில்லை. பிராம்மணர்கள் தன்னுடைய அரண்மனைக்கு வந்தால் அவர்களை கண்ணியமாக உபசாரம் செய்வதையும், ஆனால், தான் அவர்களது ஆஶ்ரமத்திற்கு வரும் பொழுது புறக்கணிக்கப்படுவதையும் கண்டு, மிகுந்து வெறுப்படைந்தான்

அதே மனநிலையில், சுற்றும் முற்றும் பார்வையைச் செலுத்தியவனாய், அங்கு ஒரு பாம்பு இறந்து கிடப்பதைப் பார்த்தான். பொறுமையிழந்து, மற்றும் குழப்பமடைந்தவனாய், அந்தப் பாம்பை ஶமீக ரிஷியின் கழுத்தில் மாலையாக அணிவித்துத் தன் ராஜ்யத்திற்குப் புறப்பட்டான். சிறிது நேரம் கழித்து அங்கு வந்த சில சிறுவர்கள், ரிஷியின் கழுத்தில் இருந்த பாம்பைக் கண்டு அருகில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விளையாடிக்கொண்டிருந்த ஶ்ருங்கியிடம் இச்செய்தியைத் தெரிவித்தனர். ஶ்ருங்கி ஓடோடி வந்து தந்தைக்கு ஏற்பட்ட அவமானத்தினால் மனவேதனையடைந்தவனாய், கோபத்தினால் தன் நிலையிழந்தான். ஸ்ரீ கிருஷ்ண பரமாத்மா பரந்தாமத்திற்குச் சென்ற பின் பிராம்மணர்களுக்கு இந்த அவலநிலை ஏற்பட்டதை நினைத்து மிகவும் வேதனைப்பட்டான். அச்சிறுவன் தன் தந்தையின் அவமானத்திற்குக் காரணமான அந்த அரசன் தண்டனைபெறத் தகுதியுள்ளவன் என்று எண்ணலானான். உடனே, தர்பைப் புல்லையும், நீரையும் கையில் எடுத்து, சில சடங்கு முறைகளைச் செய்து அவன் சாபம் இட்டது ஓர் ஆயுதத்தினால் தாக்கியது போல் இருந்தது.

"கௌ₁ஶிக்யாம் வார்யுபஸ்ப்ருஶ்ய
வாக₃ஸ்த்ரம் விஸஸர்ஜ ஹ" (பாகவதம்)

"இன்றிலிருந்து ஏழாவது நாள், பரீக்ஷித் ராஜா 'தக்ஷகன்' என்ற பாம்பினால் தீண்டப்பட்டு இறக்கட்டும்" என்பதே சாபம்.

சிறிது நேரம் கழித்து ஶ்ருங்கியின் குரலைக் கேட்ட தந்தை ஶமீக ரிஷி நிஷ்டையிலிருந்து விழித்துத் தன்மகனின் மூலம் நடந்ததை அறிந்து, கலிபுருஷனையே தன் கட்டுப்பாட்டில் கொண்டு வந்த உயர்ந்த ஜீவனான சக்ரவர்த்தி பரீக்ஷித் ராஜனுக்கு ஶ்ருங்கி அளித்த சாபத்திற்காகத் தன் மகனைக் கண்டித்தார். தன்னிடம் தெய்வீக சக்தி இருப்பினும், மகன் அளித்த சாபத்தை பயனற்றுப்போகச் செய்யவில்லை. ஆனால் சாபத்தின் விஷயத்தைப் பரீக்ஷித் ராஜனுக்கு செய்தியாக அனுப்பினார்.

பரீக்ஷித் ராஜன் தன் அரண்மனைக்குத் திரும்பும் வழியில் தான் செய்த செயலைக் குறித்து மிகவும் மனம் வருந்தினான். த்யானத்தில் இருந்த ரிஷியை அவமானம் செய்தது ஒரு மஹாபாவம் என்று உணர்ந்தான். இதற்குத் தகுந்த பலனை அடைய வேண்டிவரும் என்றும் எண்ணினான். அன்றைய தினமே, ஶ்ருங்கி அளித்த சாபத்தின் செய்தி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ராஜனுக்குத் தெரிய வந்தது. ஶ்ருங்கி என்ற பாலகன் அளித்த சாபத்தைக் கேட்டு ராஜன் அவன் மீது கோபிக்கவில்லை. மாறாக ராஜ்யத்தைத் தன் மகன் ஜனமேஜயனுக்கு அளித்துவிட்டு, கங்கை நதியின் கரையில் ஏழு நாட்களையும் கழிக்கப் புறப்பட்டான். செய்தி அறிந்த பல அரசர்களும், ஞானிகளும், முனிவர்களும் கங்கை நதீ தீரத்தை வந்தடைந்தனர். பகவான் வேத வ்யாஸரும், அவருடைய மகன் ஶுக முனியும் அங்கு வந்தனர். பரீக்ஷித் ராஜன் ஶுக முனிவரிடம் ஏழு நாட்களும் பக்தியுடன் ஸ்ரீமத்பாகவதம் (புராணம்) கேட்டு ஏழாவது நாள் முடியும் தருவாயில், தேவலோக சர்ப்பமான 'தக்ஷகன்' மாறுவேடத்தில் பிராம்மணனாக ரிஷிகள் மத்தியில் நுழைந்து பின் சிறு புழு உருவத்தில் ஒரு பழத்தில் நுழைந்தான். ஶுக முனி அப்பழத்தைப் பரீக்ஷித்துக்குக் கொடுக்க, தக்ஷகன் பரீக்ஷித்தைத் தீண்ட பரீக்ஷித் தனது பூத உடலைத் துறந்தான். இது பாகவதத்தில் வர்ணிக்கப்பட்டுள்ளது.

'ஶ்ருங்கி' என்ற பத்து வயது நிரம்பாத அந்த ரிஷி குமாரனின் சாபத்தைத் தந்தையான ஶமீக ரிஷியும், தமக்கு ஸாமர்த்யம் இருந்தும் ரத்து செய்யவில்லை. ஏன்? பரீக்ஷித் ராஜனும் சாதாரண மனிதனல்லன். தான் சுபத்ரையின் கர்ப்பத்திலிருக்கும் பொழுது, அஶ்வத்தாமாச்சாரியார் எய்த ப்ரஹ்மாஸ்த்ரத்தினிடமிருந்து பகவான் ஸ்ரீக்ருஷ்ணனால் காப்பாற்றப்பட்டவன், மற்றும் கலி புருஷனை ஸம்ஹாரம் செய்யவும் துணிந்தவன். இப்பேர்பட்ட சக்தி பெற்ற பரீக்ஷித் சிறு பாலகன் அளித்த சாபத்தை எதிர் கொள்ள ஏன் முடியவில்லை ? சாக்ஷாத் நாராயணனின் அவதாரமான வேதவ்யாஸ பகவானும், இந்தச் சிறு பாலகன் செய்த ஸாபத்தை முறியடிக்கவில்லையே. ஏன் ?

ருத்ரனின் அவதாரமான ஶுக முனிவரும் ஶ்ருங்கியின் சாபத்திற்கு பிராயச்சித்த ரூபமாக பரீக்ஷித்திற்கு நற்கதி கிடைக்கவே ஸ்ரீமத் பாகவதத்தை ஏழு நாட்களும் ஶ்ரவணம் செய்யக் கூறுகின்றார். இதனால் நாம் அறிவது என்ன? சிறுவனின் சாபத்தை நிறைவேற்ற தேவலோகத்துப்பாம்பான 'தக்ஷகனும்' உறுதுணையாக இருந்து,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்பாலகனிடம் உள்ள சக்தியை வெளிப்படுத்துவதாக உள்ளது அன்றோ? இச்சக்தி அவனுக்கு எவ்வாறு கிடைத்தது? பத்து வயது ஆன அந்தப் பாலகன், உபநயனம் ஆன எட்டு வயது முதல் சுமார் இருவருடங்களாக ஆகமத்தில் விதித்துள்ளபடி தவறாது காயத்ரீ ஸந்த்யோபாசனை செய்து, அதனால் சக்தி பெற்றிருந்தான் என்று தெரிய வேண்டும்.

ஸ்ரீ மத் மஹாபாரத காலத்திற்கும் ஸ்ரீ மத் பாகவத புராண காலத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் நடந்த மேற்கூறிய உதாரணம் மிகத்தொன்மையானது (B.C). பிற்கால சரித்திரத்தில் (A.D). நடந்த சில உதாரணங்களைப் பார்ப்போம்.

பீர்பால் ஓர் அந்தணனுக்கு அளித்த அறிவுரை :

16-ஆம் நூற்றாண்டில் இருந்த முகலாய மன்னன் அக்பரை யாவரும் அறிந்திருப்பர். அவனது மந்திரி சபை நவரத்னம் என்று பெயர் பெற்ற ஒன்பது மந்திரிகள் அடங்கியது.

அவர்களுள் 'பீர்பால்' எனும் பெயருடைய மந்திரி ஓர் அந்தணன். அவன் மிகவும் புத்தியுள்ளவனாகவும் நகைச்சுவை மிகுந்தவனாகவும் இருந்தான்.

அவ்வப்பொழுது அக்பர், பீர்பாலுடன் மாறுவேடத்தில் தன் ராஜ்யத்தின் சில பகுதிகளுக்கும், சில மனிதர்களிடமும் சென்று, அவர்களுக்குண்டான கஷ்டங்களிலும் அவைகளை எவ்விதம் களைய அரசாங்கம் உதவ முடியும் என்ற பலவிஷயங்களிலும், பிரஜைகளின் அபிப்ராயத்தை அறிந்து கொள்பவனாயிருந்தான். ஒரு சமயம் அம்மாதிரி மாறுவேடத்தில் பீர்பாலுடன் அக்பர் செல்லும்பொழுது, ஒரு பிராம்மணன் வீடு வீடாகச் சென்று பிச்சை கேட்பதை பார்த்து, வெறுப்புடன் பீர்பாலை நோக்கினான். குறிப்பறிந்த புத்திமானான பீர்பால் அன்றைய தினம் அந்த ப்ராம்மணனுக்குத் தன்னை வந்து பார்க்கும் படி செய்தி அனுப்பினான். அந்த ஏழைப் பிராம்மணனும் பீர்பாலின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இல்லத்திற்கு வருகை தந்தான். அப்பிராம்மணனை மரியாதையுடன் உபசரித்து, பீர்பால் பிச்சை எடுப்பத்னால் ஒருநாளுக்கு எவ்வளவு பணம் வருகிறது என்று வினவ, ஒன்று அல்லது இரண்டு ரூபாய் என்று பிராம்மணன் கூறினான். மறு தினத்திலிருந்து பிச்சையெடுப்பதை நிறுத்தி இரண்டு ரூபாயைத் தினமும் காலையில் தன்னிடமே வந்து பெற்றுக் கொள்ளுமாறு பீர்பால் உரைத்தான். மற்றுமொரு நிபந்தனையையும் விதித்தான். "இவ்வாறு (பிச்சையெடுப்பதை நிறுத்தியதால்) சேமிக்கப்பட்ட நேரத்தை ஸந்த்யோபாசனை செய்து 108 முறை காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும்." பிராம்மணனும் நிபந்தனைக்கு ஒப்புதல் அளித்துத் திரும்பினான்

அனுதினமும் ஸந்த்யோபாஸனை செய்தும், பீர்பாலிடமிருந்து பணம் பெற்றுக் கொண்டும் சில வாரங்கள் கழிந்தன. பிராம்மணன் சிந்திக்கலானான். தன்னிடம் ஏராளமான நேரம் இருப்பதினால், காயத்ரி மந்திரத்தை 1000 முறை செய்ய எண்ணி, அனுதினமும் காயத்ரி மந்திரத்தை 108 லிருந்து 1000-ஆக உயர்த்திச் செய்யத் தொடங்கினான். மிகவும் சிரத்தையுடன், இடைவிடாமல் அனுதினமும் செய்த காயத்ரீயின் பலனாகப் பணமும் பொருளும் அவனிடம் தானமாக வந்து சேர்ந்தன. சில நாட்களுக்குப்பின் அவன் பீர்பாலின் வீட்டிற்கும் செல்லவில்லை. பகவத்கீதையில் ஸ்ரீ கிருஷ்ணன் அருளிய வாக்யம் "யத்$_3$ருச்சா$_2$லாப$_4$- ஸந்து$_1$ஷ்டோ த்$_3$வந்த்வாதீதோ விமத்ஸர:" அவனது நினைவிற்கு வந்தது. தானமாகக் கிடைத்தச் சம்பத்தை வைத்து த்ருப்தியடைந்தான். காலப்போக்கில், பீர்பாலின் வீட்டையும் மறந்து, தனது ஆன்மீக சாதனையை மேலும் வளர்த்துக் கொண்டான்.

ஆன்மீக சாதனைகளை, புகழ் பெற்ற கோவில்களிலோ அல்லது நதீதீரத்திலோ செய்வது மேலும் புண்யகரமானது என்று பெரியோர்களிடமிருந்து அறிந்து, தன்னுடைய ஆன்மீக சாதனையை யமுனை நதி தீரத்திற்கு இடம் மாற்றிக் கொண்டான். வெகுகாலம் இந்த சாதனை நீடித்தது. இக்காலத்தில், தன் குடும்பத்தைப் பற்றிய சிந்தனை மற்றும் தனது அன்றாடத் தேவைகளைப் பற்றிய சிந்தனையிலிருந்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடுபட்டவனானான். வேறொருவரின் உதவியில்லாமலேயே அவனது குடும்பம் காப்பாற்றப்பட்டது. இவ்வாறாக காயத்ரீ ஸந்த்யோபாஸனை தொடர்ந்து நடந்து நான்கு ஆண்டுகள் ஆயின. அப்பிராம்மணனின் பக்தி மிகுந்த சாதனையை கண்டு காயத்ரீதேவி அநுக்ரஹம் செய்ய எண்ணினாள். பரமாத்மாவின் அநுக்ரஹத்தைப் பெற எண்ணிய பிராம்மணன் பரமாத்மாவின் தூதுவன் (சந்நியாஸி அல்லது ரிஷி) ஆக்கப்பட்டான். இந்த அரிய வரத்தாலும், ஆன்மீக அனுபவத்தாலும் அவனுக்கு ப்ரஹ்ம ஞானியை ஒத்த தேஜஸ்ஸும் (ஒளி) கொண்டவனாகி, அவனது அறிவாற்றலால் அருளிய ஆன்மீகப் பேச்சுகள் நாளடைவில் மக்களிடையே பெரும் மதிப்பும் மரியாதையும் பெறத் தொடங்கின. பெயரும் புகழும் தானாகவே அவனிடம் வந்தடைந்தன. இச்செய்தி பீர்பாலை எட்டியது.

அப்பிராம்மணனை பீர்பால் சந்திக்க விரும்பினான். ஆறேழு ஆண்டுகள் கழிந்திருப்பினும், பீர்பால் அந்த பிரம்மஞானியின் ஒளிமிக்க முகத்தையும், அமைதியான பேச்சையும், புன்முறுவலையும் கண்டு, பக்தியுடன் அணுகி, அந்த மஹானை அடையாளம் கண்டு கொண்டு பேசத்தொடங்கினான். "என் இல்லத்திற்கு வருவதை ஏன் நிறுத்தி விட்டீர்கள்" என வினவினான். அந்த மஹானும், பீர்பாலை அடையாளம் கொண்டு பேசத் தொடங்கினான். "நன் மதிப்பிற்குரிய பீர்பால், நீ எனக்கு காயத்ரீ ஸந்த்யோபாஸனையைக் குறித்து நிபந்தனை அளித்த அந்த நாளிலிருந்து எனது வறுமை நிலை விலகிவிட்டது" என்று கூறினான். தனது ஏழாண்டு ஆன்மீக பயணத்தைப்பற்றி பீர்பாலுடன் உரையாடினான். ஆன்மீக வழியில் தன்னை அனுப்பிய பீர்பாலை மேலும் மிகப் புகழ்ந்தான். உண்மையாக, பக்தி சிரத்தையுடன் ஆன்மீக வழியில் சென்றது தான் இந்த உயரிய நிலைக்குக் காரணம் என்று கூறி பீர்பாலும் அப்பிராம்மணனைப் புகழ்ந்தான்.

அப்பிராம்மணின் சாதனையை எண்ணி பீர்பால் மிகவும் பெருமிதம் கொண்டான். அப்பிராம்மணனைக் குறித்த அக்பரின் தவறான எண்ணத்தைப் போக்குவதற்கு இதுவே சரியான தருணம் என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

எண்ணலானான். ஒரு நாள் அரசரை அணுகி, தன் ராஜ்யத்திற்கு ஓர் உயர்ந்த மனிதர் வருகை தந்துள்ளார் என்றும் அவரை ராஜா சந்திக்க வேண்டும் என்று கூறினான். அக்பர் சம்மதம் அளித்தார். அதன்படி ஒரு நாள் அக்பரும் பீர்பாலும் அந்த மஹானைச் சந்திக்க சென்றனர். முதலில் சம்ப்ரதாயங்கள் முடிந்தபின், பீர்பால், "இப்பிராம்மணனைப் பார்த்த நினைவிருக்கிறதா ;" என்று ராஜனை வினவ, அக்பர் "இல்லை" என்று கூறினார். பழைய நிகழ்வுகளை ஞாபகப்படுத்த அக்பருக்கு அந்த பிராம்மணனின் நினைவு மங்கலாக வந்தது. அக்பர் மிகுந்த ஆச்சர்யத்துடன் இந்த மஹானைப் பற்றி அறிந்து, ஏழைப் பிராம்மணன் மஹானாக மாறியது எவ்வாறு சாத்யமாயிற்று என்று பீர்பாலை வினவினான். 'விலை மதிப்பற்ற பிரார்த்தனை காயத்ரீ மந்திரம் என்பது; இதை எவனொருவன் இடைவிடாது பக்தி சிரத்தையுடன் தினமும் மூன்று காலமும் முறைப்படி உபாசிக்கின்றானோ அவன் இம்மஹானைப் போல ஆகின்றான். எவ்வாறு தங்க உலோகமானது, தகுந்த செயற்பாட்டிற்குப் பின் (ப்ராஸஸ்) பெரும் பொலிவைப் பெறுகிறதோ அதே போன்று மனிதனும் சாதனைக்குப்பின் சுத்தமாகவும் பொலிவுடனும் விளங்குகிறான். இந்தப் பிராம்மணனே இதற்குச் சிறந்த உதாரணம் என்று பீர்பால் பதிலளித்தான். காயத்ரீயின் மஹிமை அற்புதமானது.

காயத்ரீயின் இந்த அற்புதமான மஹிமை அக்பரின் மனதில் ஆழப்பதிந்தது. இந்நிகழ்ச்சியைத் தமது 'அக்பர் நாம' என்ற புத்தகத்தில் பதிவு செய்துள்ளார். இந்நிகழ்வு மனதில் ஆழமாகப் பதிந்தாலும், இது 400 வருடங்களுககு முன் நிகழ்ந்த பழமையானது. பிற்காலங்களில் ஏதாவது உதாரணம் உள்ளதா என்று பார்ப்போம்.

ஸ்வாமி விரஜானந்தார்

19-ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் விரஜானந்தர் மதுரா நகரில் பிறந்தார். ஒரு வயது குழந்தையாக இருக்கும் பொழுது அம்மை நோய் தாக்கியதால் கண்பார்வையிழந்தார். ஐந்து வயது முடிவதற்குள் தாய் தந்தையரும் மரணம் எய்தினார். தன் மூத்த அண்ணனின் குடும்பத்தில் வளர்ந்து வந்தார். ஏழாவது வயதில்அவருக்கு உபநயனம் செய்வித்து

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காயத்ரீ உபதேசிக்கப்பட்டது. அண்ணனின் மனைவி அவரை வெறுத்தாள். புறக்கணித்தாள். வீட்டில் நிலைமை சரியாக இல்லையென்று உணர்ந்த அச்சிறுவன், சில யாத்ரீக்கர்களுடன் 'ஹ்ரிஷீகேஶ்' வந்து சேர்ந்தான். அங்கு ஓர் ஆஶ்ரமத்தில் தங்கியிருக்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. ஆஶ்ரமத்திலுள்ளவர்கள் இவரிடம் அன்பாகப் பழகி வந்தனர். அங்கு வசிப்பது அவருக்குத் திருப்தியாக இருந்ததால், மதுராவிற்கு திரும்ப எண்ணவில்லை.

ஆஶ்ரமத்தில் நிகழும் சொற்பொழிவுகளை அவ்வப்பொழுது ஆர்வத்துடன் கேட்டான். காயத்ரீ மந்திரத்தின் மஹிமையை நன்கு உணர்ந்து கொண்டான். பார்வையிழந்தவனாகையால் எழுதப் படிக்க இயலவில்லை. ஆகவே, பெரியோர்களின் அறிவுரைகளைக் கேட்பதும், காயத்ரீ மந்த்ரோபாசனை செய்வது இவை மட்டுமே அவனது செயலாக ஆயின. காலை 4 மணிக்கு, கங்கையில் நீராடி, கங்கை நதியில் மார்பளவுக்கு நீர் மட்டம் உள்ளபடி நின்று 1000 முறை காயத்ரீ மந்திரம் உச்சரிக்கத் தொடங்கினான். படிப்படியாக சாதனை அதிகரித்து காயத்ரீ மந்திரத்தை சூர்யோதயம் ஆகும் வரை ஜபம் செய்யத் தொடங்கினான். நான்கு ஆண்டுகள் சாதனை தொடர்ந்தது. அவனது பக்தி, சிரத்தை, விடா முயற்சி இவற்றைக் கண்டு 'காயத்ரீ தேவி' பிரஸன்னளாகி அநுக்ரஹித்தாள், பார்வையற்றிருப்பினும், ஒரு நிமிடம் தன்னுள் ஓர் ஒளிக் கீற்றை உணர்ந்தான், அகத்தின் இருள் விலகியதாக உணர்ந்தான். தெய்வீக ஞானமும், எந்த ஒரு விஷயத்தையும் ஒரு முறை கேட்பதினாலேயே அதை க்ரஹிக்கும் சக்தியையும் காயத்ரீ மாதா அவனுக்குத் தந்தருளினாள்.

இதன் பிறகு, அனைத்து வேதங்களையும் ஒரு முறை கேட்டதன் பயனாக வேதங்களைக் கற்றவானான். வேதங்களையும் வேதாங்கங்களையும் இவ்வாறாகப் பயின்று, தனது பதினான்காம் வயதில் சந்நியாஸம் மேற்கொண்டான். ஸ்வாமி விரஜானந்தா என்றழைக்கப்படலானான்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஒரு முறை கங்கையில் ஸ்நானம் செய்யும் பொழுது, அருகில் வேறொரு கேரள அந்தணன் 'பாணினியின் அஷ்டத்யாயீ' யை (வ்யாகரணம்) மனப்பாடமாக ஓதிக்கொண்டே ஸ்நானம் செய்வதைப் பார்த்தார். ஸ்வாமி விரஜானந்தர் செய்தி அனுப்ப, அந்தக் கேரள வ்யாகரண பண்டிதன் ஸ்வாமிகளிடம் வந்தான். ஸ்வாமி விரஜானந்தர் பண்டிதனின் பாண்டித்யத்தை வெகுவாகப் புகழ்ந்து தமக்காக ஒரு முறை பாணினி வ்யாகரணத்தை (அஷ்டத்யாயீ) ஒப்புவிக்குமாறு வினயத்துடன் கேட்டுக்கொண்டார். கேரள பண்டிதனும் அவ்வாறே ஒப்புவித்தான். இவ்வாறாக பாணினி வ்யாகரணத்தையும் ஸ்வாமி விரஜானந்தர் கற்றதாயிற்று. ஆராய்ந்து அறியும் திறமையினால் மூல வ்யாகரணத்திற்குத் தமது சொந்த உரையையும் செய்யலானார். நாற்பது வயதில் ஸ்வாமி விரஜானந்தரின் புகழ் வட இந்தியா முழுவதும் பரவியது. மதுரா நகரவாசிகள் மிகவும் பெருமை கொண்டனர். ஸ்வாமிகளை மதுரா நகருக்கு விஜயம் செய்யுமாறு வேண்டினர். அங்கு ஸ்வாமிகளுக்காக ஓர் ஆശ്രமம் நிர்மாணம் செய்தனர். நியாய, வேத, வேதாங்கங்களை ஸ்வாமிகளிடமிருந்து கற்க, பல சிஷ்யர்கள் சேர்ந்தனர். அவர்களில், தயானந்த ஸரஸ்வதியும் ஒருவர். எட்டு வருடங்களாக குருவைத் தேடி அலைந்து முடிவில் ஸ்வாமி விரஜானந்தாரிடம் சேர்ந்து நான்கு ஆண்டுகள் மதுராவில், வேத வேதாங்கங்களைப் பயின்றார்.

பிறவிக் குருடனாய் இருந்து, காயத்ரீ மந்த்ரோபாசனையின் உதவியால் சாதித்ததை ஒரு நல்ல பார்வை உள்ளவன் கூட சாதிக்க மாட்டான். இதுவே காயத்ரீயின் மஹிமை.

பிரபு ஆஸ்ரித் ஸ்வாமிஜி

கிருஷ்ணானந்த் என்ற இந்தியர், தென் ஆப்பிரிக்காவில் தம்முடைய மனைவி, இரு குழந்தைகளுடன், வியாபார செய்து வாழ்ந்து வந்தார். சிறு தொழிற்சாலைக்கு உரிமையாளரானார். சில காலம் நன்றாக நடந்த வியாபாரம் மெல்லச் சரியத் தொடங்கி, மீள

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடியாத கஷ்ட தசையைஅடைந்தது. தொழிலாளர்களுக்குக் கூலி கொடுக்கக் கூட முடியாமல் நஷ்டத்தினால் தொழிற்சாலையை மூட நேர்ந்தது. தொழிலாளர்கள் நீதிமன்றம் சென்றனர். அந்த அரசாங்கச் சட்டத்தின் படி, வேலை செய்ததற்கு கூலி வழங்கத் தவறினால் ஐந்து ஆண்டு காலம் வரை சிறை வாசம் செல்ல நேரிடும்.

அந்த வழக்கு நீதிமன்றத்தில் விசாரணைக்கு வருவதற்கு முன் எப்படியாவது கடன் பெற்றாவது, தொழிலாளர்களின் கூலியைக் கொடுக்க எடுத்த முயற்சியிலும் தோல்வி அடைந்தார். மிகவும் வேதனையுடன் இருந்தார். வழக்கு விசாரணைக்கு வருவதற்கு ஒரே ஒரு நாள் தான் அவகாசம் இருந்தது. செய்வதறியாது முடிவில் இறைவனின் பக்கம் அவரது கவனம் திரும்பியது. ஆன்மீகத்துறையைச் சேர்ந்த ஓர் இந்தியரைச் சந்திக்கநேர்ந்தது. அவரிடம் தம் குறைகளைக் கூறி தமக்காக இறைவனிடம் பிரார்த்திக்குமாறு வேண்டினார். குறையுள்ளவர்கள் இறைவனை நேராகப் பிரார்த்தனை செய்வதே நன்று என்று அந்த நபர் க்ருஷ்ணானந்திடம் கூறி, காயத்ரீ மந்திரத்தைப் பற்றி அவருக்கு உபதேசித்து அம்மந்திரத்தை வழக்கு விசாரணைக்கு வரும்வரை திரும்பத் திரும்ப ஜபிக்குமாறு கூறினார். அம்மந்திரத்தை ஒரு காகிதத்தில் எழுதி க்ருஷ்ணானந்திடம் அளித்து, இது ஒன்றே சிறந்த வழி என்று கூறினார். அவதிப்படும் நோயாளியின் நிலையை நேரில் பார்த்த மருத்துவர் எப்படித் தாமதம் செய்யாமல் சிகிச்சை தருகிராறோ, அதே போல் இறைவனும் தன்னிடம் நேராக வரும் பக்தர்களின் குறையை உடனடியாக போக்குபவன். இறைவன் கருணை வடிவம் கொண்டவன். இவ்வாறாக நம்பிக்கை வார்த்தைகளைக் கூறி க்ருஷ்ணானந்திடம், இறைவனிடம் நேராக முறையிடுவது ஒன்றே வழி எனக் கூறினார்.

க்ருஷ்ணானந்தும் உடனே காயத்ரீ மந்திரத்தை ஜபிக்கலானார். மறுதினம் காலை 11 மணிக்கு விசாரணைக்கு எடுத்தக் கொள்ளப் படவேண்டிய இவ்வழக்கு, கால தாமதமாய் மாலை 5 மணிக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. நீதிபதிகளும் காலையிலிருந்து பலவித

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
வழக்குகளில் கவனம் செலுத்தியதால் சோர்வடைந்து காணப்பட்டனர். இருப்பினும் இவ்வழக்கை விசாரித்தனர்.

க்ருஷ்ணானந்தின் வாதத்தைக் கேட்டபிறகு தீர்ப்பளித்தனர். "க்ருஷ்ணானந்த் தன்னுடைய ஜீவனத்திற்கு வேறு வேலை தேட வேண்டும். நீதிமன்றத்துக்கு ஒரு குறிப்பிட்ட காலம் வரை பிரதி மாதமும் 5 பௌண்ட், அபராதம் செலுத்த வேண்டும். தொழிற்சாலை சொத்தை நீதிமன்றம் கைப்பற்றி, அதை விற்றுத் தொழிலாளர்களின் பாக்கியையும் வேறு கடன்களையும் அடைக்க வேண்டும்."

சிறைவாசம் என்ற ஆபத்திலிருந்து க்ருஷ்ணானந்த் காப்பற்றப்பட்டார். கடன் தொல்லைகளிலிருந்து தொழிற்சாலை பொறுப்பிலிருந்தும் விடுபட்டார். தமக்குக் கிடைத்த தண்டனை கடுமையாக இல்லாதது குறித்து, அந்த இறைவனே நீதிபதிகளின் புத்தியில் நின்று இவ்வாறாகச் செயல்புரியத் தூண்டியிருக்கிறான் என்று விசுவாசத்துடன் நம்பினார். சிறைவாசத்திலிருந்து தப்பியதால், மனைவி மக்களும் காப்பாற்றப்பட்டனர். காயத்ரீ மந்திரத்தின் மஹிமை இவ்வளவு குறுகிய நேரத்தில் தமக்குப் பலனளித்ததை எண்ணி, இறைவனிடத்தில் பக்தியும் காயத்ரீ மந்திரத்தை ஜபிப்பதில் சிரத்தையும் அதிகமாயின. சில நாட்களிலேயே தம்முடைய பொறுப்புகளையெல்லாம் முடித்த பிறகு, இந்தியாவிற்கு திரும்பினார். மத்திய பிரதேச மாநிலத்தைச் சேர்ந்த அவர், உடனே தம் சொத்துக்களை மனைவி மக்களுக்குக் கொடுத்து, இல்லற வாழ்க்கையைத் துறந்து, ஸந்நியாஸம் மேற்கொண்டார். அதன் பிறகு க்ருஷ்ணானந்த் 'பிரபு ஆஸ்ரித் ஸ்வாமிஜி' என்ற பெயருடன் விளங்கினார். நகரத்தின் வெளிப்புறத்தில், காயத்ரீ உபாசனை செய்து காலம் கடத்தினார். காயத்ரீ தேவியின் அருளும் அவருக்குக் கிடைத்தது. காயத்ரீ மஹிமையை மக்களிடையே பரப்புவதில் ஈடுபட்டார். உருது மொழியில் 'காயத்ரீ ரஹஸ்ய' என்ற புத்தகத்தை எழுதினார். மிகவும் சுவராஸ்யமான அந்த உருது மொழிப் புத்தகத்தை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ கிருஷ்ண சௌத்ரி என்பவர் ஆங்கிலத்தில் மொழிப் பெயர்த்துள்ளார். காயத்ரீ மந்த்ரோபாசனையிலேயே தம் வாழ்நாளை க்ருஷ்ணானந்த் கழித்தார். இது ஒரு பெரிய சாதனையன்றோ?

சக்ரவர்த்தி ராஜகோபாலாச்சாரி

ராஜாஜி என்றழைக்கப்பட்ட இந்த அந்தணர் 1879-1974 AD-ல் வாழ்ந்தவர். இந்திய சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு பலமுறை ஆங்கிலேயர்களால் சிறைப்படுத்தப்பட்டவர். அவர் 'Twenty one Days of Jail life" (21 நாட்களின் சிறைவாசம்) என்ற தமது சிறிய ஆங்கில புத்தகத்தில், காயத்ரீ மந்திரத்தைப் பற்றிக் குறித்துள்ளார். சிறைவாசத்தில் தாம் பல வித இன்னல்களையும் அசௌகர்யங்களையும் அனுபவித்தபோதிலும், நாள்தோறும் இருப்பினும், இரவு உறங்குவதற்கு முன் 10 முறை காயத்ரீ மந்திரத்தை ஜபம் செய்ததாகக் குறிப்பிட்டுள்ளார். ராஜாஜி ஒரு தத்துவ மேதை. அவர் காயத்ரீ உபாசனையைப் பற்றி குறிப்பிட்டிருப்பதிலிருந்தே ஒவ்வோர் அந்தணருக்கும் எக்கால கட்டத்திலும் காயத்ரீ உபாசனை கட்டாயமாகும் என்பதை அவர் அறிந்திருந்தார் என்று தெரிய வருகிறது.

இந்தியா சுதந்திரம் அடைந்தவுடன், ராஜாஜிக்கு முதல் கவர்னர் ஜெனரல் என்ற பதவி கிடைத்தது. அவர் சிறந்த அரசியல்வாதியாகவும் தேசிய வாதியாகவும் இருப்பினும் அவரது ஆன்மீகத் தொண்டு தொடர்ந்தது. இராமாயணம், மஹாபாரதம் ஆகிய இதிஹாஸங்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் சுருக்கிப் புத்தகங்களாக வெளியிட்டுள்ளார். இச்சாதனை காயத்ரீயின் மஹிமையால் அவரால் செய்ய முடிந்தது. காயத்ரீ மஹிமையைப் பற்றி உரைத்த தற்காலத்திய மனிதர் ராஜாஜி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் - 4

ஸந்த்யா ரகஸ்யம்

"ஆசாரால்லப₄தே ஹ்யாயுராசாராதீ₃ப்ஸிதா: ப்ரஜா:|
ஆசாராத்₃தனமக்ஷய்யமாசாரோ₃ஹந்த்₁யலக்ஷணம்"||

(மனுஸ்ம்ருதி 4-156)

பொருள் : நன்னடத்தையால் (ஆசாரம்) ஆயுள் வளர்ச்சியும், நன்மக்களும், அழிவில்லாத செல்வமும் மனிதர்களுக்குக் கிட்டும். உடலிலிருக்கும் கெட்ட குறிகளினால் (அலக்ஷணம்) ஏற்படும் ஏழைமை முதலிய தீமைகளை நன்னடத்தை அழிக்கும்.

ஆனால் மனுஸ்ம்ருதியில் கூறப்பட்ட அனைத்து வைதிக கர்மங்களை (வேதங்கள் கூறும் கடமைகளை), தற்போதைய நவீன காலத்தில் கடைப்பிடிப்பது மிகவும் கடினமாயுள்ளது. ஆங்கிலேயர்களின் அடிமைத்தனத்தில் ஒன்றரை நூற்றாண்டு வரை இருந்ததால் பாரதவாசிகளின் கலாசாரத்தின் நிலை வெகுவாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. இதனால் மக்கள் மனதில் அமைதியில்லை. வைதிக தர்மங்களைக் கடைப்பிடிக்காமல் போனதே இதற்குக் காரணம். இப்படிப்பட்ட ஆபத்தான காலத்தில், தர்மங்களைக் கடைப்பிடிக்க இயலாதபோது, அதில் மிக முக்கியமானவைகளையாவது கடைப்பிடித்தால் போதும். அந்த அளவிலேயே நமக்கு நன்மை கிடைக்கும்.

' ஜப்யேநைவ து ஸம்ஸித்யேத்
ப்₃ராஹ்மணோ நாத்ர ஸம்ஶய':|
குர்யாத₃ன்யத்ர வா குர்யாத் மைத்ரோ ப்₃ராஹ்மண உச்யதே' |

- (மனுஸ்ம்ருதி 2-87)

எல்லா வைதிக கர்மங்களையும் செய்ய முடியாத பொழுது காயத்ரீ மந்திர ஜபத்தாலேயே அந்தணனாகிறான். சித்தியடையத் தகுதியும் பெறுகிறான். இந்த காயத்ரீ ஜபத்திற்கு ஸந்த்₄யா, ஸந்த்₄யானம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முதலிய பெயர்கள் உண்டு. இதற்கு ஆசமனம், மார்ஜனம் முதலிய பல உறுப்புகள் உண்டு. அவை வருமாறு :

(1) ஆசமனம் (2) ப்ராணாயாமம் (3) ஸங்க$_1$ல்பம் (4) மார்ஜனம் (5) மந்த்$_1$ராசமனம் (6) புனராசமனம் (7) புனர்மார்ஜனம் (8) பாபபுருஷவிஸர்ஜனம் (9) புனராசமனம் (10) புன:ப்ராணாயாமம் (11) அர்க்$_4$யப்ரத$_3$ானம் (12) கா$_3$யத்ர்யாகர்ஷணம் (13) பரிஷேசன பூர்வக ஆத்மப்ரத$_3$க்ஷிணம் (14) பூ$_4$தோச்சாடனம் (15) தி$_3$க்$_3$-ப$_3$ந்த$_4$னம் (16) க$_3$ாயத்ரீ-ஆவாஹனம் (17) த்யான ஶ்லோகோச்சாரண பூர்வக காயத்ரீஜபம் (18) புன:ப்ராணாயாமம் (19) கரந்யாஸம் (20) அங்க$_3$ந்யாஸம் (21) காயத்ரீ ஜப ஸாங்கதா கதனம் (22) ஸந்த்யோபஸ்த$_2$ானம் (23) ப்ரதக்ஷிணம் (24) திங்நமஸ்காரம் (25) ஸந்த்$_4$யா-தே$_3$வதாதி$_3$-நமஸ்காரம் (26)கா$_3$யத்ரீ-உத்வாஸனம் (27) ஸர்வாரிஷ்ட நிரஸனம் (28) ஸர்வ மங்கள சிந்தனம் (29) கே$_3$ா ப்$_3$ராஹ்மண நமஸ்காரம் (30) கோ$_3$த்ரோச்சாரண-பூர்வக-அபி$_4$வாத$_3$னம் (31) ந்யூனாதிரிக்த க்ஷமாபணம் (32) ஸமர்ப்பணம் (33) ஸந்த்$_4$யா ஸ்த$_2$லப்ரோக்ஷணம்.

"ஸந்த்$_4$யாஹீனோ Sசிர் நித்யமநர்ஹ :ஸர்வகர்மஸு"

(த$_3$க்ஷஸ்ம்ருதி)

"அனர்ஹ: கர்மணாம் விப்ர: ஸந்த்$_4$யாஹீனோ ஸ்ம்ருத :"

(ச$_2$ந்தே$_3$ாக$_3$பரிஶிஷ்ட)

எந்த நிலையிலும் ஸந்த்$_4$யாவை விடக்கூடாது ; இந்தக் கர்மாவை விட்டவன் வேறெந்த வைதிக கர்மத்திற்கும் தகுதி பெறுவதில்லை.

'கண்டதே காட்சி, கொண்டதே கோலம்' எனும் ஒரே மனதுடன் கூடிய இன்றைய சமுதாயம், இறைவன் எங்கும் எப்பொழுதும் இருக்கிறான் என்பதை ஒப்புக்கொள்வதில்லை. நம்புவதுமில்லை. "(GOD IS DEAD IN 20th CENTURY) இருபதாவது நூற்றாண்டில் இறைவன் இறந்து விட்டான். "சமயம் எங்கும் இல்லை" போன்ற நாராஸமான, அசுபமான கூக்குரல்கள் எல்லா திசைகளிலிருந்தும் கேட்டுக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கொண்டேயிருக்கின்றன. இது நியாயமா? நமக்கு தேகம், இந்திரியங்கள் மற்றும் புத்தி இவைகளை அளித்த இறைவனை நாள்தோறும் மும்முறையாவது சிந்தனை செய்வது முக்கிய கடமையாகும். இறைவனை நினைக்காமல் இருப்பது, இறைவனே இல்லை என்று சொல்வது ஆகியவை நன்றியறிவில்லாமல் இருப்பவரின் எல்லை. ஆனால் நவீனயுகத்தின் (ஸமீபகாலத்து) பல மஹான்கள் இறைவன் உள்ளதை ஒப்புக் கொண்டு, அதைப் பரப்புவதற்காக அறிக்கைகள் வெளியிட்டுள்ளனர். பண்டிட் மதன்மோஹன் மாளவியா அவர்கள் ஒரு க்ரந்தத்தில் எழுதியது, படிப்பவர்களின் கண்ணோட்டத்திற்காக கீழே தரப்பட்டுள்ளது.

"From the day we are born in this world and till we leave this tabernacle of our body we see grand and wonderful sights which excite a great curiosity in our mind to know how they come into being and how again they disappear. We daily observe that the bright orb of the sun with its wreath of thousand rays appears in the eastern horizon early in the morning and, journeying through the heavens and transmitting light, heat and vitality to the whole world, disappears in the west in the evening. By mathematical calculation the astronomers have arrived at the conclusion that the sun is 9,28,3000 miles away from the earth. What a wonder from such a long distance the sun is able to bring light, heat and vitality to all the living beings inhabiting the globe ! It sucks up the moisture of this earth during every season through its myriad rays, sends it up to the heavens and then, transforming it into clouds, discharges it again over the earth and thereby revitalizes the grass, the foliage, the trees and the corn, and infuses new life into all living beings. Every evening after sunset we see the spacious firmament on high, spangled with numberless stars, planets, satellites and heavenly bodies. The slivery moon with its cool and soothing rays carry through the sky from the east to west like the sun, immersing the whole world in the

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

nectar, as it were, and making the nights appear golden. The bright lustre shed by the various heavenly bodies in dark nights and enveloping all the points of the compass appears so beautiful that one does not find adequate words to describe its charm. All these stars and planets are seen revolving in the sky in fixed orbits from day to day, month the month and year to year under immutable laws, as if strung together in a cord. It is evident that if the sun does not shine brightly in a particular summer, we do not have good showers during the following raing reason. It is equally plain that if the rains fail we cannot have a good harvest of corn and fruits to feed ourselves with. Thus we clearly see that it is the sun who provides us all with food in the shape of corn and fruits. Now, the question arises whether all this organisation is the work of some intelligent principle whose object is to create and sustain all moveable and immoveable creatures, or is it the result of a fortuitous conjunction of particles of matter only ? Has this most marvellous constellation of heavenly bodies (solar system as it is called) sprung off under the law of gravitation, which attracts material objects towards one another as a matter of course, and has been revolving in the sky of its own accord from year to year and century to century, nay from one cycle to another, or is it some intelligent principle which is responsible for bringing it into existence and setting it into motion? **It is the latter hypothesis which appeals to our intellect. The vedas also endorse the verdict of our reason. They declare that the sun and the moon, as also heaven and earth, were created by God.**

Similarly, we observe that the evolution of the organic world also proclaims that the creator of this universe is God. This most wonderful mechanism has come into being not merely as a result of concantenation of particles of matter but it has been moulded and fashioned by some architect similar to the one who built the house, though infinitely more

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

skilful, intelligent and powerful than the latter. We thus see ever since the beginning of the creation, some miraculous power has been at work in every clime and at every age and that it will continue to work for ever. Our intellect forces upon us the conclusion that this purposive creation has a primordial, eternal, unborn, imperishable and ubiquitous efficient cause who is endowed with infinite power and is all - existent, all-intelligent and all - blissful.

நிலையற்ற இவ்வுலகில் நாங்கள் பிறந்த நாளிலிலுந்து மிக அழகுடையதும் (கம்பீரமானதும்) அதிசயமானதுமான பல காட்சிகளைக் காண்கிறோம். அவை புதுமையான அதிசயப் பொருளைக் காண மனதில் ஊக்கமுட்டி அவை எப்படி உண்டாயின (உலகத்தில் வந்தது) எப்படி மறைந்து போகின்றன என்பதை அறிய ஆவலை உண்டாக்குகிறது. நாள்தோறும் காலை கிழக்கு திசை தொடுவானத்தில், ஆயிரம் ஒளிக்கதிர்களுடன் பிரகாசிக்கும் உருண்டையான உதய சூரியனைக் காண்கிறோம். அது விண்ணுலகம் வழியாய்ப் பயணம் தொடங்கி, ஒளியைச் செலுத்திக் கொண்டு, வெப்பம் மற்றும் உயிர் தாங்கும் சக்தி, பலம், சுறுசுறுப்பு முழு உலகத்திற்குத் தந்து, மாலை மேற்கில் மறைகிறது. வான சாஸ்திர ஆராய்ச்சியாளர்கள் எண் கணிதத்தின் கணக்கீட்டுப்படி சூரியன் 9,28,3000 மைல்கள் தொலைவிலிருப்பதாக ஒரு முடிவிற்கு வந்திருக்கின்றனர். பூமியில் வசிக்கும் ஜீவன்களுக்கு, அவ்வளவு தொலைவிலிருந்து சூரியன் ஒளி, வெப்பம், பலம், சுறுசுறுப்பு கொண்டு வருவது என்ன விந்தை ? சூரியன் கணக்கிலடங்காத் தன் கதிர்களைக் கொண்டு பூமியின் ஈரத்தை கிரஹித்து (ஒவ்வொரு பருவமும்) விண்ணுலகத்திற்கு அனுப்பி அதை மேகங்களாய் மாற்றி, பூமியின் மேல் மழையாய் விழச்செய்து, பூமியில் புல், இலைகள், தழை, மரம், தானியங்கள் சத்துள்ளதாகச் செய்து, ஜீவன்களில் புத்துயிரை ஊட்டுகிறான். வான சாஸ்திரத்தின் படி, கணக்கற்ற மில்லியன்கள் (ஒரு மில்லியன் என்றால் 1,000,000) நாம் பார்க்கும் சூரியனை விட பெரிய சூரியன்கள் இருக்கின்றனவாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆனால் அவை நம் கண்களுக்கு, நாம் காணும் சூரியனை விட, வெகு வெகு தொலைவிலிருப்பதால் மிகச் சிறிய நட்சத்திரங்களாகக் காணப்படுகின்றன. ஓவ்வொரு நாளும், சூரியன் சாய்ந்த பிறகு நாம், பரந்த வான்வெளியில் உயரத்தில், ஆடைகளில் அலங்காரமாக தைக்கப்படும் பளபளப்பான ஜிகினா தகடுகளைப் போல் எண்ணற்ற நட்சத்திரங்கள், கிரகம், கோள், நீண்ட தொலைவிலுள்ள இடங்களுக்கு ஒலி, ஒளி பரப்பும் செயற்கைசாதனங்களை (சாடிலைட்ஸ்) மற்றும் ஆகாயத்து பொருள்களை நாம் காண்கிறோம். குளுமையான வெள்ளை நிலாவின் ஒளிக்கதிர்கள் ஆகாய வழியாகத் திரிந்து (சூரியனைப் போல் கிழக்கிலிருந்து மேற்கு) உலகத்தையே அமுதத்தில் அமிழ்த்தி, இரவைப் பொன்னாக்குகிறது. மேலுலகத்து வஸ்துக்கள் இருண்ட இரவுகளில் தங்கள் பிரகாசமான கிரணங்களை உதிர்த்து, பூமியின் பரப்பு எல்லைகளை நன்றாக மூடி, அழகாகத் தோன்றச் செய்கிறதே அந்த மந்திரத்தை வர்ணிக்கப் போதுமான வார்த்தைகள் கிடைக்கவில்லையே | இந்த நட்சத்திர கிரகங்கள் தம்முடைய மாறாத சுற்றுப்பாதையில் ஆகாயத்தில் நாளுக்கு நாள், மாதத்திற்கு மாதம், வருடத்திற்கு வருடம் (கயிற்றில் கோக்கப்பட்டவை போல், மாறுபாடில்லாத நியதிக்கு உட்பட்டு) சுற்றி வருவதைக் காண்கிறோம். குறிப்பிட்ட பருவ கால்த்தில் (கோடையில்) சூரியன் நன்றாக ஒளிவீசவில்லையானால் அந்த வருடம் மழைக்காலத்தில் போதிய மழை பெய்வதில்லை. மழை இல்லையேல் அவ்வாண்டு போதிய தானியங்கள், பழங்களின் அறுவடை இல்லை என்பது தெள்ளத் தெளிவானதே. அவைகளின் போகம் நமக்குக் கிடைப்பதில்லை. இனி எழும் வினா | அசைவனவாகவும் அசையாதனவாகவுமுள்ள பொருட்களைப் படைத்து, தாங்குவதற்காக ஏற்பாடு செய்வதற்கு, இலக்குடன் நுண்ணறிவுள்ள அமைப்பின் பின்னணி உள்ளதா? அல்லது ஒரு பொருளின்(வஸ்து) மிகச்சிறிய (பகுதி) அணுவின் தற்செயலான இணைப்பால் உண்டான விளைவோ? மிக அதிசயமான விண்ணின் நட்சத்திரக்கூட்டம் (சூரிய ஒழுங்குமறை) பொருள்களுக்கு-மிடையேயுள்ள ஈர்ப்பு விசையினால் தாவி, ஒன்றுக்கொன்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(பொருள்கள்) ஆகாயத்தில் வருடத்திற்கு வருடம், நூற்றாண்டிற்கு நூற்றாண்டு, யுகத்துக்கு யுகம் சுற்றிக் கொண்டிருக்கிறதோ அல்லது நுண்ணறிவுள்ள அடிப்படைக் கொள்கைத்தான் அதனைத் தொடர்ந்திருந்தலிலும் சலனத்திலும் பொறுப்பேற்றதா? அது பின்னே சொன்ன விவாதத்திற்காகக் கையாளப்படும் அடிப்படை விஷயம் தான் எங்கள் அறிவிற்கு முறையீடாகத் தோன்றுகிறது. வேதங்களும் நம் அறிவைப் பயன்படுத்தித் தெளியும் அபிப்ராயத்திற்கே சம்மதம் தருகின்றன. அவை சூரியன், சந்திரன், பூமி, ஆகாயம் அனைத்தையும் படைத்தவன் கடவுள் என்றே பறைசாற்றுகின்றன.

ஸூர்யாசந்த்ரமஸௌ த$_3$ாத$_1$ா யத$_2$ாபூர்வமகல்ப$_1$யத் |
தி$_3$வம் ச ப்ருதிவீம்சஅந்தரிக்ஷம தோ ஸ்வ: ||

அப்படியே பரிணாமம் கொள்ளும் நாம் காணும் உறுப்புகளோடு கூடிய உலகமும் இவ்வுலகைப் படைத்தவன் கடவுளே என்று அதிகார பூர்வமாக வெளியிடுகிறது. இந்த மிக அற்புதமான நுட்பம், வஸ்துக்களின் மிகச் சிறிய பகுதிகளின் இணைப்பால் உண்டானது மட்டுமன்று. அது ஒரு கட்டிடக் கலைஞனைப் போல் வார்க்கப்பட்டு உரு தரப்பகிறது. இருந்தாலும் கடவுள் எல்லையற்ற அதிகமான, திறமை வாய்ந்த புத்திசாலியும், பலம் கொண்டவனும் ஆவான். ஆதலால், படைப்பு தொடங்கின நாள் முதல், ஏதோ ஓர் அற்புதமான, ஆச்சரியகரமான சக்தியை ஒவ்வொரு சீதோஷ்ண நிலை, ஒவ்வொரு கால வரையறையில் தொடர்ந்து காரியம் செய்வதைக் காண்கிறோம். நம் புத்தி (அறிவு), படைப்பின் நோக்கம், துவக்கத்திலிருந்து (ஆதி), ஆதி அந்தமில்லாத (நிரந்தரமான) (ஸனாதன), இன்னும் பிறக்காத (அஜ), அழியாத (அவினாஶி), எங்கும் நிறைந்துள்ள, சாமர்த்தியமுள்ள காரணன், எல்லையில்லாத, சக்தி கொண்ட (அனந்த சக்தி சம்பன்னமான) ஒன்று, முழு நுண்ணறிவுள்ள, முழு பேரின்பமுடையவன் (ஸத், சித், ஆனந்த ஸ்வரூபன்) எனும் முடிவை எங்களுக்கு வற்புறுத்துகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இறைவனைப்பற்றி நமக்குத் தெரியப்படுத்தும் சாஸ்திரங்களின் செயல்பாடுகளின் பிறப்பிடமான நமது பாரததேசத்தின் இப்போதுள்ள கலாச்சாரத்தின் நிலை மிகவும் கவலையளிப்பதாயுள்ளது. அதே சமயம், இன்றைய இளைய தலைமுறையினர், வெளிநாட்டுக் கலாச்சாரத்தில் தோன்றி வளர்ந்த விஞ்ஞானிகள், தத்துவ மேதைகள் ஆகியவர்களின் எழுத்தாற்றலால் மிகவும் கவரப்பட்டு அதை ஒப்புக்கொள்ளும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர், ஆகவே அவர்களின் நலனைக்கருதி, ராய் அப்ரஹாம் வர்கீஸ் (Roy Abraham Varghese) என்பவரால் எழுதப்பட்ட 'தி ஒண்டர் ஆப் தி வேர்ல்ட் (The wonder of the world) என்ற புத்தகத்திலிருந்து ஒரு சில வரிகளைத் தருகிறேன்.

" All the processes in the universe bear the earmarks of mind: the mathematical codes employed everywhere in nature - the immeasurably intricate, precisely structured, comprehensively coherent patterns of interaction between energy fields and galaxies, protiens and nucleic acids; the existence of autonomous agents and purposive behaviour; and the reality of the conceptual thought. All of the these phenomena are manifestations of infinite intelligence. It is a striking fact that Copernicus, Galileo and Kepler, Newton, Faraday and Maxwell, Einstein, Planck and Heisenberg, all belived in a divine mind behind the world and Rationality at the foundation of reality. The answer to the question of why the universe exists, said Stephen Hawking, would reveal to us "the mind of God". And Einstein declared that anyone seriously engaged in the pursuit of science becomes convinced that the laws of nature manifest the existence of a sprit vastly superior to that of human persons"

பொருள் : கணித விதிகளுக்கு உட்பட்ட பிரபஞ்சத்தின் இயக்கம்; விண்ணிலுள்ள பால் மண்டலத்தில் (galaxy) ஒன்றோடொன்றுடன் பிணைக்கப்பட்டிருக்கும் வீர்யத்தின் அலைகள் (energy fields) இவற்றின் அமைப்பு ; DNA என சொல்லப்படும் ஓர் உயிரணுவின் இயக்கத்திற்குக் காரணமான புரோட்டீன் மற்றும் நியூக்லிக் ஆஸிட்ஸ் (Nuiclic Acid)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இவற்றின் செயல்பாடுகள் பல்வேறு நடத்தைகளுக்கு காரணமாயிருக்கும் சுயேச்சையான குணாதிசயங்கள் ; சிந்தனைகளின் நடப்பு உண்மை - போன்ற பலதரப்பட்ட நடைமுறைகளை தன்னுள் கொண்ட இந்தப் பிரபஞ்சத்தின் பின்னணியில் ஓர் அசிந்த்ய (மனதிற்கு எட்டாத) அத்புத (மிக ஆச்சர்யமான) புத்தி (mind) இருக்கிறது. அத்தகைய சர்வ வ்யாப்தமாயுள்ள அச்சக்தியின் பரிணாமமே, இந்த நிகழ்வுக்கெல்லாம் காரணம். நடப்பு உண்மைகளுக்கு அடித்தளமாயுள்ள பகுத்தறிவுக்குப் பொருத்தமாயிருக்கும் தன்மை மற்றும் இப்பிரபஞ்சத்தின் நிலைக்கு காரணமாயுள்ள ஒரு தெய்வீக புத்தி (சத்தி) என்று விஞ்ஞானிகளான கோபர் நிகஸ், கலிலியோ, கெப்லர், நியூடன், பாரடே (Faraday) மேக்ஸ்வெல், எய்ன்ஸ்டீன், ப்ளேங்க், ஹெய்ஸன்பர்க் போன்றோர் நம்பியது ஒரு சரித்திர உண்மை. பிரபஞ்சம் ஏன் இருக்கிறது என்ற கேள்வியின் பதிலே இறைவனின் புத்தி "the mind of God" -யை வெளிப்படுத்துகிறது என்று ஸ்டீபன் ஹாக்கிங் என்பவர் சொல்லியிருக்கிறார் இயற்கையின் விதிகள், மனிதர்களுக்கு அப்பாற்பட்ட ஒரு சக்தி இருக்கிறது என்பதைத் தெரியப்படுத்துகிறது என்று எந்த ஒரு விஞ்ஞானியும் நம்ப வேண்டியவனாய் இருக்கின்றான் என்று எய்ன்ஸ்டீன் (Einstein) என்ற விஞ்ஞானி பறைசாற்றுகிறார்.

இறைவன் இருக்கிறான் என்ற கலப்பற்ற உண்மையைப் பெரும்பாலானோர் ஒப்புக்கொள்கின்றனர் என்பது தெள்ளத்தெளிவு. இறைவனின் சக்தியின்றி ஓரணுவும் இயங்காது என்பது புலப்படுகிறது. ஆகவே உலகில் பிறந்த ஒவ்வொரு மனிதனும் இறைவனின் இச்சைக்குட்பட்டே இயங்குகிறான். இறைவன் விதித்த விதி நிஷேதங்களுக்கு உட்படுபவனாய் இருக்கிறான். துன்பமற்ற சுகமான வாழ்க்கைக்கு இறைவனால் விதிக்கப்பட்ட வாழ்க்கைமுறையை, தன் வர்ணாஶ்ரமத்திற்கேற்பக் கடைபிடிக்க வேண்டும். காயத்ரோபாசனையை அங்கமாக கொண்ட சந்த்யோபாசனை இதற்கு முதல்படி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ருஷயோ தீ₃ர்க₄ஸந்த்₄யத்வாத் தீ₃ர்க₄மாயுரவாப்னுயு: |
ப்ரஜ்ஞாம் யஶஶ்ச கீர்த்திம்ச ப்₃ரஹ்மவர்சஸமேவ ச ||"

(மனுஸ்ம்ருதி 4-94)

பொருள் : ரிஷிகள் நீண்டகாலம் சந்தியாவந்தனம் செய்ததால் நீண்ட ஆயுளைப் பெற்றனர். புத்தி சாமர்த்தியத்தால் ஒவ்வொரு செயலிலும் வெற்றியைப் பெற்றனர்.

சந்தியா வந்தனத்தின் முக்கியமான அங்கமான காயத்ரீ மந்திரத்தில் நம்புத்தி செய்கைகளை ஊக்குவிக்கட்டும் என்று வேண்டுகிறோம். இடைவிடாமல் பிரார்த்தனை செலுத்தினால் இறைவன் நம் வேண்டுகோளை நிறைவேற்றுவதில் ஆர்வம் கொள்கிறான். இதை பக்தி பாவனையுடன் செய்வது மிகவும் அவசியம். ஒதுக்க முடியாத கர்மமென்று செய்வது பலனளிக்காது. மனதினை அமைதியாக வைத்துக் கொள்ள வேண்டும். சப்த கோஶம் (Audio Tape) முதலானவைகளுடன் செய்த கர்மங்களில் மிக்கத் தீமை உள்ளது. மந்திரங்களின் பொருளை ஓர் ஆசானிடமிருந்து (குரு) தெரிந்து கொள்ள வேண்டும்.

நம் முன்னோர்கள் சந்தியா வந்தனம் என்றால் பகவானின் தியானம் என்று கருதினார். அதாவது பகவானுக்குச் செய்யும் பிரார்த்தனை. அது பெரிய சாதனையாயிருந்தது. அது ஒரு காமதேனு, கல்ப விருக்ஷமாயிருந்தது. (கோரியதைத் தரும் தேவலோகத்து பசுவாகவும் / மரமாகவும்) இந்தச் சிந்தாமணியிடமிருந்து தேவைப்பட்டவைகளை அடையலாம் என்ற பெரும் நம்பிக்கையும் இருந்தது. தேவையானவை-களைப் பெற்றனர். சந்தியா வந்தனத்தை செய்தால் இருதயத்தின் விசுவாசம் ஓங்கும். இந்திரியங்களின் சோம்பல் குறையும். மனதில் மாறுபாடு தோன்றும். உடல் அதிகமாக திறமையுடன் செயல்படும். இது ஒரு யோக சாதனை.

ஓர் ஐரோப்பிய வித்வான் "பிரார்த்தனை ஒரு சக்தி" "(Prayer is power)" என்று சொன்னால் இன்னொருவர், தொழுவது அனைத்தையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெறுவதற்கு ஒரு பெரிய சாதனை (Prayer is a mighty engine of achievement) என்று சொல்கிறான். Mcomb (மெக்கூம்ப்) இவ்விஷயத்தில் எழுதியதவாது - புதிய சரித்திரத்தின் விசேஷமான உண்மை, மறுபடியும் கண்டு பிடிக்கப்பட்ட ப்ரார்த்தனைதான்.

வில்லியம்ஸ் ஜேம்ஸ் என்ற புகழ் பெற்ற தத்துவ ஞானி "Energy, which but for prayer world be bound, is by prayer set free and operates in the same part be it objective or subjective of the world of experienced phenomena of facts" என்று கூறுகிறான். பிரார்த்தனையினால் ஒரு விதமான சக்தி பிறக்கிறது. இல்லையேல் உலகின் சக்தி தெளிவாகாமலிருந்திருக்கும்.

Dr. Watson இவ்வாறு கூறுகிறார். "A Prayerless heart may be considered as defenceless citadel lying open and exposed to the invasion of every foe, whereas the heart of one truly devoted is like a castle in which the lord dwells and which is garrisoned with the divine presence". பிரார்த்தனை செய்பவரின் இருதயத்தில் கெட்ட விசாரங்கள் (பயம்) பிறக்க வாய்ப்பில்லை. அதைப்போல் சரியாகப் பிரார்த்தனை செய்யாமலிருந்தவனின் இருதயத்தில் தீய விசாரங்கள் சகஜமாக குடிக்கொள்ளும்.

சந்தியாவந்தன காரியத்தில் பக்தி பாவம் மிக மிக அவசியம் என்று குறிப்பிட்டுள்ளோம். இதையே ஓர் அயல் நாட்டு வித்வான் பிரார்த்தனை விஷயத்தில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளான்.

"The act of prayer is not sufficient ; we must cultivate a spirit of prayer. The proper temper for prayer should precede the act. The disposition should be wrought in the mind before the exercise is begun. To bring a proud temper to an humble prayer, a luxurious habit to a self-denying prayer or a worldly disposition to a spiritually-minded prayer is a positive anomaly. Prayer is designed for a perpetual renovation of the motives to virtue. We

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

should, therefore, endeavour to beleive as we pray, to feel as we pray and to act as we pray. Prayer must not be a solitary independent exercise but an exercise interwoven with many and inseparably connected with a golden chain of sacred duties."

"If we are so unhappy as now to find little pleasure in this holy exercise, that, however, is so far from being a reason for discontinuing it, that it affords the strongest argument for perseverance. That which was at first a form will become a pleasure; that which was a burden will become a privilege; that which is now short and superficial will become copious and solid. The chariot wheel is warmed by its own motion. Use will make it easy, which was at first painful. That which once becomes easy will soon be rendered pleasant. Instead of repining at the performance we shall be unhappy at the omission."

பொருள் : பிரார்த்தனை ஓர் இயந்திரமான செயலாக இல்லாமல், அதன் தத்துவத்தை உணர்ந்து செய்யும் செயலாக அமைய வேண்டும். செயலுக்கு முன் தத்துவத்தின் ப$_4$ாவம் இருக்க வேண்டும். ஆணவம் (VS) த$_3$ாஸப$_4$ாவத்துடன் பிரார்த்தனை. சுயநலம் (VS) தன்னலமற்ற பிரார்த்தனை; லௌகீக வாழ்க்கையிலேயே மனத்தைச் செலுத்துதல் (VS) ஆன்மீகத்தை வளர்க்கும் பிரார்த்தனை: இவைகள் ஒன்றுக்கொன்று முரண்பாடுடைய அவசியங்கள். ஒருவனின் குணத்தை மாற்றி, சரியான ஆன்மீக வழியில் நடத்துவதே பிரார்த்தனையின் குறிக்கோளாகும். ஆகவே, நம்பிக்கை, உணர்வு மற்றும் செயல் இம்மூன்றும் இணைந்ததே பிரார்த்தனை செய்ய முயல வேண்டும். ஒரு சுயேச்சையான பயிற்சியாக மட்டும் பிரார்த்தனை ஒரு சுயேச்சையான பயிற்சியாக மட்டும் இன்றி, பலவகையான ஆன்மீக செயல்பாடுகளுடன் பின்னப் பட்டவையாக இருக்க வேண்டும்.

இந்தப் புனிதப் பயிற்சியிலிருந்து தற்பொழுது சிறிய சந்தோஷமும் கிடைக்கவில்லை என்பது அதை நிறுத்த காரணமாகக்கூடாது. அது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
விடாமுயற்சியுடன் செய்ய திடமான வாக்குவாதத்திற்கு இடமளிக்கிறது. எது ஒரு வடிவமாயிருந்ததோ அது சந்தோஷமாகிறது. எது சுமையாயிருந்ததோ. அது கடமையாகிறது. எது குறைவானாலும் இயந்திரச் செயலாக இருந்ததோ அது தாராளமானதாகவும் திடநம்பிக்கையாகவும் ஆகிறது. தேரின் சக்கரம் அது சுழல்வதாலேயே சூடு பிடிக்கும். முதலில் வலியுண்டாக்கினாலும் தொடர்ந்து உபயோகிப்பதால் சுலபமாகும். எது சுலபமாகிறதோ அது வெகுசீக்கிரத்தில் ரம்மியமானதாக மாறும். செய்தலை குறைகூறுவதை விட அதை விடுவதால் நமக்கு வருத்தம் தான் ஏற்படும்.

பிரார்த்தனை முடிந்த பின் நம்மிடம் தூய பாவனையும் புது அறிவும் உண்டானால் நம் பிரார்த்தனை முழுமையாயிற்று என பாவனை செய்ய வேண்டுமென ஜார்ஜ் மெரிடிதன் எனும் கவி சொல்கிறான் (Who rises from prayer a better man, his prayer is answered).

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் - 5

ஸந்த்யா விஷயத்தில் ப்ரமாணங்கள்

ஸந்த்யா கர்மத்தின் உயர் நோக்கம் வேதங்களாலும், ஸ்ம்ருதி ஸூத்ரங்களாலும் சொல்லப்பட்டிருக்கிறது.

"உப த்வாக்னே திவேதிவே தோஷவஸ்தர்தியா வயம் பரந்த
ஏமஸி "
(ரிக் -1-2-7)

பொருள் : அக்னி நாமக பரமாத்மனே | தினமும் பகல் மற்றும் இரவு தியானத்தால் நமஸ்காரம் செய்பவராய் உன் அருகில் வருவோம்.

இங்கு சந்தியா என்ற சொல் இல்லாமலிருந்தாலும், நாம் ஆசரணை செய்யும் சந்தியா வந்தனமே ஒலி அலைகளால் அறியப்படுகிறது என்பதில் சந்தேகமில்லை.

"உத்$_3$யந்தமஸ்தமயந்தமாதி$_3$த்யமபி$_4$த்$_4$யாயன் குர்வன்
ப்ராஹ்மணோ வித்$_3$வான் ஸகலம் ப$_4$த்$_3$ரமஶ்னுதே |
(தைத்ரீய அ. 2ப்ரபா 2 அனு)

பொருள் : உதிக்கும் சமயம் மற்றும் மறையும் சமயம் சூரியனை பக்தியுடன் தியானம் செய்து கொண்டு வேதத்தில் கூறிய தர்மங்களை செய்யும் வித்வான் எல்லா மங்களத்தையும் அடைகிறான்.

"தஸ்மாத் ப்ராஹ்மணோ அஹோ ராத்ரஸ்ய யோகே
ஸந்த்யாமுபாஸீத |
(ஷட்விம்ஶ. ப்ரா. ப்ர 4 க5)

பொருள் : அந்தக் காரணத்தால் இரண்டு சந்தியா வேளையிலும் ப்ராஹ்மணன் ஸந்த்யா வந்தனத்தைச் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஸ்துதா மயா வாதா வேதமாதா ப்ரசோதயந்தாம் பாவமானீ த்விஜானாம் |

ஆயு : ப்ராணம் ப்ரஜாம் பசும் கீர்திம் த்ரவிணம் ப்ரம்மவர்சஸம் மஹ்யம் தத்வா வ்ரஜத ப்ரஹ்ம லோகம் ||"

(அதர்வவேத. காண்ட 19 சூ 71, மந்திர 1)

அந்தணர்களுக்கு புனிதத்தைக் கொண்டு வந்து தரும், அவர்களைக் கர்மங்களில் செயல்புரியத் தூண்டும், வரங்களை அளிக்கும் வேதமாதாவான காயத்ரீயும் என்னால் துதிக்கப்பட்டவளாய், எனக்கு ஆயுளையும் உயிரையும், ஸந்ததியும், பசுக்களையும், புகழையும், செல்வத்தையும், நல் ஒழுக்கம் முதலியவை தந்து என்னை பிரம்மலோகத்திற்கு அனுப்புபவளாகட்டும்.

மேலே சொன்ன வாக்கியங்களிலிருந்து ஸந்தயாகர்மம் வேதத்தால் விதிக்கப்பட்டது என்று தெரிய வருகிறது. மற்றும் சில பிரமாணங்களினால் காலை மாலை ஸந்த்யா கடமையென்று தெரிய வருகிறது. ஆனால் உச்சிவேளை (மத்தியானம்) ஸந்த்யாவந்தனம் செய்ய வேண்டுமென்பதற்கு பிரமாணம் இல்லையென சிலர் சொல்கின்றனர். அது சரியானதல்ல.

"மமத்வா ஸுர உதிதே மம மத்யந்திநே திவ :|
மம ப்ரபித்வே அபி சர்வரே வஸவா ஸ்தோமாஸே அவ்ருத்ஸத் ||"

(ரு 8-1-29)

வஸுவே | எங்கும் நிறைந்த பரமேஸ்வரனே, சூரியன் உதித்த பின், நாளின் மத்தியில், ராத்ரியில் சூர்யாஸ்தமம் ஆகும் காலத்தில் நான் செய்யும் ஸ்தோத்திரங்கள் உன்னைக் குறித்து வருகின்றன.

"உதா யாதம் ஸங்கவே ப்ராதரஹ்னோ மத்யந்தின உதிதா ஸூர்யஸ்ய |
திவா நக்தமவஸா ஸந்தமேன நேதானீம் பீரதிரஸ்வினா ததான ||

(ரு 5-76-3)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அஸ்வினி தேவதைகளே | பசுக்களை கறக்கத் தகுந்த அதிகாலையிலும், மத்தியானத்திலும், பகல் மற்றும் இரவு இவைகள் சந்திக்கும் காலத்திலும் சுகம் கொடுக்கும் வரங்களுடன் வர வேண்டும். தாங்கள் வரும் முன் என் ரக்ஷணை (காற்றல்) ஆகுவதில்லை.

"யதத்ய ஸுர உத்யதி ப்ரியக்ஷத்ரா ருதம் தத |
யன்னிமுசி ப்ரபுதி விஸ்வவேதஸோ யத்வா மத்யந்தினே திவ: ||

(ரு 8-27-19)

வலிமை பெற்றவரை சந்தோஷப்படுத்தும், எல்லாமறிந்த தேவதைகளே, சூரியன் உதிக்கும் வேளை, சாயங்காலம் மற்றும் மத்தியான்ன காலத்திலும் காயத்ரீ மந்திர ரூபமான உண்மையை எங்களுக்கு அளித்திருக்கிறீர்.

"மேதாம் ஸாயம் மேதாம் ப்ராதர் மேதாம் மத்தியந்தினம் பரி |
மேதாம் சூர்யஸ்ய ரஸ்மி பிர்வசஸா வேஸயாமஹே ||"

(அதர்வ தேவ 6-108- 5)

பேச்சால் காயத்ரீ மந்திரத்தின் மகிமையினால் சூரியனின் கதிர்களுடன் சாயங்காலத்திலும் மத்தியான்னமும், காலையிலும் நல்ல புத்தியை அடையலாம்.

"ஸ்ரத்தாம் ப்ராதர்ஹவாமஹே ஸ்ரத்தாம் மத்யந்தினம் பரி |
ஸ்ரத்தாம் சூர்யஸ்ய நிம்ருசி ஸ்ரத்தே ஸ்ரத்தாபயே ஹன: ||

(ரு 10-151-5)

விடியற்காலை, மத்தியானம், சாயங்காலம் நம்பிக்கையின் அருகாமையில் நிற்கும் ஸந்தியா தேவியை ப்ரார்த்திக்கிறோம். சிரத்தா தேவியே | நமக்கு நம்பிக்கை உண்டாக்கு.

"ஹவே த்வா ஸுர உதிதே ஹவே மத்யந்தினேதிவ: |
ஜுஷாண இந்த்ர ஸப்தபிர்ன ஆ கஹி ||

(ரு 8-13-13)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விடியாற்காலை, மத்தியானம், சாயங்காலத்தில் உன் பூஜையை செய்கிறேன். ஏழு இந்த்ரியங்களினால் உபாசனை செய்யப்பட்டு (சேவை) நீ வர வேண்டும்.

"ப்ராதர்தேவீமதிதிம் ஜோஹவீமி மத்யந்தின உதிதா ஸுூர்யஸ்ய |
ராயே மித்ராவருணா ஸர்வதாதேளெ தோகாயதனய்ாய சம்யோ: ||
(ரு 5-69-3)

காலை, மத்யானத்தில் அதிதியை அழைக்கிறேன். செல்வத்திற்காக, அனைத்து நன்மைக்காக, மக்கள், சிறுவருக்காக, சௌக்கியம், சமாதானத்திற்காக மித்ர வருணரே உங்களை ஸ்தோத்திரம் செய்கிறேன். இதுவுமல்லாமல் "அஹரஹ: ஸந்தியா முபாஸீத ; ப்ராதருத்தாய ஸந்த்யா முபாஸீத யத்ஸந்த்யா முபாஸதே; ப்ரஹ்மைவததுபாஸதே" - இப்படி பல ஶ்ருதிகள் இருக்கின்றன. ஸ்ரீராமலக்ஷ்மணர் ஸந்தியாவந்தனத்தைத் தவறாமல் செய்து கொண்டிருந்தனர் எனும் விஷயம் ராமாயணத்தில் மிகவும் பிரஸித்தமானது (புகழ் பெற்றது).

"ப்ரப₄ாதாயாம் து ஶர்வர்யாம் விஶ்வாமித்ரோ மஹாமுனி:|
கௌஸல்யா ஸுப்ரஜா ராம பூர்வா ஸந்த்யா ப்ரவர்ததே |
உத்திஷ்ட₂ நரஶார்தூல கர்தவ்யம் தைவமாஹ்நிகம் |
தஸ்யர்ஷே : பரமோதாரம் வச : ஶ்ருத்வா ந்ருபாத்மஜௌ |
ஸ்நாத்வா க்ருதோத₃கௌ வீரௌ ஜபேது: பரமம்ஜபம் |
(ராமாயண - பாலகாண்ட ஸ 43)

விடியற்காலையில் விஶ்வாமித்ர மகரிஷி ராமனிடம் சொன்னது கௌசல்யை மேன்மையான பிள்ளைகள் உள்ளவளாயிருக்கிறாள். இப்பொழுது காலை சந்த்யாவேளை. மனித வீரனே| எழுந்திரு| தேவதா த்யானமெனும் "ஆஹ்னிகத்தை செய்." அந்த ரிஷியின் மிக தாராளமான வசனத்தைக் கேட்டு, ராஜபுத்திரர் இருவர் ஸ்நானத்தின் பிறகு ஆசமனம், மார்ஜனம், அர்க்ய தானாதிகள் செய்து உத்தமமான காயத்ரீ மந்திரத்தை ஜபித்தனர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாரதப் போரில் ஒரே மனதுள்ள ஜனங்கள் ஸந்தியா கர்மத்தை முழுமையாகக் கடைப்பிடிக்க முடியாதென்று கேவலம் சூர்யோப ஸ்தானத்தைச் செய்தனர் என்று பாரதத்தில் கூறப்பட்டுள்ளது.

"தே ததைவ மஹாராஜ தம்ஸிதா ரணமூர்தனி |
ஸந்த்யாகதம் ஸஹஸ்ராம்ஶுமாதித்யமுபதஸ்திரே ||

யுத்தத்தின் நடுவில் கவசம் முதலியவைகளைப் போட்டுக் கொண்டே ஸந்தியா தேவதையான சூரிய நாராயணனை உபஸ்தானம் செய்தனர். பகவான் கிருஷ்ணன் ஸந்தியாகர்மம் செய்து கொண்டிருந்ததை நாரதர் பார்த்தார் என்று பாகவதத்தில் கூறப்பட்டுள்ளது.

"க்வாபி ஸந்த்யாமுபாஸீனம் ஜபந்தம் ப்ரஹ்மவாக்யதம்"

(பாக. ஸ்க. 10- அ 69 ஸ்லோ 25)

"விப்ரோ வ்ருக்ஷோ மூலமஸ்த்யஸ்ய ஸந்த்யா
வேதா: சாகா தர்மகர் மாணிபத்ரம்
தஸ்மான்மூலம் யத்னதோ ரக்ஷணீயம்
சின்னே மூலே நைவ வ்ருக்ஷோ ந ஶாகா :||
விஶ்வாமித்ரகல்ப: ||

அந்தணன் மரம். அவனுக்கு சந்தியாவந்தனமே வேர். வேதங்களே கிளைகள். தர்மமும், கர்மமும் இலைகள். ஆதலால் மூலத்தை (வேரை) நாம் எல்லா முயற்சியுடன் காக்க வேண்டும். வேர் தடைப்பட்டால் (அறுக்கப்பட்டால்) மரம் இல்லை. கிளைகளுமில்லை.

"யஜ்ஞோபவீதீ நித்யோதக : ஸந்த்யாமுபாஸீத வாக்யத : |

ஆ.கு.சூ. 3,7

இந்த சூத்ரத்திலும் மற்றும் கௌதம, ஆபஸ்தம்ப அப்படியே போதாயன முதலிய இதர சூத்ரங்களிலும் மனு யாஜ்ஞவல்க்யாதி ஸ்ம்ருதிகளிலும் ஸந்தியாவந்தனம் அவசியமாய்ச் செய்யப்பட வேண்டியது என்று சொல்லப்பட்டிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த ஸந்தியா உபாஸனை நித்யகர்மம் (தினமும் செய்ய வேண்டியது). இதைச் செய்யாமலிருந்தால் பாவம் வரும் (ப்ரத்யவாய). அதாவது பாவம் உண்டு என்று சாஸ்திரத்தில் இருக்கிறது. இதனை தினந்தோறும் செய்யாமலிருந்தால் உடல், மனதின் தூய்மையும் வலிமைமிக்க உடற்கட்டும் சீராய் கிடைப்பதில்லை. அப்படிப்பட்டவன் எந்த நல்ல கர்மங்களிலும் எஜமானனாக மாட்டான் என்பது கீழ்க்கண்ட ஶ்லோகத்தால் தெரிய வருகிறது.

"நோபதிஷ்டதி ய: ஸந்த்யாம் நோபாஸ்தே யஶ்ச பஶ்சிமாம் |
ஸ ஶூத்$_3$ரவத்$_3$ப$_3$ஹிஷ்கார்ய : ஸர்வஸ்மாத்$_3$ த்$_3$விஜகர்மண : |
ஸந்த்யாஹீனோऽ ஶுசிர்நித்யமனர்ஹ: ஸர்வகர்மஸு |
யத$_3$ன்யத்குருதே கர்ம ந தஸ்ய ப$_2$லப$_4$க்$_3$ப$_4$வேத் ||

தக்ஷஸ்ம்ருதி 2 -20

அபவாதங்கள் : (நிந்தை /தோஷம்) - வ்ருத்தி ஜனன்ஆஶௌசம் (குழந்தை பிறந்ததால் அஶுத்தி) மரண ஆஶௌசம் (மரணத்தினால் வந்த சுத்தியில்லாமை), மற்றும் உடல்நிலை பாதிக்கப்பட்ட போது ஓங்காரத்தைச் சொல்லாமல் மற்ற மந்திரங்களை மனதில் நினைத்துக் கொண்டு அர்க்யம் வரை மட்டுமே சந்த்யாவந்தனத்தைச் செய்ய வேண்டும். அர்க்யம் கொடுக்கும் வேளை மட்டும் காயத்ரீ மந்திரத்தை நன்றாகச் சொல்ல வேண்டும். ப்ராணாயாமம் செய்யும் பொழுது மனத்தாலும் மந்திரத்தைச் சொல்லக்கூடாது என்று விஷ்ணு பாரத்வாஜ ஸ்ம்ருதிகளில் கூறப்பட்டுள்ளது.

ஸந்த்யா சப்தார்த$_2$ விசாரம் : யாவதஹோராத்ரயோ : ஸந்தீ யஸ்ச பூர்வாஹனா பராஹ்னயோ : தத்காலபவா தேவதா ஸந்த்யா தாமுபாஸீத || ஆஶ்வலாயன க்ருஹ்ய பரிஶிஷ்ட ||

பகல் இரவுகள் கூடும்காலத்திற்கு ஸந்தி என்று பெயர். அப்படியே பூர்வாஹ்ண (பகலின் முன்பாகம்) அபராஹ்ண (பகலில் 3ம் பாகம்) (4-5 முடிவு) களின் கூடும்காலத்திற்கும் சந்தி என்று சொல்கிறார்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்த சந்தி காலத்தின் அதிஷ்டாத்ரீ (அருகாமையில் நிற்கும்) தேவதைக்கு ஸந்த்யா எனறு பெயர். இந்த ஸந்த்யா தேவதையின் சேவையே (உபாஸனை) ஸந்த்யா வந்தனம்.

எந்தக் கர்மத்தில் (செயலில்) ப்ரம்மனை நன்றாக யோகிகள் தியானம் செய்கிறார்களோ, ப்ரம்மன் செவ்வனே தியானிக்கப் படுகிறானோ, அந்தக் கர்மத்திற்கு ஸந்தியா என்று பெயர். இந்தக் கர்மத்தின் பக்தியுடன் கூடிய நடத்தையே ஸந்தியோபாஸனை என்று சொல்லப்படுகிறது.

"ஸம்யக் த்யாயந்தி ஸம்யக் த்யாயதே வா பரம் ப்ரஹ்ம யஸ்யாம் ஸா ஸந்த்யா"

ஸந்த்யா என்பதற்குச் சேரும் காலம் எனப் பொருள். ஸந்த்யோபாஸனை என்றால் சேரும் காலத்தில் செய்ய வேண்டிய சேவை என்று அர்த்தம்.

(ஸந்த்யாவந்தனை எனும் முழு வார்த்தைக்கு (1) ஸந்தியா தேவதையின் வந்தனை (2) ஸம்யக் த்யானம் (நல்ல தியானம்) எனும் வந்தனை (3) ஸந்தியா காலத்தில் செய்ய வேண்டிய வந்தனை என்று மூன்றுவித அர்த்தம் உள்ளது. வேத சாஸ்திரங்களில் ஸந்த்யா வார்த்தை இம்மூன்றிலும் உபயோகம் செய்யப்பட்டிருக்கிறது. ஸந்தியா தேவதை யார்? எனும் வினாவும் சகஜமாகத் தோன்றுகிறது.

"யத்ஸந்தியாமுபாஸதே ப்ரஹ்மைவ ததுபாஸதே" எனும் பிரமாணத்தின்படி ஸந்தியா என்பது பரப்பிரஹ்ம (பரமாத்ம)னின் பெயர். ஸந்தியோபாஸனை என்றால் பரமாத்மனின் உபாசனை (சேவை).

ஸந்த்யாவந்தனத்தைச் சுருக்கமாகக் கூறுவதாக இருந்தால் மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம். (1) சூர்ய அர்க்யம் (2) காயத்ரீ ஜபம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(3) திக் நமஸ்காரம் (திக் தேவதைகளின் நமஸ்காரம்). சூரிய நாராயணனிடமிருந்து நாம் மிகுந்த உபகாரத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறோம். சூரியன் உதிக்காமல் இருந்தால் நாம் யாரும் வாழவே முடியாது. ஆகையால் நம் வாழ்க்கைக்கே முக்கிய காரணமான சூரியன் உதித்துக் கொண்டு வரும்பொழுது அவனுக்கு அர்க்யம் கொடுப்பதால் அவனது உதவியை நினைத்துக் கொள்வது போலாகும். செய்த நன்றியை நினைத்துக் கொள்வது "க்ருதஜ்ஞதா" எனப்படும். செய்த நன்றியை மறப்பது "க்ருதக்னதா" எனப்படும். "க்ருதஜ்ஞதா" மிகப் பெரிய குணம். "க்ருதக்னதா" மிகப் பெரிய தோஷம். ப்ரஹ்மஹத்யை முதலான மகா பாவங்களுக்கும் பிராயச்சித்தம் உண்டு. ஆனால் நன்றி மறந்தவர்களுக்குப் பிராயச்சித்தமே இல்லை. அதன் பலனான நரகத்தை அவன் அடைந்தேயாக வேண்டும். ஆகையால் நாம் எல்லோரும் தவறாமல் ஸந்த்யாவந்தனம் செய்து அதன் ஓர் அங்கமான அர்க்யத்தைக் கொடுத்து க்ருதஜ்ஞர்களாக வாழ்வோமாக. யார் இந்த அர்க்யத்தை கொடுப்பதில்லையோ அவர்கள் மறுபிறவியிலேயே ஆந்தையாகப் பிறப்பார்கள்.

இந்த அர்க்யம் கொடுப்பதால் இன்னொரு பிரயோஜனமும் இருக்கிறது. மந்தேஹர் எனும் தைத்யர்கள் உதித்துவரும் சூரியனைத் தடுக்க அவன் முன் ஓடிவருகிறார்கள். நாம் காயத்ரீ மந்திரத்தால் அர்க்யம் கொடுத்தால் அந்த அர்க்யமானது அஸ்த்ரமாகப் பரிணமித்து அந்த தைத்யர்களை அழித்துவிடுகிறது. பிறகு சூரியன் எந்த தடையும் இல்லாமல் உதித்துவருகிறான். ஆகையால் நாம் கொடுக்கும் அர்க்யமானது சூரியோதயத்திற்குக் காரணமாகும். அதுவே லோக கல்யாணத்திற்கு (உலகநண்மை)க் காரணமாகும்.

அர்க்யம் கொடுக்கம்போது காயத்ரீ மந்த்ரத்தின் ரிஷி, தேவதா மற்றும் ச$_2$ந்த$_3$ஸ் இம்மூன்றையும் தவறாமல் சொல்ல வேண்டும். அப்படி இம்மூன்றையும் சொல்லாமல் அர்க்யம் கொடுத்தால் அதற்குப் பலன் இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இங்கு நமக்கு ஒரு சந்தேகம் வரலாம். நம்மில் எவ்வளவோ பேர் அர்க்யத்தைக் கொடுப்பதில்லை. ஏன்? ஸந்த்யா வந்தனத்தையே செய்வதில்லை. மேலும் சூரியன் உதயமாவதைத் தடுக்க மந்தேஹ தைத்யர்கள் ஓடிவந்துகொண்டுதான் இருக்கிறார்கள். ஆனாலும் சூரியன் தினமும் உதித்துக் கொண்டுதான் இருக்கிறான். இது எப்படி முடியும்? இதற்கு ஸமாதானம் :- நம்மை நம்பினால் என்ன கதி ஆகும் என்று பகவானுக்கு நன்றாகத் தெரிந்தேயிருக்கிறது. அதனால்தான் பகவான் தேரில் அறுபதனாயிரம் வாலகில்யர் என்னும் முனிவர்களை அமர்த்தியிருக்கிறான். அவர்கள் மூன்று வேளைகளிலும் அர்க்யத்தைக் கொடுத்து அசுரர்களை ஸம்ஹாரம் செய்கிறார்கள். அந்த அசுரர்களுக்கு பிரம்மாவின் வரம் இருக்கின்றது. அதாவது அவர்கள் எவ்வளவு முறை மடிந்தாலும் மீண்டும் ஸந்த்யாகாலத்தில் பிழைத்துவிடுவார்கள்.

இங்கு நமக்கு மற்றொரு சந்தேகம் வருகின்றது. முனிவர்களே அர்க்யம் கொடுக்கும் போது நாம் எதற்காக அர்க்யம் கொடுக்க வேண்டும் ?

இந்த ஸந்தேகம் சரியல்ல. ஏனென்றால் சூரியனின் உதவியை நாம் ஒவ்வொரு நாளும் பெற்றுக்கொண்டு வருகிறோம். அவனுக்கு ஓர் ஆபத்து வருகிறது என்று தெரிந்தவுடன், நாம் அந்த ஆபத்தை முறியடிப்பதற்கு முடிந்த அளவு முயலவேண்டும். இது நம் எல்லோருடைய கடமையாகும். தாயால் ரக்ஷிக்கப்பட்ட ஒரு மகன், அவளுக்கு ஏதாவது நோய் நொடி ஏற்பட்டால், மற்ற மகன்கள் முன்வந்து அந்தத் தாயை சேவிக்கும்போது தானும் சேவிப்பதுதானே அவனுடைய கடமை. அதை விட்டு 'அவர்களெல்லாம் பணிவிடை செய்கிறார்களே! நாம் ஏன் செய்யவேண்டும்? என்று கேட்டால் உலகில் ஜனங்கள் எல்லோரும் அவனை நிந்திப்பார்கள் அல்லவா? அதைப் போலவே நாமும் சூரியனிடம் உபகாரத்தைப் பெற்று அவனுக்கு அர்க்யத்தைக் கொடுப்பதன் மூலமாக அவனுக்குப் பணிவிடை செய்யாதிருக்கும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்ஷத்தில் எல்லோருடைய நிந்தனைக்குட்பட்டு நரகம் முதலான அனர்த்தங்களை அடையவேண்டி வரும். பின்னர் ஆந்தைகளாகப் பிறவி எடுக்க வேண்டி வரும். ஆகையால் நாமெல்லோரும் ஸந்த்யாவந்தனம் தினமும் செய்து அர்க்யத்தை பக்தியுடன் கொடுத்து தன்யர்களாவோமாக.

"முக்யகாலே யதாவஶ்யம் கர்ம கர்தும் ந ஶக்யதே |
கௌணகாலேऽபி கர்தவ்யம் கௌணோப்யேதாத்ருஶோமத: ||

தடுக்கத் தகாத (அனிவார்ய) அவசரம் வந்தபோது, காலை ஸந்த்யா வந்தனையை ராத்திரியிலும் செய்யலாம் என்பது கீழே தந்துள்ள ஸ்லோகத்தினால் புலனாகிறது.

"திவோதிதான கர்மாணி ப்ரமாதாதக்ருதானி வை |
ஶர்வர்யா: ப்ரதமே யாமே தானி குர்யுர்யதாக்ரமம் ||

என்று "லோகோபார" மெனும் கிரந்தத்தில் கூறப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வேளை மீறினால் ப்ராயஶ்சித்த (பாபத்தைக் கழிக்கும் கர்மம்) சகிதமாய் ஸந்த்யாவந்தனத்தைச் செய்ய வேண்டும். குறிப்பிட்ட நேரத்தை மீறிய தோஷத்தைப் போக்க மும்முறை அதிகமாய் ப்ராணாயாமங்களையும் நான்காவது அர்க்யத்தையும் தர வேண்டும். தவிர்க்க முடியாத நிலையில் செய்யாமல் விட்டுவிட்டால் மாத்திரம் ப்ராயஶ்சித்தம் உண்டு. தாமதம் முதலிய காரணத்தால் எப்பொழுதும் விடக்கூடாது.

"ய: ஸந்த்யாம் காலத: ப்ராப்தாமாலஸ்யாதிதி வர்ததே |
ஸ ஜீவன்னேவ சண்டால: ஸர்வகர்மபஹிஷ்க்ருத: ||

எனும் ப்ரமாணத்தால் செய்ய வேண்டிய ஸந்த்யா வந்தனத்தை சரியான காலத்தில் செய்யத் தாமதித்தால், அல்லது தவறினால் அவன் இந்த ஜன்மத்திலேயே சண்டாளனாவன்; விதிக்கப்பட்ட ஸர்வகர்மங்களிலும் அதிகாரமில்லாதவனாகிறான் என்று அர்த்தம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"உபாஸ்தி சந்த்யௌ ஸூர்யஸ்ய நிஶாயாம் திவஸஸ்ய ச |
தாமேவ ஸந்த்யா தஸ்மாத் ப்ரவதந்தி மஹர்ஷய || "

'ஸந்தி' என்பதற்குச் சேர்க்கை என்று பொருள். ஸந்த்யோபாசனை மூன்று கால சேர்க்கைகளில் செய்ய வேண்டும். (1) இரவு - பகல் சேர்க்கை (காலை ஸந்த்யா); (2) முற்பகல் - பிற்பகல் சேர்க்கை (மாத்யான்ஹீஹ ஸந்த்யா). (3) பகல் - இரவு சேர்க்கை (சாயம் ஸந்த்யா). காலையில் அருணோதய காலமும் (சூர்யோதயத்திற்கு முன், நட்சத்திரம் தெரியும் காலம்) மாலையில் சூரியன் மறையுமுன் (நட்சத்திரம் தெரிவதற்கு முன்) ஸந்தியோ பாசனைக்கு உகந்த காலம். அந்தக்காலத்தில் செய்ய முடியாமல் போனால், கௌண காலத்தி (முக்கியமல்லாத) லாவது அனுஷ்டானம் செய்ய வேண்டும். கௌண காலம் மூன்று வகைப்படும். சூரியோதயத்திற்கும் சூரிய அஸ்தமானத்திற்கும் பின்வரும் காலம் முறையே - (1) உத்தமகௌண காலம் - 3 நாழிகை வரை (2) மத்ய கௌண காலம் - 4 வது நாழிகை (3) அதம கௌண காலம் 5-6 வது நாழிகை. 6ம் நாழிகைக்குப்பிறகு அகலம் (வேளை தப்பினது) (1 நாழிகை = 24 நிமிடம்).

முக்யகாலே யதாவஶ்யம் கர்ம கர்தும் ந ஶக்யதே |
கௌணகாலே஽பி கர்தவ்யம் கௌணோப்யேதாத்ருஸோமத: ||
(கோபில ஸ்ம்ருதி)

தடுக்கத் தகாத (அனிவார்ய) அவசரம் வந்த போது, காலை ஸந்த்யா வந்தனையை ராத்திரியிலும் செய்யலாம் என்பது கீழே தந்துள்ள ஸ்லோகத்தினால் புலனாகிறது.

திவோதிதான கர்மாணி ப்ரமாதாதக்ரூனி வை |
ஶர்வர்யா: ப்ரதமே யாமே தானி குர்யுர்யதாக்ரமம் ||

என்று 'லோகோபகார' மெனும் கிரந்தத்தில் கூறப்பட்டுள்ளது. குறிப்பிட்ட வேளை மீறினால் ப்ராயஸ்சித்த (பாபத்தைக் கழிக்கும் கர்மம்) சகிதமாய் ஸந்த்யாவந்தனத்தைசெய்ய வேண்டும். குறிப்பிட்ட

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நேரத்தை மீறிய தோஷத்தைப்போக்க மும்முறை அதிகமாய் ப்ராணாயாமங்களையும் நான்காவது அர்க்யத்தையும் தர வேண்டும். தவிர்க்க முடியாத நிலையில் செய்யாமல் விட்டுவிட்டால் மாத்திரம் ப்ராயஸ்சித்தம் உண்டு. தாமதம் முதலிய காரணத்தால் எப்பொழுதும் விடக்கூடாது.

ய: ஸந்த்யாம் காலத: ப்ராப்தாமாலஸ்யாதிதி வர்ததே |
ஸ ஜீவன்னேவ சண்டால: ஸர்வகர்மபஹிஷ்க்ருத: ||

எனும் ப்ரமாணத்தால் செய்ய வேண்டிய ஸந்த்யாவந்தனத்தை சரியான காலத்தில் செய்யத் தாமதித்தால், தவறினால் அவன் இந்த ஜன்மத்திலேயே சண்டாளனாவான் என்றால் அனைத்தும் விதிக்கப்பட்ட கர்மங்களில் அதிகாரமில்லாதவனாகிறான் என்று அர்த்தம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் - 6

ஸ்நானம் (குளியல்), ஆசமனம்

முன் அத்தியாயங்களிலிருந்து ஸந்த்யோபாசனை (காயத்ரீ உபாஸனை)யின் முக்கியத்துவம் விளங்கியிருக்கும். இப்பொழுது அதன் விசேஷ அங்கங்களை அறிவதற்கு முயல்வோம்.

ஸந்த்யோபாசனையின் அங்கங்கள் முறையே :

1. குளியல் 2. ஆசமனம் 3. ப்ராணாயாமம் 4. சங்கல்பம் 5. மார்ஜனம் 6. அர்க்யம் 7. பூதோச்சாடனம் 8. ஆசன சுத்தி 9. பூதேவி ப்ரார்த்தனம் 10. அங்கந்யாஸம் 11. கரந்யாஸம் 12. சூரியனுள் உறையும் பகவான் நாராயணனின் தியானம் 13. ஆவாஹனம் 14. காயத்ரீ மந்திர ஜபம் 15. திக் நமஸ்காரம் 16. காயத்ரீ தேவதையை அனுப்பி வைப்பது 17. எல்லோருக்கும் நன்மை கிடைக்க வேண்டுதல் 18. கோத்ரம், ப்ரவர உச்சாரணம் 19. இந்தக் கர்மாவை பகவானுக்கு சமர்ப்பணம் செய்வது. இத்துடன் சந்தியோபாசனை முடிகிறது.

குளியல்

எந்த ஒரு பிரார்த்தனை / வழிபாடு / க்ரியை செய்வதற்கும் குளியல் என்பது ஒரு முன் நிபந்தனையாகும்.

"ஸ்னானதோ திSகாரீ பவதி தைவே பித்ரீஸ கர்மணி" என்று விஷ்ணு ஸ்ம்ருதியில் கூறியுள்ளபடி, குளித்தவனே தேவதா சம்பந்தமோ, பித்ரு சம்பந்தமோ உள்ள காரியங்களுக்கு அதிகாரியாகிறான்.

உடம்பின் வெளிப்ராகாரத்திற்கு செய்யும் சுத்தம் என்கிற குளியல், அன்றாட லௌகிக காரியங்களைச் செய்வதற்கு உகந்தது. ஆனால், இறைவன் சம்பந்தப்பட்ட காரியங்கள் செய்வதற்கு இந்த வெளிப்புறத் தூய்மை சுத்தம் மட்டும் போதாது. உடலின் உள்ளேயும் சுத்தம் செய்ய வேண்டும். இது எப்படி ?

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஸௌசம் து த்$_3$விவித$_4$ம் ப்ரோக்தம் ப$_3$ாஹ்யமந்த$_1$ரமேவ ச |
ம்ருஜலாப்$_4$யாம் க்ருதம் ப$_3$ாஹ்யம் ப$_4$ாவஸீத்$_3$தி$_4$ஸ்தத$_3$ருந்த$_1$ரம்"||

பொருள் : சுத்தி இருவகைப்படும். முதலாவது வெளிப்புறத்தூய்மை மண், நீர் முதலியவற்றால் உண்டாவது. இரண்டாவது உள்ளத் தூய்மையென்னும் உட்புறத்தூய்மை.

குளியலின் போது, உடம்பில் ஆடையில்லாமலோ, முன் தினம் உடுத்திய ஆடையை உடுத்திக் கொண்டோ, ஸ்நானம் செய்யக் கூடாது. தலைக்கு நீர் ஊற்றிக் கொள்வதேஸ்நானம் என்று விதிக்கப்பட்டுள்ளது. குளியலின் மத்தியில், ஆசமனம், ஸங்கல்பம் செய்து கங்கை முதலிய நதிகளின் தேவதைகளை நீரில் இருக்கும்படி பிரார்த்தனை செய்ய வேண்டும். இந்தக் குளியலானது, ஜீவனுள் உறையும் பரமாத்மாவுக்கு என்று ஸ்மரணை செய்ய வேண்டும். க்ருஷ்ண, விஷ்ணு, நாராயண வாஸுதேவ நாமங்களை உச்சாரணம் செய்யலாம். ஆபோஹிஷ்டா அகமர்ஷண மற்றும் புருஷ ஸுக்த்தங்களை சொல்லிச் ஸ்நானம் செய்ய வேண்டும். அப்போது தான் உடலின் உட்புறத்தூய்மை உண்டாகிறது.

இதற்குத் தனியாக அவகாசம் தேவையில்லை. சாதாரணமாகக் குளிக்கும் அவகாசத்தின் காலத்திலேயே, கைகள் தங்கள் வேலைகளைச் செய்து கொண்டிருக்க, மனதானது மந்திரங்களை உச்சாரணம் செய்தவாறு இருக்க வேண்டும். இந்த முறையினால் குளியல் என்ற கர்மத்தின் மதிப்பு பன்மடங்கு அதிகரிக்கும். பரமாத்மா ப்ரீதி அடைகிறான். 'வாக்படன் அஷ்டாங்கஹ்ருதய' எனும் க்ரந்தத்தில் ஸீத்ரஸ்தானத்தில் 'தினசர்ய' எனும் ப்ரகரணத்தில் கீழ்வருமாறு சொல்லப்பட்டிருக்கிறது.

"தீபனம் வ்ருஷ்யமாயுஷ்யம்
ஸ்நானமூர்ஜாபலப்ரதம்|
கண்டுமல ஸ்ரமஸ்வேத
தத்ருட் தாஹபாப்மஜித்" ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருள் : ஸ்நானம் ஜாடராக்னியையும் (வயிற்றிலிருக்கும் நெருப்பு), வீரியத்தையும் , ஆயுளையும், சந்தோஷத்தையும் மற்றும் பலத்தையும் பெருக்குகிறது. தின்பண்டம், மலம், வியர்வை, தாமதம், தாகம், நாவறட்சி மற்றும் பாவ விகாரங்களை நாசமடையச் செய்யும்.

தேகத்தின் குளியல் முடிந்தவுடன், மானஸ-ஸ்நானம் செய்ய வேண்டும் என்று வாமன புராணத்தில் விதிக்கப்பட்டுள்ளது. இதுவே த்யான-ஸ்நானம் என்பது. 13 மந்திரங்களை உச்சாரணம் செய்வதே த்யான-ஸ்நானம் ஆகும். இவற்றை மனனம் செய்து தினசரி, குளித்த பிறகு சொல்ல வேண்டும். இந்த ஶ்லோகங்கள் பகவான் நாராயணனுக்குச் செய்யும் பிரார்த்தனையின் ரூபத்தில் உள்ளது.

த்யான-ஸ்நான மந்திரங்கள் :

ஹரி : ஓம்

1) த்ரிவிக்ரமம் தீர்த$_2$பாத$_3$ம் நத்வா ஸர்வாக$_4$ நாஶனம் |
த்$_4$யானஸ்னானம் ப்ரவக்ஷ்யாமி ஸர்வஸத்கர்ம ஸித்$_3$த$_4$யே ||

2) ஸ்ரீ ப்$_3$ரஹ்மோவாச -
ஸ்வஸ்தி$_2$தம் புண்ட$_3$ரீகாக்ஷம் மந்த்$_1$ரமூர்தி$_1$ம் ஹரிம் ஸ்மரேத் |
அனந்த$_1$ாதி$_3$த்யஸங்காஶம் வாஸுதே$_3$வம் சதுர்பு$_4$ஜம் ||

3) ஶங்க$_2$சக்ர க$_3$த$_3$ாபத்$_3$மத$_3$ாரிணம் ச கிரீடினம் |
ஸ்ரீவத்ஸகௌஸ்துபே$_4$ாரஸ்கம் வனமாலாவிபூ$_4$ஷணம் ||

4) ஶ்யாமலம் ஶாந்த$_1$வத$_3$னம் தி$_3$வ்யபீதாம்ப$_3$ராவ்ருதம் |
தி$_3$வ்யசந்த$_3$னலிப்தாங்க$_3$ம் சாருஹாஸம் ஶுபே$_4$க்ஷணம் ||

5) அனேகரத்னஸஞ்ச$_2$ன்ன-ஸ்புரன் மகரகுண்ட$_3$லம் |
நாராத$_3$ாதி$_3$ பி$_4$ராஸேவ்யம் ப$_4$ாஸ்வத்$_3$-விபுல-கங்க$_1$ணம் ||

6) ஸகிங்கி$_1$ணீககேயூர-ஹாரநூபுரஶோபி$_4$தம் |
த்$_4$வஜவஜ்ராங்கு$_1$ஶாலக்ஷ்ம-பத$_3$பாதே$_3$ாருஹத்$_3$வயம் ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

7) தத்பாத$_3$நக$_2$ஜாம் க$_3$ங்கா$_3$ம் நிபதந்தீம் ஸ்வமூர்த$_4$னி |
சிந்த$_1$யேத்$_3$ ப்$_3$ரஹ்மரந்த்$_4$ரேண ப்ரவிஶந்தீ$_1$ம் ஸ்வகா$_1$ம் த$_1$னும் ||

8) த$_1$யா ஸங்க்ஷாலயேத் ஸர்வம் அந்த$_1$ர்தே$_3$ஹக$_3$தம் மலம் |
தத்க்ஷணாத்$_3$ விரஜோ மந்த்$_1$ரீ ஜாயதே ஸ்ப$_2$டிகோ$_1$பம: ||

9) அந்த$_1$ர் ப$_3$ஹிஶ்ச ஶுத்$_3$த்$_4$யர்த$_2$ம் மானஸம் ஸ்நானமாசரேத் |
இத$_3$ம் ஸ்நானம் வரம் மந்த்$_1$ராத் ஸஹஸ்ரகு$_3$ணமுத்தமம் ||

10) நமோ நாராயணாயைவமுச்சரன் ப$_4$க்திபா$_4$வத: |
வாஸுதே$_3$வாச்யுதானந்த$_1$ கோ$_3$விந்த$_3$ க$_3$ருடத்வஜ ||

11) முராரே நரஸிம்ஹேதி பத்$_3$மநாப$_4$ ஜனார்த$_3$ன |
ரஜஸ்தமோமோஹஜாதான் ஜாக்$_3$ரத்$_3$ஸ்வப்னஸுஷிப்திகான் ||

12) வாங்மன:கா$_1$யஜான் தோ$_3$ஷான் நவைதா$_1$ன் நவபி$_4$ர்த$_3$ஹேத் |
ஸார்த$_4$த்ரிகோடிதீர்தேஷு ஸ்நானாத் கோடிப$_2$லப்ரத$_3$ம் ||

13) யோ நித்யமாசரேதே$_3$வம் ஸ வை நாராயண: ஸ்ம்ருத : |
ய : படே$_2$த் ப்ராதருத்தா$_2$ய ப$_4$க்தியுக்தேன சேதஸா ||
காலம்ருத்யுமதிக்ரம்ய ஜீவன் முக்தோ ந ஸம்ஶய : ||

- இதி ஸ்ரீ வாமனபுராணே க$_3$ங்கா$_3$மஹாத்ம்யே -
த்$_4$யானஸ்னானம் ஸம்பூ$_1$ர்ணம்

ஸ்ரீக்ருஷ்ணார்பணா$_1$மஸ்து

குறிப்பு : மிகையான தேக அசதியிருந்தால் மட்டும் ஸ்நானம் செய்யாமல், ஈரத்துணியால் தேகத்தை சுத்தம் செய்து கொண்டு த்யான ஸ்நானம் செய்து ஸ்ந்த்யோபாஸனை செய்ய வேண்டும்.

மேற்கூறியபடி ஸ்நானம் செய்தபின், தூய உடை உடுக்க வேண்டும். சம்பிரதாயத்தின் படி உடை உடுத்திக்கொண்டு, நாமம் இட்டுக்கொண்டு, ஸந்தியாவந்தனம் செய்யத் தொடங்க வேண்டும்.

(பாகம் - 2 பார்க்கவும்)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் - 7

ப்ராணாயாமம்

"ப்ராணோ வாயுரிதி ப்ரோக்த:

ஆயாமஸ்தன்நியாமகம் "

'ப்ராண' என்பது நாம் ஸ்வாசிக்கும் காற்று. 'ஆயாம:' என்பதற்கு அதைக் கட்டுப்படுத்துவது என்று பொருள். பிராண வாயுவை வெளியில் போகாமலிருக்கும்படி நம் தேகத்திலேயே தடை செய்வது ப்ராணயாமம் ஆகும்.

"ஓங்க$_1$ாரவ்யாஹ் ருதீ:ஸப்த க$_3$ாயத்ரீ ச தத : பரம் |

ஓமாபோஜ்யோதிரித்யேதத் ஶிர: பஶ்சாது$_3$தீ$_3$ர யேத் |

ப்ராணாயாமோயமுத்$_3$தி$_3$ஷ்டம் ஸர்வகர்மஸு பாவன: |

ஸோப்யர்த$_2$ஜ்ஞானபூர்வஶ்சேத் அனந்த ப$_2$லதே$_3$ா ப$_4$வேத்||"

- காயத்ரீஸாரஸங்க்ரஹம்

ப்ராணாயாம மந்திரத்தின் அங்கங்கள் மூன்று

1. ஸப்தவ்யாஹ்ருதி - ஓம் பூ$_4$: ஓம் புவ: ஓம் ஸுவ: ஓம் மஹ:ஓம் ஜன: ஓம் தப: ஓம் ஸத்யம்

2. காயத்ரீ - ஓம் தத்ஸவிதுர்வரேண்யம் ப$_4$ர்கே$_3$ா தே$_3$வஸ்ய தீ$_4$மஹி தி$_4$யோயோன:ப்ரசோத$_3$யாத்.

3. ஶிரஸ் - ஓம் ஆபோஜ்யோதீரஸோம்ருதம் ப்ரஹ்ம பூ$_4$ர்பு$_4$வஸ் வரோம் |

வலது கையின் சிறு விரல் மற்றும் மோதிர விரல்களால் மூக்கின் இடது பாகத்தை மூடி, வலப் பக்கத்தின் துவாரம் வழியாய் தேகத்திலிருக்கும் அசுத்த வாயுவை வெளியே விட வேண்டும். இந்த க்ரியைக்கு 'ரேசக' என்று பெயர். கட்டை விரலினால் வலது பக்கம் மூக்கை அழுத்தி, இடது பக்க துவாரத்தினால் சுத்தமான வாயுவை தேகத்தில் உட்வாசிக்க வேண்டும். இந்த க்ரியைக்கு "பூரக" என்று

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெயர். ஐந்து விரல்களினால் மூக்கின் இருதுவாரங்களைப் பிடித்து காற்று நிறைந்த தேகத்தை தாங்கும் க்ரியை "கும்பக" எனப்படுகிறது.

பூரக, கும்பக, ரேசக ஆகிய க்ரியைகளை போதிய அளவு குறைத்தோ, அதிகப்படுத்தியோ செய்து கொள்வதே ப்ராணாயாமம் எனப்படும். மேற்குறிப்பிட்ட ஸப்த வ்யாஹ்ருதியை மனதில் ஜபித்துக் கொண்டே பூரக கிரியையையும், காயத்ரீயை ஜபித்துக் கொண்டே கும்பக க்ரியையையும், சிரஸ்-ஐ ஜபித்துக் கொண்டே ரேசக க்ரியையையும் செய்யும் ப்ராணாயாமத்திற்கு ஸகர்ப ப்ராணாயாமம் என்று பெயர். மந்திரங்களை ஜபிக்காமலே செய்யும் ப்ராணாயாமத்திற்கு அகர்ப ப்ராணாயாமம் என்று பெயர். மந்திரங்களின் பொருளை அறிந்து செய்யும் ஸகர்ப ப்ராணாயாமம் மிகவும் சக்தி வாய்ந்தது.

கீழ்வரும் 'வாயு புராண' வாக்கியம் இதற்குப் பிரமாணமாக உள்ளது.

அக$_3$ர்பே$_4$ா த்$_4$யானஹீனஸ்து ஸக$_3$ர்பே$_4$ா த்$_4$யானஸம்யுத: |
அக$_3$ர்ப$_4$ாத் கோடி கு$_3$ணித: ப்ராணாயாமஸக$_3$ர்ப$_4$க: ||

— வாயுபுராணம்

ஆரோக்யம் மற்றும் மனத்தூய்மைக்காகவும், ஆன்மீகக் கோணத்திலிருந்தும் ப்ராணாயாமத்தின் மஹிமையை எவரும் ஒதுக்கும் படி இல்லை. இதன் பெருமையை ஒரு ஞானி இவ்விதம் கூறுகிறான் :-

Suffice it to say that the whole nervous system is very finely exercised by the practice of pranayama. Thus the nervous and endocrine systems which are of supreme importance in human physiology and also the respiratory, the circulatory and the digestive systems upon which the health of the first two systems depend are all simultaneously exercised in pranayama. Every round makes the organism healthier. In fact the yogic

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
seers of ancient india looked upon pranayama as the one exercise that could make every life process supremely healthy. Some of them were so enthusiastic in their optimism about the physiological efficiency of pranayama that they ruled out all other exercises for securing health of human body. From our own experience we can safely say that no physical exercise can even have one hundredth of the efficiency of pranayama. In fact, pranayama is not only the control of the different physiological functions but it is the control of the life processes that vitalise the human organism.

The practice of pranayama introduces light pressure, both in the central canal of the spinal cord and the ventricles of the brain. These pressures centrally stimulate the whole nervous system. Owing to these central and peripheral stimuli, the human consciousness begins to be internalised and supersensuous perceptions begin to be possible. Worlds subtler and still subtler begin to be opened out in proportion to the consciousness itself getting more and refined.

ப்ராணாயாமம் செய்யும் பழக்கம் நரம்பு சம்பந்தமான ஒழுங்கு முறைக்குச் சரியான படி பயிற்சி அளிக்கிறது என்று சொன்னால் போதுமென்று நினைக்கிறேன். இப்படி நரம்பு மற்றும் உள் சுரக்கத்தை (Internal Secretion) முறையையும் (உடற்கூறு சாஸ்திரப்படி மனித உடம்பிற்கு முக்கியமானது) சுவாச சம்பந்தமான, இரத்த ஓட்டம் சம்பந்தம், ஜீரணமாக உதவக்கூடிய ஒழுங்கு முறைக்கு (முதல் சொன்ன இரண்டும், பின் மூன்று முறைக்கு மிகவும் தேவை) சரியான பயிற்சி ஏக காலத்தில் ப்ராணாயாமம் அளிக்கிறது. ஒவ்வொரு சுற்றும் சரீரத்தை ஆரோக்கியமுள்ளதாகச் செய்கிறது. சொல்லப் போனால் பண்டைய இந்தியாவின் யோகிகளுக்கு (வருவதை உணர்வோர்) ப்ராணாயாமம், வாழ்க்கை வேலைக் கிரமத்தை உயர்த்த ஆரோக்கியத்துடன் இருக்க ஒரு சிறந்த பயிற்சியாய் அமைந்தது. அவர்களில் சிலர் உடற்கூறு சிறப்பாகக் காரியங்களைச் செய்யக்கூடிய திறமைக்கு ப்ராணாயாமம் புரியும் நலம் வேறெந்தப் பயிற்சியினாலும் கிடைப்பதில்லை எனவும் இந்த ஒன்றே போதும் எனவும் மனநிறைவுடன்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

சொன்னார்கள். ப்ராணாயாமத்தால் கிடைக்கும் நன்மையில் 1/100 பங்கு வேறெந்த உடற்பயிற்சியாலும் கிடைப்பதில்லை என நம் அனுபவத்திலிருந்து கூறலாம். உண்மையில் ப்ராணாயாமம் பல உடற்கூறு காரியங்களைக் கட்டுக்குள் வைத்துக் கொள்வதல்லாமல் அங்க ஜீவியை பலமூட்டும் வாழ்க்கை வேலைக்கிரமத்தையும் கட்டுக்குள் வைக்கிறது.

வேதாந்த சிந்தனைக் கோணத்திலும் ப்ராணாயாமம் மிகவும் நல்லது செய்யக்கூடியதாயிருக்கின்றது. ப்ராணாயாமம் முதுகெலும்பு தசை, நடுகால்வாயிலும், மூளையின் ஒரு கோசத்தின் மேலும் லேசான அழுத்தம் தருகிறது. இந்த அழுத்தங்கள் மையத்தில் தூண்டி நரம்பு மண்டலத்தை இயங்கச் செய்கிறது. இந்த மைய, புற எல்லைத் தூண்டுதலால் மனிதனின் உணர்வு (பிரக்ஞை) மேம்பட்ட புலன்களைப் பாதிக்கின்ற அறிவு வளர்ச்சி தொடங்குகிறது. உள்ளுணர்ச்சிக்கு ஏற்றவாறு உலகங்கள் நுட்பமாகவும் அதிநுட்பமாகவும் திறக்கத் தொடங்கி சீர்பெறச் செய்கிறது.

ப்ராணாயாமம் செய்வதால் உண்டாகும் லாபங்கள் ஆறுவிதம் என்று ஓர் அயல்நாட்டு விஞ்ஞானி கூறுகிறான். ப்ராணாயாமத்தால் பெறும் லாபம் ஆறு விதம். (1) சரீர சம்பந்தமானது (2) மனதைப் பொறுத்தது (3) அறிவு சம்பந்தமானது (4) உள்ளுணர்வு (5) உண்டாக்கும் திறமை (6) இச்சா சக்தி (விருப்பம்) இவைகளைப் பெறலாம்.

த்யானத்தைப்பற்றி உபதேசம் செய்யும் பொழுது கபில பகவான் தம் தாயான தேவஹூதிக்கு, ப்ராணாயாமத்தின் முக்கியத்துவத்தைப் பற்றி உரைத்ததை பாகவத புராணம் கீழ்வருமாறு வருணிக்கிறது :-

"செ$_1$ளதே$_3$ஶே ப்ரதிஷ்டாப்ய விஜிதாஸன ஆஸனம் |
தஸ்மின் ஸ்வஸ்திகமாஸீன ருஜுகாய ஸமப்$_4$யஸேத் |
ப்ராணஸ்ய ஶோத$_4$யேன்மார்க$_3$ம் பூரகும்ப$_4$கரேசயோ ; |
ப்ரதிகூலேன வா சித்தம் யத$_2$ாஸ்தி$_2$தமசஞ்சலம் |

In Public domain : Digitization Muthulakshmi Research Academy

மனோசிராத்ஸ்யாத்₃விரஜம் ஜிதஶ்வாஸஸ்ய யோகி₃ன ; |

வாய்வக்னிப்₄யாம் யத₂ாலோஹம் த்₄மாதந்த்யஜதி வை மலம் |

ப்ராணாயாமைர் த₃ஹேத்தே₃ாஷான் த₄ாரணாபிஶ்ச கில்பி₃ஷான் |

ப்ரத்யாஹாரேண ஸம்ஸர்க₃ான் த்யானேனானீஶ்வரான் கு₃ணான்|

யத₃ாமன:ஸவிரஜம் யோகே₃ன ஸுஸமாஹிதம் |

காஷ்டாம் ப₄க₃வதோ த்₄யாயேத் ஸ்வனாஸாக்ராவலோகன: |

ப்ரஸன்னவத₃னாம்பே₃ாஜம் பத்₃மகர்₃ப₄ாருணே க்ஷணம் |

நீலோத்பலத₃லஶ்யாமம் ஶங்க₂சக்ரக₃தா₃த₄ரம் |

அத₂ ப₄க₃வத்₃த்₄யானம் –

ஸஞ்சிந்யேத்₃ப₄கவதஶ்சரணாரவிந்த₃ம்

வஜ்ராங்குஶத்₄வஜஸரோருஹலாஞ்ச₂னாட்₄யம் |

உத்துங்க₃ரக்தவிலஸன்நக₂சக்ரவால–

ஜ்யோத்ஸ்னாபி₄ராஹதமஹத்₃த்₄ருதயாந்த₄காரம் |

யச்செ₂ளநி:ஸ்ருதஸரித்ப்ரவரோத₃கேன

தீர்தே₂ன மூர்த்₄ ஞ்யதி₄த்₄ருதேன ஶிவ : ஶிவோऽபூ₄த் |

(ஸ்ரீமத்₃ ப₄ாக₃வதம்)

பொருள் : த்யானம் செய்வதற்கு, உகந்த சுத்தமான இடத்தைத் தேர்ந்தெடுத்துத் தரமான ஆஸனத்தின் மீது, பத்மாஸனம் அல்லது ஸ்வஸ்திக ஆஸனம் அல்லது வீர ஆஸனம் என்ற நிலையில் அமர வேண்டும். நீண்ட நேரம் அசதியில்லாமலும் வலியில்லாமலும் இருக்கும் சௌகர்யமாக உட்காரும் ஓர் ஆஸன நிலையைப் பழக்கப்படுத்திக் கொள்ளவேண்டும். முதுகெலும்பு, கழுத்து, தலை இவைகள் நேராக இருக்க வேண்டும். ப்ரத்யாஹாரம் என்ற யோக முறையின் மூலம், மனதை ஒருமுகப்படுத்த வேண்டும். ப்ராணாயாமத்தின் எண்ணிக்கையைப் படிப் படியாக அதிகரிக்க, மனதை வெகு சுலபமாக ஒருமுனைப்படுத்த முடியும்.

நன்றாகக் காய்ச்சப்பட்டு உருக்கப்பட்ட உலோகமானது எப்படி சுத்திகரிக்கப்படுமோ, அதுபோல, ப்ராணாயாமம் உடலையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மனதையும் சுத்தமாக வைக்கிறது. பாவங்களை அழித்துக் குறைகளை நிவர்த்தி செய்ய, ப்ராணாயாமம் உதவுவது போல், நம்மிடம் குடி கொண்டுள்ள துர்குணங்கள் 'தாரணை'யினால் நிவர்த்திக்கப்படுகிறது. பூர்வ ஜன்ம பாவங்கள் ப்ரத்யாஹாரத்தினால் நிவர்த்தி செய்யப்படுகிறது. த்யானத்தினால் இழிநிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு தயாள குணமுள்ளவனாகிறான் ப்ராணாயாமத்தைப் பழக்கிக்கொண்டு படிப்படியாக யோகாப்யாஸமான த்யானநிலைக்குத் தகுதி கிடைக்கிறது. தனது பார்வையை இருபுருவ மத்தியிலோ அல்லது மூக்கின் நுனியிலோ வைத்து விரும்பிய ரூபமான பகவானை த்யானத்தில் இருத்த வேண்டும். கபிலரூபிபரமாத்மா தம் தாய்க்கு இவ்வாறு உபதேசம் செய்து, பாதங்களில் வஜ்ர, அங்குஶ, த்வஜ, பத்ம சின்னங்களையுடைய, புன்முறுவலுடன் கூடிய, பகவானை த்யானம் செய்யும்படி கூறுகிறான்

பகவத்கீதையிலும் பகவான் கிருஷ்ணன் ப்ராணாயாமத்தின் முக்கியத்துவத்தைக் கூறுகிறார்.

"அபானே ஜு$_1$ஹ்வதி ப்ராணம் ப்ராணே Sபானம் ததா$_2$ பரே
ப்ராணாபானக$_3$தீருத்$_3$த்$_4$வா ப்ராணாயாமபராயணா:"

(கீதா 4-29)

பொருள் : ப்ராணாயாமத்தைச் செய்பவர்கள் ப்ராண மற்றும் அபான வாயுவை (காற்றை) கட்டுப்படுத்தி, ப்ராணவாயுவை அபானத்திலும், அபான வாயுவை ப்ராணத்திலும் இருக்கச் செய்வர். அதாவது கும்பகக் க்ரியை செய்வர்.

பகவான் வேதவ்யாஸரால் இயற்றப்பட்ட விஷ்ணு தர்மோதத்தர புராணத்திலும், ப்ராணாயாம்த்தின் முக்கியத்துவம் கீழ்வருமாறு விளக்கப்படுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

" ஹம்ஸ உவாச' -

ரேசகம் பூரகம் சைவ கும்ப$_4$கம் ச ததா$_2$ த்$_3$விஜா:|
ஏகஸ்த்ரயவஸ்தோ$_2$ விஜ்ஞேய: ப்ராணாயாமோ மஹாப$_2$ல:||(1)
ஆத$_3$தா$_3$னஸ்து யஶ்ச்$_2$வாஸம் மந்த்ராத்$_4$யயனமாசரேத் |
மனஸா ப்$_3$ராஹ்மண: ஶ்ரேஷ்டா ரேசகம் தத்ப்ரகீர்த்திதம்|| (2)
ஶ்வாஸஸந்தா$_4$ரணம் குர்வன் ஆத$_3$தா$_3$னோ ந ச த்யஜேத் |
பூரகம் தத்$_3$வினிர்தி$_3$ஷ்டம் ஸர்வகல்மஷநாஶனம்|| (3)
மந்த்ரஸ்ய தே$_3$வதாத்$_4$யானம் ப்ராணாயாமம் ததா$_2$சரேத் |
ப்ராணாயாமாத் பரம் நாஸ்தி:த்$_3$விஜாதீனாம் பரம் தப: || (4)
நிரோதா$_4$ஜ்ஜாயதே வாயு: ததஸ்த்வக்னி: ப்ரஜாயதே|
ததஸ்து ஸலிலம் தே$_3$ஹே பூ$_1$யதே தைஸ்த்ரிபி$_4$ர் நர:|| (5)
ஆகேஶாக்$_3$ரம் நக$_2$ஸ்வக்$_3$ரம் தப்யதே பரமம் தப:|
யஸ்து கு$_1$ர்யாத் த்$_3$விஜரேஷ்ட$_2$: ப்ராணாயாமமதந்த்$_3$ரித: || (6)
ந தத் புண்யமவாப்னோதி தீர்தா^{2}னுஸாரிணீ த்$_3$விஜா: |
ந யஜ்ஞேன ததா$_2$ க்ருச்ச்$_2$ரை: ப்ராணாயாமாத்$_3$ய வாப்நுயாத் || (7)
ப்ராணாயாமபரா விப்ரா:ஸர்வே நிர்தூ$_4$தகல்மஷா: |
த்ரிவித$_4$ம் ப்ரதிபத்$_3$யந்தே மோக்ஷம் வா மனஸேப்ஸிதம்: || (8)
ப்ராணாயாமேன நஶ்யந்தி மஹாபாதகஜான்யபி |
கோ$_4$ரான்யேதானி த$_4$ர்மஜ்ஞா: ப்ராணாயாமமதஶ்சரேத் ||(9)
ஏதத் தபஸ் தத்பரமம் த்$_3$விஜானாம் பாபாபஹம் புண்ய -
விவ்ருத்$_3$த$_4$காரீ: |
மோக்ஷப்ரதோ$_3$ வா புருஷோத்தமானாம் தஸ்மாத் ப்ரயத்நேன
ஸமாசரேத் தத்|| (10)

பொருள் : மந்திரத்தின் அபிமானி தேவதையைப் பிரார்த்தனை செய்த படி ப்ராணாயாமம் செய்ய வேண்டும். அந்தணர்களுக்கு ப்ராணாயாம ஜபத்தைக் காட்டிலும் சிறந்ததொரு சாதனமில்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காற்றை நிறுத்தி வைக்கும் பொழுது (கும்பக), உடலில் ஒரு வித உஷ்ணம் பரவி வியர்க்கிறது. ப்ராணாயாமத்தினால் கிடைக்கும் பலன், புனித யாத்திரையினாலோ அல்லது யஜ்ஞத்தினாலோ கிடைப்பதில்லை. ப்ராணாயாமத்தினால் தீயொழுக்கம் அழிவதோடு மட்டுமன்றி, அம்மந்திரங்களின் பொருளை உணர்ந்து செய்யும் பொழுது, அது மோக்ஷத்திற்கும் வழி வகுக்கும். ஆகவே, ப்ராணாயாமத்தை அதிகாரியானவன் (உபநயனமானவன்) ஒரு பொழுதும் விடக்கூடாது.

ஸ்ரீமதானந்த தீர்த்தர் (மத்வாச்சார்யார்) எழுதிய தந்த்ரஸார என்ற க்ரந்தத்திலும் ப்ராணாயாமத்தைப் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

"ஸம்யங்நிஶ்சிததத்வஸ்ய நிதி$_3$த்$_4$யாஸனயா ப$_4$வேத் |
த்$_3$விவித$_4$ா ஸா ச ஸம்ப்ரோக்தா விஷ்ணுஶாஸ்த்ராவமர்ஶனம் ||
ஏகம் த்$_4$யானம் ஹரேரன்யச்சத்வார்யங்க$_3$ானி தஸ்ய ச |
யமஶ்ச நியமஶ்சாஸ: ப்ராணாயாம இதீரித: ||
அஹிம்ஸா ஸத்யமஸ்தேயம் ப்ரஹ்மசர்யாபரிக்$_3$ரஹௌ |
யமாஶௌசம் தபஸ்துஷ்டி: ஸ்வாத்$_4$யாயோ ஹரிபூ$_1$ஜனம் ||
நியமாவீரபத்$_3$மம் ச ஸ்வஸ்திகாத்$_3$யானி சாஸனம் |
ரேசக: பூரகஶ்சைவ கும்ப$_4$கஶ்ச த்ரித$_4$ாஸ்ம்ருத: ||
ப்ராணாயாம: ஸ்ம்ருதிம் விஷ்ணோர் வினா நியம உச்யதே |
அதீ$_4$தி ஸ்ம்ருதியுக்தோ ஹி நிதி$_3$த்$_4$யாஸனமேவ ஹி ||
ப்ராணாயாமே ச விஷ்ணோர்யத் ஸ்மரணம் த்$_4$யானமேவ தத் |
ஆஸாஶௌசம் ப்ராணயாமோ நிஷ்பரிக்$_3$ரஹபூர்வகா: ||
ஸர்வத: ஶ்ரவணாத்$_4$யஸ்து முக்$_2$யா முக்திப்ரஸாத$_4$னே |

— தந்த்ரஸாரம்

பொருள் : அறிஞர்களின் சமய போதனைகளை நன்றாகக் கேட்டு, அதை மனனம் செய்து விஷ்ணுவைப் பற்றிய ஞானத்தை உறுதியாக அடைய வேண்டும். அப்பொழுது தான் த்யானம் என்பது பயனுள்ளதாக

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

முடியும். படிப்படியாக, ஶ்ரவணம், மனனம், நிதித்யாஸனம் என்று முன்னேற வேண்டும். பகவான் விஷ்ணுவை த்யானம் செய்ய இரு வழிகள் உள்ளன. முதல்வழி சாஸ்திர விசாரம் - ஶ்ரவணம், மனனம், பிறருக்கு போதிப்பது, எழுதுவது முதலியவை. இரண்டாவது, விஷ்ணுவை த்யானிப்பது. இதற்கு நான்கு படிகள் உள்ளன. (1) யமம் - ஸத்யம், அஹிம்ஸை, ப்ரம்மச்சர்யம், நியமத்தில் உறுதியாக இருப்பது. (2) நியமம் - மனத்தூய்மை, தபசு, வேத அத்யயனம், விஷ்ணு ஆராதனம் (3) ஆஸனம் - நீண்ட நேரம் த்யானம் செய்வதற்கு இடையூறு இல்லாமல் ஒரே நிலையில் சௌகரியமாக (வலியேதுமில்லாமல்) உட்காரும் நிலை மூன்று வகைப்படும். (i) ஸ்வஸ்திக (சாதாரணமாக உட்காரும் நிலை) (ii) வீரஸனம் (iii) பத்மாஸனம் (4) ப்ராணாயாமம் - மூச்சு விடுதல் (ரேசகம்); மூச்சை உள்ளே இழுத்தல் (பூரகம்); - மூச்சை தக்க வைத்தல் (கும்பகம்) ஆகியவை ப்ராணாயாமத்தின் மூன்று அங்கங்கள். பகவான் விஷ்ணுவை மனனம் செய்து மந்திரத்தைச் சொல்லி ப்ராணாயாமம் செய்வது, நிதித்யாஸனம் எனப்படும் த்யானமாகும்.

ஆஸனம், ஆசார அனுஷ்டானம், சாஸ்திர ஶ்ரவணம் மற்றும் அவைகளைக் கடைப்பிடிப்பது, பூஜை, ஜபம் மற்றும் தபசு ஆகிய இவைகளைப் பலனேதும் எதிர்பாராமல் செய்யும் பொழுது, அவைகள் மோக்ஷ சாதனமாகின்றன.

அந்தண சமுதாயம் ப்ராணாயாமத்தை அசட்டை செய்து வருவதை நாம் பார்க்கிறோம். சத் காரியங்கள், சமயச் சடங்குகள் மற்றும் இதர சுப / அசுப காரியங்கள் ஆகியவை ஆசமனம், ப்ராணாயாமம் செய்த பிறகே தொடங்கப்படுகின்றன. ஆசமனம் செய்த பிறகு மூக்கைத் தொட்டுக் கொண்டு மந்திரம் உச்சரிப்பது செய்வதே ப்ராணாயாமமாகி வருகிறது. ரேசக, கும்பக, பூரக செயல்களில்லாமல் செய்வது ப்ராணாயாமமாகாது.

மூக்கை வெறுமனே தொட்டுக் கொண்டு மந்திரம் சொல்வது அர்த்தமற்ற செயலாகும். ப்ராணாயாமத்தின் பலனை எப்படி அடைய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
முடியும் ? உரிய முறையில் செய்யும் ப்ராணாயாமமே தகுந்த பலனைத் தரவல்லது. தொடர்ந்து தவறாது செய்யும் ப்ராணாயாமம், தேகம், மனது, புத்தி, ஆத்மா சம்பந்தப்பட்ட பலனை வெகு விரைவில் தரவல்லது. எப்படியென்றால் தேகமானது ஐந்து வித ப்ராணங்களான (வாயு) ப்ராண, அபான, வ்யான, உதான மற்றும் சமான ஆகியவைகளால் கட்டுண்டது. தனித்தன்மை வாய்ந்த ப்ராணாயாமம் ஐந்து ப்ராணங்களை எழுச்சியடையச் செய்து சத்சக்ரத்தை (சூரிய சக்தி) சுறுசுறுப்பாக்கி, மனிதனின் சக்தி, ஆவல் மற்றும் சுறுசுறுப்பை உன்னத நிலைக்குக் கொண்டு செல்கிறது.

'ஓம்' காரத்தின் விசாரம்

ப்ராணாயாம மந்திரத்தில் 10 முறை 'ஓம்' என்ற சப்தம் வருகிறது. (7 முறை ஸப்த வ்யாஹ்ருதியிலும் ; ஒரு முறை காயத்ரீ மந்திரத்திலும் 2 முறை சிரஸிலும்)

'ப்ரணவ' என்பது 'ஓம்' காரமாகும்.

"ஓமித்யேகாக்ஷரம் ப்$_3$ரஹ்ம"

"ஓமித்யேகாக்ஷரமுத்$_3$கீ$_3$த$_2$முபாஸீத"

ஆகியவைகள் சில உபநிஷத வார்த்தைகள். ஆகவே, வேதமந்த்ரங்கள் பெரும்பாலும் 'ஹரி: ஓம்' என்ற சொற்களுடனேயே தொடங்கப்படுகிறது.

தந்த்ரஸாரம் என்ற க்ரந்தத்தில் ஸ்ரீ மத்வாச்சார்யர் ஓம் என்ற சப்தத்தின் மூலத்தைப் பற்றி விளக்கியுள்ளார்

"விதி$_4$ம் வித$_4$ாய ஸர்க$_3$ாதௌ$_3$ தேன ப்ருஷ்டோSப்$_3$ஜலோசன: |
ஆஹ தே$_3$வோரமோத்ஸங்க$_3$விலஸத்பாத$_3$ பல்லவ: |
அஹமேவாகி$_2$லகு$_3$ணோ வாசக: ப்ரணவோ மம " ||

பொருள் : பகவான் நாராயணனின் நாபி கமலத்திலிருந்து (தாமரை) நான்முக பிரம்மா ஸ்ருஷ்டி (பிறப்பு) செய்யப்பட்டார். தாமரை மீது அமர்ந்திருக்கும் பிரம்மா ஸ்ருஷ்டிக்கப்பட்டதுமே நான்காறு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திசைகளையும் பார்த்தார். எங்கும். இருட்டாக இருக்கவே சில நிமிடங்கள் பயத்திற்குள்ளானார். தாமரைத் தண்டின் அடிப்பாகத்தில் ஒருவர் ஆனந்த நிலையில் சயனித்துக் கொண்டிருப்பதைப் பார்த்தார். பகவானின் பாதங்களுக்கு அருகில் ஒரு பெண் அமர்ந்திருப்பதையும் கண்டார். தைரியத்தை வரவழைத்துக் கொண்டு பகவானை யார் என்றும் என்ன பெயர் என்றும் வினவினார். பகவான், தாம் எல்லா நற்குணங்களின் இருப்பிடம் என்றும், பூர்ணமானவர் என்றும், 'ஓம்' என்ற பெயரால் அழைக்கப்படுபவர் என்றும் பதிலளித்தார்.

இவ்வாறாக நான்முக ப்ரஹ்மா அந்த பகவானின் பெயர் 'ஓம்' என்றும் வேதங்கள் பகவானை 'ஓம்' என்ற சப்தத்தினால் அழைக்கின்றன என்றும் அறிந்தார்.

பகவானுடைய எண்ணற்ற பெயர்களில் ஒவ்வொன்றும் ஒரு நற்பண்பைக் குறிக்கும் காரணப் பெயராகும். ஸம்ஸ்க்ருத இலக்கியத்தில் இவை 'நிருக்த' பகுதியில் விவரிக்கப்பட்டுள்ளது. பகவானின் பெயர் 'ஓம்' என்று எவ்வாறு பொருந்துகிறது என்பதைப் பார்ப்போம்

(i) ஸம்ஸ்க்ருத இலக்கியத்திலுள்ள 'நிருக்த'த்தின்படி 'அவ்' என்பது ஒரு வினைச் சொல். இதன் பொருள் காப்பாற்றுதல். (ப்ரபஞ்சத்தைக் காப்பாற்றுவது). பாணினி இலக்கணத்தின் சில விதிகளின் மூலம் இச்சொல் இறுதியாக 'ஓ' என்றும் 'ம்' என்றும் மாறுகிறது. இதிலிருந்து, பகவான் அசையும் மற்றும் அசையாப் பொருள்களை உடைய ப்ரபஞ்சத்தைக் காப்பாற்றுபவர். ஆகையால் 'ஓம்' என்ற பெயர் அவருக்குக் காரணப் பெயர் என்று அறியமுடிகிறது.

(ii) 'வேங்' என்பது மற்றுமொரு ஸம்ஸ்க்ருத வினைச்சொல். இலக்கணத்தின் விதிகளின்படி இச்சொல் 'ஓத்' என்றாகிறது. துணி நெய்யும் பொழுது குறுக்கும் நெடுக்குமாக செல்லும் நூலைப் போல் என்று இதன் பொருள். பகவான் நற்குணங்களை மட்டும் தன்னில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
வைத்துள்ளான். தீய குணங்கள் அவனை நெருங்குவதில்லை, ஏனெனில் பகவான் ஒருவனே ஸ்வதந்திரன் மற்றும் அசிந்த்ய சக்தியுள்ளவன். ஆகவே அவன் குணபூர்ணன். இது 'ஓம்' என்பதன் இன்னொரு பொருள். "ஓம்" காரத்தைப் பற்றி மேலும் அறிய வேதாகமங்களைப் பார்க்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் - 8

காயத்ரீ ஸப்தார்த்த விசாரம்

ப்ராணாயாமம் செய்த பிறகு, அர்கயம் கொடுப்பதற்கு முன், மார்ஜன மந்த்திரத்தினால் மேலும் தேகத்தை சுத்தி செய்ய வேண்டும். அர்க்யப் பிரதானத்திற்குப் பிறகு காயத்ரீ ஜபம் செய்வதற்கு முன் ஆஸன சுத்தி மற்றும் பூதோச்சோடனம் செய்து பூபிரார்தனை, அங்கந்யாஸ, கரன்யாஸ, நாராயணத்யானம் மற்றும் காயத்ரீ ஆவாஹனம் செய்து, காயத்ரீ ஜபம் செய்ய வேண்டும்.

காயத்ரீ மந்திரத்தின் பொருள்:

"ஓம் பூ$_4$ர்பு$_4$வஸ்ஸுவ : த$_1$த்$_1$ஸவிது$_1$ர் வரேண்யம் |
பர்கே$_3$ா தே$_3$வஸ்ய தீ$_4$மஹி தியோயோநப்ரசே$_1$ாத$_3$யாத்$_1$ || "

ஓம் - எல்லா நற்குணங்களும் பூர்ணமாக கொண்ட ப்ரஹ்மா = நாராயணா = விஷ்ணுவைக் குறிக்க வேதமிட்ட பெயர்

பூ$_4$:	-	எக்காலத்திலும் நித்யமானவர்
பு$_4$வ:	-	ப்ரபஞ்சத்தை ஸருஷ்டி செய்பவர்
ஸுவ:	-	ஆனந்தத்தால் நிறைந்தவர்
ய:	-	யார்
ந:	-	நமக்கு
தி^{4}ய:	-	புத்தியை தர்ம மார்கத்தை ஞானத்தை
ப்ரசோதயாத்	-	தூண்டுகிறாரோ
த$_1$த்$_1$	-	அந்த எங்கும் நிறைந்த
ஸவிது$_1$:	-	சிருஷ்டியிலிருந்து, முக்தி வரையில் காரணாயிருக்கும் அந்த ஸவிதா
தே$_3$வஸ்ய	-	உள்நோக்கமில்லாமல் எப்பொழுதும் சுறுசுறுப்பாய் இருக்கும் தேவனின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வரேண்யம்	-	சஜ்ஜனங்களால் எப்பொழுதும் வணங்கப்படும்
ப$_4$ர்க$_3$:	-	ப்ரபஞ்சத்தைச் செயலாற்றுவதற்குக் காரணமான அந்த தேஜோ (ஒளி) மயமான ரூபத்தை
தீ$_4$மஹி	-	(நாங்கள்) த்யானம் செய்கிறோம்

எல்லாக் காலங்களிலும் எங்கும் வியாபித்து இருப்பவனும் தர்ம மார்கத்தில் நம் புத்தியையும் செயலையும் ஈடுபடுத்துபவனும் சிருஷ்டி ஸ்திதி முதலிய எட்டு க்ரியைகளுக்குக் காரணமானவனும் பயன் கருதாது எப்பொழுதும் சுறுசுறுப்புடன் (விளையாட்டைப் போல) இருப்பவனும், ஞானிகளாலும், சத்ஜனங்களாலும் பூஜிக்கப்படுபவனும், ப்ரபஞ்சத்தைக் காப்பாற்றி அதை செயல்படுத்துபவனும், நித்யமானவனும், ஆனந்த ஸ்வரூபனும், 'ஓம்' என்ற எழுத்தால் அறியப்படுபவனும், சூரியனின் அந்தர்யாமியாய் இருப்பவனும் ஆகிய பகவான் நாராயணனை நாங்கள் வணங்குகிறோம் / த்யானம் செய்கிறோம் என்பது காயத்ரீ மந்திரத்திற்குப் பொதுவான பொருளாகும்.

வேதவ்யாஸ பகவான் காய்த்ரீயின் பொருளை இவ்வாறு விளக்குகிறார் :

'யோ தே$_3$வ : ஸவித$_1$ா Sஸ்மாக$_1$ம் தி$_4$யோ த$_4$ர்மாதி$_3$கோ$_3$சரா :|
ப்ரேரயேத்தஸ்ய ப$_4$ர்க$_3$ஸ்ய தத்$_3$வரேண்யமுபாஸ்மஹே' ||

(வ்யாஸ)

பொருள் : ஞானிகளால் பூஜிக்கப்படுபவனும் நம்முள் தர் மார்கத்தையும், ஞானத்தையும் பிரேரணை செய்பவனும், சிருஷ்டி, ஸ்திதி முதலிய செயல்களுக்குக் காரணமானவனும், சூரியனின் அந்தர்கதனும் ஆகிய அந்த பகவான் நாராயணனை நாம் த்யானம் செய்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மத்வாச்சார்யார் தமது ரிக்பாஷ்யத்தில் காயத்ரீயின் பொருளை கூறுகிறார்

' ஓமஶேஷகு$_3$ணாத$_4$ார இதி நாராயணோப்யஸௌ |
பூ$_1$ர்ணோ பூ$_4$திவரோனந்த$_1$ஸுகோவ்யாஹ்ரிதிரீரித: |
கு$_3$ணைஸ்தத: ப்ரஸவிதா வரணீயோ கு$_3$ணோன்னதே$_1$: |
பா-ரதி-ஜ்ஞானரூபத்வாத் ப$_4$ர்கோ த்$_4$யோ - Sகி$_2$லைர்ஜனை: |
ப்ரேரகே$_1$ா Sஶேஷபு$_3$த்$_3$தீ$_4$னாம் ஸ க$_3$ாயத்ர்யா$_2$த ஈரித: ||

(ருக்$_3$ப$_4$ாஷ்யம்)

பொருள் : எல்லா நற்குணங்களின் இருப்பிடம் பகவான் நாராயணன். அற்புதமான குறைவற்ற ஆனந்தத்தில் நிறைந்தவன். ப்ரபஞ்சத்தை சிருஷ்டித்துக் காப்பதனால் வணங்கப்படுபவன். அதிக ப்ரகாசமாயுள்ளவன். லீலாவினோதன். ப்ரபஞ்சத்தைக் காப்பாற்றி செயலுறச் செய்பவன். எல்லோரிடத்திலும் ஞானத்தையும் செயலையும் தூண்டுபவன். சூரியனின் அந்தர்யாமியாய் இருக்கும் இப்பேர்பட்ட பகவான் நாராயணனை நாம் த்யானிக்கிறோம்.

காய்த்ரீ ஜபம் செய்யும் பொழுது இம்மாதிரியான அனுசந்தானம் (ஸ்மரணை) செய்தால் போதுமானது.

சூர்யனில் இருக்கும் நாராயணனை ஏன் தியானம் செய்ய வேண்டும் ?

ஸந்தியோபாஸனையின் பொழுது எந்த ரூபத்தை த்யானிக்க வேண்டும் என்பது *ஶ்*ருதி. ஸ்ம்ருதிகளினால் அறியப்படுகிறது.

ஆதி$_3$த்யாந்த$_1$ர்க$_3$தம் யச்ச ஜ்யோதிஷாம் ஜ்யோதிருத்தமம் |
ஹ்ருத$_3$யே ஸர்வபூ$_4$த$_1$ானாம் ஜீவபூ$_4$த$_1$ம் ஸ தி$_1$ஷ்ட$_2$தி$_1$ ||
ஹ்ருத்$_4$யோம்னி தபதி ஹ்யேஷ பா$_3$ஹ்யஸூர்யஸ்ய சாந்த$_1$ரே |
அக்$_3$னௌ வா தூ$_4$மகேதோ*ஶ்*ச ஜ்யோதி*ஶ்*சித்ரகரம் ஜக$_3$த் ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருள் : ப்ரபஞ்சத்தில் ஒளிமயமானவற்றில் மிகவும் பிரசித்தமானது சூரியன். தன்னுடைய பிரத்யேகமான சக்தியை சூர்யனுக்கு அளித்திருப்பதாய் பகவான் கிருஷ்ணன் கீதையில் கூறியிருக்கிறான். பகவான் சூரியனுள் உறைபவன் மட்டுமன்றி அவன் ஜோதி என்ற பெயரால் அழைக்கப்படுகிறான். சூர்யனுள் இருக்கும் ஜோதி, பகவான் நாராயணனே. அந்த ஜோதி அணு அளவில் எல்லோருடை ஹ்ருதயத்திலும் உள்ளது. ஹ்ருதயத்தில் பிரகாசித்துக் கொண்டு நமக்கு ஞானத்தை (புத்தி) அளிக்கிறது. இருட்டை போக்கடிப்பதில் ஒரு மிகச் சிறந்த சின்னமாகவும், எளிதில் அறிந்து கொள்வதாகவும் சூர்யனின் ரூபம் சொல்லப்பட்டுள்ளது. ஒளியைக் கொடுத்து எல்லாவற்றையும் அறிய வைத்து, எல்லோரையும் செயலுறச் செய்கிறது. அந்த பகவான் நாராயணனே நட்சத்ரங்களிலும், வால் நட்சத்திரங்களிலும், விண் கல்லிலும் பல வித வண்ணங்களில் உள்ளான்.

மேலும்

'ப்ராணினாம் ஹ்ருத$_3$யே ஜீவரூபத$_1$யா ய ஏவ ப$_4$ர்க$_3$ஸ்திஷ்ட$_2$தி |
ஸ ஏவ ஆகாஶே ஆதி$_3$த்யமத்$_4$யே புருஷரூபதயா வித்$_3$யதே ||

— யாஜ்ஞவல்க்யஸம்ஹிதா

பொருள் : ஜீவன் என்று சொல்லப்படுகின்ற ஒவ்வொரு உயிரின் ஹ்ருதயத்திலுமிருக்கும் ஆத்மாவினுள் பகவான் உறைகிறான். அவன் 'ப$_4$ர்க:' என்றும் அழைக்கப்பட்டு, செயலின் தூண்டுதலுக்கும், காப்பாற்றுவதற்கும் காரணமாகிறான்.

'பூ$_1$ஷன்னேக$_1$ர்ஷே யமஸூர்யப்ராஜாபத்$_1$ய வ்யூஹரஸ்மீன் ஸமூஹ |
தே$_1$ஜோ யத்தே$_1$ ரூபம் கல்யாணதமம் தத்தே$_1$ பஶ்யாமி ||

— ஈஶாவஸ்ய உப.

பொருள் : யமன், சூரியன், ப்ரஜாபதி போன்ற தேவதைகளைக் காட்டிலும் மிகுந்த காந்தியை (ஒளியை) உடைய பகவான் நாராயணனின் ரூபத்தை நான் தியானிக்கிறேன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

' ஆதி$_3$த்யானாம் அஹம் விஷ்ணு :

ஜ்யோதி$_1$ஷாம் ரவிரம்ஶுமான் '

— கீதா

பொருள் : பன்னிரண்டு ஆதித்யர்களின் ஶக்தியின் மூலம் நான்; அவர்களில் ஒருவனான விஷ்ணு நானே. ஒளி மிகுந்து இருக்கும் பொருள்களில் சூரியனுள் நான் இருக்கிறேன் என்று க்ருஷ்ண பரமாத்மா கீதையில் கூறியுள்ளான்.

' ப்ரத$_2$மம் மஹத: ஸ்ரஷ்டு : த்$_3$விதீ$_1$யம் அண்ட$_3$ஸம்ஸ்தி$_2$த$_1$ம் |

த்ருதீ$_1$யம் தே$_3$ஹினாம் தே$_3$ஹே புருஷத்ரயமுத$_3$ாஹ்ருத$_1$ம் ||

— ஶ்ரீமத்$_3$ ப$_4$ாக$_3$வதம்

பொருள் : ப்ரபஞ்சத்தின் வெளியில் சிருஷ்டி செய்யப்பட்ட மஹத்தத்வத் (சதுர்முகப்ரம்மன்) திற்குக் காரணமாய் இருந்த நாராயணனின் / ப்ரஹ்மனின் ரூபமே முதல் ரூபம். ப்ரபஞ்சத்தின் மத்தியிலிருக்கும் சூரியனே அவனின் இரண்டாவது ரூபம். ஒவ்வொரு ஜீவனுள் இருக்கும் ரூபமே மூன்றாவது ரூபம். இம்மூன்றில் எல்லோருக்கும் மிகவும் பரிச்சயமான பகவானின் ரூபம் சூரியன் என்பதால் சந்தியோபாசனையில் சூரியனில் ரூபம் த்யானத்திற்காக குறிப்பிடப்பட்டுள்ளது.

காயத்ரீயின் சில சிறப்பம்ஸங்கள்

'அக$_1$ாரேணாகி$_2$லாதி$_4$க்$_1$யம் உகாரேண கு$_3$ணோச்யதா |

மகாரேணாமிதத்வம் து தாரார்தே$_2$ா - வேத$_3$போ$_3$த$_4$க$_1$:||

பொருள் : 'அ' காரம் என்றால் 'எல்லாவற்றைக் காட்டிலும் உயர்ந்தது'. 'உ' காரம் என்றால் 'குண பூர்ணமாய் இருப்பது.

'ம' காரம் என்றால் அளவிடப்பட முடியாதது.'

இந்த மூன்றும் சேர்ந்தது 'ஓம்'. இதன் ஒரு பெயர் 'தார:'. இது வேதங்களின் பொருளைச்சுருக்கமாகக் கூறுகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஓம்' என்பதில் எட்டு பாகங்கள் உள்ளன. ஒவ்வொரு பாகத்தையும் நிர்வகிக்கும் பகவத் ரூபம் சாஸ்திரங்களிலிருந்து தெரிய வருகிறது.

'அ' காரம் (A) -- விஶ்வ, க்ருஷ்ண

'உ' காரம் (U) -- தைஜஸ, ராம

'ம' காரம் (M) -- ப்ராஜ்ஞ, நரஸிம்ஹ

நாத₃ம் -- துரீய, வராஹ

பி₃ந்து₃ --ஆத்மா, விஷ்ணு

கோ₄ஷம் -- அந்தராத்மா, பரஞ்ஜோதி

ஶாந்த -- பரமாத்மா, ப்ரஹ்ம

அதிஶாந்த -- ஜ்ஞானாத்மா, வாஸுதேவ

காயத்ரீ மந்திரத்தின் நான்கு பாகங்களும் அவற்றை நிர்வகிக்கும் பகவத்ரூபங்களும் கீழே தரப்பட்டுள்ளன :-

'தத்ஸவிதுர் வரேண்யம் ' -- ஶாந்திபதி அநிருத்தன்

'ப₄ர்கோ₃ தே₃வஸ்ய தீ₄மஹி ' -- க்ருதிபதி ப்ரத்யும்னன்

'தி₃யோயோ ந: ப்ரசோ₁த₃யாத்' -- ஜயாபதி ஶங்கர்பஷணன்

'ஓம்' --- - -- - - - மாயாபதி வாஸுதே₃வன்

24 எழுத்துக்களைக் கொண்ட காயத்ரீயின் பகவத் ரூபங்கள் வருமாறு :

தத் -- கேஶவ:

ஸ -- நாராயண:

வி -- மாத₄வ:

து: -- கோவிந்த₃:

வ -- விஷ்ணு:

ரே -- மது₄ஸூத₃ன:

ணி -- த்ரிவிக்ரம:

யம் -- வாமன:

ப₄ -- ஸ்ரீத₄ர:

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ர்கே$_3$ா -- ஹ்ருஷீகேஶ:

தே$_3$ -- பத்$_3$மநாப$_4$:

வ -- த$_3$ாமோத$_3$ர:

ஸ்ய -- ஸங்கர்ஷண:

தீ$_4$ -- வாஸு$_3$தே$_3$வ:

ம -- ப்ரத்$_4$யும்ன:

ஹி -- அனிருத்$_3$த$_4$:

தி$_4$ -- புருஷோத்தம:

யோ -- அதே$_4$ாக்ஷஜ:

யோ -- நாரஸிம்ஹ:

ன : -- அச்யுத:

ப்ர -- ஜனார்த$_3$ன:

சே$_1$ா -- உபேந்த்$_3$ர:

த$_3$ -- ஹரி:

யாத் -- ஸ்ரீக்ருஷ்ண:

'வேத$_3$மாதா து க$_3$ாயத்ரீ த்$_3$விகு$_3$ணா த்$_3$வா$_3$தஶாக்ஷராத் |
சது$_1$ர்விம்ஶதி$_1$ மூர்த்$_1$தயோஸ்யா: கதி$_2$த$_1$ா வர்ணதே$_3$வதா$_1$: ||

— தந்த்ரஸார

ஸ்ரீ மத்வாச்சார்யார் தமது தந்த்ரஸார க்ரந்தத்தில் காயத்ரீ 24 அக்ஷரங்களைக் கொண்டது என்றும், அவைகள் காயத்ரீயானது வேதங்களின் மாதா என்றும் கூறியுள்ளார். கேசவ முதல் ஸ்ரீக்ருஷ்ண வரையில் பகவத் ரூபங்கள் அவைகளின் தேவதைகள் என்றும் உபாஸனை செய்ய வேண்டும். இதைப் பற்றி விவரிக்கும் 'காயத்ரீ' வர்ண மாலா ஸ்தோத்திரம் அத்தியாயம் 11 இல் கொடுக்கப்பட்டுள்ளது.

எல்லா வேதங்களின் ரகசியம் "ஓம்" காரத்தில் அடங்கியிருக்கிறது. இந்த 'ஓம்' காரத்தின் அர்த்தத்தை பூ : புவ : ஸ்வ : எனும் வ்யாஹ்ருதி மந்திரங்கள் கூறுகின்றன. இந்த வ்யாஹ்ருதி மந்திரங்களில் அடங்கிய

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருளை த்ரிபாத காயத்ரீ விவரிக்கிறது. இந்த காயத்ரீயின் மூன்று பாதங்களின் அர்த்தத்தைப் புருஷ ஸூக்தத்தின் மூன்று வர்கங்கள் தெளிவாக்குகின்றன. இந்தப் புருஷ ஸூக்தத்தின் மூன்று வர்கங்களின் அர்த்தத்தை மூன்று வேதங்கள் விரிவாகச் சொல்கின்றன. அனைத்து வேதங்களின் பொருள் ஓம் காரத்திலும் மற்றும் வ்யாஹ்ருதிகளிலும் அடங்கியிருந்த போதும் இவைகளின் அர்த்தங்களை சாமான்ய ஜனங்கள் அறிந்துகொள்ளல் சாத்தியமல்ல; புருஷசூக்தத்தை ஜபிப்பதும் சாத்யமல்ல. வேதங்களை ஜபிப்பது பொது மனிதருக்கு முடியாத காரியமென்றே சொல்ல வேண்டும். அதனால் மிக சுருக்கியதும், மிக விரிவானதும் ஆகாமல் நன்கு போதனை செய்யும் காயத்ரீ மந்திரத்தை ஜபிக்கச் சொல்லியிருக்கிறார்கள். இக்காரணத்தினாலேயே காயத்ரீ மந்திர ஜபத்தால் அனைத்து வேத பாராயணம் செய்தால் வரவேண்டிய பலன் வருமென்று பல ப்ரமாணங்கள் சொல்கின்றன. காயத்ரீ ஜபத்தை மிக அன்புடன் செய்ய வேண்டும். அன்பின்றி, மந்திரத்தின் பொருளின் சிந்தனையில்லாமல் ஆயிரக்கணக்கான காயத்ரீ ஜபம் செய்வதைக் காட்டிலும் 10 காயத்ரீ ஜபத்தை மிக அன்புடன், அதிவிஶ்வாஸத்துடன் செய்வது சிறந்தது. ஏனென்றால் பாவனையின் பாரம் இருக்கும் வரை மந்திரத்தின் சித்தி கிட்டும். "யாத்$_3$ருஶா ப$_4$ாவனா மந்த்$_1$ரே ஸித்$_3$தி$_4$ர்ப$_4$வதி த$_1$ாத்$_3$ருஶா" எனும் சொல் மேலே சொன்ன உண்மையைச் சொல்கிறது. நம் பண்டைக் காலத்து ருஷிகள் நாம் நாள்தோறும் ஜபிக்கும் காயத்ரீ மந்திரத்தையே ஜபித்துக் கொண்டிருந்ததனாலேயே அவர்களுக்கு மந்திர ஸித்தி (முடிவு) பெற்று சாபம் தருவது, அனுக்கிரகம் (தயை) செய்வது முதலியவற்றில் சாமர்த்தியம் அவர்களிடம் உண்டாயிற்று.

நமக்கு இவைகளுக்குள் எதுவும் சாத்தியமாகாமலிருப்பதற்குக் காரணமென்னவென்றால் நமக்கு மந்திரத்தில் நம்பிக்கையில்லாமை, மந்திரத்தின் அர்த்தத்தின் அஜ்ஞானம் (அறிவின்மை) என்றே சொல்ல வேண்டியிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

" ஜகாரோ ஜன்மவிச்சே$_2$த : பகார : பாபநாஶக: |

தஸ்மாத் ஜப இதி ப்ரோக்தோ ஜன்மபாபவினாஶக: ||

ஒரே மந்திரத்தைத் திருப்பித் திருப்பிச் சொல்வது முழுவதும் பயனற்றது என்று சிலர் சொல்வதுண்டு. ஆனால் அதில் நியாயமில்லை. ஒரு புகழ்பெற்ற வித்துவான் ஜபத்தின் விஷயத்தில் கீழ்வருமாறு சொல்லியிருக்கிறார் :–

ஜபம் என்பது சில சொற்களைச் சஞ்சலமில்லாமல் கூறியது கூறல். திருப்பித் திருப்பிச் சொல்வது பயனற்றது என்று தோன்றலாம். ஆனால் அது நியாயமல்ல. திருப்பித் திருப்பிச் சொல்வதே பிரக்ஞையின் ஒரு நிலையில் முழு மனமும் ஈடுபட்டு இன்பத்தின் (பரவசம்) எல்லைக்குக் கொண்டு செல்கிறது (துரீய நிலை). பிரசித்தி பெற்ற கவிஞன் ஆல்ப்ரெட் டென்னிஸன் அந்த நிலையை அடைய அவர் பெயரையே (ஆல்ப்ரெட், ஆல்ப்ரெட்) என்று பல தடவை உச்சரித்துக் கொண்டேயிருப்பராம்.

ஜபத்தின் முழு பலன் நமக்குக் கிடைக்க வேண்டுமானால் கீழ்க்கண்ட ஶ்லோகத்தில் சொன்ன குணங்கள் நம்மில் இருக்க வேண்டும்.

" மன : ப்ரஹர்ஷணம் ஶௌசம், மௌனம் மந்த்ரார்த$_2$சிந்தனம் |

அவ்யக்ரத்வமனாலஸ்யம் ஜபஸம்பத்திஹேதவ:" ||

ஜபம் செய்வதற்கு முன் மனதில் நல்ல ஆவல் இருக்க வேண்டும். மனது வெறுக்கும் சிந்தனைகளுக்கு இடமளிக்கக் கூடாது. மந்திரத்தின் பொருளைச் சிந்தித்தல் வேண்டும். புத்தியும் ஒரே மனதுடையதாயிருக்க வேண்டும். தேகத்தில் சுறுசுறுப்பு இருக்க வேண்டும். மேல் சொன்ன குணங்கள் படைத்தவன் ஜபம் செய்தால் முழுமையைத் தரும்.

ஜபம் செய்யும் பொழுது கண்ணும் கருத்துமாயிருக்க வேண்டும். சில நியமங்கள் : (கட்டுப்பாடு)

(1) பிரம்மச்சாரிகளும் மற்றும் க்ருஹஸ்தாஶ்ரமிகளும் தொடக்கத்தில் மாத்திரம் ஓம் காரத்தைச் சொல்லி காயத்ரீயை ஜபிக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(2) காயத்ரீ மந்திரத்தின் அடிகளைத் துண்டிக்காமல் சொல்லக்கூடாது; துண்டித்து மூன்று அடிகளைத் தனித்தனியாய்ச் சொல்ல வேண்டும்.

(3) ஜபம் செய்யும் பொழுது உயர்ந்த ஞானிகள் வருகை தந்தால் ஜபம் செய்வதைச் சில நேரம் வரை நிறுத்தி, அவருக்கு ஆசனம் தந்து, வணங்கி அவரின் யோக க்ஷேமங்களை விசாரிக்க வேண்டும்.

(4) குருக்கள் (ஆசான்கள்), கடவுளின் பக்தர்கள், கோயில், நீர்த்தேக்கம், அஸ்வஸ்த்த மரம் (அரச), அக்னி மற்றும் சூரியன் முதலியோரிடம் முதுகு காட்டி உட்கார்ந்து ஜபம் செய்யக் கூடாது.

(5) ஜபம் செய்யும் பொழுது நிந்திக்கும் பேச்சுக்களை விட்டு, மௌனம் (பேசாமலிருப்பது) முழுமையாக நடப்பில் கொண்டுவர வேண்டும்.

(6) சிரிக்கக் கூடாது.

(7) எந்தப் பதார்த்தத்தையும் பார்க்கக் கூடாது.

(8) கண்களை மூடி பகவானின் உருவத்தை மாத்திரம் தியானம் செய்ய வேண்டும்.

(9) வாயால் எந்தவொரு வகையான சத்தத்தையும் செய்யலாகாது.

(10) எந்தப் பதார்த்தத்தையும் தொடக்கூடாது.

(11) நடந்தவாறு ஜபம் செய்யலாகாது.

(12) அசையும் தன்மையுள்ள ஆசனத்தில் அமர்ந்து ஜபம் செய்யக் கூடாது.

(13) சுத்தமாயிருந்து ஜபம் செய்ய வேண்டும்.

(14) எண்ணிக்கை அடிப்படையிலேயே ஜபம் செய்ய வேண்டும்.

(15) கொட்டாவி விடக்கூடாது

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(16) சோம்பல் முறிக்கக்கூடாது

(17) தூக்கத்தால் செயலற்றவனாகக் கூடாது.

(18) கோபம் முதலானவைகளுக்கு மனதில் இடமளிக்கலாகாது.

(19) அஜாக்கிரதையால் பேச நேர்ந்தால், விஷ்ணுவை நினைத்து மறுபடியும் ஜபம் செய்ய வேண்டும்.

(20) ஈரத்துணி உடுத்தி ஜபம் செய்யக்கூடாது.

(21) முடியாத நிலையில் ஈரத்துணியை 7 தரம் உதறிவிட்டு உடுக்க வேண்டும்.

(22) மந்திரத்தின் பொருளைச் சிந்தனை செய்யாமல் ஜபத்தைத் தொடங்கக் கூடாது.

(23) மும்முறை ப்ராணாயாமம் செய்யாமல் ஜபத்தைத் தொடங்கக் கூடாது.

(24) ஜபத்தின் பின்பும் ப்ராணாயாமம் செய்ய வேண்டும்.

(25) ஜபத்தை பகவானுக்கு அர்ப்பணம் செய்ய மறக்கக் கூடாது.

(26) ஒரே பரமாத்மா, (சூரியனில் இருக்கும் நாராயணன்), காலை, மத்தியானம், சாயங்காலங்களில் முறையே காயத்ரீ, ஸாவித்ரீ மற்றும் ஸரஸ்வதீ என்ற பெயர் கொண்டு இருக்கிறானென்று பாவனை செய்ய வணே்டும்.

(27) ருஷி, தேவதை மற்றும் ச₂ந்தஸ் இவற்றை அறியாமல் மற்றும் சொல்லாமல் ஜபம் செய்யக்கூடாது.

(28) முடிந்த வரையில் (வீட்டில்) கடவுளின் சன்னிதியில் அல்லது மாட்டுத் தொழுவத்தில், புண்யதீர்த்தக் கரைகளில், சமுத்ரக்கரையில், கோவில்களில், புனிதமான ஆஶ்ரமங்களில் குரு (ஆசான்) முன்னிலையில் ஜபிக்க வேண்டும்.

வீட்டில் ஜபித்தால் பலன் ஒரு பங்கு. நதியின் தீரத்தில் ஜபித்தால் பலன் இரு மடங்கு. பசு மாட்டுக் கொட்டிலில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜபித்தால் பலன் நூறு மடங்கு. ஹோமம் செய்யும் இடத்தில் ஜபித்தால் பலன் ஆயிரம் மடங்கு. தேவாலயம், க்ஷேத்திரங்களில் ஜபித்தால் பலன் நூறாயிரம் மடங்கு. இவ்வாறு தர்ம சாஸ்திரம் கூறுகிறது.

(29) முடிந்த மட்டும் வயிற்றை மாசற்றதாகவும், இலேசானதாகவும் வைத்துக் கொள்ள வேண்டும்.(அதாவது அஜீர்ணம் முதலிய தோஷங்களினால் மனதின் மன ஒருமை பாழாகாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்).

(30) துப்பக் கூடாது.

(31) எவ்வகைக் காரணத்தாலும் விரல்களைப் பயன்படுத்தித் தேகத்தின் மற்ற உறுப்புகளை அசையும் படி செய்தல் கூடாது

(32) ஜபம் மூன்று வகை - உச்ச (உரக்க), உபாம்ஶு (முணுமுணுப்பு) மற்றும் மானஸ (உள்ளம்). உரக்கமாய்ச் சொல்லி ஜபிப்பதற்குப் பதில், இரண்டாம் மனிதனுக்கு கேட்காதபடி, (உபாம்ஶு) தன் உதடுகளை மட்டும் அசைத்து மந்திரத்தை மெல்லச் சொல்லி ஜபித்தல் நல்லது. உபாம்ஶு ஜபத்தை விட மானஸஜபம் சிறந்தது. அதைப் புரிய முனைய வேண்டும்.

(33) சரீரத்தை வளைக்காமல், கோணல் செய்யாமல், நேர்மையாக (Straight) உட்கார்ந்து ஜபிக்க வேண்டும்.

(34) முழங்கால்களுக்கு வெளியே கை வைத்துக் கொண்டு ஜபிக்கக் கூடாது.

(35) தொப்புளுக்குக் கீழ் எந்த உறுப்பையும் தொடக்கூடாது. அஜாக்கிரதையால் தொட்டுவிட்டால் கையை அலம்ப வேண்டும். பிறகு விஷ்ணுவின் சிந்தனை செய்து மறுபடியும் ஜபத்தைத் தொடர வேண்டும்.

(36) எந்தத் தின்பண்டங்களையும் அல்லது பதார்த்தத்தையும் வாயில் வைத்துக் கொள்ளக் கூடாது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(37) கைகள் காணாமலிருக்கும்படி மறைத்து, மற்றவர் பார்வையில் படாமல் ஜபம் செய்ய வேண்டும்.

(38) காலையில் கைகளை வயிற்றில் பிடித்தும் மத்தியான்னம் ஹ்ருதயத்தின் முன் கீழ் நோக்கி வைத்தும், சாயங்காலம் கைகளை முகத்திற்கு முன் வைத்தும் ஜபம் செய்ய வேண்டும்.

(39) தலைமேல் தொப்பி, தலைப்பாகை அல்லது வேறு துணியை போட்டுக் கொள்ளக்கூடாது.

(40) உடம்பில் சட்டை முதலிய துணிகளைப் போட்டுக் கொள்ளக்கூடாது.

(41) ஶிகா (குடுமி) தலைமுடிச்சு இல்லாமல் ஸந்தியாவந்தனம் செய்யக் கூடாது.

(42) தலைமுடியை முடிச்சு போட்டுக் கொண்டு ஜபத்தைத் துவக்க வேண்டும்.

(43) கால்களில் வலிமையில்லாத போது காயத்ரீயை உச்சரிக்கக் கூடாது

(44) கொசவம் (கச்சை) போட்டுக் கொள்ளாமல் ஜபிக்கக் கூடாது.

(45) மெத்தையின் மேல் உட்கார்ந்து கொண்டு காயத்ரீயை உச்சரிக்கக் கூடாது.

(46) சுத்தமில்லாததும் மற்றும் அழுக்கானதுமான உடையை உடுத்திக் கொண்டு என்றைக்கும் ஜபிக்கக் கூடாது.

(47) சுத்தமானதும் வெள்ளையானதுமான உடைகளை அணிந்து ஜபம் முதலிய நற்காரியங்களைச் செய்ய வேண்டும்.

(48) பூணூலைக் கையில் பிடித்து காயத்ரீ ஜபத்தை என்றும் செய்யக்கூடாது.

(49) கைவிரல்களின் கணுக்களைத் தொட்டுக் கொண்டு ஜபம் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(50) மிகவும் நாள் கடந்த மற்றும் கிழிந்து போன பூணூலைத் தரித்து ஜபம் செய்யக் கூடாது.

(51) மனதில் பயம், துயரம் இருப்பின் ஜபிக்கலாகாது.

(52) ஜபம் செய்வதில் அன்பு தேவை. தான் ஜபம் செய்வதை மற்றவர் பார்த்து ஏளனம் செய்வாரென வெட்கப்படக்கூடாது.

(53) ஜபம் செய்யும் பொழுது தன் உடலை யாரும் பார்க்கக் கூடாது எனும் எண்ணத்தால், குளிர், காற்று, வெயிலினால் மனது கலங்காமலிருக்க, உடம்பின் மேல் உத்தரீயம் (மேல் துணி) போர்த்திக்கொண்டு ஜபம் செய்ய வேண்டும். சரீரத்தின் மேல் மேல்துண்டு இருப்பதால் ஒரு அதிருஷ்டமான, புண்ணியமான லாபமும் இருக்கிறது என்பது சாஸ்திரத்தின் கட்டளையிலிருந்து தெரிய வருகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் - 9

'வ்யாஹ்ருதி' விசாரம்

வ்யாஹ்ருதி என்ற சொல்லிற்கு உச்சரித்தல் என்று பொதுவாகப் பொருள் சொல்லலாம். ஆனால் பிரத்யேகமான பொருளில், பூ$_4$: பு$_4$வ: ஸு॰வ: என்று மூன்று சொற்களின் கூட்டே வ்யாஹ்ருதி எனப்படும்.

'பூ$_4$ர்பு$_4$வ:ஸு॰வரிதி தி$_1$ஸ்ரோ வ்யாஹ்ருதய': (தைத்திரீய உப.)
வ்யாக்$_2$யாயதே அனேன ஓங்கார: இதி வ்யாஹ்ருதி: |
தா : வ்யாஹ்ருதய: ||

பொருள் : 'ஓம்' காரத்தின் பொருளை விவரிப்பது வ்யாஹ்ருதி என்ற காரணத்தால், வ்யாஹ்ருதி : எனப்படும். பூ$_4$:, பு$_4$வ:, ஸு॰வ: என்ற மூன்றும் வ்யாஹ்ருதி ஆகின்றன.

ருக்$_3$ப$_4$ாஷ்யம்: ஓம்காரம், வ்யாஹ்ருதி மற்றும் காயத்ரீ ஆகியவற்றின் விளக்கத்துடனேயே ருக்பாஷ்யம் தொடங்குகிறது.

பூ: என்றால் எல்லாவகையிலும் பூர்ணமான ஞானத்தின் உருவம்.
புவ: என்றால் பேராற்றல் கொண்டவன்.
ஸு॰வ: என்றால் முடிவில்லாப் பேரின்பம் கொண்டவன்

பகவான் எல்லாவகையிலும் பூர்ணமான ஞானம், ஆனந்தம் மற்றும் பேராற்றலின் உருவம் என்று ருக்பாஷ்யம் தெரிவிக்கிறது. ப்ரஹ்மனைப்பற்றி மிகவும் விளக்கமாக வேதங்கள், பஞ்சராத்ரம், மஹாபாரதம் மற்றும் புராண வசனங்கள் கூறியிருப்பினும் வ்யாஹருதியைப்போல் அவ்வளவு ஆழமாகவும் சுருக்கமாகவும் அவை இல்லை.

தைத்திரீய உபநிஷதம்

"பூ$_4$ர்பூ$_4$வ:ஸு॰வரிதி ஏதாஸ்தி$_1$ஸ்ரோ வ்யாஹ்ருதய:
த$_1$ாஸாமு ஹஸ்மைத$_1$ாம் சதுர்தீ$_2$ மஹாச$_1$மஸ்ய ப்ரவேத$_3$யதே$_1$ ||
மஹஇதி$_1$ | த$_1$த்$_3$ ப்$_3$ரஹ்ம | ஸ ஆத்மா | அங்க$_3$ான்யன்யா
தே$_3$வத$_1$ா ||"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருள் : பூ: புவ: ஸுவ: இவை மூன்றும் ஆன்மபலத்தின் ஒலிவடிவங்கள் - நான்காவதே நான்முக ப்ரஹ்மாவால் அறியப்படுவது. அது பெரியது. ஆகவே அது மஹ: என்று அழைக்கப்படுகிறது. அது ப்ரஹ்மம். அது ஆத்மா. இது விஷ்ணு. மற்ற வடிவங்கள் இதனுடைய அங்கங்கள்.

பகவான் விஷ்ணுவின் வெளித்தோற்றங்களான அநிருத்த, ப்ரத்யும்ன, ஸங்கர்ஷண வாஸுதேவ ரூபங்களே வ்யாஹ்ருதிகள். பூ$_4$: பு$_4$வ: ஸுவ: மஹ: ஆகியவை. வாஸுதேவ என்ற ரூபம், வாஸுதேவரூபம் (ப்ரஹ்மனின்) ஶரீரத்தின் மத்$_4$யப$_4$ாக$_3$ம். பூ$_4$: என்பது அதனின் தலையான அநிருத்த ரூபம். பு$_4$வ: என்பது அதன் கைகளான ப்ரத்யும்ன ரூபம். ஸுவ: என்பது அதன் கால்களான ஸங்கர்ஷண ரூபம். மஹ: என்பது அண்டங்கள் முழுவதையும் சார்ந்த ஆத்மா.

" அங்க$_3$ாகி$_3$த்$_1$வேன ப$_4$க$_3$வான் க்$_1$ரீட$_3$தே புருஷோத்தம: | "

ஒரே ஆத்மாவின் பல அங்கங்களாகக் கூறியிருப்பது ஒரு கற்பனையான வேறுபாடே. 'விசேஷம்' என்ற தத்துவத்தின் படி அங்கங்களில் உண்மையான வேறுபாடு இல்லை. இது பகவானின் ஆனந்தத்தின் வெளிப்பாடாகிய ஒரு லீலை. இந்த நான்கு ரூபங்களே 'வ்யூஹங்கள்' எனப்படுகின்றன. இவை பிரபஞ்சத்தின் தொழில்களை (சுழற்சி வடிவத்தில்) ஆற்றுகின்றன. அண்டங்களின் முழுமையிலும் (Macrocosm) மற்றும் அவைகளை தன்னிடத்திலே கொண்டிருக்கும் நுண்மையிலும் ப்ரபஞ்சத்தின் குறிப்பிட்ட லோகங்களில் இந்த நான்கு ரூபங்களும் எவ்வாறு செயல்படுகின்றன என்று விளக்கப்பட்டுள்ளது. இது எவ்வாறு ஒவ்வொரு மனிதனையும் சார்ந்தது என்பதைப் பார்ப்போம்.

<u>அண்டங்களின் (அல்லது பிரமாண்டத்தின்) முழுமை (Macrocosm)</u>

"பூ$_4$ரிதி$_1$ வா அயம் லோக$_1$: | பு$_4$வ: இத்யந்த$_1$ரிக்ஷம் |
ஸுவரித்யஸௌ லோக: | மஹ இத்யா$_3$தித்ய: |
ஆதி$_3$த்$_1$யேன வாவ ஸர்வே லோகா மஹீயந்தே||"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பொருள் :

இந்த வ்யாஹ்ருதிகள் (1) லோகங்களையும் (2) ஒளியையும் (3) வேதங்களையும் (4) ப்ராணர்களையும் குறிக்கின்றன.

1. லோகம்

பூ₄: நாம் வாழும் பூ₄லோகம். இது முழுவதிலும் அநிருத்த ரூபம் பரவியுள்ளது.

பு₄வ : இடையிலுள்ள ஆகாயம். இது முழுவதிலும் ப்ரத்யும்ன ரூபம் பரவியுள்ளது.

ஸுவ: ஸ்வர்க₃ லோகம் இது முழுவதிலும் ஸங்கர்ஷண ரூபம் பரவியுள்ளது

மஹ: சூரியன். இது முழுவதிலும் பரவியிருப்பது வாஸுதேவரூபம்.

வாஸுதேவ ரூபத்தின் வ்யாப்தியால் (பரவியிருக்கும் காரணத்தால்) எல்லா லோகங்களும் பூஜிக்கபடுகின்றன. அதாவது, பூ₄: பு₄வ: ஸுவ: மஹ: ஆகிய நான்கு லோகங்களும், நான்கு வ்யூஹ ரூபங்களும் ஜனங்களின் பெருமதிப்பைப் பெறுகின்றன.

2. ஒளி

பூ₄ : நெருப்பு. இது அநிருத்தருபத்தின் பிரதிநிதி.

பு₄வ: காற்று. இது ப்ரத்யும்ன ரூபத்தின் ப்ரதிநிதி -

ஸுவ: சூரியன். இது ஸங்கர்ஷண ரூபத்தின் பிரதிநிதி

மஹ: சந்திரன். இது வாஸுதேவ ரூபத்தின் ப்ரதினிதி

சந்திரன் மூலமே, மற்ற ஒளிகள் மேன்மையடைகின்றன

3. வேதங்கள்

பூ₄: ருக்வேதம். இது அநிருத்த ரூபத்தின் ப்ரதிநிதி.

பு₄வ: யஜுர்வேதம். இது ப்ரத்யும்ன ரூபத்தின் ப்ரதிநிதி.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸுவ: ஸாமவேதம். இது ஸங்கர்ஷண ரூபத்தின் ப்ரதிநிதி.

மஹ: ப்ரஹ்மம். இது வாஸதேவ ரூபத்தின் ப்ரதிநிதி.

ப்ரஹ்மமே எல்லா வேதங்களின் மேன்மைக்கும் காரணமாகும்.

4. ப்ராணர்கள்

பூ$_4$: 'ப்ராணன்' என்ற முக்கியமான காற்று (ப்ராணவாயு). இது அநிருத்த ரூபத்தின் ப்ரதிநிதி

பு$_4$வ: 'அபானன்' என்ற வெளியே செல்லும் காற்று. இது ப்ரத்யும்ன ரூபத்தின் ப்ரதிநிதி.

ஸுவ: சக்தியைத் தரும் 'வயானன்' என்ற காற்று. இது ஸங்கர்ஷண ரூபத்தின் ப்ரதிநிதி.

மஹ: அன்னம். இது வாஸுதேவ ரூபத்தின் ப்ரதிநிதி

அன்னத்தால் எல்லா வாயுக்களும் மேன்மைபடுத்தப் பட்டுள்ளன.

இவ்வாறு 16 வகையான ரூபங்களையும் அவைகளின் செயல்களையும் உணர்ந்து பூஜிப்பவன் / தியானம் செய்பவன், விஷ்ணுவை (= ப்ரஹ்மத்தை) அறிந்தவனாவான். அப்பேர்ப்பட்டவனுக்கு எல்லா தேவதைகளும் அனுக்ரஹம் செய்ய வருகின்றனர்.

5. தனி ஜீவனுக்குள் (*ஶ*ரீரத்துக்குள்) உள்ள (அல்லது ப்ரஹ்மாண்ட$_3$த்தின்) நுண்மை (Microcosm)

"ஸ ஏஷோந்த$_1$ ஹ்ருத$_3$ய ஆகா*ஶ*:| தஸ்மின்னயம் புருஷோ மனோமய: | அம்ருதே$_1$ா ஹிரண்மய: | அந்த$_1$ரேண தாலோகே| ய ஏஷஸ்தன | இவாவலம்ப$_3$தே$_1$ | ஸேந்த்$_3$ரயோனி: | யத்ராஸௌ கே$_1$*ஶ*ாந்தே$_1$ விவர்த$_1$தே$_1$ | வ்யபோத்$_3$ய*ஶீ*ர்ஷம் கபாலம் ||

பூ$_4$: ஹ்ருதய ஆகாசம். இதில் பரவியிருப்பவன் அநிருத்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ரூபமான 'புருஷ:' என்றழைக்கப்படும் பகவான். இவன் மேலானவன், நித்யன், ஆனந்தமயன்.

$பு_4$வ: உள்வாயின் (உவால என்றழைக்கப்படும்) இடைவெளியில் 'இந்த்ர யோனி' என்றறியப்படும் சிறு நாக்கு. இதில் ப்ரத்யும்ன ரூபம் இருக்கிறது.

ஸுவ: கேஶத்தின் வேர். இதிலிருக்கும் கருடன் ஸங்கர்ஷண ரூபத்தின் ப்ரதிநிதி.

மஹ: கபாலத்தின் இருபகுதிகளின் எலும்புகள் (Parietel Bones) சேரும் இடம். இதில் வாஸுதேவ ரூபம் இருக்கிறது.

6. நெருப்பு, காற்று மற்றும் சூரியனில் இருக்கும் ரூபங்கள்

"$பூ_4$ரித்யக்$_3$னௌ ப்ரதி$_1$தி$_1$ஷ்ட$_2$தி
$பு_4$வரிதிவாயௌ | ஸுவரிதி$_1$யாதி$_3$த்யே | "

$பூ_4$: பூ: என்ற அக்ஷரம் குறிக்கும் நெருப்பு. இதில் பேச்சின் வடிவில் (Speech) அநிருத்தரூபம் இருக்கிறது.

$பு_4$வ: புவ: என்ற அக்ஷரம் குறிக்கும் காற்று. இதில் கேட்கும் வடிவில் (Hearing) ப்ரத்யும்ன ரூபம் இருக்கிறது.

ஸுவ: ஸுவ: சூர்யன். சூர்யனிடத்தில் அறிவுத்திறனாக (Knowledge) ஸங்கர்ஷண ரூபம் இருக்கிறது.

மஹ: மஹ: என்ற எழுத்து குறிக்கும் ப்$_3$ரஹ்மம். ப்ரஹ்மத்தில் தலையாக வாஸுதேவ ரூபம் இருக்கிறது. வாஸுதேவன் அங்கு இருந்து கொண்டு ப்ரபஞ்சம் முழுவதும் வ்யாபித்திருக்கிறான்.

இவன் (எல்லொருடைய) பேச்சையும், கேட்பதையும், அறிதலையும் கட்டுப்படுத்துகிறான்.

வ்யாஹ்ருதிகளை இவ்வாறு உபாஸனை செய்யும் பக்தர்கள் கீழ்வரும் நன்மைகளை அடைவர்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூ$_4$: தெய்வீக ஊக்கம், புத்தி மற்றும் தேஜஸ் (ஒளி) ஆகியவற்றைக் கொடுக்கும்.

பு$_4$வ: நிறைந்த புகழ் மற்றும் உபயோகமுள்ள சொத்து ஆகியவைகளைக் கொடுக்கும்.

ஸுவ: மிகுந்த ஸுகத்தையும் மன அமைதியையும் கொடுக்கும்.

ச$_2$ாந்தே$_3$ாக்ய உபநிஷதம் :

வ்யாஹ்ருதியைப் பற்றிச் சாந்தோக்ய உபநிஷதம் என்ன கூறுகின்றது என்பதைக் காண்போம்.

" அரிஷ்ட கோஶம் ப்ரபத்$_3$யே "

சத்,சித், ஆனந்த ரூபமான பகவான் விஷ்ணுவை மஹாலக்ஷ்மி அடைய முடிந்தது. 'விஷ்ணுவின்' அனுக்ரஹத்தால் வ்யாஹ்ருதிகளின் அபிமானி தேவதைகளையும் அடையப்பெற்றாள். மற்றும் யாக, யஜ்ஞாதிகளில் மந்திர, தந்திர முதலானவைகளில் ஏற்படும் தோஷங்களினால் தடைபடும் தீய பலன்களை நிவர்த்தனை செய்ய, வ்யாஹருதிகளினால், ஆஹுதி கொடுக்க, யஜ்ஞத்தின் பலன் பூர்ணமாகக் கிடைக்கும் என்று இந்த உபநிஷதம் வ்யாஹ்ருதிகளின் மேன்மையைக் கூறுகிறது.

யோகே$_3$ாபநிஷதம் :-

"பூ$_4$ர்பு$_4$வஸ்வரிமேலோகா : ஸோமஸூர்யாக்$_3$னிதே$_3$வத$_1$ா: |
யஸ்ய மாத்ராஸு தி$_1$ஷ்ட$_2$ந்தி$_1$ த$_1$த்$_1$பரஞ்ஜ்யோதிரோமிதி ||

(யோகே$_3$ாபநிஷதம்)

வ்யாஹ்ருதிகளின் மூன்று சொற்களான பூ$_4$: பு$_4$வ: ஸுவ: ஆகியவற்றின் தேவதைகள் முறையே சந்திரன், சூரியன் மற்றும் அக்னி. மேலும் பிற அபிமானி தேவதைகளும் உள்ளனர். இந்த எல்லா தேவதைகளுள்ளும் 'ஓம்' என்று பிரசித்த பெற்ற பரஞ்ஜோதி இருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வ்யாஹ்ருதி மந்திரங்களின் ஜபத்தால் ஸாதகன் மோட்சத்தை எய்துவான்.

இதுவரையில் வ்யாஹ்ருதிகளைப் பற்றிச் சொன்ன விஷயங்களைச் சுருக்கமாக கூறி அதன் முக்யத்துவத்தை அறிந்து கொள்வோம்.

(1) பூ$_4$ர்பு$_4$வஸ்ஸுவ: என்பது விஷ்ணு ஸஹஸ்ரநாமத்தில் வரும் ஆயிரம் பெயர்களில் ஒன்று.

(2) 'ஓம்' காரத்தின் விரிவாக்கமே வ்யாஹ்ருதிகள்.

(3) வ்யாஹ்ருரிதி மந்திரம் அஷ்டாக்ஷர மந்திரங்களில் ஒன்று. ஓம் பூ$_4$: பு$_4$வ: ஸ்வ: ஓம் என்பதே அது.

(4) ப்ராணாயாமத்தில் ஏழு வ்யாஹ்ருதிகளையும் உச்சரிப்பது பழக்கத்தில் உள்ளது.

' ஸப்த$_1$வ்யாஹ்ருத$_1$ய: ப்ரோக்த$_1$ா ப்ராணாயாமேஷு நித்யஶ: |
பூ$_4$ர்பு$_4$வஸ்ஸுவர்மஹர்ஜனஸ்த$_1$பஸ்ஸத்$_1$யம் த$_1$ தை$_2$தவ ச$_1$ ||

(5) காயத்ரீ ஜபத்தின் பொழுது மூன்று வ்யாஹ்ருதிகள் மட்டும் உபயோகப்படுத்தப்படுகிறது.

'ப்ரணவவ்யாஹ்ருதீ$_1$யுக்தா காயத்ரீ து ஜபேத் த$_1$த$_1$:

— வ்யாஸ

(6) தேவதைகளை ஆவாஹனம் செய்யும் பொழுது வ்யாஹ்ருதிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

உதாரணம் பூ$_4$: க$_3$ணப$_1$திம் ஆவாஹயாமி முதலியன :

(7) யஜ்ஞ யாகங்களில் ஏற்படும் மந்திர தந்திர தோஷங்களை வ்யாஹ்ருதிகள் நிவர்த்தனை செய்கிற படியால், முடிவில் வ்யாஹ்ருதி மந்திரத்தை சொல்லி ஆஹுதி கொடுக்கப்படுகிறது.

(8) ஜபம், பூஜை செய்யும்முன் தத்வந்யாஸம், அங்கந்யாஸம், செய்யும் பொழுது வ்யாஹருதிகள் உபயோகப்படுத்தப்படுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உதா :– பூ$_4$: அக்$_3$ன்யாத்$_1$மனே அநிருத்$_3$தா$_4$ய நம :

(9) ஸந்த்யா, பூஜை போன்ற காலங்களில் திக்குகளிருந்து வரும் தீய சக்திகளை விரட்டுவதற்கு வ்யாஹ்ருதிகள் பயன்படுகின்றன.

ஓம் பூ$_4$ர்பு$_4$வஸ்ஸ்வரிதி தி$_3$க்$_3$ப$_3$ந்த$_4$: |

மேற்கூறிய உபநிஷதங்களின் கருத்துகளிலிருந்து, வ்யாஹ்ருதிகள், ஓம்காரத்தின் விரிவு, அஷ்டாக்ஷர மந்திரத்தில் ஒரு வகை, ப்ராணாயாம, காயத்ரீ மந்திரங்களில் இதன் உபயோகம், தீய சக்திகளை ஒடுக்குவது, தேவதைகளின் ஆவாஹனத்தில் இதன் உபயோகம், மற்றும் யஜ்ஞ உத்$_3$யாபனங்களில் ஏற்படும் தோஷங்களை நிவர்த்தனை செய்வது ஆகியவற்றில் உபயோகப்படுத்தப்படுகின்றன. இதிலிருந்து வ்யாஹ்ருதிகளின் முக்கியத்துவம் புலனாகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் -10

காயத்ரீயைப் பற்றி ஸ்ம்ருதிகளின் குறிப்புரை

அநாதி காலமாக, பரம்பரை பரம்பரையாக, குரு - சிஷ்ய, பாவமாக கேள்வி ஞானத்தினால் வந்த வேதங்கள் ஶ்ருதி எனப்படும். இதற்கு ஆசிரியர் என்று யாரும் கூறப்படவில்லை. அவைகள் அநாதி நித்யம். வேதவ்யாஸ பகவானால் எழுதப்பட்ட இதிஹாஸ புராணங்களும் வேறு புருஷர்களாலியற்றப்பட்ட நூல்களும் ஸ்ம்ருதி எனப்படும். இவைகள் வேதங்களை அனுசரித்து எழுதப்பட்டவை. இவைகளில் காயத்ரீ மந்திரத்தின் குறிப்பீடுகள் யாவை என்பதை பார்ப்போம்.

(1) ப்ரஹ்மஸூத்ரம் : (ஆசிரியர்- வேதவ்யாஸ பகவான்)

"ஓம் ச$_2$ந்தே$_3$ாபி$_4$ த$_4$ானான்நேதி$_1$ சேன்ன

"தத$_2$ா சேதே$_1$ார்பண நிகத$_3$ாத்ததா$_2$ ஹித$_3$ா்ஶனம் ஓம்"

(1-1-25)

"ஓம் பூ$_4$த$_1$ாதி$_3$பாத$_3$வ்யபதே$_3$ஶோபபத்தே$_1$ஶ்சைவம் ஓம்"

(1-1-26)

"ஓம் உபதே$_3$ஶ பே$_4$த$_3$ான் நேதி$_1$சேன்னோப$_4$யமப்யஸ்மின்ன

விரோதாத்$_1$ ஓம்"

(1-1-27)

ப்ரஹ்மஸூத்ரம் முதல் (ஸமன்வய) அத்யாத்தில் முதல் பாதத்தின் பதினொன்றாவது அதிகரணம் காயத்ரீ அதிகரணமாகும். இந்த மூன்று ஸூத்ரங்களின் மூலம் காயத்ரீ விவரிக்கப்படுகிறது.

ஸமஸ்க்ருத மொழியில் காயத்ரீ என்பது செய்யுட் பகுதியில் வரும் சந்தஸின் ஒரு பெயராகும். ஆகவே காயத்ரீ என்பது சந்தஸின் பெயரா அல்லது பகவான் விஷ்ணுவா என்ற கேள்வி எழுகிறது. ப்ரஹ்ம சூத்ரம் இதை நிர்ணயம் செய்கிறது. முக்கிய அர்த்தத்தில் காயத்ரீ பகவான் விஷ்ணுவைக் குறிக்கும் "காயந்தம் த்ராயதே இதி க$_3$ாயத்ரீ" - காயத்ரீ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஜபிப்பவனைக் காப்பாற்றுகிறது. "க₃ானத்ராணா கர்த்ருத்வாத் க₃ாயத்ரீநாமா விஷ்ணுரேவ" - காயத்ரீ ஜபிப்பவனைக் காப்பாற்றுவர் க₃ாயத்ரீ. ஆகவே, க₃ாயத்ரீ விஷ்ணுவே.

உடுபி ப₄ண்ட₃ாரகெரெ மடத்தின் ஸ்ரீவித்யாமான்ய தீர்த்த ஸ்வாமிகள் தமது காயத்ரீ காம்பீர்யம் என்ற நூலில் பல்வேறு ப்ரஹ்மசூத்ரங்களை மேற்கோள் காண்பித்து, காயத்ரீ மந்திரம் பகவான் விஷ்ணுவையே மிக உயர்ந்த பொருளாகக் கூறியிருக்கிறது என்று நிரூபித்துள்ளார்.

"க₃ாயத்ரீ ப₄ாஷ்யரூபா ஸா" - ப்₃ரஹ்மஸூத்ரம் காயத்ரீ பாஷ்யமாக இருக்கிறது.

(2) ஸ்ரீமத்₃ப₄ாக₃வதம்

ஸ்ரீமத்₃ ப₄ாக₃வதத்தின் முதல் ஶ்லோகம் பின்வருமாறு :

' ஜன்மாத்₃யஸ்ய யதோऽன்வயாதி₃ த₁ரத₁ஶ்சார்தே₂ஷ்
-வபி₄ஜ்ஞஸ்வராட்
தே₁னே ப்₃ரஹ்ம ஹ்ருத₃ா ய ஆதி₃கவயே முஹ்யந்தி யம் ஸூரய :|
தேஜோவாரிம்ருத₃ாம் யத₂ா வினிமயோ யத்ர த்ரிஸர்கே₃ா
ம்ருஷா |
தா₄ம்னா ஸ்வேன ஸத₃ா நிரஸ்த₁கு₁ஹக₁ம் ஸத்யம் பரம்
-தீமஹி

'தீமஹி தியோ யோ ந: ப்ரசோதயாத்', காயத்ரீமந்திரத்திலும் மற்ற வேத இலக்கியங்களிலும் ப்ரத்யேகமாக உபயோகிக்கப்படும் சொல்லான தீ₄மஹி என்ற சொல்லுடன் இந்த பாகவத ஶ்லோகம் முடிவடைந்துள்ளது. விஜத்வஜ தீர்த்தர், இதன் மீது பல விளக்கங்கள் அளித்துள்ளார். காயத்ரீயின் பாஷ்யமாக ஸ்ரீமத்பாகவதம் உள்ளது என்று பறை சாற்றப்படுகிறது. தீ₄மஹி என்ற சொல்லுடன் முதல் ஶ்லோகம் முடிந்துள்ளதே இதற்கு அறிகுறி எனலாம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

விஜயத்வஜ தீர்த்தரின் பாகவதவ்யாக்யானத்தில் அவர் கூறுவது:

"நநு தீ$_4$மஹீதி$_1$ ச$_2$ாந்தஸப்ரயோக$_3$: க$_1$ஸ்மாத் க்$_1$ருத$_1$: |
உச்யதே$_1$ க$_3$ாயத்ரீப்ரதி$_1$பாத்$_3$ய: நாராயணாக்$_2$யப்ரஹ்மைவ
ந ஸூர்ய: |
தச்சக்ஷோ: ஸூர்யோ அஜாயதே$_1$தி$_1$ ஶ்ருத்யா த$_1$த$_3$ங்க$_3$
ஜனனோக்திரிதி த$_3$ர்ஶயிது$_1$ம் ||

பொருள் : வேதத்திலிருக்கும் தீ$_4$மஹி என்ற சொல் பாகவதத்தின் முதல் ஶ்லோகத்தில் கூறியிருப்பதன் விளக்கம் இவ்வாறு உள்ளது.

காயத்ரீ மந்திரம் பகவான் நாராயணனையே விளக்குவதாக உள்ளது. சூர்ய பகவானை அல்ல. ஏனெனில் புருஷ ஸூக்தத்தில் சூர்ய பகவான் நாராயணனின் கண்களிலிருந்து பிறந்தவன் என்று வருகிறது. இப்பொழுது காயத்ரீயின் பொருள் எவ்வாறு பாகவதத்தின் முதல் ஶ்லோகத்துடன் பொருந்துகிறது என்று விளக்கப்படுகிறது.

(i) 'தத்ஸவிதுர்தே$_3$வஸ்ய - ஜன்மாத்$_3$யஸ்யயத':-ப்ரபஞ்சத்தின் ஸ்ருஷ்டிக்கு காரணமானவர் பகவான்.

(ii) 'வரேண்யம் - பரம்' - மிகவும் உயர்ந்த வஸ்து.

(iii) 'ப$_4$ர்க$_3$: - ஸ்வராட்' - த$_4$ாம்னா ஸ்வேன ஸதா$_3$ நிரஸ்த$_1$கு$_1$ஹக$_1$ம் |
- எவ்வித தோஷங்களும் இல்லாத முழுவல்லமையுள்ள பகவான்

(iv) 'தி$_4$யோ யோ ந: ப்ரசோத$_3$யாத்$_1$ - தேனே ப்$_3$ரஹ்ம ஹ்ருதாய ஆதிகவயே - முதன் முதலில் பகவான் சதுர்முக ப்ரஹ்மனுக்கு ஞானமளித்தார்.

(v) 'யோ - ஸவித$_1$ா' - ஸ்ருஷ்டி முதலியவைகளுக்குப் பொறுப்பானவர்

(vi) 'நோ - அஸ்மாக$_1$ம்' - (எங்களுக்கு) சரியான ஞானத்தையும் செயலையும் பிரேரணை செய்கிறார்.

(i) 'தீ$_4$மஹி - தீ$_4$மஹி' நாங்கள் த்யானிக்கிறோம்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாகவத தாத்பர்ய நிர்ணயத்தில் ஸ்ரீமத்வாசார்யார் கூறியுள்ளபடி காயத்ரீயின் விரிவுரையே ஸ்ரீமத்பாகவதம் என்று தெரிய வருகிறது.

3. ஸ்ரீகாயத்ரீராமாயணம்

சதுர்முக ப்ரஹ்மாவால் உபதேசிக்கப்பட்ட நாரத ரிஷி, ஸ்ரீமத் ராமாயணத்தை வால்மீகி முனிவருக்குச் சுருக்கமாகக் கூறி இராமாயணத்தை விரிவாக எழுதும்படி பணித்தார். 24000 க்ரந்தங்களைக் கொண்டு வால்மீகியும் இராமாயணத்தை ரசனை செய்தார். இந்த அபார சக்தி காயத்ரீயினால் தான் பெற்றதாக நினைத்தார். ஆகவே, ஒவ்வொரு ஆயிரம் க்ரந்தக்களுக்கு முன்னும், காயத்ரீயின் ஒரு எழுத்து வீதம் தொடங்கி காயத்ரீயின் 24 எழுத்துக்களை (24 x 1000) தனது இராமாயண க்ரந்தத்தில் உபயோகித்துள்ளார். காயத்ரீ எழுத்தில் தொடங்கும் சுலோகங்கள் மொத்தம் இருபத்து நான்கே, காயத்ரீ ராமாயணம் என்று பெயர் பெற்று மிகவும் பிரசித்தமாக உள்ளது.

' க$_{3}$ாயத்ர்யாத்ரீணி ச$_{1}$த்வாரி த்$_{2}$வே த்$_{2}$வே த்ரீண்யத$_{2}$ஷட்க்ரமாத்$_{1}$|
ச$_{1}$த்வாரி ஸப்த$_{1}$க$_{1}$ாண்டே$_{4}$ஷு ஸ்தாபி$_{2}$த$_{1}$ான்யக்ஷராணி து ||

(கோவிந்தராஜீய-வ்யாக்$_{2}$யானம்)

இராமாயணத்தில் காயத்ரீ எழுத்துக்கள் முறையே முதல் காண்டம் -3; இரண்டாவது காண்டம் மூன்றாவது காண்டம் -2; நான்காவது காண்டம் -2; ஐந்தாவது காண்டம் - 3; ஆறாவது காண்டம் - 6; ஏழாவது காண்டம் -4; ஆக மொத்தம் 24 எழுத்துக்கள் பரவியுள்ளன. இந்த 24 சுலோகங்களே ஒரு சிறிய இராமாயணமாக உள்ளது.

ஹரி : ஓம்

1) த பஸ்வாத்$_{4}$யாயநிரதம் தபஸ்வீ வாக்$_{3}$வித$_{3}$ாம் வரம் |
நாரத$_{3}$ம் பரிபப்ருச்ச வால்மீகிர் முனிபுங்க$_{3}$வ: ||

2) ஸ ஹத்வா ராக்ஷஸான் ஸர்வான் யஜ்ஞுக்$_{4}$னான் ரகு$_{4}$நந்தன: |
ருஷிபி$_{4}$: பூஜித: ஸம்யக்$_{3}$யதே$_{2}$ந்த்$_{3}$ரோ விஜயீ புரா ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

3) விஶ்வாமித்ர:ஸ த$_4$ர்மாத்மா ஶ்ருத்வா ஜனகபா$_4$ஷிதம் |
வத்ஸ ராம த$_4$னு: பஶ்ய இதி ராக$_4$வமப்$_3$ரவீத் ||

4) துஷ்டாவாஸ்ய ததா$_3$ வம்ஶம் ப்ரவிஶ்ய ஸ விஶாம்பதே |
ஶயனீயம் நரேந்த்$_3$ரஸ்ய ததா$_3$ஸாத்$_3$ய வ்யதிஷ்டத ||

5) வனவாஸம் ஹி ஸங்கா$_2$ய வாஸாம்ஸாப$_4$ரணானி ச |
ப$_4$ர்தாரமனுக$_3$ச்$_2$சந்த்யை ஸீதாயை ஶ்வஶுரோ த$_3$தௌ$_3$ ||

6) ராஜா ஸத்யம் ச த$_4$ர்மஷ்ச ராஜாகுல வதாம் குலம் |
ராஜா மாதா பிதா சைவ ராஜா ஹிதகரோ ந்ருணாம் ||

7) நிரீக்ஷ்ய ஸ முஹூர்த்தம் து த$_3$த$_3$ர்ஶ ப$_4$ரதோ கு$_3$ரும் |
உடஜே ராமமாஸீனம் ஜடாவல்கலதா$_4$ரிணம் ||

8) யதி$_3$பு$_3$த்$_3$திக்ருதா த்$_3$ரஷ்டுமக$_3$ஸ்த்யம் தம் மஹாமுனிம் |
அத்$_3$யைவ க$_3$மனே பு$_3$த்$_3$தி$_4$ம் ரோசயஸ்வ மஹாயஶ: ||

9) ப$_4$ரதஸ்யார்யபுத்ரஸ்ய ஶ்வஶ்ருணாம் மம ச ப்ரபோ |
ம்ருக$_3$ரூபமித$_3$ம் வ்யக்தம் விஸ்ம யா ஜனயிஷ்யதி ||

10) க$_3$ச்ச$_2$ ஶீக்$_4$ரமதோ ராம ஸுக்$_3$ரீவம் த$_1$ம் மஹாப$_3$லம் |
வயஸ்யந்தம் கு$_1$ரு க்ஷிப்ரமிதோ கத்$_3$வாத்$_3$ய ராக$_4$வ ||

11) தேஶகாலௌ ப்ரதீக்ஷஸ்வ க்ஷமமாண: ப்ரியாப்ரியே |
ஸுக$_2$து$_3$க்க$_2$ ஸஹகாலே ஸுக்$_3$ரீவவஶகோ$_3$ ப$_4$வ||

12) வந்த்$_3$யாஸ்தே து தப:ஸித்$_3$தா$_4$ஸ் தபஸா வீதகல்மஷா: |
ப்ரஷ்டவ்யஶ்சாபி ஸீதாயா: ப்ரவ்ருத்தி$_1$ம் வினயான்விதௌ ||

13) ஸ நிர்ஜித்ய புரீம் ஶ்ரேஷ்டா$_2$ம் லங்கா$_1$ம் தா$_1$ம் காமரூபிணீம் |
விக்ரமேண மஹாதேஜா ஹநூமான் மாருதாத்மஜ: ||

14) த$_4$ன்ய தே$_3$வாஸ்ஸ க$_3$ந்த$_4$ர்வா ஸித்$_3$தா$_4$ஶ்சா பரமர்ஷய:|
மம பஶ்யந்தி யே நாத$_2$ம் ராமம் ராஜீவலோசனம் ||

15) மங்களாபி$_4$முகீ$_2$ தஸ்ய ஸா ததாஸீத் மஹாக$_1$வே |
உபதஸ்தே$_2$ விஶாலாக்ஷீ ப்ரயதா ஹவ்யவாஹனம் ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

16) ஹித$_1$ம் மஹார்ஹம் ம்ருது$_3$ பூர்வஸம்ஹிதம்
வ்யதீத காலாயதி ஸம்லுதீக்ஷணம் |
நிஷம்ய தத்$_3$வாக்ய முபஸ்தி$_2$தஜ்வர:
ப்ரஸங்க$_3$வானுத்தரமேதத$_3$ப்$_3$ரவீத் ||

17) த$_4$ர்மாத்மா ராக்ஷஸாம் ஸ்ரேஷ்ட$_2$: ஸம்ப்ராப்தோயம் விபீ$_4$ஷண: |
லங்கைஶ்வர்யம் த்$_4$ருவம் தீ$_4$மானயம் ப்ராப்னோத்ய
க$_1$ண்டக$_1$ம் ||

18) யோவஜ்ரபாதாஶனி ஸன்னிபாதான் னசுக்ஷுபே$_4$ நாபி சசால
ராஜா ஸ ராம ப$_4$ாணாபி$_4$ஹதோ ப்$_4$ருஷார்தஶ் |
ச சால சாபம் ச முமோத$_3$ தீ$_4$ர:||

19) யஸ்ய விக்ரமமாஸாத்$_3$ய ராக்ஷஸா நித$_4$னம் க$_3$தா$_1$:|
தம் மன்யே ராக$_4$வம் வீரம் நாராயாணமனாமயம் ||

20) ந தே$_1$ த$_3$த்$_3$ருஶிரே ராமம் த$_3$ஹந்தமரிவாஹினீம் |
மோஹித$_1$ா பரமாஸ்த்ரேண க$_3$ாந்த$_4$ர்வேன மஹாத்மனா ||

21) ப்ரணம்ய தே$_3$வதாப்$_4$யஶ்ச ப்$_3$ராஹ்மணேப்$_4$யஶ்ச மைதி$_2$லீ |
ப$_3$த்$_3$த$_4$ாஞ்ஜலிபுடா சேத$_3$முவாசாக்$_3$னிஸமீபத: ||

22) சலனாத் பர்வதேந்த்$_3$ரஸ்ய$_3$ கணதே$_3$வாஶ்ச கம்பிதா: |
ச$_1$ச$_1$ால பார்வதீசாபி தத$_3$ாஶ்லிஷ்ட மஹேஷ்வரம் ||

23) த$_3$ாரா: புத்ரா: புரம் ராஷ்ட்ரம் போ$_4$காச்சாத$_3$னபா$_4$ஜனம் |
ஸர்வமேவாவிப$_4$க்தம் நோ ப$_4$விஷ்யதி ஹரீஶ்வர ||

24) யாமேவ ராத்ரிம் ஶத்ருக்$_4$ன: பர்ணஶாலாம் ஸமாவிஷத் |
த$_1$ாமேவ ராத்ரிம் ஸீதாபி ப்ரஸூத$_1$ா தா$_3$ரகத்$_3$வயம் ||

25) இத$_3$ம் ராமாயணம் க்ருத்ஸ்னம் கா$_3$யத்ரீபீ$_4$ஜஸம்யுதம் |
த்ரிஸந்த்$_4$யம் ய : படே$_2$ன்நித்யம் ஸர்வபாபை : ப்ரமுச்யதே ||

இதுவே இராமாயணத்தின் மணிச்சுருக்கம். காயத்ரீயின் பீஜ 24 எழுத்துக்களைக் கொண்டது. இதை முக்காலங்களில் தினமும் படிக்க எல்லா பாவங்களும் தொலையும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(4) மஹாபாரதத்தில் காயத்ரீயின் குறிப்பீடு

பகவான் ஸ்ரீ க்ருஷ்ணன் அர்ஜுனனுக்குப் பகவத்கீதையை பீஷ்ம பர்வத்தில் கற்பிக்கிறான். அஶ்வமேத பர்வத்தில் வைஷ்ணவ தர்மத்தைப் பற்றி உபதேசிக்கும் பொழுது யுதிஷ்டிரரிடம் (தர்மராஜனிடம்) காயத்ரீயைப் பற்றி விளக்கமாகப் பின்வருமாறு கூறியுள்ளான்.

1. ஸாயம் ப்ராதஸ்து யேஸந்த்$_4$யாம் ஸம்யங்நித்யமுபாஸதே |
நாவம் வேத$_3$மயீம் க்ருத்வா தரந்தே$_1$ தாரயந்தி$_1$ ச ||

யாரெல்லாம் பிரதி தினம் முக்காலங்களில் ஸந்தியோபாசனை செய்தின்றர்களோ அவர்கள், சம்ஸார (பிறப்பு-இறப்பு சூழல்) மெனும் கடலைக் கடப்பது மட்டுமின்றி, பிறருக்கும் இந்த சாதனையில் உதவியாக இருக்கிறார்கள்.

2. யோ ஜபே$_1$த் பாவனீம் தே$_3$வீம் கா$_3$யத்ரீம் வேத மாத$_1$ரம் |
ந ஸீதே$_3$த் பரிக்ருஹ்ணான : ப்ருத்$_2$வீம் ச ஸ ஸாக$_3$ரம்) ||

மித மீறிய மதிப்புள்ள வெகுமதிகளைப் பெறுவது பாவச் செயலாகும். காயத்ரீ ஜபம் செய்பவனுக்கு இம்மாதிரி பாவங்களினின்று நிவர்த்தி கிடைக்கிறது. காயத்ரீ ஸந்த்யோபாசனை செய்பவன் மிக உன்னத புனிதத்தன்மை அடைவதால், மித மீறிய வெகுமதிகளைப் பெறுவதில் உள்ள பாவத்தினின்று காப்பாற்றப்படுகிறான். அத்தகைய வெகுமதியை அளித்தவர்க்கும் புண்யம் கிடைக்கச் செய்கிறான்.

3. யே சாஸ்ய து$_3$ஸ்தி$_2$தா கேசித் க்$_3$ரஹா: ஸூர்யாத$_3$யோ தி$_3$வி |
தே$_1$ சாஸ்ய ஸௌம்யா ஜாயந்தே ஶிவா: ஶுப$_4$கராஸ்ததா$_2$ ||

க்ரஹங்களின் (கோள்களின்) நீசஸ்தானத்தினாலோ அல்லது அவைகளில் பிரதிகூலமான பார்வையினாலோ அல்லது அவைகளின் தகாத அமைப்பினாலோ உண்டாகும் துரதிர்ஷ்டங்கள் காயத்ரீ ஜபம் செய்வதால் சாதகமான பலனைத் தரவல்லவையாக மாறிவிடுகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காயத்ரீ உபாஸனை செய்பவனுக்குத் தீய ஆவிகள் கெடுதல் விளைவிப்பதில்லை.

4. ஸந்த்$_4$யாமுபாஸதே யே வை நித்யமேவ த்$_3$விஜோத் தமா: |
தே$_1$ யாந்தி நரஶார்தூ$_3$ல ப்$_3$ரஹ்மலோகம் ந ஸம்ஶய: ||

ஓ ! யுதிஷ்ரனே ! ஸந்த்யோபாஸனையை அனுதினம் தவறாது செய்பவன், ப்ரஹ்மலோகத்தை அடைகிறான். இதில் சந்தேகமில்லை.

5. க$_3$ாயத்ரீமாத்ரஸாரோபி$_1$ வரோ விப்ர ; ஸுயந்த்ரித ; |
நாயந்த்ரிதஶ் சதுர்வேதீ$_3$ ஸர்வாஶீ ஸர்வவிக்ரயீ ||

காயத்ரீ ஸந்த்யோபாசனையை வேதங்களில் விதித்தபடி கடைபிடிப்பவன், நான்கு வேதங்களைக் கற்று காயத்ரீ ஸந்தியோ பாசனையை கடைப்பிடிக்காமல் இருப்பவனைக் காட்டிலும் மிக மிக உயர்ந்தவன்.

முன்னோரு சமயம் தேவர்கள் காயத்ரீயையும் நான்கு வேதங்களையும், சதுர்முக ப்ரஹ்மனின் முன்னிலையில் சீர் தூக்கிப் பார்த்தனர். நான்கு வேதங்களைக் காட்டிலும் காயத்ரீ அதிக பளுவாக இருந்தது தெரிய வந்தது.

6. யதா$_2$ விகஸிதே புஷ்பே மது$_4$ க்$_3$ருஹ்ணந்தி ஷட்பத$_3$ா ; |
ஏவம் க்$_3$ருஹீத ஸாவித்ரீ ஸர்வவேதே$_3$ ச பாண்டவ ||

மலர்ந்த பூக்களிலிருந்து தேனைத் தேனீக்கள் சேகரிப்பது போல, ஓ ! பாண்டவர்களே ! எல்லா வேதங்களினின்றும் சேகரிக்கப்பட்டதே ஸாவித்ரீ. ஆகவே, காயத்ரீ 'வேதமது' என்று அழைக்கப்படுகிறது.

7. தஸ்மாத்து ஸர்வ வேத$_3$ானாம் ஸாவித்ரீம் ப்ராண உச்யதே|
நிர்ஜீவா ஹீதரே வேத$_3$ா வினா ஸாவித்ரியா ந்ருப ||

ஆகவே நான்கு வேதங்களின் உயிராக (சாராம்ஶமாக) காயத்ரீ உரைக்கபடுகிறது. ஸாவித்ரீயில்லாமல் வேதங்கள் உயிரற்றவைகளாகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

8. ஸஹஸ்ரபரமாம் தே₃வீம் ஶதமத்₄யாம் த₃ஶாவராம் |
ஸாவித்ரீம் ஜப கௌந்தேய ஸர்வபாபப்ரணாஶினீம் ||

ஓராயிரம் காயத்ரீ ஜபம் மிகவும் உத்தமம். ஒரு நூறு உத்தமம். பத்து நன்று. காயத்ரீயை மீண்டும் மீண்டும் ஜபிப்பதால் ஓ ! கௌந்தேய ! (அர்ஜுனனே) எல்லாப் பாவங்களும் அழிகின்றன.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் - 11

காயத்ரீ-வர்ணமாலா-ஸ்தோத்ரம்

1. ஓங்காரஶ்ச த்ரயோரூபம் ஶ்வேதபீதம் ச லோஹிதம் |
சக்ஷுஶ்ஶ்ரோத்ருக்ருதம் பாபம் ஓங்காரோ த₃ஹதே க்ஷணாத் ||

மூன்று ரூபம் மற்றும் மூன்று நிறங்களுடன் (வெள்ளை, மஞ்சள் மற்றும் சிவப்பு) கூடியது ஓங்காரம். ஓங்காரத்தை உச்சரித்த உடனேயே, கண், காது மூலம் ஏற்பட்ட பாவங்கள் அழிகின்றன.

2. த₁காரம் பத்₃மரூபம் ச ப்₃ரஹ்மவிஷ்ணுஶிவார்சி₁தம் |
ப்₃ரஹ்மஹத்யா க்ருதம் பாபம் த₁காரோ த₃ஹதே க்ஷணாத் ||

(24 எழுத்துக்களுடன் கூடிய) காயத்ரீயின் 'த' என்ற எழுத்து தாமரை மலரின் ரூபம் மற்றும் வண்ணத்துடன் கூடியது. ப்ரஹ்மா, விஷ்ணு, மஹேஶ்வரர்களினால் பூஜிக்கப்படுவது. பிராம்மணனைக் கொல்வதினால் உண்டாகும் பாவம் அழிக்கப்படுகிறது.

3. த்ஸ கார: ஶ்வேதரூபம் ச கேஶவேன ஸத₃ார்சி₁தம் |
கோ₃ஹத்யாதி₃ க்ருதம் பாபம் த்ஸகாரோ த₃ஹதி க்ஷணாத் ||

இரண்டாவது எழுத்தான 'த்ஸ' வெண்மை நிறத்துடன் கூடியது. பகவான் கேஶவனால் பூஜிக்கப்படுவது. பசுவைக் கொல்வதினால் ஏற்படும் பாவம். 'த்ஸ' என்ற எழுத்தின் உச்சரிப்பால் அழிக்கப்படுகிறது.

4. வி காரம் லோஹிதம் வர்ணம் ஶங்கரேண ஸத₃ார்சிதம் |
ஸ்த்ரீக₃மனக்ருதம் பாபம் விகாரோ த₃ஹதே க்ஷணாத் ||

மூன்றாவது எழுத்தான 'வி' சிவப்பு நிறம். சங்கர பகவனால் பூஜிக்கப்படுவது. வேஸிகளின் தொடர்பால் ஏற்படும் பாவம் இந்த 'வி'யின் உச்சரிப்பால் அழிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

5. து$_1$ காரம் கஜ்ணவலம் வர்ணம் தே$_3$வேந்த்$_3$ரேண த$_3$ாஸர்சிதம் |
ஸ்வர்ணஸ்தேயாதி$_3$கம் பாபம் து$_1$காரோ த$_3$ஹதே க்ஷணாத்

நான்காவது எழுத்தான 'து' கருப்பு நிறம் (Dark Colour) கொண்டது. தேவேந்திரனால் பூஜிக்கப்படுவது. தங்கத்தைத்திருடுவது முதலான ஏற்படும் பாவம், 'து' என்ற எழுத்தின் உச்சரிப்பால் அழிகிறது.

6. வ காரம் ரக்தவர்ணம் ச கணேஶேன ஸத$_3$ார்சிதம்
பரத$_3$ாரக்ருதம் பாபம் வகாரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

ஐந்தாது எழுத்தான 'வ' சிவப்பு நிறத்துடன் கூடியது; கணேஶனால் எப்பொழுதும் பூஜிக்கப்படுவது. மாற்றான் மனைவியின் தொடர்பால் ஏற்படும் பாவம் இந்த 'வ' எழுத்தினால் அழிகிறது.

7. ரே காரம் ருக்மவர்ணம் ச ஆதி$_3$த்யேன ஸத$_3$ார்ச்சிதம்
கு$_3$ர்வங்க$_3$னாக்ருதம் பாபம் ரேகாரோ தஹதே க்ஷணாத் ||

'ரே' எழுத்தும் சிவப்பு வர்ணம். சூரிய பகவனால் பூஜிக்கப்படுவது. குருவின் மனைவியின் தொடர்பால் ஏற்படும் பாவம் இந்த 'ரே' என்ற எழுத்தினால் அழிகிறது.

8. ண்ய காரம் க்ஷீரவர்ணம் ச பார்வத்யா ச ஸத$_3$ார்சிதம் |
அப$_4$க்ஷ்யப$_4$க்ஷணம் பாபம் 'ண்ய'காரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

பால் நிறத்துடன் கூடிய 'ண்ய' என்ற எழுத்து பார்வதீதேவியால் பூஜிக்கப்படுவது. நிஷித்த உணவை உண்பதால் உண்டாகும் பாவம் 'ண்ய' என்ற எழுத்தின் உச்சரிப்பால் அழிகிறது.

9. ப$_4$ காரம் ருக்மவர்ணம் ச த$_4$ரணீத$_4$ரஸத$_3$ார்சிதம் |
ஶூத்$_3$ரான்னம் க்ருதம் பாபம் ப$_4$காரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

ப$_4$ என்ற எழுத்து இரத்தச் சிவப்பு நிறம். தரணீதர பகவனால் பூஜிக்கப்படுவது. நான்காம் வர்ணத்தினரால் சமைக்கப்பட்ட (ஶூத்ர) உணவை உட்கொள்வதனால் ஏற்படும் பாவம் இந்த ப$_4$ எழுத்தால் அழிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

10. ர்கோ$_3$ காரம் கேதகீவர்ணம் ப்ரஜாபதிஸமார்சி$_1$தம் |
ஞானாஜ்ஞானக்ருதம் பாபம் ர்கோ$_3$காரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

(கேதகீ) மஞ்சள் நிறத்துடன் கூடியது 'ர்கே$_3$ா' என்ற எழுத்து. இது பிரஜாபதிதேவனால் பூஜிக்கப்படுவது. அறிந்தோ அறியாமலோ செய்யும்பாவம் இந்த 'ர்கே$_3$ா' என்ற எழுத்தினால் அழிகிறது.

11. தே$_3$ காரம் கஞ்ஜநாப$_4$ம் ச ப்$_3$ருஹஸ்பதிஸத$_3$ார்சி$_1$தம் |
கு$_3$ருநிந்தா$_3$க்ருதம் பாபம் தே$_3$காரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

தங்க நிற சாயல் கொண்ட 'தே$_3$' என்ற எழுத்து ப்$_3$ருஹஸ்பதி தேவனால் பூஜிக்கப்படுவது. குருநிந்தனை மற்றும் குருவிற்கு துரோகம் இவைகளினால் ஏற்படும் பாவம் 'தே$_3$' என்ற எழுத்தின் உச்சரிப்பினால் அழிகிறது.

12. வ காரம் மாலதீவர்ணம் *ஶஶி*னா ச ஸத$_3$ார்சிதம் |
அதி உக்$_3$ர க்ருதம் பாபம் வகாரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

'வ' என்ற எழுத்து மாலதீபச்சை நிறம் கொண்டது. சந்திரனால் பூஜிக்கப்படுவது. மிகவும் மோசமான குற்றங்களினால் ஏற்படும் பாவம் 'வ' கார எழுத்தின் ஜபத்தினால் அழிகிறது.

13. ஸ்ய காரம் தாம்ரவர்ணம் ச த$_4$ரண்யா ச ஸத$_3$ார்சிதம் |
பஶுஹத்யாக்ருதம் பாபம் ஸ்யகாரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

'ஸ்ய' எழுத்தின் நிறம் தாமிரம். தரணீதேவியால் (பூ$_4$ தேவி) எப்பொழுதும் பூஜிக்கப்படுவது. உயிரினங்களைக் கொல்வதினால் ஏற்படும் பாவம் 'ஸ்ய' எழுத்தினால் அழிகிறது.

14. தீ$_4$காரம் தாம்ரவர்ணம் ச அர்சிதம் த$_4$ர்மதே$_3$வதம் |
*ஶீ*னோச்சிஷ்டக்ருதம் பாபம் தீ$_4$காரோ த$_3$ஹதேக்ஷணாத் ||

'தீ$_4$' என்ற எழுத்து தாமிர நிறம். தரணீ தேவதையால் பூஜிக்கப்படுவது. நாய் உண்டு மீதமிருந்த உணவை உண்பதால் சேகரித்த பாவம் 'தீ$_4$' என்ற எழுத்தை உச்சரிப்பதால் அழிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. மகாரம் மௌக்திகாவர்ணம் மஹாதே₃வஸத₃ார்சிதம் |
ஸர்வபாபவினிர்முக்தம் மகாரோ த₃ஹதே க்ஷணாத் ||

முத்தின் நிறத்துடன் கூடியது 'ம' என்ற எழுத்து. மஹாதேவனால் (சிவன்) பூஜிக்கப்படுவது. எல்லா வித பாவங்களும் 'ம' என்ற எழுத்தை உச்சரிப்பதனால் அழிகின்றன.

16. ஹி காரோ ஸ்வர்ணவர்ணம் ச ஸத₃ா ருத்₃ரேணசார்சி₁தம் |
மித்₂யாவாத₃க்ருதம் பாபம் ஹிகாரோ த₃ஹதே க்ஷணாத் ||

'ஹி' என்ற எழுத்து தங்க நிறமுடையது; ருத்ரதேவனால் பூஜிக்கப்படுவது. பொய்யான வாதத்தினால் ஏற்படும் பாவம் இந்த 'ஹி' எழுத்தினால் அழிகிறது.

17. தி₄காரோ ஸ்ப₂டிகாப₄ம் ச ஆத்மனா ச ஸத₃ார்சிதம் |
காயஜன்யக்ருதம் பாபம் தி₄காரோ த₃ஹதே க்ஷணாத் ||

'தி₄' என்ற எழுத்து ஸ்படிக / வெண்மை நிறம் கொண்டது. பரமாத்மாவால் பூஜிக்கப்படுவது. தேகத்தின் மூலம் ஏற்படும் பாவங்கள் 'தி₄' எழுத்தின் ஜபத்தால் அழிகிறது.

18. யோ காரோ கௌ₃ரவர்ணம் ச முனீனாம் து ஸத₃ார்சிதம் |
ப்ரஜாஹரணஜம் பாபம் யோகாரோ த₃ஹதே க்ஷணாத் ||

'யோ' என்ற எழுத்து நீலக்கல் (Sapphire) நிறம். பிரஜைகளைத் தன்னலத்திற்காக உபயோகப்படுத்திக் கொள்வதின் மூலம் ஏற்படும் பாவம் 'யோ' என்ற எழுத்தின் ஜபத்தினால் அழிகிறது.

19. யோ காரோ தைலவர்ணஞ் ச பித்ருபி₄ஶ்ச ஸத₃ார்சித₁ம் |
கர்மா கர்மக்ருதம் பாபம் யோகாரோ த₃ஹதே க்ஷணாத் ||

'யோ' என்ற எழுத்து எண்ணெய் நிறம். பித்ரு தேவதைகளினால் பூஜிக்கப்படுவது. அறியாமையினால் செய்யும் விதி - நிஷேதங்களி (Dos and Don'ts) னால் வரும் பாபம் 'யோ' என்ற எழுத்தின் ஜபத்தினால் அழிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

20. நகாரம் தூ$_4$ம்ரவர்ணம் ச வாயுனா ச ஸத$_3$ார்சி$_1$தம் |
மனஸா து க்ருதம் பாபம் நகாரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

'ந' என்ற எழுத்து புகை நிறம் கொண்டது. வாயு பகவானால் பூஜிக்கப்படுவது. மனதில் தோன்றும் தீய எண்ணங்களினால் ஏற்படும் பாவம் 'ந' என்ற எழுத்தின் ஜபத்தால் அழிகிறது.

21. ப்ர காரம் ரக்தவர்ணம் ச ஈஶான்யேன ஸத$_3$ார்சி$_1$தம் |
ஜலபானக்ருதம் பாபம் ப்ரகாரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

'ப்ர' என்ற எழுத்து சிவப்பு நிறம் கொண்டது. ஈஶான்ய தேவதையால் பூஜிக்கப்படுவது. தகாத இடங்களில் நீரை அருந்துவதனால் ஏற்படும் பாவம் 'ந' என்ற எழுத்தின் ஜபத்தால் அழிகிறது.

22. சோ காரம் ஸ்வர்ணவர்ணம் ச ஈஶான்யேன ஸதார்சிதம் |
மத்$_3$யபானக்ருதம்பாபம் சோகாரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

'சோ' என்ற எழுத்து தங்க நிறமுடையது. ஈஶான்ய தேவதையால் பூஜிக்கப்படுவது. மது அருந்துவதனால் ஏற்படும் பாவம் 'சோ' என்ற எழுத்தின் ஜபத்தினால் அழிகிறது.

23. த காரம் ஸிந்து$_4$வர்ணம் ச ஶேஷேண ச ஸத$_3$ார்சி$_1$தம் |
அயுக்தம் ச க்ருதம்பாபம் த$_3$காரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

கடலின் நிறத்தை உடைய 'த$_3$' என்ற எழுத்து சேஷதேவனால் பூஜிக்கப்படுவது. விரோதமான செயல்களினால் உண்டாகும் பாவம் 'த$_3$' என்ற எழுத்தின் ஜபத்தால் அழிகிறது.

24. யா காரம் ஶ்வேதவர்ணம் ச வாயுனா ச ப்ரபூ$_1$ஜிதம் |
ப்$_4$ ரஹ்மஸ்வஹரணம் பாபம் யாகாரோ த$_3$ஹதே க்ஷணாத் ||

'யா' என்ற எழுத்து வெண்மை நிறமுடையது. வாயு பகவானால் பூஜிக்கப்படுவது. பிராம்மணனின் உடைமையை (சொத்து) திருடுவதினால் வரும் பாவம் 'யா' என்ற எழுத்தின் ஜபத்தால் அழிகிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

25. த₁ காரம் நீலவர்ணம் ச ஈஶ்வரேண ஸத₃ார்சி₁தம் |
ஶிவஸ்வஹரணம் பாபம் தகாரோ த₃ஹதே க்ஷணாத் ||

'த' என்ற எழுத்து நீல நிறமுடையது. ஈஶ்வரனால் பூஜிக்கப்படுவது. கோயில், பகவானின் உடைமைகளைத் திருடுவதினால் ஏற்படும் பாவம் 'த' என்ற எழுத்தின் உச்சரிப்பால் அழிகிறது.

25. இதிவர்ணான் ஸமுச்சார்ய ஓங்காரேண ஸமன்விதம் |
ப₄ஸ்மஸாத் கு₁ருதே ஸர்வம் மஹாப₁ாதகப₁ஞ்ஜரம் ||

ஒவ்வொரு எழுத்தின் முக்கியத்வத்தையும் அறிந்து, அந்த எழுத்தின் ஜபத்தைச் செய்தால், எல்லா விதமான பாவங்களும் உடனே சாம்பலாக்கப்படுகின்றன.

26. க₃ாயத்ரீவர்ணஜம் ஸ்தோத்ரம் ப்ரத்யஹம் பட₂தே நர: |
ஸர்வபாபவிஶுத்₃த₄ாத்மா ப்₃ரஹ்மலோகே மஹீயதே ||

இதி க₃ாயத்ரீ வர்ண மாலா ஸ்தோத்திரம் ஶம்பூர்ணம்

இந்த க₃ாயத்ரீ-வர்ண-மாலா-ஸ்தோத்திரத்தை அனுதினமும் பாராயணம் செய்பவன், எல்லாவிதமான பாவங்களும் தொலைந்து, புனிதமாக்கப்பட்டு, ஸத்யலோகத்தை அடைந்து, அங்கு பூஜிக்கப்படுவான். காயத்ரீ-வர்ண-மாலா-ஸ்தோத்ரம் முடிவுற்றது.

மேற்கூறியபடி, வர்ண மாலாவில், காயத்ரீயின் ஒவ்வொரு எழுத்து, ஒரு குறிப்பிட்ட பாவத்தை மட்டும் அல்லது ஒட்டு மொத்தமான பாவங்களையும் நாசமாக்கும் அபார சக்தி வாய்ந்தது என்று தெரிய வருகிறது. பாவங்களை அழிப்பதில் காயத்ரீ மந்திரமானது ஒரு புல்டோஸரை (Bulldozer)ப் போன்றது.

'க₃ாயத்ரீமாத்ர நிஷ்ணாதோ த்₃விஜோ மோக்ஷமவாப்னுயாத்'

காயத்ரீ உபாஸனையின் இறுதியான பலன் மோக்ஷஸ்தானமாகிய உன்னதலோகத்தை அடைவதே.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸம்ஸாரத்தில் ஒரு மனிதன் தெரிந்தும், தெரியாமலும் பலவித பாவங்களைச் செய்ய நேரிடுகிறது. இவற்றிற்கு நிவாரணம் பிராயச்சித்தம், தினமும் விதிக்கப்பட்டுள்ள சந்தியா வந்தனத்தைச் செய்வதே. இதனால், பாவங்களைச் சேகரிப்பதிலிருந்து தப்ப இயலும். ஆகவே தான், உபநயனம் ஆனதினத்திலிருந்தே தினமும் சந்தியா, காயத்ரீ உபாஸனையை மூன்று காலங்களிலும் தவறாது செய்ய வேண்டும் என்று ரிஷிகள் விதித்துள்ளனர் போலும். என்னே ஒரு விலை மதிப்பற்ற வழி ! என்னே ஓரு மிகப் பெரிய லாபம் !

: ஶுபமஸ்து :

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அத்தியாயம் - 12

ஸந்த்$_4$யோபாஸனையைப் புறக்கணிப்பதன் விளைவுகள்

'ஸப்தாஹம் ப்ராதரஸ்னாயீ ஸந்த்$_4$யாஹீனோ த்ரிபி$_4$ர்தி$_3$னை:|
ஜீவமானோ ப$_4$வேச்சூ$_2$த்ரோ ம்ருத : ஶ்வா சைவ ஜாயதே' ||

உபநயனமான ஒருவன், ஏழு நாட்கள் குளிக்காமல் இருந்தாலோ மூன்று நாட்களுக்கு ஸந்த்யோபாசனையை புறக்கணித்தாலோ அவன் வாழ்நாள் முழுவதும் நான்காம் வர்ணத்தவனாகிறான் (ஶூத்ரன்). இப்படிப்பட்ட மனிதன் இறந்தால், மறுபிறவியில் நாயாகப் பிறப்பெடுக்கிறான்.

'ஜன்மனா ஜாயதே ஶூ த்ர: கர்மணா ஜாயதே த்$_3$விஜ' :

ஒரு குறிப்பிட்ட குடும்பத்தில் பிறப்பதனால் மட்டும் ஒருவன் அந்தணன் ஆவதில்லை. சாஸ்திரங்களில் விதிக்கப்பட்ட கர்மங்களைக் கடைப் பிடிப்பதனாலேயே ஒருவன் ப்ராம்மணத்துவம் எய்துகிறான். உபநயனத்திற்கு முன் எல்லாச் சிறுவர்களும் நான்காம் வர்ணத்தவர்களுக்குச் சமமானவர்கள்.

உபநயன ஸம்ஸ்காரத்தின் பின்னும், அவனை ப்ராம்மணத்துவத்தில் நிலைத்து நிற்க அந்த ஸம்ஸ்காரம் தகுதி அளிப்பதில்லை. ப்ராம்மணத்துவத்தில் நிலைத்து நிற்கத் தவறாது ஸந்தியோபாசனை செய்ய வேண்டும். ஒவ்வொரு அந்தணனும் வாழ்நாள் முழுவதும் கண்டிப்பாக கடைப்பிடிக்க வேண்டியது ஸந்தியோபாசனை.

'ஸந்த்$_4$யாதி$_1$க்ரமணம் யஸ்ய ஸப்தராத்ரமவிச்யுத$_1$ம் |
உன்மத்ததே$_3$ாஷயுக்தோ வா புன: ஸம்ஸ்காரமர்ஹதி$_1$' ||

ஒரு வார காலம் ஸந்த்யோபாசனையைப் புறக்கணிப்பவனுக்கு அல்லது தேகம், மனநிலை பாதிக்கப்பட்டவனுக்கு, சுருக்கமாக மறுமுறை உபநயனம் செய்யப்பட வேண்டும். அல்லது இம்மாதிரி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நபர்களின் ப்ராம்மணத்துவத்தைக் காப்பாற்ற கீழ்க்காணும் வழிமுறைகளைப் பின்பற்றலாம்.

'உன்மத்ததோ₃ஷயுக்தஸ்ய வ்யாதி₄க்₃ரஸ்த₂ஸ்ய நித்யஶ: |
பிதா ப்₄ராதா த₁த₃ன்யோ வா ஸந்த்₄யாவந்த₃னமாசரேத்' ||

ஒரு நோயினால் பல காலமாக பீடிக்கப்பட்டவன், மனநிலை சரியில்லாது இருப்பவன் ஆகிய இவர்களுக்காக, தந்தையோ, சகோதரனோ அல்லது அவன் மீது அக்கறை கொண்டுள்ள வேறொருவரோ, அவன் சார்பாக ஸந்த்யோபாசனை செய்ய வேண்டும்.

மேற்சொன்ன கருத்துக்களை கவனிக்கும் பொழுது, நமது முன்னோர்களும் / ரிஷிகளும் வேதத்தில் விதிக்கப்பட்ட ஸந்தியோ பாசனையைக் கடைப்பிடிப்பதின் முக்கியத்துவத்தை எவ்வாறு எடுத்துரைத்துள்ளனர் என்று விளங்கும். காயத்ரீயின் மஹிமையை (அதன் பலன்களை) ஒருவன் புரிந்து கொள்ள வேண்டும். அப்பொழுது ஸ்ந்த்யோபாசனையைத் தனது வாழ்நாளில் ஒரு பிரிக்கமுடியாத அங்கமாக அவன் ஆக்கிக்கொள்வான்.

தவிர்க்க முடியாத சூழ்நிலைகளில் ஸந்தியோ பாசனையை விடுவது :

'வேதாக்₃னித்₃விஜவித்₃யானாம் கார்யம் மஹதி ஸம்ஸ்தி₂தே |
ஸந்த்₄யாஹீனே ந தோ₃ஷோஸ்தி யே ச ஸத்கர்ம ஸாத₄னா' ||

ஒருவன் வேதங்களை கற்கும் அல்லது கற்பிக்கும் நேரங்களிலோ, அல்லது சமாதி நிலையில் த்யானம் செய்யும் நேரங்களிலோ அல்லது மிக மிக நலன் விளைவிக்கும் காரியத்தின் பொருட்டு பிரயாணம் செய்யும் நேரங்களிலோ ஸந்த்யோபாசனையிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது. இம்மாதிரி சமயங்களில் ஸந்தியோபாசனை செய்யாமலிருப்பது பாவமாகாது.

ஸந்த்யோபாசனைக்கு நீர் முக்கியமானது. நீரே கிடைக்காத தருணத்தில் ஸந்த்யோபாசனை விட்டு விடலாம் என்று நினைக்கக் கூடும். ஆனால் அவ்வாறு இல்லை.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'ஜலா பா4வே மார்க3மத்4யே ப3ந்த4னேத்வஶசமபிவா |
உப4யோ : ஸந்த்4யயோ : காலே ரஜஸா வர்க்4யமுத்ஸ்ருஜேத்'||

நீர் கிடைக்காத தருணத்தில், வெளி மண்டலத்திலிருக்கும் தூசு துகள்களைக் கொண்டு அர்க்யம் கொடுத்து, காயத்ரீ ஜபத்தை மனதில் ஜபிக்க வேண்டும். அக்னி ஸ்ருதி இவ்வாறு விதித்துள்ளது. ஒரு பொழுதும் இதைப் புறக்கணிக்கலாகாது.

அவ்வளவு முக்கியத்துவத்தையும், அக்கறையையும் மதிப்பையும் ஸந்த்யோபாசனைக்கு அளிக்க வேண்டும்.

முடிவுரை :

புண்ணியம், பாவம், தர்மம், அதர்மம் போன்ற சாஸ்த்ரீய சம்பந்தப்பட்ட விஷயங்களில், ஒருவன் தன்னிச்சையாகச் செயல்படக் கூடாது. அப்படிச் செயல்பட்டால், ஜீவனின் குறிக்கோளான மோட்சம் தரும் மார்க்கத்தில் துரிதமாகப் பயணம் செய்ய முடியாது. இதுவே கீதையின் தகவலாகும்.

'ய : ஶாஸ்த்ரவிதி4முத்1ஸ்ருஜ்ய வர்த1தே காம - காரத: |
ந ஸ ஸித்3தி4மவாப்னோதி ந இஹம் நபராம் க3தி1ம் ||
தஸ்மாச்ச2ாஸ்த்ரம் ப்ரமாணம் தே கார்யா கார்யே வ்யவஸ்தி2தெ1ள |
ஜ்ஞாத்வா ஶாஸ்வத4ா நோக்தம் கர்ம கர்து மிஹார்ஹஸி ||

—பகவத் கீதா

பொருள் : சாஸ்திரத்தில் விதிக்கப்பட்ட வழிமுறைகளை/ கோட்பாடுகளைப் புறக்கணித்து எவனொருவன் தன்னிச்சைப்படி செயல்படுவானோ, அவன் இவ்வுலகிலும், மறு உலகிலும் சுகத்தை அடைய மாட்டான். ஆகவே, விதி-நிஷேதங்களை (எதைச் செய்ய வேண்டும், எதைத் தவிர்க்க வேண்டும்). ஶாஸ்த்ரத்திலிருந்து அறிந்து கொண்டு,அதற்குத்தக நடக்க வேண்டும். அதைப் புறக்கணிப்பதென்பது, பெருந்தவறு, மற்றும் பாவச் செயலாகும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

'அஹர : ஸந்த்$_{4}$யா முபாஸீத' - தினமும் மூன்று காலங்களில் ஸந்த்யோபாசனையைச் செய் என்று வேதம் கட்டளையிடுகிறது. ஆகவே, ஸந்த்யோபாசனையைத் தவறாது செய்து ஸ்ரீஹரியின் க்ருபைக்குப் பாத்திரராகி மோட்சத்தை அடைவோமாக.

வேத மாதா காயத்ரீயின் மீதான ஒரு துதியுடன் இந்த நூலை முடிப்போம்.

'ஸ்து$_{1}$தா$_{1}$ மயா வரதா$_{3}$ வேத$_{3}$மாதா
ப்ரசோத$_{3}$யந்தா$_{1}$ம் பாவமானீ த்$_{3}$விஜானாம் |
ஆயு: ப்ராணம் ப்ரஜாம் பஶும் கீர்தி$_{1}$ம் த்$_{3}$ரவிணம் |
மஹ்யம் த$_{3}$த்$_{1}$வா வ்ரஜத ப்ரஹ்மலோகம் ||

(அத$_{2}$ர்வ வேத$_{3}$ம் 19-71)

\\ ஓம் தத்ஸத் //

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பாகம் - 2

ஸந்த்யாவந்தனம் விதிகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸந்த்$_4$யாவந்த$_3$னம்

1. ஆசமனம் :

' கே$_3$ாகர்ணாக்ருதிஹஸ்தேன மாஷமாத்ரஜலம் பி$_1$பே$_3$த் |
தஸ்யோனமதி$_4$கம் பீத்வா ஸுராபானஸமம் ப$_4$வேத்'

— (வ்யாஸ:)

ஓர் உளுந்து அளவிற்கு நீரை வலது உள்ளங்கையில் வைத்து, கட்டை விரலின் அடிப்பாகத்திலிருந்து (ப்ரஹ்மதீர்த்தம்) உட்கொள்ள வேண்டும். இம்மாதிரி மும்முறை செய்ய வேண்டும். இந்த அளவிலிருந்து அதிகமாக இருப்பின் அது மதுவிற்கு சமானமாகும்.

ஒவ்வொரு அந்தணனின் வலது கையிலும் புனித தீர்த்தங்கள் இருக்கின்றன. அவற்றின் விளக்கம் பின்வருமாறு :

"அங்கு$_3$ஷ்ட$_2$ மாத்ரம் ப்$_3$ராஹ்மஸ்யாத் ப்ராஜாபத்யம் ததை$_2$வ ச|
பைத்ருகம் த$_1$ர்ஜனீமூலம் கராக்$_3$ரே தை$_3$வதம் ஸ்ம்ருதம் ||
ஆக்$_3$நேயம் கரமத்$_4$யம் ஸ்யாத் தீர்த்த$_2$ான்யேவம் த்$_3$விஜஸ்ய ஹி |
த$_3$க்ஷிணே து கரே ஸந்தி ஜ்ஞாத்வா கர்ம ஸமாசரேத்||"

ப்ரம்ம தீர்த்தம் ; அக்னி தீர்த்தம் ; ரிஷி தீர்த்தம் ; தேவ தீர்த்தம் பித்ரு தீர்த்தம் ஆகிய புனித தீர்த்தத்தின் இருப்பிடமாக அந்தணரின் வலது கை உள்ளது. விளக்கம் வரை படத்திலுள்ளது.

தேவ தீர்தம் - சிறு விரலின் மேற்பாகம்

ரிஷி திர்த்தம் - சிறு விரலின் அடிப்பாகம்

பித்ரு தீர்த்தம் - ஆள் காட்டி விரலின் அடிப்பாகம்

அக்னி தீர்தம் - உள்ளங்கை நடுப்பாகம்

ப்ரஹ்ம தீர்தம் - கட்டை விரலின் அடிப்பாகம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

Bathing / Snān , Ācaman , Sankalp



Fig.

கேஶவ முதல் க்ருஷ்ண முடிய 24 நாமங்களைச் சொல்லி ஆசமனம் செய்ய வேண்டும். முதல் மூன்று நாமங்களை,

1. ஶ்ரீ கேஶவாய ஸ்வாஹா
2. ஶ்ரீ நாராயணாய ஸ்வாஹா
3. ஶ்ரீ மாத$_4$வாய ஸ்வாஹா

என்று சொல்லி, மூன்று முறை மேற்கூறியபடி வலது கையிலிருந்து நீரை உட்கொண்டு, பிறகு (4) ஶ்ரீ கோ$_3$விந்த$_3$ாய நம : (5) ஶ்ரீ விஷ்ணவே நம : என்று உச்சரித்து இருகைகளையும் ஒரு உத்தரிணி நீரினால் சுத்தம் செய்ய வேண்டும்.

கீழேகுறிப்பிட்டுள்ள (6) - (24) நாமங்களை உச்சரிக்கும் போது குறிப்பிட்டுள்ள உடலின் அங்கங்களை வலது கைவிரல்களால் தொடர்பு கொள்ள வேண்டும்.

6. ஶ்ரீ மது$_4$ஸூத$_3$னாய நம: - மேல் உதடு
7. ஶ்ரீ த்ரிவிக்ரமாய நம: - கீழ் உதடு
8. ஶ்ரீ வாமனாய நம: - வலது கன்னம்
9. ஶ்ரீ ஶ்ரீத$_4$ராய நம: - இடது கன்னம்
10. ஶ்ரீ ஹ்ருஷீகேஶாய நம: - இரு கைகள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

11. ஸ்ரீ பத்மநாப$_4$ாய நம: - இரு கால்கள்

12. ஸ்ரீ த$_3$ாமோத$_3$ராய நம: - நெற்றி

13. ஸ்ரீ ஸ$_3$ங்கர்ஷணாய நம: - மூக்கு

14. ஸ்ரீ வாஸுதே$_3$வாய நம: - வலது மூக்கு துவாரம்

15. ஸ்ரீ ப்ரத்$_3$யும்னாய நம: - இடது மூக்கு த்வாரம்

16. ஸ்ரீ அனிருத்$_1$த$_4$ாய நம: - வலது கண்

17. ஸ்ரீ புருஷோத்தமாய நம: - இடது கண்

18. ஸ்ரீ அதோ$_4$க்ஷஜாய நம: - வலது காது

19. ஸ்ரீ நாரஸிம்ஹாய நம: - இடது காது

20. ஸ்ரீ அச்யுதாய நம: - வயிறு த்வாரம்

21. ஸ்ரீ ஜனார்த$_3$னாய நம: - மார்பு

22. ஸ்ரீ உபேந்த்$_3$ராய நம: - தலை

23. ஸ்ரீ ஹரயே நம: - வலது புஜம்

24. ஸ்ரீ க்ருஷ்ணாய நம: - இடது புஜம்

ஸந்த்யோபாஸனையின் ஆரம்பத்திலும் மற்றும் முடிவிலும் ஆசமனக்ரியையை (1) -(24) இரண்டு முறை செய்ய வேண்டும்.

ஆசமனம் முடிந்தால் சாத்திரத்தில் சொல்லியபடி மான்தோல் (க்ருஷ்ணாஜின) முதலியவைகளில் ஏதாவது ஒரு ஆஸனத்தின் மேல் அமர்ந்து கொண்டு ஆசமனம் (ஜலம் உத்தரிணியால் வலது உள்ளங்கையில் போட்டு) பருக வேண்டும். ஆசமனம் செய்யும்பொழுது சொல்ல வேண்டிய மந்திரங்கள் இடத்திற்கு இடம் மாறுபடுகின்றன. ஆசமனத்தின் இரண்டு வகை பரவலாகப் புழக்கத்தில் இருக்கிறது. ஒன்று, ஶ்ரௌத்ராசமனம். மற்றது, பௌராணிகாசமனம். காயத்ர்யாதி மந்திரங்களால் ஆசமனம் செய்வதற்கு ஶ்ரௌதாசமனம் என்று பெயர். இது சில பாகங்களில் வழக்கத்திலுள்ளது. கேஶவாதி நாமங்களால் ஆசமனம் செய்வதற்குப் பௌராணிகாதி ஆசமனமென்று பெயர். நம் தேசத்தில் மிகுதியாக, பௌராணிக ஆசமனத்தையே ஜனங்கள்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy
செய்கிறார்கள். உண்மையில் ஸந்த்யாவந்தனம் முதலியவைகளில் பௌராணிக ஆசமனத்தையும் மற்றும் ப்ரஹ்மயக்ஞ காலத்தில் "ஶ்ரௌதாசமனத்தை" செய்ய வேண்டுமென ப்ரமாணமுள்ளது. சில கிரந்தங்களில் இந்த பௌராணிக ஆசமனமே ஸ்மார்தாசமனம் என்று சொல்லப்பட்டிருக்கிறது. ஸந்தியா கர்ம தொடக்கத்தில் இரண்டு முறை முடியும் போது ஒருதரம் அல்லது இரண்டு முறை ஆசமனம் செய்ய வேண்டும். ஆசமனம் கிழக்கை நோக்கிக் கொண்டோ, வடக்கை நோக்கிக் கொண்டோ உட்கார்ந்து செய்ய வேண்டும். நம் மனது கவனமாக இருக்க வேண்டும் எனும் எண்ணத்தால் இந்த பலசெய்முறைகளை சாஸ்திரத்தில் சொல்லியிருக்கின்றனர்.

2. ப்ராணாயாமம் : ப்ரணவஸ்ய, பரப்$_3$ரம்ஹ ருஶி:, பரமாத்மா தேவதா | தைவீ காயத்ரீ ச$_2$ந்த$_3$:| ஸப்தானாம் வ்யாஹ்ருதீனாம் விஶ்வாமித்ர - ஜமதக்னி பரத்வாஜ - கௌதம - அத்ரி - வஸிஷ்$_2$ட கஶ்யபா ருஷய:| அக்னி - வாயு - ஆதித்ய - ப்ரு$_3$ஹஸ்பதி - வருண - இந்த்ர - விஶ்வேதேவா தேவதா :| காயத்ரீ- உஷ்ணிக் -அனுஷ்டுப் - ப்ருஹதீ - பங்க்த்தி - த்ரிஷ்டுப் - ஜகத்ய: சந்தாமஸி | காயத்ர்யா விஶ்வாமித்ர ருஷி :| ஸவிதா தேவதா:| காயத்ரீ ச$_2$ந்த$_3$:| காயத்ரீஸிரஸ : ப்ரஜாபதி: ருஷி: | ப்ரஹ்ம - அக்னி - வாயு - ஆதித்யா தேவதா :| யஜு : ச$_2$ந்த$_3$:| ப்ராணாயாமே வினியோக :|

ஓம் பூ$_4$: ஓம் பு$_4$வ : ஓம் ஸ்வ : ஓம் மஹ : ஓம் ஜன : ஓம் தப : ஓம் ஸத்யம் : ஓம் தத்ஸவிதுர் வரேண்யம் ப$_4$ர்கே$_3$ா தே$_3$வஸ்ய தீ$_4$மஹி | தி$_4$யோ யோன: ப்ரசோத$_3$யாத்| ஓமாபோ ஜ்யோதீரஸோம்ருதம் ப்ரஹ்ம பூர்புவஸ் ஸ்வரோம் |

"ஓம்" கார மந்திரத்திற்குப் பரப்ரஹ்ம ருஷி, பரமாத்மன் தேவதை, தைவீ காயத்ரீ சந்தஸ்.

வ்யாஹ்ருதி	பூ:	புவ :	ஸ்வ :	மஹ:	ஜன:	தப:	ஸத்யம்
ருஷி	விஶ்வாமித்ர	ஜமதக்$_3$னி	ப$_4$ரத்$_3$வாஜ	கௌதம	அத்ரி	வஸிஷ்ட$_2$	கஶ்யப

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேவதை	அக்னி	வாயு	ஆதித்ய	ப்ருஹஸ்பதி	வருண	இந்த்ர	விஶ்வேதே$_3$வ	
சந்தஸ்	காயத்ரீ	உஷ்ணிக்	அனுஷ்டுப்	ப்ருஹதீ	பங்க்தி	த்ரிஷ்டுப்	ஜக$_3$தீ	

காயத்ரீ மந்திரத்திற்கு விஶ்வாமித்ரன் ருஷி. ஸவித்ரு ஸப்தவாச்யனான பரமாத்மா தேவதை, காயத்ரீ என்பது சந்தஸ். காயத்ரீ ஶிரஸுக்கு ப்ரஜாபதி ருஷி, ப்ரஹ்ம, அக்னி, வாயு மற்றும் ஆதித்ய எனும் சொல்லின் வாச்யனான பரமாத்மா தேவதை. யஜுஸ் என்பது சந்தஸ். இந்த நான்கு மந்திரங்களை ப்ராணாயாமத்தில் உபயோகிக்கலாம். இந்த நான்கு மந்திரங்களைச் சேர்த்து மேலே கொடுத்துள்ளோம்.

இந்த மந்திரத்தின் பொருள் ஓம் = நிறைந்த, பூ: = பரவிய, அழிவில்லாத, புவ:=படைப்பவனான, ஸுவ:=கணக்கில்லா (எல்லையில்லா) சுகமுடையவனுமான, சுதந்திரனான, மஹ: = பூஜிக்கபடுதற்குரிய மஹநீயனான, தப: அறிவு பிரகாச வடிவமான, ஸத்யம்: = மேலானவர்களுக்கும் கட்டளையிடும், (ஆப:) ஆ = விதவிதமாக, ப : = காப்பவனான, ஜ்யோதி : = (சூரிய சந்திரன்களை விட) பிரகாசம் கொண்ட, ரஸ:=சுகம் நிறைந்தவனும் சுகத்தை தருபவனும் ஆன, அம்ருதம் = தேக நாசமற்ற, ப்ரம்ஹ = எங்கும் பரவிய, பூர்புவ:ஸ்வ:= ருக், யஜுஸ், ஸாம வேதங்களின் பீஜ மந்திரங்களால் அறிவிக்கப்பட்டவனுமான, ஓம் = வ்யாஹ்ருதிகளுக்கும் பீஜபூதமான ஓங்கார ப்ரதிபாத்யனான, ய: = எவன் (எந்தப் பரமாத்மா) ந: = எங்கள், தி$_4$ய:=புத்திகளை மற்றும் கர்மங்களை, ப்ரசோதயாத்:= தூண்டுகிறானோ, ஸவிது : = அப்பேர்ப்பட்ட படைப்பைச் செய்பவனை, தேவஸ்ய = தேவ தேவோத்தமனான பரமாத்மாவின் (விளையாட்டு குணங்களுடன் விளங்கும்), தத் = எப்பொழுதும், எங்கும் இருக்கும், வரேண்யம் = மேன்மை பொருந்தியவர்களால் பூஜிக்கப்பட்ட, ப$_4$ர்க : = பாவங்களை அழிக்கும் ஒளி, சுகம், ஞான ரூபனான ஜீவனின் அறிவு, ஆனந்தம் தரும் ஒளியை, தீ$_4$மஹி = தியானம் செய்கின்றோம். கும்பகம் (சுவாஸத்தை மார்பில் நிறுத்தல்) செய்யும் வேளை இந்த மந்திரத்தை மனதில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ராணாயாமம் செய்யும் பொழுது மந்திரத்தின் பொருளை (வாயு, விஷ்ணு தேவர்களை) ஸ்மரணை செய்ய வேண்டும். ஸந்த்யாவின் தொடக்கத்திலும் மற்றும் அர்க்யம் கொடுக்கும் காலத்திலும் ஒவ்வொரு தடவை பிராணாயாமம் செய்ய வேண்டும். காயத்ரீ ஜபத்தில் முன்னும் பின்னும் (மூன்று முறை) ப்ராணாயாமம் செய்ய வேண்டும். மேலே சொல்லிய மந்திரத்தை மூன்று முறையோ, ஆறு முறையோ, ஒன்பது தடவையோ, பன்னிரண்டு தடவையோ, ப்ராணாயாமம் செய்யும் பொழுது திருப்பிச் சொல்ல வேண்டும். இவ்விஷயத்தில் ப்ரமாணமிருக்கிறது.

ஸந்த்$_4$யாதௌ$_3$ அர்க்$_4$யதா$_3$னே ச ப்ராணாயாமைகமாசரேத் |
ஆதா$_3$வந்தே$_1$ ச கா$_3$யத்ர்யா: ப்ராணாயாமஸ்த்ரயஸ்த்ரய: ||
மந்த்ரமாவர்தயேத் சித்தே த்ரிஷட்$_3$வாரமதா$_2$பி வா |
நவத்$_3$வாத$_3$ஶவாரம் வா ப்ராணாயாமோ Sயமீரித: |

3. ஸங்கல்பம் : தேஶகாலௌ ஸங்கீர்த்ய, ஸ்ரீவிஷ்ணு ப்ரேரணயா ஸ்ரீவிஷ்ணுப்ரீத்யர்த$_2$ம் ப்ராதஸ் ஸந்த்$_4$யோபாஸ்திம் கரிஷ்யே. ஸங்கல்பம் செய்யப் பல வகைகள் சொல்லப்பட்டுள்ளன. நாம் மிகவும் சுருக்கமானதை இங்கு தந்துள்ளோம். நம் தேசத்தில், தேஶம் (இட)$_3$ காலம், ஸமயம், திதி மற்றும் கிழமை முதலியவைகளை விவரமாகச் சொல்லி ஸங்கல்பம் செய்வார்கள். இது சாலச்சிறந்தது.

" ஶுபே ஶோப$_4$னே முஹூர்தே$_1$, அத்ய ப்$_3$ரஹ்மண:
த்$_4$விதீயபரார்தே$_4$, ஸ்ரீஶ்வேதவராஹகல்பே,
வைஶ்வத மன்வந்தரே, கலியுகே$_3$, கலிப்ரதம
சரணே, ஜம்பூ$_3$த்$_3$வீபே, த$_3$ண்ட$_3$காரண்யே,
கோ$_3$தா$_3$வர்யா: த$_3$க்ஷிணே பார்ஶ்வே (தென்னிந்தியாவில்)
மேரோ: தக்ஷிணே பார்ஶ்வே (வட இந்தியாவில்)
ஸாலிவாஹன ஶகே, பௌத்தாவதாரே, ராமக்ஷேத்ரே,
அஸ்மின் வர்த$_1$மானே, சா$_3$ந்த்$_3$ரமானேன..........☆..........ஸம்வத்ஸரே,
..........☆..........அயனே..........☆..........ருதௌ,..........☆..........மாஸே,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பக்ஷே..........☆..........திதௌ..........☆..........வாஸரே..........☆..........நக்ஷத்ரே, ...☆..........யோகே,..........☆..........தரணே, விசேஷண விணஷ்டாயாம்,

ஶுபதிதௌ, ப₄ாரதீரமண - முக்ய ப்ராணாந்தர்கத, ஸ்ரீ லக்ஷ்மீ-நாராயண - ப்ரேரணயா, ஸ்ரீலக்ஷ்மீ - நாராயண - ப்ரீத்யர்த₂ம், ப்ராதஸ் / மாத்₄யான்ஹிக / ஸாயம் ஸந்த்₄யாம் உபாஸிஷ்யே" என்று சொல்லி உத்தரிணி நீரை வலது கையில் ஊற்றிப் பேலாவில் விடவும் (*பஞ்சாங்கத்தில் உள்ள படி)

4. மார்ஜனம் : ஆபோஹிஷ்டே₂தி த்ருசஸ்ய அம்₃பரீஷ ஸிந்து₄த்₃வீபருஷி: ஆபோ தே₃வதா | கா₃யத்ரீ ச₂ந்த:| மார்ஜனே வினியோக:| (ஸப்தபி₄: பாதை₃: ஶி₃ரஸி அஷ்டமேன பாத₃யோ: நவமேன புன: ஶிரஸி)

(1) ஆபோஹிஷ்ட₂ா ம யோ₄புவ:| (2) தா ன ஊர்ஜே த₃த₄ாதன |

(3) மஹே ரணாய சக்ஷஸே || (4) யோவ: ஶிவதமோ ரஸ:

(5) தஸ்ய ப₄ாஜயதேஹ ந:| (6) உஶதீரிவ மாதர:||

(7) தஸ்மா அரம் க₃மாம வோ (8) யஸ்ய க்ஷயாய ஜின்வத₂|

(9) ஆபோ ஜனய₂ா ச ந:||

மார்ஜனம் - ஆபோஹிஷ்டா என்று ஆரம்பிக்கும் மூன்றுருக்குகளுக்கு அம்பரீஷ சிந்துத்வீபன் ருஷி, அப₃ந்தர்க₃த பரமாத்மாவின் ரூபமே தேவதை. க₃ாயத்ரீ ச₂ந்த₃ஸ் - இந்த மந்திரங்களை மார்ஜனத்தில் உபயோகிக்க வேண்டும். ஓ! ஜலத்திலிருக்கும் தேவதைகளே நமக்கு சுகத்தை அளிப்பீர். பாரமான வேலைகளில் எங்களைத் திறமை மிக்கவராகச் செய்வீர். விசாலமான மிகவும் அழகான, தெளிவான, ஞானம் பெற நம்மைத் தகுதியுள்ளவராகச் செய்வீர். குழந்தையின் விருத்தி (வளர்ச்சி) கோரும் தாய்மார்கள் தாய்ப்பாலைத் தம் குழந்தைகளுக்குக் கொடுப்பதைப் போல் உங்களிலிருக்கும் சுபமங்கள மற்றும் உயர்வான பதார்த்தத்தின் அறிவால் உண்டாகும் சுகத்தை நமக்கு அளியுங்கள். எந்தப் பரமாத்மாவை, (பாவம் நாசமடைய) ஸந்தோஷப் படுத்துகிறீர்களோ, அந்த (பாவத்தை நாசம் செய்யும்) பகவானுடைய அருளை சீக்கிரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பெறுவோம். உயர்வான சந்ததியைப் பிறக்கச் செய்ய எங்களைத் திறமை படைத்தவராக ஆக்குங்கள். மேலே சொன்ன மந்திரத்தில் 9 பாதங்கள் உள்ளன. ஒவ்வொரு பாதத்தின் கடைசியில் தலையின் மேல் ஜல மார்ஜனத்தை (தெளித்தல்) செய்து கொள்ள வேண்டும். Exception - எட்டாவது அடியின் கடைசியில் மட்டும் கால்களின் மேல் மார்ஜனம் செய்து கொள்ள வேண்டும்.

5. மந்த்ராசமனம் : கோகர்ணாக்ருதிஹஸ்தேன ஜலம் க்$_3$ருஹீத்வா ஸூர்யஶ்சேத்யஸ்ய$_3$ மந்த்$_1$ரஸ்ய ஹிரண்யக$_3$ர்ப$_4$ ருஷி:ஸூர்ய-

மன்யு-மன்யுபதி-ராத்ரயோ தே$_3$வதா: ப்ரக்ருதிஶ் ச$_2$ந்த$_3$: மந்த்ராசமனே வினியோக$_3$:|

ஸூர்யஶ்ச மாமன்யுஶ்ச மன்யுபதயஶ்ச மன்யுக்ருதேப்$_4$ய:| பாபேப்$_4$யோ ரக்ஷந்த$_1$ாம் | யத்$_3$ராத்ர்யா பாபமகார்ஷம் | மனஸா வாசா ஹஸ்தாப்$_4$யாம் | பத்$_3$ப்$_4$யாமுத$_3$ரேண ஶிஶ்னா | ராத்ரிஸ்தத$_3$வலும்பது | யத்கிஞ்ச து$_3$ரிதம் மயி | இத$_3$மஹம் மாமம்ருத யோனௌ | ஸூர்யோ ஜ்யோதிஷி ஜுஹோமி ஸ்வாஹா ||4||

(இத்யபிமந்த்ர்ய, பீத்வா ஆசமேத்)

<u>மாத்$_4$யான்ஹிக ஸந்த்யாவந்த$_3$னே விஶேஷ</u>:| ஸூர்யஶ்சேதி மந்த்ரஸ்ய ஸ்த$_2$ானே ஆப : புனந்த்விதி மந்த்ரஸ்ய பூதனாமகோ நாராயண ருஷி: ஆபோ தே$_3$வதா அஷ்டீ சந்த: அபாம் ப்ராஶனே வினியோக$_3$:| ஓம் ஆப: புனந்து$_1$ ப்ருதி$_2$வீம் ப்ரு$_2$தி$_2$வீ பூதா புனாது$_2$ மாம் | புனந்து ப்ரஹ்மணஸ்பதிர் ப்$_3$ரஹ்மபூதா புனாது மாம் | யுது$_3$ச்சி$_2$ஷ்டமபோஜ்யம் யத்$_3$வா து$_3$ஶ்சரிதம் மம | ஸர்வம் புனந்து$_1$ மாமாபோऽஸதாம் ச ப்ரதிக்$_3$ரஹம் ஸ்வாஹா |

மந்த்ராசமனம் : பசுவின் காதைப் போல் செய்து கையால் ஜலத்தை எடுத்துக் கொண்டு ஸூர்யஶ்சேதி மந்திரத்திற்கு ஹிரண்யகர்பன் ருஷி, ஸூர்ய, மன்யு, மன்யுபதி, ராத்ரி இந்த நால்வர் தேவதைகள். சந்தஸ், ப்ரக்ருதி, மந்த்ராசமனத்தில் இதனை

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபயோகிக்க வேண்டும். சூரியன், மன்யு, மன்யுபதிகள் நான் கோபாவேசத்தினால் செய்த பாவ கர்மங்களிலிருந்து என்னைக் காக்கட்டும். இரவில் நான் மனதாலும், பேச்சாலும், கைகளாலும், கால்களாலும், வயிற்றாலும், ஜனனேந்திரியத்தாலும் செய்த அனைத்துப் பாவச் செயல்களை ராத்ரி தேவதை அழிக்கட்டும். என்னிடம் ஏதாவது தோஷம் மிச்சமிருந்தால் மோக்ஷத்தை அளிக்க வல்ல சூரிய நாராயணன் எனும் ஒளியில் அதை ஆஹு"தி (ஹோமம் செய்வது) கொடுக்கிறேன். அது தீயில் எரியட்டும். (கருத்து சூர்ய நாராயணனின் த்யானத்தால் அழுக்கு (பாவம்) எல்லாம் எரிந்து சாம்பலாகும்). இந்த மந்திரத்தால் ஜலத்தை அபிமந்த்ரணம் செய்து பருகி, ஆசமனம் செய்ய வேண்டும்.

(மத்யாஹ்ன) "ஸு"ர்யஶ்ச" என்ற மந்தரத்திற்குப் பதிலாக "ஆப: புனந்து" என்ற மந்திரத்தைச் சொல்லி மந்த்ராசமனம் செய்ய வேண்டும். "ஆப: புனந்து" என்ற மந்திரத்திற்கு பூதநாமக நாராயணன் ருஷி, ஜலமே தேவதை. அஷ்டீசந்தஸ், அபிமந்த்ரம் செய்த (மந்திரித்த) ஜலம் குடிப்பதற்கு உபயோகிக்க வேண்டும். ஜலம் பூமியை புனிதமாக்கட்டும். புனிதமான பூமி என்னைப் புனிதமாக்கட்டும். எச்சில் சாப்பாட்டினால் தின்னக்கூடாத பக்ஷணத்தைத் தின்றதால் வந்த, தீயவர்களிடமிருந்து பெறுவதினால் உண்டான, வேறு பல கெட்ட நடத்தைகளால் வந்த பாவங்களை ஜல தேவதை அப்புறப்படுத்தட்டும். இந்த எல்லாப் பாவங்களும் புனிதமான ஜலத்தில் எரிந்து போகட்டும். (ஆப: புனந்து என்ற மந்திரத்தைச் சொன்ன பின் கையிலிருந்த நீரைக் குடிக்க வேண்டும்.

(<u>ஸாயம் ஸந்த்யாவில்</u> மந்த்ராசமன செய்யும் காலத்தில் "ஸு"ர்யஶ்ச" எனும் மந்திரத்தில் "ஸு"ர்யஶ்ச" என்பதற்குப் பதிலாக "அக்னிஶ்ச" என்று சொல்ல வேண்டும். 'யத்₃ராத்ர்யா' என்னும் இடத்தில் 'யத₃ஹ்னா' என்றும் சொல்ல வேண்டும். 'ஸு"ர்யே ஜ்யோதிஷி' என்பதற்குப் பதில் 'ஸத்யே ஜ்யோதிஷி' என்று சொல்ல வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யஜுர்வேத்$_3$ய ஸாயம் ஸந்த்யாவில் மாற்றம்- ருக்$_3$வேதம் போல் மந்த்ராசமனம் செய்யும் பொழுது அக்னிஸ்ச எனும் மந்திரத்தைச் சொல்ல வேண்டும்.

6. த்$_3$விதீயமார்ஜனம்:| ஆபோஹிஷ்டே$_2$தி நவர்சஸ்ய ஸூக்தஸ்ய அம்ப$_3$ரீஷ: ஸிந்து$_4$த்$_3$வீப ருஷி :| ஆபோ தே$_3$வதா ஸப்த க$_3$ாயத்ர்ய:| பஞ்சமீ வர்த$_4$மானா | ஸப்தமீ ப்ரதிஷ்டா | (32அக்ஷரங்களைக் கொண்டவை) அந்த்$_1$யே த்$_3$வே அனுஷ்டுபெ$_4$ள:| புனர்மார்ஜனே வினியோக$_3$:|

ஓம் ஆபோ ஹி ஷ்ட$_2$ா மயோபுவஸ்தாந ஊர்ஜே த$_3$த$_4$ாதன| மஹே ரணாய சக்ஷஸே ||1||

ஓம் யோவ ஶ்ஶிவதமோ ரஸஸ்தஸ்ய ப$_4$ாஜயதேஹன: நம: உஶதீரிவ மாதர: ||2||

ஓம் தஸ்மா அரம் கமாம வோ யஸ்ய க்ஷயாய ஜின்வத$_2$ | ஆபோ ஜனயதா ச ந: ||3||

ஓம் ஶம் நோ தே$_3$வீரபி$_4$ஷ்டய ஆபோ ப$_4$வந்து பீதயே | ஶம் யோரபிஸ்ரவந்து$_1$ ந : ||4||

ஓம் ஈஶானா வார்யாணாம் க்ஷயந்தீ$_1$ஶ்சர்ஷணீனாம் | அபோ யாசாமி பே$_4$ஷஜம் : ||5||

ஓம் அப்ஸு மே ஸோமோ அப்ரவீத$_3$ந்த$_1$ர்விஶ்வானி பேஷஜா | அக்$_3$னிம்ச விஶ்வஶம்பு$_4$வம் ||6||

ஓம் ஆப: ப்ருணீத பே$_4$ஷஜம் வருத$_2$ம் தன்வே$_3$ மம | ஜ்யோக் ச ஸூர்யம் த்$_3$ருஶே ||7||

ஓம் இத$_3$மாப: ப்ரவஹத யத்கிஞ்ச து$_3$ரித$_4$ம் மயி | யத்$_3$வாஹமபி$_4$து$_3$த்ரோஹ யத்வா ஶேப உதாந்ருதம் ||8||

ஓம் ஆபோ அத்$_3$யாந்வசாரிஷம் ரஸேன ஸமக$_3$ஸ்மஹி | பயஸ்வான$_4$க்$_3$ன ஆக$_3$ஹி தம் மா ஸம்ஸ்ருஜ வர்சஸா ||9|| (ஸஸ்ருஷீரித்யஸ்ய ஆபோ

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தே$_3$வதா அனுஷ்டுப்ச$_2$ந்த$_3$: புனர் மார்ஜனேவினியோக:|)

ஸஸ்ருஷீஸ்தத$_3$பஸோ தி$_3$வாநக்தம் ச ஸஸ்ருஷீ:|

வரேண்யக்ருது -ரஹமா தேவீரமஸே ஹுவே || இதிமார்ஜயித்வா.

யஜுஸ்ஸந்த்$_4$யா வந்த$_3$னே விஶேஷ:|

புனர்மார்ஜனே வக்தவ்யோ மந்த்$_1$ர:|

ஓம் த$_3$தி$_4$க்ராண்வோ அகாரிஷம் ஜிஷ்ணோரஶ்வஸ்ய வாஜின:|

ஶுரபி$_4$ நோ முக$_2$ாகரத் ப்ரண ஆயூம்ஷி தாரிஷத் |

ஆபோஹிஷ்ட$_2$ா . . . . ஆபோ ஜனயதாசன :||

ஹிரண்யவர்ணா: ஶுசய : பாவகா யாஸு ஜாத: கஶ்யபோ
யாஸ்விந்த்$_3$ர:|

அக்$_3$னிம் யா க$_3$ர்ப$_4$ம் த$_3$தி$_4$ரே விருபாஸ்தா ந ஆப :
ஶம்ஸ்யோயோனா பவந்து |

யாஸா ராஜா வருணோ யாதி மத்$_4$யே ஸத்யாந்ருதே அவ பஶ்யன்
ஜனானாம் |

மது$_4$ஶ்சுத: ஶுசயோ யா: பாவகாஸ்தா ந ஆப: ஶம்
ஸ்யோனாபவந்து |

யாஸாம் தே$_3$வா தி$_3$வி க்ருண்வந்தி$_1$ பக்ஷம் யா அந்தரிக்ஷே
ப$_3$ஹுத$_4$ா ப$_4$வந்தி |

யா: ப்ருதிவீ பய ஸோத$_3$ந்தி ஶுக்ரா ஸ்தா ந ஆப :
ஶம்ஸ்யோனா$_2$பவந்து |

ஶிவே ன மா சக்ஷுஷா பஶ்யதாப: ஶிவயா தனுவோபஸ்ப்ருஶத
த்வசம் மே |

ஸவாம் அ$_3$க்னீம் ரப்ஸுஷதே$_3$ா ஹுவே வோ மயி வர்சே$_1$ா ப$_3$ல
மோஜோ

நிதத்த | (தஜ்ஜலம் நாஸிதயா ஆக்$_4$ராய)

த்$_3$ருபத$_3$ா தி$_3$வ முஞ்ச$_1$து || (ஜலம் விஸ்ருஜேத்)

(புனர் ஜலமாத$_3$ாய)

த்$_3$ருபத$_3$ாதி$_3$வேன்முமுசான: ஸ்வின்ன: ஸ்னாத்வீ ஸ்மலாதி$_3$வ |

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பூதம் பவித்ரேணைவாsஜ்யம் | ஆப: ஶுந்த₃ந்து, மைனஸ:||
(புனராக்₄யை விஸ்ருஜேத்)

த்விதீயமார்ஜனம் : "ஆபோஹிஷ்டா" முதலிய ஒன்பது மந்த்ரங்களுள்ள ஸூக்தத்திற்கு அம்பரீஷ ஸிந்து த்வீபன் ருஷி. ஜலத்தில் இருக்கிற தேவதையே தேவதை. காயத்ரீ சந்தஸில். ஐந்தாவது ருக், வர்த₄மானா (வளரும்) காயத்ரீ ச₂ந்த₃ஸில் உள்ளது. ஒன்றாம், இரண்டாம், மூன்றாம் பாதங்களில் முறையே ஆறு, ஏழு, எட்டு அக்ஷரங்கள் உள்ளன. இவ்வாறு இருப்பது வர்த₄மானா காயத்ரீ. ஏழாவது ருக் ப்ரதிஷ்ட₂ா சந்தஸில் உள்ளது. ஒன்றாம், இரண்டாம், மூன்றாம் பாதங்களில் முறையே எட்டு, ஏழு, ஆறு அக்ஷரங்கள் உள்ளன. இவ்வாறு இருக்கும் ச₂ந்த₃ஸ் ப்ரதிஷ்ட₂ா க₃ாயத்ரீ. கடைசி இரண்டும் அனுஷ்டுப் சந்தஸில் உள்ளவை. இந்த ஸூக்தத்தை மார்ஜனம் செய்வதில் உபயோகிக்க வேண்டும். (ஓம் ஆபோஹிஷ்ட₂ா முதல் . . . . ஆபோஜனயதாசன வரையில் மந்திரங்களின் அர்த்தங்களைக் கொடுத்துள்ளோம்:- ஜலத்தின் தேவதை நமக்கு ஸுகத்தை உண்டாக்கட்டும். நமக்குப் பிரியமான வஸ்துக்களை அளிக்கட்டும். நாம் அருந்த நல்ல ஜலம் கிடைக்கட்டும். நம் சுகம் பெருக ஜலதேவதை மழை பெய்யும்படி செய்யட்டும். கோரிய வரங்களை அளிக்கத் திறமையுள்ள மற்றும் பிராணிக் கூட்டங்களுக்கு ஆதாரபூர்வமான வனதேவதையிடம் ஔடதங்களை (மருந்து) வேண்டுகிறோம். ஜலத்தில் எல்லாவிதமான மருந்துகளும் இருக்கின்றனவென்று சோமன் எனக்குச் சொல்லியிருக்கிறான். முழு உலகத்திற்கும் ஸுகம் தரும் அக்னிநாமக பரமாத்மா தண்ணீரிலிருக்கிறான் என்று சொல்லியிருக்கிறான். ஓ! ஜலத்திலிருக்கும் தேவதையே, நான் வெகுநாள் ஸூர்யநாராயணனை நேரில் காணத் திறமை கொண்டவனாக ஆக என் சரீரத்திற்கு உயர்வான ஔடதத்தை அளி. நான் என்னை விட உயர்ந்தவர்களுக்குத் துரோகம் செய்ததாலும், அறிவுள்ளவர்களுக்குச் சாபம் வழங்கியதாலும் மற்றும் பொய் பேசியதாலும் வந்த பாவத்தை ஓ ! ஜலத்திலிருக்கும் தேவதையே,!

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இந்நேரம் உன் சேவை செய்திருக்கிறேன். மற்றும் உன்னை வழிபட்டதால் உண்டாகும் உயர்வான ஆனந்தத்துடன் இருக்கிறேன். ஜல தேவதையோடு கூட வாசம் செய்யும் அக்னி நாமக பரமாத்மாவே, அருள்புரி. என்னை தேஜஸ்த், சம்பத்துடையவனாகச் செய். ஸஸ்ருஷீ என்ற மந்த்ரத்திற்கு ஜலம் தேவதை. அனுஷ்டுப் சந்தஸ். மார்ஜனத்தில் உபயோகிக்க வேண்டும். இரவும் பகலும் பகவானின் ப்ரீதிக்காகச் செய்யும் கர்மங்களுக்குத் தடைவராமல் இருக்கட்டும். பக்தர்களின் அபீஷ்டங்களை (தேவைகளை)ப் பொழியும் பூஜைக்குத் தகுந்த ஜலதேவதையை மிகவும் தூயமனதுள்ளவனாய் நான் என் கல்யாண (சுபம்) த்திற்காக அழைக்கிறேன்.

சொல்ல வேண்டிய மந்திரம் : "ஓம் ததிக்ராணவோ". இதன் பொருள் - இனிப்பில் தயிரை மிஞ்சி எப்பொழுதும் வெற்றிவாகை சூடும் வேகமுள்ள ஜலத்தை நான் சேவித்துள்ளேன். அந்த ஜலம் நமது முகம் முதலிய அனைத்து அவயவங்களையும் சுத்தமாக்கட்டும் மற்றும் நம் ஆயுளைப் பெருக்கட்டும். தங்கத்தைப் போல மின்னும் சுத்தமான ஜலங்கள் மிகவும் புனிதமானவை. இவைகளிலேயே கஸ்யபன் தோன்றினான். இவைகளிலேயே இந்திரன் பிறந்தான். இந்த ஜலங்கள் அக்னியைத் தம் மடியில் வைத்துள்ளன. பல குணம் கொண்ட ஜலங்கள், இவ்வுலகத்தைச் சேர்ந்த சுகம் மற்றும் விண்ணுலகத்தின் சுகம், இரண்டு வகையான சுகங்களை அளிக்கட்டும். எந்த ஜலங்களின் அரசனான வருணன் ஜனங்களின் புண்ய பாவங்களை அறிந்து, பொதுவாக நடுநிலையில் இருப்பானோ, அப்படிப்பட்ட தித்திக்கும், சுத்தமானதும், புனிதமான ஜலங்கள் நமக்கு இவ்வுலகத்தின் மற்றும் விண்ணுலகத்தின் சுகங்களை அளிக்கட்டும். தேவலோகத்து தேவதைகள் கூட எந்த ஜலத்தை உபயோகிக்கிறார்களோ, எவை ஆகாயத்தில் அதிகப் பிரிவுகளாய்ப் பாய்ந்து கொண்டிருக்கின்றவோ, எவை பூமியை ஜலமயமாய்ச் செய்கின்றனவோ, சுத்தமான அந்த ஜலங்கள் இவ்வுலக மற்றும் விண்ணுலக சுகங்களை அளிக்கட்டும். ஜலதேவதையே, மங்களகரமான உன் கண்களால் என்னை நோக்கு. மங்களகரமான

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தேகத்தால் என்னைத் தொடு. மூத்தவராதலால் அக்னி எனும் பெயருள்ள (மற்றும் ஜலத்தில் இருக்கும்) எல்லோரையும் அழைக்கிறேன். என்னில் பொலிவு, பலம் மற்றும் திடத்தன்மை உண்டுபண்ண வேண்டும். கால் விலங்கிலிருந்து விடுபட்ட மனிதனைப் போல், வியர்வை போக மனிதன் குளித்து அழுக்கிலிருந்து விடுபட்டவனைப் போல், நெய் வடிகட்டும் துணியால் சுத்தமானதைப் போல், ஜலங்கள் (தீர்த்தாபிமானி தேவதைகள்) என்னைப் பாவத்திலிருந்து விடுதலை செய்யட்டும்.

"ஸஜலம் கரம் நாஸாக்$_3$ரே த்$_4$ருத்வா"

7. அக$_4$மர்ஷணம் : ருதம் சேதி த்ருசஸ்ய அகமர்ஷணருஷி: | ப$_4$ாவவ்ருத்தோ தே$_3$வதா | அனுஷ்டுப்$_2$சந்த$_3$: | பாபபுருஷவிஸர்ஜனே வினியோக: ||

ஓம் ருதம் ச ஸத்யம் சாபீ$_4$த்த$_2$ாத் தபஸோத்$_4$யஜாயத | ததோ ராத்ர்ய ஜாயத ததஸ் ஸமுத்ரோ அர்ணவ: ||1|| ஸமுத்$_3$ராத$_3$ர்ணவாத$_3$தி$_4$ ஸம்வத்ஸரோ அஜயாத | அஹோராத்ராணி வித$_3$த$_4$த்$_3$விஶ்வஸ்ய மிஷதோ வஶீ ||2|| ஸூர்யாசந்த்ரமஸௌ த$_4$ாதா யத$_2$ாபூர்வமகல்பயத்| தி$_3$வம்ச ப்ருதிவீம் சாந்தரிக்ஷமதோ ஸ்வ: ||3||

தஜ்ஜலமனவலோகயன் நாஸிகாந்தம் நீத்வா தக்ஷிணநாஸாபிலாத் வாயுத்வாரா பாபபுருஷம் நி:ஸாரிதம் ப$_4$ாவயன் வாமப$_4$ாகே ஜ்வலத்$_3$வஜ்ரஶிலாம் விசிந்த்ய தஸ்யாம் விஸ்ருஜ்ய.

அகமர்ஷணம்: "ருதம்ச" எனும் மூன்று ருக்குகள் கொண்ட ஸூக்தத்திற்கு ருஷி அகமர்ஷணன், தூயபாவம், பக்தியுள்ளவர்களில் இருப்பவனாதலால் அப்படியே, ப$_4$ாவ = பதார்த்தங்களை, வ்ருத்த = பிறக்கச் செய்த (உலக) கர்த்ருவானதால், "ப$_4$ாவவ்ருத்த" என்று பெயருள்ள பரமாத்மா தேவதை, ச$_2$ந்த$_3$ஸ் அனுஷ்டுப், பாபபுருஷனை துரத்துவதில் இந்த மந்திரத்தை உபயோகிக்க வேண்டும். ஓரே வகையாயிருக்கும் மற்றும் சத்யமான உலகம் பகவானின் மாசற்ற

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிரதிஜ்ஞை சக்தியால் உண்டானது. இந்த எண்ணத்தின் சக்தியினாலேயே இரவு தோன்றியது. இதனால் எங்கும் பரவியிருக்கும் ப்ரளயார்ணவம் (அழிவு சமுத்திரம்) உண்டாயிற்று. இந்த அழிவுக்கடலில் நான்முகன் (பிரம்ஹா) தோன்றினான். அனைத்துப் பிராணிக்கூட்டங்களுக்கு யஜமானனான, ஸ்ருஷ்டிகர்த$_1$னான பகவான் இராப்பகல்களை உண்டாக்கவே சூரிய சந்திரர்களையும், ஆகாயத்தையும், பூமியையும், அந்தரிக்ஷம், (atmosphere - வாயுமண்டலம்) ஸ்வர்க$_3$ லோகத்தையும் (முந்திய கல்பத்தில் செய்ததைப் போல்) நிர்மாணம் செய்தான். இந்த மந்திரத்தைக்கூறிக் கையில் ஜலத்தை எடுத்துக் கொண்டு அதைப்பார்க்காமல் மூக்கின் நுனிவரை எடுத்துச் சென்று மூக்கின் வலது துவாரத்தால் காற்றின் வழியால் பாபபுருஷன் வெளியே தள்ளப்பட்டான் (வெளியேற்றப்பட்டான்) என்று பாவித்து இடது பக்கத்தில் மின்னும் "வஜ்ரஶிலா" வைக் கற்பனை செய்து அங்கு ஜலத்தைப் போட்டு, ஆசமனம் செய்து ப்ராணாயாமம் செய்ய வேண்டும்.

8. அர்க்$_4$யப்ரத$_3$ானம் : ஆசம்ய \ ப்ராணாநாயம்ய \ ப்ரணவஸ்ய பர$_3$ப்ரஹ்மருஷி: பரமாத்மா தே$_3$வதா தை$_3$வீ க$_3$ாயத்ரீ ச$_2$ந்த$_3$: வ்யாஹ்ருதீனாம் ப்ரஜாபதி ருஷி: அக்$_3$னிவாயுஸூர்யா தேவதா: க$_3$ாயத்ர்யுஷ்ணிக்: அனுஷ்டுப்ச$_2$ந்த$_3$ாம்ஸி \ காயத்ர்யா விஶ்வாமித்ர ருஷி: ஸவிதா தே$_3$வதா \ க$_3$ாயத்ரீ ச$_2$ந்த$_3$: ப்ராதரர்க்$_4$யத$_3$ானே வினியோக$_3$:\ ஓம் பூர்புவ: ஸ்வ: ஓம் தத்ஸவிதுவரேண்யம் ப$_4$ர்கே$_3$ா தே$_3$வஸ்ய தீ$_4$மஹி \ தி$_4$யோ யோ ந: ப்ரசோத$_3$யாத்\

ஸூர்யநாராயணாயேத$_3$மர்க்$_4$யம் த$_3$த்தம் ந மம | இதி த்ரி:| அர்க்$_4$ய த்ரயாந்தே ப்ராதஸ்ஸந்த்யாகாலாதிக்ரம தோஷபரிஹாரார்த்தம் சதுர்த$_2$ார்க்$_4$ய ப்ரத$_3$ானம் கரிஷ்யே |

காயத்ரீ மந்த்ரத்தால் மும்முறை ஸூர்ய நாராயணனுக்கு அர்க்யத்தை கொடுக்க வேண்டும். (காயத்ரீ மந்திரத்தின் பொருள் பின்னால் தரப்பட்டுள்ளது. பார்க்கவும்). அர்க்$_4$யத்ரயமான பிறகு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸந்த்$_4$யா காலத்தைத் தாண்டியதால் அந்த தோஷ பரிகாரத்திற்காக நான்காம் முறை அர்க்யத்தைக் கொடுக்க வேண்டும். இதற்கு ப்ராயஶ்சித்த அர்க்யம் என்று பெயர்.

ஆசமனம் செய்த ஜலத்தால் அர்க்யம் கொடுக்கக் கூடாது. அர்க்யத்திற்காகத் தனியாகப் பாத்திரத்தில் ஜலம் வைத்துக் கொள்ள வேண்டும். அந்த ஜலத்தில் பின்னால் வரும் படத்தில் உள்ளபடி யந்திரம் வலது கை சிறுவிரலின் நுனியால் எழுத வேண்டும்.

கட்டை விரல், ஆள்காட்டி விரல்களின் தொடுகை நிகழாமல் இரண்டு கைகளால் ஜலத்தை எடுத்துக் கொண்டு காயத்ரீ மந்திரத்தால் ஜபித்து இரண்டு பாதங்களைச் சமமாக வைத்துக் குதிகால்களை உயர்த்தி சூரியனுக்கு எதிரில் நின்று கொண்டு கைகளை மேலே கண்கள் வரை உயர்த்தி மும்முறை சூரிய நாராயணனுக்கு அர்க்யத்தை கொடுக்க வேண்டும். இதற்கு ப்ரமாணம் கீழே உள்ள "வாசஸ்பதி" வசனம் ஆகும்.



கராப்$_4$யாம் தோயமாத$_3$ாய க$_3$ாயத்$_3$ர்யா சாபி$_4$மந்த்$_1$ரிதம் |
ஆதி$_3$த்யாபி$_4$முக$_2$ஸ்தி$_2$ஷ்ட$_2$ம்ஸ்த்ரிரூர்வத்$_4$வமத சோத்க்ஷிபேத் ||
ப்ராதர்மத்$_4$யாஹ்னயோஸ்திஷ்$_2$டன் ஸாயமாஸீன ஏவ ச ||

என்று பிரமாணமிருப்பதால் காலை, மத்யான்ன ஸந்த்யாவின் அர்க்யத்தை நின்று கொடுக்க வேண்டும். சாயங்காலம் உட்கார்ந்து கொடுக்க வேண்டும். ஜலமத்$_4$யே ஜலம் க்ஷிபேத் எனும் சொல்படி தனியான ஜலத்தினால் அர்க்$_4$யம் தரவேண்டும். தனியாக ஜலம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இல்லையேல் தூய இடத்தை ஜலத்தால் தெளித்து அந்த இடத்தில் அர்க்ய ஜலத்தைப் போடவேண்டும். ஜலா$_4$பாவே ஶுசிஸ்த$_2$ளம் எனும் சாஸ்த்ரம் உண்டு. சாயங்காலம் நதி வெள்ளத்தில் அர்க்யம் தரும்பொழுது நின்று கொடுக்கலாம்.

வேறு இடத்தில் சந்த்யாவந்தனம் செய்யும் பொழுது உட்கார்ந்து கொடுக்க வேண்டும். அப்பொழுது காலை, மத்தியான்னம் போல ஜலத்தில் அர்க்யம் கொடுக்காமல் சுத்தமான ஸ்தல (இடம்)த்தில் தெளித்து அர்க்யத்தைக் கொடுக்கவேண்டும். காலை வேளையில் சிறிது குனிந்தும், மத்யானத்தில் நேராக நின்றும், சாயங்காலம் நேராக நின்றும் அர்க்யத்தைக் கொடுக்கவேண்டும்.

<u>மாத்$_4$யாஹ்னிகஸந்த்$_4$யாவந்த$_3$னே விஶேஷ: |</u>

அர்க்யப்ராதன ஸமயே படிதவ்யா மந்த்ரா: ||

ஹம்ஸ ஶ்ஶுசிஷதி$_3$த்யஸ்ய மந்த்ரஸ்ய கெ$_3$ளதம புத்ரோ வாமதே$_3$வருஷி:

ஸூர்யோ தே$_3$வதா, ஜக$_3$தீ ச$_2$ந்த$_3$: மாத்$_4$யாஹ்னி கார்க்$_4$யப்ரதானே வினியோக$_3$: |

ஓம் ஹம்ஸ : ஶுசிஷத்வஸுரந்தரிக்ஷஸத்$_3$தே$_4$ாதா வேதி$_3$ஷத$_3$தி$_3$தி$_2$ர்து$_3$ரோணஸத் |

ந்ருஷத்$_3$வரஸத்$_3$ருதஸத்$_3$வ்யோமஸத$_3$ப்$_3$ஜா கே$_3$ாஜா ருதஜா அத்$_3$ரிஜா ருதம் ப்ருஹத் ||1||

என்று சொல்லி முதல் அர்க்$_4$யம் கொடுக்கவும்.

ஆக்ருஷ்ணேன ஹிரண்யஸ்தூப ஸவிதா த்ரிஷ்டுப் மாத்யாஹ்னிகார்க்ய ப்ரதானே வினியோக: |

ஓம் ஆக்ருஷ்ணேன ரஜஸா வர்த$_1$மானோ நிவேஶயன்னம்ருதம் மர்த்$_1$யம்ச |

ஹிரண்யயேன ஸவிதா ரதேனா SSதே$_3$வோ யாதி புவனானி பஶ்யன் ஓம் ||2|| என்று கூறி இரண்டாம் அர்க்$_4$யம் கொடுக்கவும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தத்ஸவிதுரித்யஸ்ய மந்த்ரஸ்ய விஶ்வாமித்ரருஷி: காயத்ரீ ச$_2$ந்த$_3$:| ஸவிதாதே$_3$வதா |

மாத்$_4$யாஹ்னிகார்க்$_4$யப்ரத$_3$ானே வினியோக$_3$: |

ஓம் பூர்புவ:ஸ்வ: ஓம்தத் ஸவிதுர்வரேண்யம் | ப$_4$ர்கே$_3$ா தே$_3$வஸ்ய தீ$_4$மஹி | தி$_4$யோ யோ ந: ப்ரசோத$_3$யாத் ||3||

(ஸாயம் ஸந்த்யாயாம் விஶேஷ:- சாயங்காலம் மேற்கே பார்த்துக் கொண்டு அர்க்யம் கொடுக்க வேண்டும்)

யஜுர் வேதீய மத்$_4$யாஹ்ன ஸந்த்$_4$யாவந்த$_3$னே விஶேஷ:- ருக்$_3$வேத$_3$ மாத்யாஹ்னீ கஸந்த்யாவந்தனத்தில் உள்ளபடி ஹம்ஸ முதலான மந்திரங்களால் அர்க்யங்களைக் கொடுக்க வேண்டும்.)

(மத்யாஹ்ன அர்க்ய ப்ரதானம்: ஹம்ஸ மந்த்ர முதல் ஆக்ருஷ்ணேன ரஜஸா மந்த்ரத்தினால் மற்றும் காயத்ரீ மந்த்ரத்தாலும் முறையே மூன்று அர்க்யங்களைக் கொடுக்க வேண்டும். இங்கு காலாதிக்ரமமானால் (மீறினால்) மீண்டும் காயத்ரீயால் நான்காவது அர்க்யத்தைக் கொடுக்க வேண்டும். இப்படிச் செய்வது மேலானது. ஹம்ஸ மந்திரத்திற்கு கௌதமபுத்திரன் வாமதேவன் ருஷி, சூரியன் தேவதை. ஜக$_3$தீச$_2$ந்த$_3$ஸ். மாத்யாஹ்னிக அர்க்யப்ரதானத்தில் உபயோகிக்க வேண்டும்)

ஹம்ஸமந்த்ரத்தின் பொருள்: ஹம்ஸ:= தோஷமற்றவன், ஶுசிஷத்=சுத்தமான வாயுதேவருடன் நெருங்கியவன், வஸு:= ஆனந்தங்கள் உள்ளவன், அந்தரிக்ஷஸத்=வாயு மண்டலத்திலிருப்பவன், சிவனில் இருப்பவன், ஹோதா = அனைத்து இந்திரியங்களிலிருந்தும் பரிசயமுள்ளதை ஹோமம் செய்பவன், வேதி$_3$ஷத் = வேதிகையில் பூஜை கொள்ள அமர்ந்தவன், அதி$_3$தி$_2$: = விசாலமான அன்னத்தின் யஜமானன். து$_3$ரோணஸத் = த்ரோண கலசத்தின் சோமரஸத்தில் இருப்பவன், ந்ருஷத் = மானவரில் உள்ளவன், வரஸத் = (மானிடரைவிட) உயர்ந்த தேவதைகளுக்கு நெருங்கியவன், ருதஸத் = மூன்று (பூ$_4$த, ப$_4$வ்ய,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

வர்த$_1$மான) காலத்தில் சத்யமான வேதத்தில் இருப்பவன், வ்யோமஸத் - வ்யோம = எங்கும் வியாபித்திருக்கும் இயற்கையில் வாசம் செய்துகொண்டிருப்பவன், எல்லாவற்றிற்கும் அடையுமிடமான ஸ்ரீதேவியில் வாசம் செய்பவன்.

அப்$_3$ஜா - அப் = ஜலத்தில், ஜா: = பிறந்த ப்ரம்மாண்டத்தில் அல்லது ஹ்ருதய கமலத்தில் உட்கார்ந்தவன், கோ$_3$ஜா: = வேதங்களிலிருந்து வந்த ஞானத்தில் இருப்பவன் பசுவின்பாலில் இருப்பவன், அத்$_3$ரிஜா:= மேருமலையிலிருக்கும் பிரம்மதேவனில் இருப்பவன், ருதஜா:= கடவுளை அடைந்த முக்தர்களின் சந்தோஷங்களிலிருப்பவன், ருதம்= வேதங்களால் அறியப்படும், ப்ருஹத் = நிறைந்த குணமுள்ளவன்.

'ஆக்ருஷ்ணேன' மந்த்ரத்தின் பொருள் : சூரியன் சரியான காலத்தில் நீலநிற ஆகாயத்தில் உதித்து, தேவதைகளையும் மற்றும் மானிடர்களையும் (மேலான கர்மங்களில்)தூண்டி, தங்கம் போல் மின்னும் மண்டலத்திலிருந்து பார்வைக்குக் காணப்படுகிறான். இந்த மந்திரத்தால் இரண்டாம் முறை அர்க்யத்தைக் கொடுக்க வேண்டும். காயத்ரீ மந்த்ரத்தால் மூன்றாவது அர்க்யத்தைத் தரவேண்டும். மத்தியான்ன காலம் சிலர் ஒரே அர்க்யத்தையும் சிலர் இரண்டு அர்க்யங்களையும் மற்றும் சிலர் மூன்று அர்க்யங்களையும் தருகிறார்கள். தேச பேதத்தைப் பொறுத்து ஸம்பிரதாயம் (வழக்கம்) வேறு வேறாயிருக்கிறது. சிலர் ப்ராயஶ்சித்தார்த$_2$ அர்க்யம் கொடுப்பதில்லை. ஒரே அர்க்யம் தருபவர் ஹம்ஸ மந்த்ரத்தாலேயே கொடுக்கிறார்கள்.

அதிகாலை மற்றும் மத்தியான்னம் அர்க்யத்தை நின்று கொடுக்க வேண்டும். சாயங்காலம் உட்கார்ந்துகொண்டு கொடுக்க வேண்டும். யஜுஃஸ்ஸந்த்யா வந்தனத்தில் விசேஷம் புனர்மார்ஜனம் ஆன பிறகு உடனே அர்க்யப்ராதனத்தையே செய்ய வேண்டும். அகமர்ஷண சூக்தத்தால் நடக்க வேண்டிய பாபபுருஷ வெளியேற்றம் புனர்மார்ஜன

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

மந்திரங்களாலேயே உண்டாகுமென்று யஜுர்வேதிகள் அகமர்ஷண ஸூக்தத்தைச் சொல்வதில்லை.

ஹ்ருதயஸ்தாது க$_3$ாயத்ரீ ஹ்ருத்$_3$கு$_3$ஹாமுக$_2$நிஸ்ருதா | ஹத்வா ஹ்யாதித்யஶத்ரூம்ஶ்ச விஶ்வஸ்வ ஹ்ருதயம் மம| உத்திஷ்டோ$_2$த்திஷ்ட$_2$ க$_3$ந்த$_1$வ்யம் புனரா$_3$கமனாய ச | உத்திஷ்ட$_2$ தே$_3$வி ஸ்தா$_2$தவ்யம் ப்ரவிஶ்ய ஹ்$_3$ரு$_1$தயம் மம| இதி ப்ரார்த$_2$யேத்| அஸாவாதி$_3$த்யோ ப்$_3$ரஹ்ம | கேஸவாதித்வாதஸ தர்பணம் ப்ரத்யஹம் குர்யாத் | ஶுக்லபக்ஷே கேஶவாதி$_3$த்$_3$வாத$_3$ஶ தர்பணம் | க்ருஷ்ணபக்ஷே ஸங்கர்ஷணாதி$_3$ த்$_3$வாத$_3$ஶ தர்பணம் | ஸூர்யாதி$_3$நவக்$_3$ரஹதர்ப$_1$ணம் ப்ரத்யஹம் குர்யாத் |

9. பூ$_4$தோச்சாடனம்

ஆசம்ய - ப்ராணானாயம்ய - அபஸர்பந்த்வித்யஸ்ய வாமதே$_3$வோ பூ$_4$தான்யநுஷ்டுப் | பூ$_4$தோச்சாடனே வினியோக$_3$:| அபஸர்ப$_1$ந்து யே பூதா யே பூதா பு$_4$வி ஸமஸ்தி$_2$தா:| யே பூதா விக்$_4$னகர்த$_1$ாரஸ்தே நஶ்யந்து$_1$ ஶிவாஜ்ஞயா | அபக்ராமந்து$_1$ யே பூதா: க்ரூராஶ்சைவ து ராக்ஷஸா:| யே சாத்ர நிவஸந்த்$_1$யேவ தே$_3$வதா பு$_4$விஸந்ததம்| தேஷாமப்யவிரோதே$_4$ன ப்$_3$ரஹ்மகர்ம ஸமாரபே$_4$ | (இதி சே$_2$ாடிகா முத்$_3$ரயா வாமப$_4$ாகே$_3$ ஸமஸ்தபூ$_4$தோச்சாடனம் க்ருத்வா)

ஓ! இதயத்திலிருக்கும் காயத்ரீ தேவதையே, நீ என் இதய குகையிலிருந்து வெளிவந்து சூரியனின் பகைவர்களைக் கொன்று என் இதயத்தில் மறுபடியும் பிரவேசம் செய். காயத்ரீ பெயருடைய பரமாத்மாவே எழுந்திரு| எழுந்திரு| பகைவர்களை நாசம் செய்யச் சென்று மறுபடியும் மறுபடியும் என் இதயத்தில் வந்து அங்கு ப்ரதிஷ்டை செய்யப்பட்டவனாய் இரு - என்று ப்ரார்த்தனை செய்ய வேண்டும். நமக்குத் தோன்றும் இந்த சூரியன் பரப்ரம்மனின் வாசஸ்தலமாய் இருக்கிறது. (இந்த மந்திரத்தால் தன்னைச் சுற்றிக் கொண்டு பின் இரண்டுமுறை ஆசமனம் செய்ய வேண்டும். பிறகு சுக்லபக்ஷத்தில்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(வளர்பிறை) கேஶவாதி த்வாதச தர்பணத்தையும் செய்ய வேண்டும். க்ருஷ்ணபக்ஷத்தில் (தேய்பிறை) ஸங்கர்ஷண்ணாதி த்வாதச தர்ப$_1$ணம் செய்ய வேண்டும். இரண்டு பக்ஷங்களிலும் நவக்ரஹ தர்ப$_1$ணம் செய்யவேண்டும். ஆசமனம் செய்து மும்முறை ப்ராணாயாமம் செய்ய வேண்டும்).

'அபஸர்ப$_1$ந்து' எனும் மந்திரத்திற்கு வாமதேவன் ருஷி, பூதங்களே இந்த மந்திரத்தால் அறியப்படுபவை. அனுஷ்டுப் சந்தஸ். இந்த மந்திரத்தை பூதோச்சாடனத்தில் (பேய் முதலியவைகளை ஓட்டுதல்) உபயோகிக்க வேண்டும். இந்த பூத ராக்ஷஸர்களின் பகை இல்லாமல் இருப்பதால் பூமியில் நிரந்தரமாய் இருக்கும் தேவதைகளின் சகாயத்தால் வைதிக கர்மங்களை தொடங்குகிறேன். இப்படிச் சொல்லி சோடிகா (கைந்நொடிப்பு) முத்ரையால் இடது பக்கம் அனைத்து பூதங்களை ஓட்டுதல் (பூதோச்சாடனத்தை) செய்ய வேண்டும்.

10. ஆஸன ஶுத்தி ! பூப்ரார்தனை

ப்ருத்$_2$வீதி மந்த்ரஸ்ய மேருப்ருஷ்ட$_2$ ருஷி:| கூர்மோ தே$_3$வதா |
ஸுதலம் ச$_2$ந்த$_3$: ஆஸனே வினியோக$_3$:| ப்ருத்$_2$வி த்வயா த்$_4$ருதா லோகா
தேவி த்வம் விஷ்ணுனா த்$_4$ருதா | த்வம் ச$_4$தாரய மாம் தே$_3$வி
பவித்ரம் குரு சாஸனம் | மாஞ்ச பூதம் குரு த$_4$ரே நதோSஸ்மி
த்வாம் ஸுரேஸ்வரி |
ஆஸனே ஸோமமண்ட$_3$லே கூர்மஸ்கந்தே$_4$ உபவிஷ்டோஸ்மி |
இத்யாஸனம் பரிகல்ப்$_1$ய பூ$_4$ர்பூ$_4$வஸ்ஸ்வரோம் அனந்$_1$தாஸனாய நம :|

11. அங்க$_3$ந்யாஸம், கரந்யாஸம்

த்ரி: ப்ராணானாயம்ய, தத்ஸவிதுரங்கு$_3$ஷ்ட$_2$ாப்$_4$யாம் நம : வரேண்யம் தர்ஜனீப்$_4$யாம் நம : ப$_4$ர்கே$_3$ா தே$_3$வஸ்ய மத்$_4$யமாப்$_4$யாம் நம :
தீ$_4$மஹி அனாமிகாப்$_4$யாம் நம : தி$_4$யோ யோ ந :
கனிஷ்டி$_2$காப்$_4$யாம் நம :

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ப்ரசோத$_3$யாத் கரதலகரப்ருஷ்ட$_2$ாப்$_4$யாம் நம: இதிகரந்யாஸ:||
தத்ஸவிதுர் ஹ்ருத$_3$யாய நம: வரேண்யம் ஶிரஸே ஸ்வாஹா
ப$_4$ர்கே$_3$ா தே$_3$வஸ்ய ஶிக$_2$ாயை வௌஷட், தீ$_4$மஹி கவசாயஹும்
தி$_4$யோ யோ ந: நேத்ராப்$_4$யாம் வஷட், ப்ரசோத$_3$யாத்
அஸ்த்ராயப$_2$ட், பூர்புவஸ்ஸ்வரோம் இதி தி$_3$க்$_3$ப$_3$ந்த$_4$:

(இத்யங்க$_3$ ந்யாஸ:)||

ப்ருத்வீ மந்த்ரத்திற்கு 'மேருப்ருஷ்$_2$ட$_2$' என்ற நாராயணன் ருஷி, கூர்மன் தேவதை, ஸுதலம் சந்தஸ். ஜபானுஷ்டானம் முதலிய வைதி$_3$க கர்மானுஷ்டான காலத்தில் ஆஸனம் போட்டுக் கொண்டு அமரும் சமயத்தில் சொல்ல வேண்டிய மந்திரம் இது.

ஓ! பூமி தேவதையே! உன்னால் அனைத்து லோகங்கள் தாங்கப்பட்டுள்ளன. நீ விஷ்ணுவினால் தாங்கப்பட்டிருக்கிறாய். நீ என்னைத் தாங்கு. மற்றும் என் இருக்கையை (ஆஸனம்)ப் புனிதமாக்கு. என்னையும் புனிதம் செய். ஓ! தேவதைகளில் உயர்ந்தவளான பூமியே, உன்னை வணங்குகிறேன். சந்த்ரமண்டலாகாரமான கூர்மாஸனத்தில் அமர்ந்துள்ளேன். (இந்த மந்திரத்திற்கூறியபடி ஆஸனத்தைக் கற்பனை செய்து கொண்டு) "பூ$_4$ர்பு$_4$வ: ஸுவ: மற்றும் "ஓம்" இவற்றால் வாச்யனான அனந்தனின் ஆஸனத்திற்கு வணக்கமும், மும்முறை ப்ராணாயாமமும் செய்ய வேண்டும். தத்ஸவிதுரங்கு$_3$ஷ்ட$_2$ாப்$_4$யாம் நம: முதலிய மந்திரங்களால் அந்தந்த அங்கந்யாஸம் (உறுப்புகளைத் தொடுதல்) செய்துகொள்ள வேண்டும். மேலே சொன்ன மந்திரங்களினால் முறையே அங்கு$_3$ஷ்ட$_2$ (கட்டைவிரல்) தர்ஜனீ (ஆள்காட்டி விரல்), மத்யவிரல் (நடுவிரல்), அனாமிகா (மோதிரவிரல்) மற்றும் கனிஷ்ட (சிறுவிரல்) இவைகளைத் தொட வேண்டும். பிறகு உள்ளங்கை மற்றும் கை பின்பக்கம் தொட்டு மேலே சொன்ன மந்திரங்களால் இதயம் (மார்பு) முதலிய உறுப்புகளைத் தொட வேண்டும். பிறகு "அஸ்த்ராய ப$_2$ட்" என்று கைதட்டி "ஓம் பூ$_4$ர்பு$_4$வ: ஸுவரோம்" எனும் மந்திரத்தால் "தி$_3$க்$_3$ப$_3$ந்த$_4$ன"த்தைச் (திசைகளைக் கட்டல்) செய்ய வேண்டும். இந்தக்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

கரந்யாஸ, அங்கந்யாஸங்களால் தேகம் புனிதமடைகிறது என்று பாவனை செய்ய வேண்டும். "அஸ்த்ராயபட்" என்ற மந்திரத்தால் தன்னுள்ளிருக்கும் பாவம், தன்வசமுள்ளபாவிகள் வெளியேற்றப்பட்டார்கள் என்று நினைக்க வேண்டும். திக்பந்தனம் செய்வதால் புதிய பாவ விசாரங்கள் தன் மனதில் வரக்கூடாது என்ற திடமான மனவுறுதியுள்ளவனாக வேண்டும். அப்படியே பாவிகளான மக்கள் தன் அருகாமையில் என்றும் வரக்கூடாது என்று பிரார்த்தனை செய்து கொள்ள வேண்டும்.

12. ஆவாஹனம் :

ஆக$_3$ச்ச$_2$ வரதே$_3$ தே$_3$வி ஜபே மே ஸன்னிதெ$_4$ள ப$_4$வ

கா$_3$யந்த$_1$ம் த்ராயஸே யஸ்மாத் க$_3$யாத்ரீத்வம் தத: ஸ்ம்ருதா

(இத்யாவாஹ்ய)

ஜப : ப்ரணவஸ்ய பரப்$_3$ரஹ்ம ருஷி: பரமாத்மா தே$_3$வதா |

தை$_3$வீக$_3$ாயத்ரீ ச$_2$ந்த$_3$:| வ்யாஹ்ருதீனாம் ப்ரஜாபதி ருஷி:|

அக்$_3$னிவாயுஸுர்யா தே$_3$வதா:| க$_3$ாயத்ர்யுஷ்ணிக$_3$னுஷ்டுப்

ச$_2$ந்த$_3$ாம்ஸி |

க$_3$ாயத்ர்யா விஶ்வாமித்ர : ருஷி:ஸவிதா தே$_3$வதா |

க$_3$ாயத்ரீ ச$_2$ந்த$_3$:| ஜபே வினியோக$_3$:|

13. த்$_4$யானம் :

த்$_4$யேயஸ்ஸதா ஸவித்ருமண்ட$_3$லமத்யவர்தீ$_1$ நாராயண: ஸரஸிஜாஸன ஸன்னிவிஷ்ட:| கேயூரவான் மகரகுண்ட$_3$லவான் கிரிடீ ஹாரீ ஹிரண்யமயவபுர்த்$_4$ருதஶங்க$_2$சக்ர:| ரக்தோவர்ண: அக்$_3$னி: முகம் ப்$_3$ரஹ்மாஶிர: விஷ்ணுர்ஹ்ருதயம் ருத்$_3$ரோ லலாடம் ப்ருத்வீகுக்ஷி: த்ரைலோக்யம் சரணா: ப்ராணாபான வ்யானோத$_3$ான ஸமானா ஸப்ராணா ஸாங்க்யாயனஸ கோ$_3$த்ரம் க$_3$ாயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதீ, சதுர்விம்ஶத்யக்ஷரா, த்ரிபத$_3$ா ஷட்குக்ஷி: பஞ்ச சீர்ஷோபநயனே வினியோக:|ஸவித்ருநாமகஸ்ரீலக்ஷ்மீ நாராயணப்ரேரணயா

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸவித்ருநாமகஸ்ரீலக்ஷ்மீநாராயணப்ரீர்த்யர்த₂ம் யத₂ாஶக்தி ஸங்க்யயா க₃ாயத்ரீமந்த்ரஜபம் கரிஷ்யே |

ஓம்பூ₄ர்பு₄வ: ஸ்வ:| தத்ஸவிதுர்வரேண்யம் | ப₄ர்கே₃ா தே₃வஸ்ய தீ₄மஹி | தி₄யோ யோ ந: ப்ரசோத₃யாத் |

கரம், நாபி₄ஸம்மிதம் க்ருத்வா ஜபேத் அனாமிகா மூலாத₃ாரப்₄ய மத்₄யமாமூலபர்யந்த₁ம் ப்ரதக்ஷிணம் த₃ஶபி₄ அங்கு₃ஶீபர்வபி₄: கணயேத்புன: ப்ராணாயாம: கரந்யாஸ: அங்கந்யாஸ: த்₄யானம்ச |

(மாத்₄யாஹ்னாத ஸந்தி₄யாயாம் விஶேஷ: காயத்ரீஜபம் செய்யும் போது கையை இதயத்திற்குச் சமமாக வைத்துக்கொண்டு ஜபிக்க வேண்டும். மற்றவையெல்லாம் காலை ஸந்த்₄யாவந்தனத்தைப் போல் இருக்கும்)

(ஸாயம் ஸந்த்யாயாயாம் விஶேஷ: கையை முகத்தின் எதிரில் பிடித்து முகத்தை தாழ்த்தி ஜபம் செய்ய வேண்டும்)

14. ஆவாஹனம் :

ஓ ! வரத்தை அருளும் தேவியே ! தயை புரி. என் எதிரில் ஜபத்தின் போது இரு. உன் குணங்களை விளக்குபவனை நீ காபாய்யாதலால் நீ காயத்ரீ என்று நினைக்கப்படுகிறாய் (இந்த மந்திரத்தால் காயத்ரீ தேவியை ஆவாஹனம் (inviting) செய்து :

ஜப :

ப்ரணவத்திற்குப் பரப்₃ரஹ்மம் ருஷி, பரமாத்மா தேவதை, தை₃வீ காயத்ரீ சந்தஸ்; வ்யாஹ்ருதிகளுக்கு ப்ரஜாபதி ருஷி, அக்னி, வாயு, ஸூர்ய ஸப்தங்களின்வாச்யனான பரமாத்மா தேவதை. க₃ாயத்ரீ உஷ்ணிக், அனுஷ்டுப் ச₂ந்த₃ஸ்; காயத்ரீ மந்திரத்திற்கு விஶ்வாமித்ரன் ருஷி, ஸவித்ரு நாமக பரமாத்மா தேவதை. காயத்ரீ சந்தஸ், ஜபத்தில் வினியோகம் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

த்யானம் :

(காயத்ரீ ப்ரதிபாத்ய தேவதையை த்யானம் செய்ய வேண்டும். சூரிய மண்டலத்தின் நடுவில் தாமரை ஆஸனத்தில் அமர்ந்திருக்கும்; கேயூர(கடக)ம், மகரகுண்ட₃லம் (முதலை போன்ற காது ஆபரணம்), கிரீடம் (மகுடம்) போட்டுக் கொண்ட (சுமந்த); மாலை (வைஜயந்தீ) அணிந்த, தங்கநிறம் கொண்ட, சங்கு, சக்ரம் தாங்கிய நாராயணனை எப்பொழுதும் நினைக்க வேண்டும் (த்யானம் செய்ய வேண்டும்). இந்த நாராயணனின் நிறம் சிவப்பு. அவன் வாயில் அக்னியும், சிரத்தில் (தலை) பிரம்மனும், இதயத்தில் விஷ்ணு ஸ்வரூபமான "ஸ்ரீவத்ஸ"மும் (விஷ்ணுவின் ஒரு மறு உரு) நெற்றியில் ருத்ரன், வயிற்றில் பூமி, கால்களில் முவ்வுலகம் உள்ளது. இவன் ப்ராணாபான வ்யாநோதான ஸமான எனும் பஞ்சப்ராணாத்மக (ஐந்து ப்ராணர் ப்ராண, அபான, வ்யான, உதான, சமானா) வாயு தேவருடன் கூடி இருப்பான். ஞானத்தை (அறிவை) தஞ்சம் (அடையுமிடமாக) கொண்டவரைத் தன் கோத்திரத்தில் சேர்ந்தவனாகச் செய்து கொள்கிறான். என்றால் அறிஞர் வம்சத்தில் பிறப்பான் அல்லது அவருக்குக் காட்டிக் கொள்கிறான். அவனே காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதீ ஶப்தவாச்யனாய் இருக்கிறான். இருபத்து நான்கு எழுத்துள்ள, மூன்று அடிகொண்ட, காயத்ரீ மந்த்ரத்தில் அறியப்படுகிறவனாய் இருக்கிறான். காயத்ரீ, பூத, வாக்(பேச்சு), ப்ருத்வீ (பூமி), ஶரீர, ஹ்ருதயங்களுடன் ஆறு உறுப்புகள் உள்ளவனாய் அறியப்படுகிறவனாய் இருக்கிறான். இவன் நிறைந்தவனாதலால் காம, க்ரோதாதிகளை (விருப்பம், கோபம்) விழுங்கி தோஷமற்றவனாய் இருக்கிறான். அப்படியே அனிருத்த, ப்ரத்யும்ன, ஸங்கர்ஷண, வாசுதேவ, நாராயணனென்று பஞ்ச (ஐந்து) ரூபங்களுள்ளவனாகயிவிக்கிறான். இப்படிப்பட்ட பரமாத்மா உள்ளத்தில் தங்குவதற்காக இந்த காயத்ரீ மந்திரத்தை உபயோகிக்க வேண்டும். ஸவித்ருநாமக (ஸவித்ரு என்ற என்ற பெயர் கொண்ட) ஸ்ரீலக்ஷ்மீநாராயணனின் தூண்டுதலால் ஸ்ரீலக்ஷ்மீநாராயணனின்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

திருப்திக்காக முடிந்தளவு (குறைந்தது நூறுமுறை) காயத்ரீ மந்திர ஜபத்தைச் செய்க.

'ஓம்' = நெய்யப்பட்ட வஸ்திரம்(குறுக்கு நெடுக்குமாக), முழுமையுள்ள (பூர்ணமான), பூ = பரவிய, அழிவில்லாத, புவ: = லக்ஷ்மி படைப்பு செய்யும், ஸ்வ: = சுகபூர்ணனான, சுதந்திரமான, ய: எந்தப் பரமாத்மா, ந: = நம், தி$_4$ய: = புத்தியை (அறிவை), ப்ரசோதயாத் = ஊக்குவிக்கிறானோ, தேவஸ்ய = அப்படிப்பட்ட தேவனான உயர்வான, ஸவிது: = படைப்புத்திறமை கொண்ட, சூரிய நாராயனின், தத் = அனைத்து முழுமை, அனைத்து நிரந்தரமானவனும், வரேண்யம் = மேன்மை கொண்டவரால் பூஜிக்கப்படுபனுமான, ப$_4$ர்க$_3$: ஜீவனின் அறிவு மற்றும் ஆனந்தத்தை கொடுக்க வல்ல ஒளியை, தீ$_4$மஹி = தியானம் செய்கிறோம்.



காலை காயத்ரீ ஜபத்தைச் செய்யும் பொழுது கையைத் தொப்புளுக்குச் சமமாக வைத்துக் கொண்டு கை வரைபடத்தில் காட்டியதைப் போல் அனாமிக விரலில் (4ம் விரல்) அடி பாகத்திலிருந்து நடுவிரல் அடிப்பாகம் வரை விரலின் கணுக்களை ப்ரதக்ஷிணமாய் (சுற்று) தொட்டுக் கொண்டு ஜபிக்க வேண்டும். (அனாமிக (மோதிரவிரல்) மற்றும் நடுவிரல் இவைகளின் நடு கணுக்களை தொடக்கூடாது. மற்றும் மும்முறை ப்ராணாயாமம் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

அப்படியே கரந்யாஸ, அங்கந்யாஸ, த்யான, காயத்ரீஜப (உபஸம்ஹார) முடிக்க வேண்டும்.

க$_3$ாயத்ரீஜபோபஸம்ஹாரமென்பதற்கு "அனேன யதா$_2$ஶக்தி க்ருதேன க$_3$ாயத்ரீமந்த்$_1$ரஜபேன ப$_4$க$_3$வான் ஸ்ரீஸவித்ரந்த$_1$ர்க$_3$த ஸவித்ருநாமக ஸ்ரீமன்நாராயண: ப்ரீயதாம் ப்ரீதோ பவது, ஸ்ரீக்ருஷ்ணார்ப$_1$ணமஸ்து" என்று செய்த காயத்ரீ ஜபத்தை பகவானின் சந்தோஷத்திற்காக பகவானிடம் அர்பணம் செய்வது என்பது பொருள்.

(யஜுஸ்ஸந்த்$_4$யாவந்த$_3$னே விஶேஷ:

க$_3$ாயத்ர்யாவாஹனே வக்தவ்யோ மந்த்$_1$ர: ||

ஆயாத்விதி மந்த்$_1$ரஸ்ய அந்தர்யாமீ ருஷி: அனுஷ்டுப் ச$_2$ந்த$_3$: நாராயணோ தே$_3$வதா ஆவாஹனே வினியோக$_3$: ||

ஓம் ஆயாது வரதா$_3$தே$_3$வீ அக்ஷரம் ப்ரம்ஹஸம்மிதம் | க$_3$ாயத்ரீ ச$_2$ந்த$_3$ஸாம்

மாதேதம் ப்$_3$ரஹ்ம ஜுஷஸ்வ மே | யத$_3$ஹ்னாகுருதேபாபம் ததஹ்னாத்

ப்ரதிமுச்சதே | யத்ராத்ர்யா குருதே பாபம் தத்ராத்ர்யா ப்ரதிமுச்சதே|

ஸர்வவர்ணே மஹாதே$_3$வி ஸந்த்$_4$யாவித்$_3$யே ஸரஸ்வதி|

ஓஜோSஸீதி மந்த்ரஸ்ய ப்ரஜாபதி: ருஷி : பங்க்திஶ்ச$_2$ந்த$_3$: ஸவிதாதே$_3$வதா க$_3$ாயத்ரீஸ்தோத்ரே வினியோக:

ஓம் ஓஜோஸி ஸஹோஸி ப$_3$லமஸி ப்ராஜோஸி தே$_3$வானாம் தாமநாமாஸி விஶ்வமஸி விஶ்வாயு: ஸர்வமஸி ஸர்வாயுரபி-பூரோம் க$_3$ாயத்ரீமாவாஹயாமி | ஸாவித்ரீமாவாஹயாமி | ஸரஸ்வதீ மாவாஹயாமி | சந்த ருஷீனா மாவாஹயாமி | ஶ்ரியமாவாஹயாமி காயத்ர்யா க$_3$ாயத்ரீ$_2$சந்தே$_3$ா விஶ்வாமித்ர ருஷி: ஸவிதா தே$_3$வதா அக்$_3$னிர் முக$_2$ம்| ப்$_3$ரஹ்மா ஶிரோ, விஷ்ணுர் ஹ்ருத$_3$யம்,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ருத்$_3$ர ஶி$_2$கா, ப்ருத்$_2$வீ யோனி; ப்ராணாபானவ்யானோத$_3$ான ஸமானா ஸப்ராணா ஶ்வேதவர்ண ஸாங்க்யாயனஸ கே$_3$ாத்ரா காயத்ரீ சதுர்விம்ஶத்யக்ஷரா த்ரிபதா ஷட்குக்ஷி: பஞ்$_1$சஶீர்ஷோபந$_3$யனே வினியோக$_3$:|

காயத்ரீ ஆவாஹனம் செய்யும்பொழுது சொல்லவேண்டிய மந்திரங்கள் :-

வரமளிப்பவனும், தேவர்களில் மேலானவனுமான காயத்ரீநாமக பகவான் அருள்புரியட்டும். காயத்ரீ அழிவில்லாததும், பிரம்மஸ்வருபியும் என்று பிரமாணங்களால் நிச்சயிக்கப்பட்டது. காயத்ரீ எல்லா வேதங்களின் உத்தமஸ்தானத்தைப் போலிருக்கிறாய். இந்த என் பிரார்த்தனையை (வேண்டுகோளை) தயைகூர்ந்து கொண்டாட வேண்டும் (சீராட்ட வேண்டும்). ஓ! தேவனே, உன் அருளால் மனிதனின் காலையில் செய்யும் பாவங்களையெல்லாம் பகலிலேயே விட்டு (தொலைவு) செல்கின்றன. அப்படி இரவில் செய்யும் பாவங்களெல்லாம் இரவிலேயே தொலைவில் செல்கின்றன. ஸந்த்யா கல்வியால் அறியப்படும் தேவதையான நீ கணக்கற்ற ரூபங்களுள்ளவன். தேவர்களில் உத்தமன். கல்வி அளிப்பதால் ஸரஸ்வதி என்ற சொல்லால் அழைக்கப்படுபவன். ஓஜோஸி என்ற மந்திரத்திற்கு ப்ரஜாபதி ருஷி, பங்க்தி சந்தஸ், ஸவிதா தேவதை, காயத்ரீ தேவதையைப் புகழுவதில் இந்த மந்திரம் உபயோகிக்கவேண்டும். உன்னால் தான் புலன் அங்கங்களின் சக்தி உண்டாகிறது. உன் அருளால் தான் என் உடலில் வலிமையிருக்கிறது. உன்னால் தான் எனக்கு கௌரவம், திறமை இருக்கிறது. என் பகைவர்களை உராயும் சக்தி என்னிடமுள்ளது. தேவதைகளின் வலிமை உன்னுடயதே. நீ எங்கும் நிறைந்தவன் (எங்கும் பரவியிருப்பவன்). அனைத்து உலகத்திற்கும் ஆயுள் அளிப்பவனாயிருக்கிறாய். எல்லாம் உனக்கு அடிபணிந்தது. எல்லோரின் ஆயுளைக் குறைக்கும் சக்தி உன்னிடமுள்ளது. காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதீ என்ற சொற்களால் சொல்லப்படும் உன்னை என்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

இதயக்கோவிலில் நிலைத்திருக்கப் பிரார்த்தனை செய்து கொள்கிறேன். உன்னை நிலைத்திருக்கச் செய்யும் பணியில் தேவைப்படும் புண்யத்திற்காக வைதிக ருஷிகளைப் பிரார்த்திக்கிறேன்.

இந்த காயத்ரீ மந்திரத்திற்கு காயத்ரீயே சந்தஸ். விஸ்வாமித்ரன் ருஷி. ஸவித்ருநாமக பரமாத்மாவே தேவதை. இந்தப் பரமாத்மாவின் முகத்தில் (வாயில்) அக்னியும், சிரத்தில் பிரம்மனும், இதயத்தில் விஷ்ணு ஸ்வரூபமான ஸ்ரீவத்ஸமும் (விஷ்ணுவின் ஓர் மறு), தலைமுடிச்சில் ருத்ரன், வயிற்றில் பூமியும், பாதங்களில் மூவுலகமும் இருக்கும். இந்தப் பரமாத்மா பிராணாபானவ்யானோதான ஸமான எனும் ஐந்து ப்ராணராய் வாயுதேவருடன் கூடி இருக்கிறான். இவன் வெள்ளை நிறத்துடன் கூடியவன். ஞானத்திற்காக அடைக்கலம் செல்பவரைத் தன் கோத்திரத்தோராய்ச் செய்து கொள்கிறான். என்றால் அறிவாளிகளின் குலத்தில் அவதாரம் எடுக்கிறான். அல்லது ஞானிகளுக்குக் தன்னை வெளிப்படுத்திக்கொள்கிறான். அவனே காயத்ரீ, ஸாவித்ரீ, ஸரஸ்வதீ என்ற சொற்களால் அழைக்கப்படுகிறான். இருபத்து நான்கு எழுத்துக்களுள்ள மூன்று அடிகளுடன் கூடிய காயத்ரீ மந்த்ரத்தால் அறியப்படும் இவனே காயத்ரீ, பூத, வாக், ப்ருத்வீ, சரீர, ஹ்ருதயமெனும் ஆறு காமக்ரோதாதி(கள்) (விருப்பு-வெறுப்பு) களை விழுங்கி, குற்றமற்றவனாய் இருக்கிறான். அல்லது முழு அதிகாரம், வீரியம், பெருமை, செல்வம், அறிவு மற்றும் விசேஷமான அறிவு எனும் ஆறு குணங்களுடன் உள்ளான். அனிருத்த, ப்ரத்யும்ன, ஸங்கர்ஷண, வாஸ"தேவ மற்றும் நாராயண எனும் ஐந்து ரூபங்கள் கொண்டவனாயிருக்கிறான். இப்படிப்பட்ட பரமாத்மா மனதில் நிலைத்து நிற்க இந்த காயத்ரீ மந்திரம் உபயோகம் செய்ய வேண்டும்.

14. உபஸ்த$_2$ானம்

ஜாதவேத$_3$ஸ இத்யஸ்ய மந்த்$_1$ரஸ்ய கஸ்யபருஷி: து$_3$ர்க$_3$ா ஜாதவேத$_3$ா க்$_3$னிர் தே$_3$வதா, த்ரிஷ்டுப்ச$_2$ந்த$_3$: ஸந்த்$_4$யோபஸ்த$_2$ானே வினியோக$_3$:||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஓம் ஜாதவேதஸே ஸு॒னவாம ஸோமமராதீயதோ நித$_3$ஹாதி வேத$_3$:| ஸ ந : பர்ஷத$_3$திதுர்க$_3$ாணி வி*ஶ்*வா நாவேவ ஸிந்து$_4$ம் து$_3$ரிதாத்யக்$_3$னி : ||

தச்ச$_2$ம்யோராவ்ருணீமஹே க$_3$ாதும் யஜ்ஞாய க$_3$ாதும் யஜ்ஞபதயே தை$_3$வீ ஸ்வஸ்திரஸ்து ந: ஸ்வஸதிர்மானுஷேப்$_4$ய:| ஊர்த்$_4$வம் ஜிக$_3$ாது பே$_4$ஷஜம் | *ஶ*ன்னோ அஸ்து த்$_3$விபதே$_3$| *ஶ*ம் சதுஷ்பதே$_3$|

"ஜாதவேத$_3$ஸே" என்ற மந்த்ரத்திற்குக் க*ஶ்*யபன் ருஷி, து$_3$ர்கா ஜாதவேத அக்னி நாமக பரமாத்மா தேவதை, ச$_2$ந்த$_3$ஸ் த்ரிஷ்டுப், ஸந்த்$_4$யா தேவதையின் உபஸ்தானம் (பூஜை) செய்வதில் உபயோகிக்க வேண்டும். அனைத்து யஜமானனான பரமாத்மாவுக்கு சோமத்தை (சீந்தற்கொடிநீர்) பிழிந்து கொடுப்பது, உலகத்திற்குத் தீங்கு விளைவிக்கும் ஜனங்களின் முயற்சிகளைப் பொசுக்கட்டும். அந்தத் தலைவனான அக்னிநாமக பரமாத்மா எங்களை, எங்களால் போகம் செய்ய முடியாத துயரத்தின் மூலமான அனைத்துப் பாவங்களிலிருந்தும், அக்கரைக்கு படகோட்டி படகினால் சமுத்திரத்தின் அக்கரைக்கு அழைத்துச் செல்வது போல், அழைத்துச் செல்லட்டும்.

"தச்ச்ம்யோ" என்ற மந்திரத்தினால் வி*ஶ்*வேதேவர்களின் உள் உறையும் பரமாத்மா அறியப்படுபவன். *ஶ*க்வரி சந்தஸ்: *ஶ*ம்யு:ருஷி: உபஸ்தானம் செய்வதில் (பூஜா) வினியோகம் செய்யவேண்டும். யஜ்ஞம் முதலிய அனைத்துக் கர்மங்களின் சாதனைக்காக யக்ஞபதியான நாராயணனின் விஷயத்தில் பாடுவதற்கும் (புகழவும்) அவன் விஷயத்தில் ஆனந்தக் கண்ணீர் வடித்துக் கொண்டு சுகமயமான மோக்ஷத்தை அடைவதற்கும் அந்தப் பகவானைத் தஞ்சம் புகுகிறோம். நமக்கும் மற்றும் எல்லா ஜனங்களுக்கும் நோய்க்கு மருந்தான பரமாத்மா அழிவற்ற, தோஷமில்லாத வெற்றிவாகை சூடட்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

15. ப்ரதக்ஷிணம் :

நமோ ப்ரஹ்மண இத்யஸ்ய ப்ரஜாபதிர்விஶ்வேதே$_3$வா ஜ$_3$கதீ |
ப்ரதக்ஷிணே வினியோக$_3$: |
ஓம் நமோ ப்$_3$ரஹ்மணே நமோ அஸ்த்வக்ன$_3$யே நம: ப்ருதி$_2$வ்யை நம:|
ஓஷ$_4$தீப்ய் :| நமோ வாசே நமோ வாசஸ்பதயே நமோ விஷ்ணவே
மஹதே கரோமி || த்ரி: பரிக்ரம்ய, (மாத்யாஹ்னிக ஸந்த்யாயா
முபஸ்தானே படிதவ்யா மந்த்ரா :)

"ஆ ஸத்யேன ரஜஸா வர்த$_1$மானோ நிவேஶயன்னம்ருதம் மர்த்யஞ்ச |
ஹிரண்யயேன ஸவிதா ரதே$_2$னாSதே$_3$வோ யாதி
பு$_4$வனானி பஶ்யன் ||1||
உத்$_3$வயம் தமஸஸ்பரி ஜ்யோதிஷ்பஶ்யந்த$_1$ உத்தரம் |
தே$_3$வம் தே$_3$வத்ரா சூர்யமக$_3$ன்ம ஜ்யோதிருத்தமம் ||2||
ஓம் உது$_3$த்யம் ஜாதவேதஸம் தே$_3$வம் லஹந்தி$_1$ கேதவ: |
த்ருஶே விஶ்வாய ஸூர்யம் ||3||
ஓம் சித்ரம் தே$_3$வானாமுத$_3$காதநீகம் சக்ஷுர்மித்ரஸ்ய
வருணஸ்யாக்$_3$னே:|
ஆப்ரா த்யாவாபருதிவீ அந்தரிக்ஷ ஸூர்ய ஆத்மா
ஜக$_3$தஸ்துஷஶ்ச ||4||

ஓம் தச்சக்ஷுர்தேவஹிதம் புரஸ்தாச்சு$_2$க்ரமுச்சரத் | பஶ்யேம ஶரத: ஶதம் ஜீவேம ஶரத: ஶதம் நந்தாம ஶரத : ஶதம் மோதாமஶரத: ஶதம் ப$_4$வாமஶரத:
ஶதம் ஸ்ருணவாமஶரத: ஶதம் ப்ரப்$_3$ரவாம ஶரத: ஶதம்
அஜிதா: ஸ்யாம ஶரத: ஶதம் ஜ்யோக் ச ஸூர்யம் த்$_3$ருஶே ||5||
(அனந்தரம் ஹம்ஸ: ஸூசிஷத் இத்யயம் மந்த்ர: படிதவ்ய:1)

"நமோ ப்$_3$ரஹ்மணே" என்ற மந்திரத்திற்கு ப்ராஜாபதி ருஷி, விஶ்வேதேவர் ப்ரதிபாத்யர், ஜகதீ சந்தஸ், ப்ரதக்ஷிணம் செய்ய வேண்டியதில் உபயோகிக்க வேண்டும். ப்ரம்மாவுக்கு நமஸ்காரம். ப்ருதிவீக்கு நமஸ்காரம். பாரதிக்கு நமஸ்காரம். பாரதீபதிக்கு

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

நமஸ்காரம். மஹாவிஷ்ணுவிற்கு நமஸ்காரம். (மும்முறை வலம் வருதல்)

(மத்யான்ன வேளையில் படிக்க வேண்டிய மந்திரங்கள்)

ஸவிதாஶப்தவாச்யனான நாராயணன், ஶுத்தமான மனமுள்ள தேவதைகளையும் மற்றும் மானிடர்களையும் அவரவர்கட்கு உரிய இடங்களில்வைத்து எல்லா லோகங்களையும் பார்த்துக்கொண்டு தங்கத்தேரில் வருகிறான் மின்னும் இருட்டின் மேல் பக்கத்தில் இருக்கிற, ஒளிவடிவினனான சிறந்த தேவனான ஸூர்யனைப் பார்ப்பவர்களாகி உத்தமமான ஸூர்யனை அடைவோம். ஞானிகள் எங்கும் பரவியுள்ள, ஸர்வஜ்ஞனான, தேவனான, ஸூர்யஶப்தவாச்யனான பரமாத்வை, எல்லாருக்கும் மோஷம் கிடைப்பதற்காக, உத்தமனென்று உபதேஶிக்கிறார்கள்.

ப்₃ராஹ்மா முதலான எல்லா தேவர்களுக்கும் நல்லதைச் செய்யும், உலகத்திற்கு எல்லாப் பதார்த்தங்களைக் கண்களைப் போல் காண்பிப்பவன், ஒளியுடன் கூடிய சூரியன் ஆகாய முற்றத்தில் மேலே தோற்றமளிக்கிறான். அவனை வணங்குவோம். நூறு வருடங்கள் வரை காணுவோம். நூறு ஆண்டு வாழ்வோம். நூறு ஆண்டு வரை சந்தோஷத்துடன் இருப்போம். சுகத்துடனும் (க்ஷேமம்) சமாதானத்துடனும் இருப்போம். நூறு வருஷங்கள் வளர்ச்சியுடனும் (விருத்தி) இருப்போம். நூறு வருடம் வரை கேட்போம். நூறு வருடம் நன்றாகப் பேசுவோம். நூறு வருடம் வரை யாராலும் தோற்கடிக்கப்படாமல் இருப்போம் மற்றும் சூரிய நாராயணன் எனும் பிரம்ம ஜ்யோதியை ப்ரத்யக்ஷமாய் (நேரடியாய்) பார்க்கலாம்.

மாத்யாஹ்னிக உபஸ்தான மந்திரங்களில் ஆறாவதாய் ஹம்ஸ மந்த்ரத்தைச் சொல்ல வேண்டும். சிலர் இதனிடத்தில் "ய உதகாத்" எனும் மந்திரத்தைச் சொல்கிறார்கள். இந்த ஆறு மந்திரங்களினாலேயே உபஸ்தானம் (முடித்தல்) சொல்கிறார்கள். இந்த

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆறு மந்த்ரங்களினாலேயே உபஸ்தானம் (முடித்தல்) முழுமையாகுமென்று பிரமாணம் இருக்கிறது. அவகாசம் (இடைவெளி) இருந்தபோது, "உதுத்யம்" எனும் பதின்மூன்று ருக்குகள் உள்ள ஸௌரசூக்தத்தைச் சொல்ல வேண்டும்.

ஸாயம் ஸந்த்$_4$யாயாம் விஶேஷ :

சாயங்காலம் உபஸ்தானத்தில் (1) சிலர் காலைப்பொழுதின் உபஸ்தானத்தில் சொல்ல வேண்டிய மந்த்ரங்களையே சொல்கிறார்கள்; (2) இன்னும் சிலர் "இமம் மே வருண" முதலான வருண தேவதா மந்திரங்களையே சொல்கின்றனர். இரண்டாவதாகக் கூறப்பட்டது மிக சிரேஷ்டமானது.

"இமம் மே வருண" முதலான ஐந்து மந்திரங்களையும் அவைகளின் பொருள்களையும் வரும் பக்கத்தில் கொடுத்துள்ளோம்.

(யஜு:ஸ் ஸந்த்$_4$யாவந்த$_3$னே விஶேஷ:| உபஸ்த$_2$ானே வக்தவ்யா மந்த்$_1$ரா:

மித்ரயேதி த்ரயாணாம் உபஸ்த$_2$ானமந்த்$_1$ராணாம் விஶ்வாமித்ர ருஷி :

ப்ரத$_2$மோ க$_3$ாயத்ரீ ச$_2$ந்த$_3$ஸ்க: அவிஷ்டெ$_2$ள த்ரிஷ்டுப் ச$_2$ந்த$_3$ஸ்கௌ

த்ரயாணாம் மித்ரநாமக : பரமாத்மா தே$_3$வதா,

ஸூர்யோபஸ்த$_2$ானே வினியோக$_3$:||

- ஓம் மித்ரஸ்ய சர்ஷணி த்$_4$ருத : ஸ்ரவோ தே$_3$வஸ்ய ஸானஸிம் | ஸத்யம் சித்ரஸ்ரவஸ்ததம்.|

விசேஷ : மாத்$_4$யாஹ்னிக ஸந்த்$_4$யாவந்த$_3$னத்தில் அர்$_4$க்யம் முடிந்த பிறகு ஸந்த்$_4$யோபஸ்த$_2$ானம் தொடங்கி கே$_3$ாத்ரோச்சாரணத்தின் வரை எல்லாவற்றையும் முறைப்படி சொல்ல வேண்டும். பிறகு பூ$_4$தோச்சடானம் முதல் க$_3$ாயத்ரீ உபஸம்ஹாரத்தின் வரை எல்லாவற்றையும் முறையாக அனுஷ்டானம் செய்ய வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

யஜுஸ்ஸந்த்யாவந்தனத்தில் விஶேஷ: உபஸ்தானத்தில் சொல்ல வேண்டிய மந்திரங்கள். 'மித்ரஸ்ய' முதலிய மூன்று உபஸ்தான (முடித்தல்) மந்திரங்களுக்கு விஶ்வாமித்ரன் ருஷி: முதலாவதற்கு காயத்ரீ ச₂ந்த₃ஸ். கடைசி இரண்டிற்கு த்ரிஷ்டுப் சந்தஸ். மூன்று மந்திரங்களுக்கும் மித்ரநாமக பரமாத்மா தேவதை. இந்த மந்திரங்களை ஸூர்யநாமக பரமாத்மாவின் (பூஜையில்) உபயோகிக்க வேண்டும்.

பிரஜைகளைத் தாங்கும். வேண்டிய பிரியமான பொருளை (செல்வம்) அளிக்கும் பரமாத்மாவே, மிகவும் வியக்கத்தக்கது என்று பிரசித்தி பெற்ற மூன்று காலங்களிலும் ஓரே மாதிரியாயிருக்கும் உன் மகிமையைப் போற்றுகிறேன்.

மித்ரோஜனான் யாதயதி ப்ரஜானன் மித்ரோ தாதார
ப்ருதவீ முதத்யாம்
மித்ர: க்ருஷ்டீரமிஷா SSபி சஷ்டே ஸத்யாய ஹவ்யம்
க்ருதவத்விதேம |
ப்ரசமித்ரமர்தோ அஸ்து ப்ரஸ்வான் யஸ்த ஆதித்யா: ஶிக்ஷதி
வ்ரதேன | ந ஹந்யதே ந ஜீயதே த்வோதோ நைமைம்ஹோ
அஸ்னோத்யந்திதோ ந தூராத் ||
ந மோ ப்₃ரஹ்மண்ய தே₃வாய.........................கோ₃விந்த₃ாய
நமோநம:

என்றதைச் சொன்ன பிறகு கீழே உள்ள மந்திரத்தைச் சொல்லி "ஸர்வவேதேஷு யத்புண்யம்" முதலிய மந்திரங்களைச் சொல்ல வேண்டும்.

1) ஸ்துதோ மயா வரத₃ா வேத₃மாதா ப்ரசோத₃யந்தீ₁ ப₄வனே
த்விஜாதா | ஆயு: ப்ருதிவ்யாம் த்ரவிணம் ப்ரஹ்மவர்சஸம்
மஹ்யம் தத்வா ப்ரஜாதும் ப்₃ரஹ்மலோகம் ||

மித்ரநாமக பரமாத்மா அந்தந்த ஜனங்களின் தகுதியை நன்றாக அறிந்தவனாதலால் அந்தந்த ஜனங்களை கர்மங்களில் தூண்டுகிறான். மித்ரநாமக பரமாத்மாவே பூமியையும் ஆகாயத்தையும்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தாங்கியிருக்கிறான். மித்ரனே தேவதைகளையும், மானிட, மற்ற ஜீவராசிகளையும் பார்க்கிறான்; அதாவது அனைவரும் செய்யும் அனைத்துக் கர்மங்களுக்கும் சாக்ஷியாக (கண்ணாரக் கண்டவனாக) இருக்கிறான். மூன்று காலத்திலும் (இறந்த காலம், வரப்போகும் காலம், நிகழ்காலம்) ஓரே மாதிரியிருக்கும் இப்படிப்பட்ட பரமாத்மாவுக்கு நாம் பயன்படுத்தும் நெய் முதலிய பலவகை ஹவிஸ்களை (ஹோமத்தில் போடுபவை) அர்ப்பிக்கிறோம் (ஒப்படைத்தல்). (தாத்பார்யம்) எந்த பதார்த்தத்தையும் அர்ப்பணம் செய்யாமல் நாம் சாப்பிடக்கூடாது.

போ! (அழைத்தல்) அனைத்துப் பிராணிகளுக்கும் நண்பனான ஆதித்யநாமக பரமாத்மாவே எந்த மானிடன் உன் பூஜைக்காக விரதங்களை (கர்மங்களை)ச் செய்ய முயற்சி எடுக்கிறானோ அவன் மேன்மையான பலன்களை அடைபவனாகட்டும். உன்னால் காக்கப்பட்டவன் எவராலும் கொல்லப்படுவதில்லலை. யாராலும் தோற்கடிக்கப்படுவதில்லை. இப்பொழுதும், வரும் காலத்திலும் பாவ விசாரங்கள் இவனுக்கு ஒட்டாது. வேதங்களிளால் அறியப்படுபவனும், வாயு தேவனில் பெருமையுடன் வெளிக்காட்டிக் கொண்டவனும், அனைவரையும் தூண்டி வரத்தை அளிக்கவல்லவனுமான, காயத்ரீ நாமக பரமாத்மா என்னால் போற்றப்பட்டு இவ்வுலகில் ஆயுளையும், ஸம்பத்தையும் ப்ரம்ம தேஜஸ்ஸையும், நல்ல மக்களையும், இந்த வாழ்க்கை முடிந்தபின் பிரம்ம லோகத்தையும் அளித்து இஷ்டப்படி செல்பவனாகட்டும் |

யஜுர்வேதீ$_3$ய மாத்$_4$யாஹ்ன ஸந்த்$_4$யோவந்த$_3$னே விஶேஷ :

அங்கு சொல்ல வேண்டிய உபஸ்தான மந்திரங்களையே இங்கேயும் உபஸ்தான சமயத்தில் சொல்ல வேண்டும். "பஶ்யந்தோ ஜ்யோதிருத்தரம்" எனும் மந்திரத்தை "ஜ்யோதிஷ்பஶ்யந்த உத்தரம்" எனும் இடத்தில் சொல்ல வேண்டும்.)

(யஜுர்வேதீ$_3$ய ஸாயம் ஸந்த்$_4$யாயாம் விஶேஷ:)

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உபஸ்தானம் செய்யும் சமயத்தில் முன்னே தந்த மந்திரங்களை சொல்ல வேண்டும்.

- "இமம் மே வருண ஸ்ருதீஹவமத்யாச ம்ருடய | த்வாமவஸ்யு-ராசகெ ||1|| தத்வாயாமி ப்ரம்மணா வந்தமானஸ்ததாஸாஸ்தே யஜமானோ ஹவிர்பி:|| அஹேடமானோ வருணேஹ போத்யூருஸம்ஸ மா ந ஆயு: ப்ரமோஷீ ||2||
யச்சித்தி தே விஸோ யதா ப்ர தேவ வருண வ்ரதம் |
மினீமஸி த்யவி த்யவி ||3||

  யத் கிஞ்சேதம் வருண தைவ்யே ஜனேடபித்ரோஹம் மனுஷ்யாஸ்சராமஸி | அசித்தீ யத்தவ தர்மா யுயோபிம மானஸ்தஸ்மா தேனஸோ தேவரீரிஷ :||4||
கிதவாஸோ யத்ரிபுர்ந தீவி யத்வா காஸத்யமுத யன்ன வித்ம | ஸர்வா தா விஷ்ய ஸிதிரேவ தேவதா தே ஸ்யாம வருண ப்ரியாஸ :||5||

"இமம்மே வருண" எனும் மந்திரத்திற்கு ஸுனஸ்யேபன் ருஷி, வருணன் தேவதை, காயத்ரீ சந்தஸ், வருணனின் உபஸ்தானத்தில் வினியோகிக்க வேண்டும். ஹே | வருண நாமக பரமாத்மாவே | இந்த என் பிரார்த்தனையைக் கேள் | உடனே எனக்கு ஸுகத்தை அளி| உன்னிடமிருந்து தயை பெறுவதற்காக நான் உன்னைப் பிரார்த்திக்கிறேன். உன் அருளுக்காகவே இந்த மந்திரத்தினால் வணங்கிக் கொண்டு உன்னை நெருங்குகிறேன். யஜ்ஞத்தை புரிபவர்கள் தங்களிடமுள்ள ஹவிஸ் (தேவர்களுக்குக் கொடுக்கும் அன்னம் முதலியவை) களைக் கொடுத்து உன் அருளையே அடைய எண்ணுகிறார்கள். வருணனே | நம்மிடம் கருணைப்பார்வை கொண்டவனாய் நான் செய்யும் இந்தப் பிரார்த்தனையை ஏற்றுக்கொள் | மகனீயர்களால் போற்றப்பட்ட பரமாத்மனே | நம் ஆயுளைக் குறைக்காதே | வருணநாமகனான பரமாத்மாவே| உன் பிரஜைகளான நம்மிடம் உன்னை வழிபடும் விரதத்தில் தினந்தோறும் அறியாமையால்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தவறுகளை எத்தனை விதத்தில் செய்கிறோமோ தெரியாது. வருணநாமக பரமாத்மாவே, மானிடரான நாம் பகவானின் பக்தர்களான ஜனங்களில் என்னென்ன துரோகங்களைச் செய்கிறோமோ மற்றும் அறிவில்லாமையால் உன் கட்டளைகளை மீறுகிறோமோ அவைகளால் உண்டாகும் எல்லாப் பாவங்களுக்காக நம்மை இம்சிக்காதே (பீடிக்காதே). (நம் தவறுகளை எல்லாம் மன்னித்துவிடு என்று பொருள்). கொடிய ஜனங்கள் அறிவில்லாமல் நம் மேல் எந்தெந்த தவறுகளைச் சுமத்தியிருக்கிறாரோ, நிஜமாய் நாம் எந்தெந்தத் பாவங்களைச் செய்கிறோமோ, எந்த எந்தப் பாவங்கள் நமக்குத் தெரியாமல் செய்யப்பட்டவையோ, அந்த அனைத்துப் பாவங்களின் சேர்க்கையைக் கூட்டி நாசம் செய். பாவத்தை நாசம் செய்த பிறகு ஓ | வருணநாமக பரமாத்மாவே | நாம் உமக்கு அன்புடையவராய் ஆகிறோம்.

16. திங் நமஸ்கார :

- ப்ராச்யை தி$_3$ஶே யாஶ்ச தே$_3$வதா ஏதஸ்யாம்
  ப்ரதிவஸந்த் யேதாப்$_4$யஶ்ச நமோ நம:|
  தக்ஷிணாயை தி$_3$ஸே யாஶ்ச்சதே$_3$வதா ஏதஸ்யாம்
  ப்ரதிவஸந்த்$_1$ யேதாப்$_4$யஶ்ச நமோ நம:|
  ப்ரதீச்யை தி$_3$ஶே யாஶ்ச தே$_3$வதா ஏதஸ்யாம்
  ப்ரதிவஸந்த்$_1$ யேதாப்ய$_4$ஶ்ச நமோ நம:|
  உதீ$_3$ச்யை தி$_3$ஶே யாஶ்சதேவதா ஏதஸ்யாம்
  ப்ரதிவஸந்த் யேதாப்$_4$யஶ்ச நமோ நம:|
  ஊர்த்$_4$வாயை தி$_3$ஶே யாஶ்ச தே$_3$வதா ஏதஸ்யாம்
  ப்ரதிவஸந்த் யேதாப்$_4$யஶ்ச நமோ நம:|
  அத$_4$ராயை தி$_3$ஸே யாஶ்ச தே$_3$வதா ஏதஸ்யாம்
  ப்ரதிவஸந்த் யேதாப்$_4$யஶ்ச நமோ நம:|
  அவாந்த$_1$ராயை தி$_3$ஶே யாஶ்ச தேவதா ஏதஸ்யாம்
  ப்ரதிவஸந்த் யேதாப்$_4$யஶ்ச நமோ நம:|

கிழக்கு திசைக்கும் மற்றும் கிழக்கில் வாசம் செய்யும் அனைத்து தேவதைகளுக்கும் மறுபடியும் மறுபடியும் நமஸ்காரம். தக்ஷிண

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

(தெற்கு) திசைக்கும் அங்கு வாசம் செய்யும் அனைத்து தேவதைகளுக்கும் மறுபடியும் மறுபடியும் நமஸ்காரம். மேற்கு திசைக்கும் அங்கு வாசம் செய்யும் அனைத்து தேவதைகளுக்கும் மறுபடியும் மறுபடியும் நமஸ்காரம். வடக்கு திசைக்கும் அங்கு வாசம் செய்யும் அனைத்து தேவதைகளுக்கும் மறுபடியும் மறுபடியும் நமஸ்காரம். மேல்திசைக்கும் மற்றும் அங்கு வாசம் செய்யும் அனைத்து தேவதைகளுக்கும் மறுபடியும் மறுபடியும் நமஸ்காரம். மேல், கீழே (தாழ்ந்த) திசைகளுக்கும் அங்கு வாசம் செய்யும் அனைத்து தேவதைகளுக்கும் மறுபடியும் மறுபடியும் நமஸ்காரம். இடையே (நடுவில்) திசைக்கும் அங்கு வாசம் செய்யும் அனைத்து தேவதைகளுக்கும் மறுபடியும் மறுபடியும் நமஸ்காரம்.

- ஸந்த்$_4$யாயை நம: ஸாவித்ர்யை நம: க$_3$ாயத்ர்யை நம: ஸரஸ்வத்யை நம:
  ஸர்வாப்$_4$யோ தே$_3$வதாப்$_4$யோ நம: தே$_3$வீப்$_4$யோ நம:
  ருஷிப்$_4$யோ நம:
  கு$_3$ருப்$_4$போ நம: காமோஅகார்ஷீத் மன்யுரகார்ஷீன் நமோ நம:

- யாம் ஸத$_3$ா ஸர்வபூ$_4$தானி ஸ்த$_2$ாவராணி சராணி ச| ஸாயம் ப்ராதர் நமஸ்யந்தி$_1$ ஸாமாஸந்த்$_4$யாபிரக்ஷது || ஸாமாஸந்த்யா-பி$_4$ரக்ஷத்வோம் நமோ நம:| ப்ர$_3$ஹ்மண்யோ தே$_3$வகீபுத்ரோ ப்ர$_3$ஹ்மண்யோ மது$_4$ஸூத$_3$ன| ப்ர$_3$ஹ்மண்ய: புண்ட$_3$ரீகாக்ஷோ ப்ர$_3$ஹ்மண்யோ விஷ்ணரச்யுத:| நமோ ப்ர$_3$ஹ்மண்ய தே$_3$வாய கே$_3$ாப்$_3$ராஹ்மண ஹிதாய ச | ஜ$_3$கத்$_3$தி$_4$தாய க்ருஷ்ணாய கே$_3$ாவிந்த$_3$ாய நமோ நம:|| க்ஷீரேண ஸ்நாபிதே தே$_3$வி சந்த$_3$னேன விலேபிதே | பி$_3$ல்வபத்ரார்சி$_1$தே தே$_3$வி துர்கே$_3$ऽஹம் ஶரணம் க$_3$த:|| ஸ்ரீது$_3$ர்கே$_3$ஹம் ஶரணாக$_3$த ஓம் நமோ நம |
  ஆகாஶாத் பதிதம் தோயம் யத$_2$ாக$_3$ச்ச$_2$தி ஸாக$_3$ரம் |
  ஸர்வதே$_3$வநமஸ்கார: கேஶவம் ப்ரதிக$_3$ச்ச$_2$தி | கேஶவம் ப்ரதிக$_3$ச்$_2$சத்யோம் நமோ நம:||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

17. க$_3$ாயத்ரீ தே$_3$வியை அனுப்புவது

உத்தம இத்யஸ்ய வாமதே$_3$வ ருஷி: க$_3$ாயத்ரீ தே$_3$வதா, அனுஷ்டுப் ச$_2$ந்த$_3$: காயத்ர்யுத்$_3$வாஸனே வினியோக$_3$:| உத்தமே ஶிக$_2$ரே ஜாதே பூம்யாம் பர்வதமூர்த$_4$னி | ப்$_3$ராஹ்மணேப்யோ Sப்$_4$யனுஜ்ஞாதா க$_3$ச்$_2$சதே$_3$வி யத$_2$ாஸ•கம் | க$_3$ச்ச$_2$தே$_3$வி யத$_2$ாஸ•க$_2$ம் ஓம் நமோ நம் (இத்யுத்வாஸ்ய)

ஸந்தியா காலத்தில் தியானம் செய்வதற்கு மேலான சக்தியுடையவனான பகவானுக்கு நமஸ்காரம். உலகிற்கு (அன்னை போல்) மூலகாரணனும் மற்றும் அன்புள்ளவனுக்கு நமஸ்காரம். குணங்களைத் தொடர்ந்து பேசுபவர்களிடம் (பக்தர்களிடம்) அன்பு கொண்ட பகவானுக்கு நமஸ்காரம். அனைத்தும் அறிந்த பகவானுக்கு நமஸ்காரம். அனைத்து தேவதைகளுக்கு நமஸ்காரம். அனைத்து ருஷிகளுக்கு நமஸ்காரம். அனைத்து தாய்மார்களுக்கு நமஸ்காரம். அனைத்து தந்தைகளுக்கு நமஸ்காரம். அப்படியே எல்லா குருக்களுக்கும் நமஸ்காரம்.

நான் செய்த பாவங்கள் அனைத்தும் விருப்பத்தால் (ஆசை) உண்டானது. நான் செய்த பாவங்களை எல்லாம் கோபம் செய்த (அந்த பாவம் புரிய வைத்த) காம-க்ரோதம் (விருப்பு வெறுப்பு)களுக்கு தண்டனை அளியுங்கள் என்று பொருள்.

எந்த தேவதையை மானிடர் முதலிய சரத் (உயிருள்ள) (சுறுசுறுப்பான) மற்றும் மரம் முதலிய (ஜடமானது) தினம்தோறும் காலை, மாலை நமஸ்காரம் செய்கிறதோ (யாரின் எண்ணத்திற்கேற்றபடியே செயல்படுத்துகிறதோ) அந்த ஸந்தியா நாமக பரமாத்மன் என்னை நன்றாக காக்கட்டும். அந்த ஸந்தியோ தேவதையும் என்னையும் நன்றாக காக்கட்டும். நிரம்பிய (பூர்ண) வனான ஸந்தியோ நாமக பரமாத்மனுக்கு மேலும் மேலும் நமஸ்காரம். தேவகி புதல்வனான பகவான் வேதங்களைக் காக்க திறமையுடையவன்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பகவான் மது முதலிய அசுரர்களை சம்ஹாரம் செய்பவனாய் பிராம்மண (அந்தணன்) முதலான நல்லோர் கூட்டத்தைக் காக்க வல்லமை பொருந்தியவன். அதிகாரிகளில் தலைசிறந்தவருமான பிரம்ம தேவனிடம் தன் மலர்ந்த கண்களால் மிகையான அன்பை வெளிக்காட்டுபவன். மோக்ஷமடைந்த ஜீவராசிகளிடம் எப்பொழுதும் பொருந்தியவன். அதிகாரிகளில் தலைசிறந்தவருமான பிரம்ம தேவனிடம் தன் மலர்ந்த கண்களால் மிகையான அன்பை வெளிக்காட்டுவான். மோக்ஷமடைந்த ஜீவராசிகளிடம் எப்பொழுதும் சுற்றியே இருந்து அவரிடம் தன் அன்பைக் காட்டுவான். 'ப்ரம்ம' சொல்லிற்கு முறையே (1) வேதம் (2) அந்தணன் (3) பிரம்ம தேவா (4) விடுதலையடைந்த ஜீவராசி என்று பொருள் செய்து கொள்ள வேண்டும். வேதரக்ஷகனான (காப்பாற்றுபவன்) கோ - ப்ராம்மண ரக்ஷகனான, விஸ்வஹிதேச்சு - உலக நன்மையைக் கருதுபவனுமான - க்ருஷ்ணனுக்கு - சம்சார சமுத்திரத்தில் மூழ்கி விடுவோரை மேல் தூக்குபவன், கோவிந்தா = கொடியவரின் ஆட்சியினால் நஷ்டமடைந்த பூமியை, தீயவர்களை அழித்துத் தீங்கில்லாமல் நமக்குச் சம்பாதித்தத் தந்த பகவானுக்கு நமஸ்காரங்கள், அன்பு கூர்ந்த வணக்கங்கள். தயை என்னும் பாலிலிருந்து நிறைய நீராடியவளே, (கருணையுள்ளத்தால் நிரம்பியவளே) சந்தனத்தைப் போல் சாந்தி (அமைதி) தரும் குணங்களுடையவளே, வில்வபத்ரத்தால் (முதலிய) பூஜை செய்ய கிடைப்பவளே, நல்லொழுக்கம், நன்மை முதலிய உயர்ந்த குணங்களுடன் விளங்குபவளே, பக்தியில்லாமல் இருப்போர்களால் அறிய முடியாதவளே, உன்னைத் தஞ்சம் புகுந்துள்ளேன். குணக்குன்றான உனக்கு ஆயிரமாயிரம் நமஸ்காரம். ஆகாயத்திலிருந்து வீழ்ந்த ஜலம் சமுத்திரத்தை அடைவது போல் எல்லாத் தேவதைகளுக்குச் செய்த நமஸ்காரங்கள் லக்ஷ்மியின் மணாளனான கேசவனுக்கு அர்ப்பணமாகிறது. அந்த பூர்ணனான (நிறைந்த) பரப்ரம்மனுக்கு நமஸ்காரங்கள். "உத்தம" என்ற மந்த்ரத்திற்கு வாமதேவன் ருஷி, காயத்ரீ தேவதை, அனுஷ்டுப் சந்தஸ்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காயத்ரீயை திருப்பி அனுப்புவதற்கு வினியோகம் செய்ய வேண்டும். பூமியில், மலையின் மேல் உச்சியில் வாழும் முனிகளின் கூட்டத்திற்கு தோற்றமளித்த (உண்டான) காயத்ரீ நாமக பரமாத்மனே, அன்புடன் கூடிய நம்மால் போற்றப்பட்டவனான உனக்கு மறுபடியும் மறுபடியும் நமஸ்காரங்கள். (இந்த மந்திரத்தால் விஸர்ஜனம் செய்து (அனுப்பி)-

- ஸர்வவேதே$_3$ஷுயத் புண்யம் ஸர்வதீர்தே$_2$ஷு யத்ப$_2$லம் | தத்ப$_2$லம் ஸர்வமாப்னோதி ஸ்துத்வா தே$_3$வம் ஜனார்த$_3$னம் || வாஸனாத்$_3$ வாஸுதே$_3$வோஸி வாஸிதம்தே ஜகத்ரயம் | ஸர்வபூ$_4$த நிவோஸோஸி வாஸுதேவ நமோஸ்துதே ||
  நமோ Sஸ்த்வனந்தாய ஸஹஸ்ர மூர்த$_1$யே
  ஸஹஸ்ரபாத$_3$ாக்ஷிஶிரோருப$_3$ாஹவே | ஸஹஸ்ரநாம்னே
  புருஷாய ஶாஶ்வதே ஸஹஸ்ரகோடியுக$_3$த$_4$ாரிணே நம:|
  ஓம் ப$_4$த்ரம் நோ அபிவாதய மன:||
  ஓம் ஶாந்திஶ்$_1$ஶாந்திஶ்$_1$ஶாந்தி$_1$: ஸர்வாரிஷ்டஶாந்தி$_1$ரஸ்து |
  ஸமஸ்தமங்க$_3$ளாவாப்திரஸ்து || சதுஸ்ஸசாக$_3$ரபர்யந்த$_1$ம்
  கே$_3$ாப்$_3$ராஹ்மணே$_4$ப்ய: ஶுப$_4$ம் ப$_4$வது | கோத்ரமுச்சார்ய ....
  ....கே$_3$ாத்ரோத்பன்ன: அஹம் ஸுத்ரானுயாயீ
  .... ஶர்மா அஹம் பே$_4$ா : அபி$_4$வாத$_3$யே |
  (பூ$_4$மிமுபஸ்ப்ருஶன் ப்ரணமேத்||)

அனைத்து வேத$_3$ பாராயணம் செய்வதால் எந்த$_3$.புண்ணியம் கிட்டுமோ அந்த எல்லாப் புண்ணியமும், கெட்ட ஜனங்களை நாசம் செய்யும் பகவானைப் போற்றுவதால், கிடைக்கிறது. எல்லா உலகங்களும் உனக்கு வசிக்குமிடமானதால் நீ வாஸுதே$_3$வனென்று அழைக்கப்படுகிறாய். மூவுலகங்களும் உன் உள்ளேயே (உன்னையே) வீடாகக் கொண்டுள்ளது. நீ அனைத்து பிராணிகளில் யஜமானனாக (தேருக்குள்ளே இருப்பவனாக) இருக்கிறாய். வாஸுதே$_3$வனே, எல்லாவற்றிற்கும் வீடாக மற்றும் அனைவருள் வாசம் செய்து கொண்டிருக்கும் பகவானே, உனக்கு என் நமஸ்காரங்கள்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஆயிரமாயிரம் உருவமுள்ள, ஆயிரமாயிரம் கால், கண், தலை, கைகளுள்ள, ஆயிரம் பெயர்களைக் கொண்ட, ஆயிரமாயிரம் கோடி யுகங்கள் (க்ருதம் முதலிய யுகங்கள்) வரை இருப்பவனாதலால், அழிவற்றவனான, தே$_3$ஶத: காலத: கு$_3$ணத: (இடம், காலம், பண்பு) வ்யாப்தனான புருஷநாமக, பரமாத்மாவுக்கு (ஆத்மாவுள்ளிருப்பவன்) நமஸ்காரம். (வணக்கங்கள் பல) பரமாத்மாவே, சுபமான, நிதானித்த, ஆழ்ந்த எண்ணங்களையே என் மனதில் தூண்டு. நம் ஆத்யாத்மிக (ஆன்மிக) ஆதிதைவிக (தைவத்தால் உண்டானவை), ஆதிபௌதிக (பூதத்தால் உண்டானவை) கஷ்டங்கள், சாந்தி (அமைதி) பெறட்டும். அனைத்து விதமான அசுபங்கள் கஷ்டங்கள் சாந்தி (அமைதி) பெறட்டும். அனைத்து விதமான அசுபங்கள் நீங்கட்டும். எல்லா சுபங்கள் உண்டாகட்டும். சதுஸ்ஸாகர பர்யந்தம் கோப்ராம்மண (பசு, அந்தணன்) முதலிய எல்லா பிராணிகளுக்கும் நல்லது உண்டாகட்டும். (இப்படிப்பட்ட .... கோத்திரத்தை சேர்ந்த நான், கனவான்களே உமக்கு நமஸ்கரிக்கிறேன் (வணங்குகிறேன்) என்று சொல்லிக் கொண்டு, வீட்டில் ஆசான் பெரியோர்களுக்கு பூமி தொட்டு (எட்டு அங்கங்கள் படும்படி) நமஸ்காரம் செய்ய வேண்டும்.

18. பகவானுக்குச் சமர்ப்பணம் :

- யஸ்ய ஸ்ம்ருத்யா ச நாமோக்த்யா தபஸ்ஸந்த்$_4$யாக்ரியாதி$_3$ஷு | ந்யூனம் ஸம்பூ$_1$ர்ணதாம் யாதி ஸத்$_3$யோ வந்தே$_3$ தமச்யுதம் | மந்த்$_1$ரஹீனம் க்ரியாஹீனம் ப$_4$க்திஹீனம் ரமாபதே | யத்க்ருதம் | து மயா தே$_3$வ பரிபூர்ணம் தத$_3$ஸ்துமே | அனேன ப்ராத: ஸந்த்$_4$யாவந்த$_3$னேன ப$_4$க$_3$வான் ஸவித்ருநாமக : ஸ்ரீ லக்ஷ்மீ நாராயண: ப்ரீயதாம் || ப்ரீதோ பவது | || ஸ்ரீ கிருஷ்ணார்பணமஸ்து ||
- அத்யான இதிமந்த்$_1$ரஸ்ய ஶ்யாவாஶ்வ ஆத்ரேய: ஸவிதா க$_3$ாயத்ரீ ஜபஸ்த$_2$ானப்ரோக்ஷணே வினியோக$_3$:| அத்யானோ தே$_3$வ ஸவித:| ப்ரஜாவத்ஸாவீஸ் ஸௌப$_4$க$_3$ம் பராதுஷ்வப்பனியகும் ஸுவ | விஶ்வானி தேவஸவிதர்து$_3$ரிதானி பராஸுவே 1 யத்$_3$ப$_4$த்ரம்

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

தன்ம ஆஸ"வ | இதி ஜபஸ்தளம் ப்ரோக்ஷ்ய ஸ்ப்ருஷ்ட்வா ஹ்ருத$_3$யம் ஸ்ப்ருஶேத் ||

இதி ப்ராத:ஸந்த்$_4$யா ஸம்பூ$_1$ர்ணா

|| ஸ்ரீ கிருஷ்ணார்பணமஸ்து||

எவரின் நினைவால் மற்றும் பெயரைச் சொல்வதால் தவம், ஸந்தியா வந்தனம் முதலான செயல்களில் குறையுடையது முழுமையடைகிறதோ, அந்த அச்யுதனை நமஸ்காரம் செய்கிறேன். மந்திரங்களின்றி, செயல்களின்றி, பக்தியில்லாமல் செய்யப்பட்ட கர்மம், ரமாபதே | நின் அருளால் முழுமை பெறட்டும். (இப்படி இந்தக் கர்மத்தினால் பரமாத்மா சந்தோஷமடையட்டும் என்று சொல்லிக்கொண்டு பகவானிடம் சமர்ப$_1$ணம் செய்ய வேண்டும்.)

"அத்யான" என்ற மந்திரத்திற்கு ஶ்யாாவாஶ்வ ஆத்ரேயர் ருஷி, ஸவிதா தேவதை, காயத்ரீ சந்தஸ், ஜபம் செய்த இடத்தைத் தெளிப்பதில் உபயோகிக்க வேண்டும். பிரஜைகளை செல்வங்களைப் போல் காக்கும் ஸவித்ருநாமக நாராயணனே, நீ எங்களுக்கு, மங்களகரமானதை எல்லாம் உண்டாக்கு. (இந்த மந்திரத்தைச் சொல்லிக் கொண்டு ஜபம் செய்த இடத்தைத் தெளித்து இதயத்தைத் தொட்டுக் கொள்ள வேண்டும்).

*** அபி$_4$வாத$_3$னம் செய்யும் முறை :** அறிந்தவர்களிடமிருந்து ப்ரவரம் (குலம்), கோத்திரம் மற்றும் சூத்திரத்தைத் தெரிந்து கொண்டு (வேதத்தின் பிரிவு) கீழே குறிப்பிட்ட முறையில் தேவையான (கூடுதல் செய்து அபி$_4$வாத$_3$ன (கோத்திரம் பெயர் சொல்லி நமஸ்காரம்) வாக்கியத்தைச் சொல்ல வேண்டும்.

உதாரணம் : ஆத்ரேய - ஆர்சனனாஸ - வ்யாவாஸ்வேதித்ரி - ப்ரவரான்வித - அத்ரிகே$_3$ாத்ரோத்பன்ன - ஆஶ்வலாயன - ஸூத்ரானுயயீ கே$_3$ாவிந்த$_3$ஶர்மா அஹம்பே$_4$ா அபி$_4$வாத$_3$யே - தெளிவுபடுத்த ஆத்ரேய - ஆர்சனானஸ என்று சந்தி செய்யாமல் எழுதப்பட்டிருக்கிறது.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

உண்மையில் ஆத்ரேயார்சனானஸ..................த்ரிப்ரவரான்விதாத்ரி ....என்று ஸந்தி$_4$ செய்தே சொல்ல வேண்டும். இதே மாதிரி தத்தம் ப்ரவர கே$_3$ாத்ர ஸூத்ரங்களைச் சொல்லித் தன் பெயரைச் சொல்ல வேண்டும்.

|| ஸ்ரீ கிருஷ்ணார்பணமஸ்து ||

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ :

நிர்மால்ய தீர்த்தம் எடுத்துக் கொள்ளுதல் மேலும் விஷ்ணுரஹஸ்ய புராணத்தில் சொல்லியபடி நாமமுத்ரை போட்டுக் கொள்ளுவதன் விவரம்



In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஸாலக்$_3$ராமஶிலாயாம்து நித்யம் ஸன்னிஹித : கலி: |
பீ$_4$மஸேனமஹாப$_3$ாஹோ கத$_3$யா நோதனம் குரு ||

ஸாலிக்ராமகற்களில் எப்பொதும் கலி புருஷன் வாஸம் செய்து வருகிறான். மகாபலசாலியான ஓ! பீமஸேன ஸ்வாமியே ! அவனை கதாயுதத்தால் அங்கிருந்து வெளியே துரத்துங்கள், என்பதாக பிரார்த்தனை செய்து ஸாலிக்ராமத்தை சுத்தமான ஜலத்தால் அலம்பி, பிறகு அம்ப்$_4$ரணீ ஸூக்தம் சொல்லிக் கொண்டு, நிர்மால்யாபிஷேகம் செய்ய வேண்டும். அத்தீர்த்தத்தை ஶங்கம், மேலும் பிராணதேவன், கருடன், சேஷன் முதலானவர்களுக்குக் கொடுத்துப் பிறகுதான் எடுத்துக் கொள்ள வேண்டும்.

"அகாலம்ருத்யுஹரணம் ஸர்வவ்யாதிநிவாரணம் |
ஸமஸ்தது$_3$ரிதோபஶமனம் விஷ்ணுபாதே$_3$ாத$_3$கம் ஶுபம் ||

இந்த விஷ்ணுபாதோதகமான நிர்மால்ய தீர்த்தத்தை உட்கொள்வதால் அகாலமரணம் நேராது; எல்லா வியாதிகளும் எல்லா பாபங்களும் நாசமடைகின்றன என்பது கருத்து. இந்தச் சுலோகத்தைச் சொல்லிக் கொண்டு மூன்று தடவை தீர்த்தத்தை எடுத்துக் கொள்ள வேண்டும்.

"கே$_3$ாபீசந்த$_3$ன பாபக்$_4$ன விஷ்ணுதே$_3$ஹஸமுத்$_3$ப$_4$வ |
சக்ராங்கி$_1$த நமஸ்துப்$_4$யம் த$_4$ாரணான் முக்திதே$_3$ா ப$_4$வ ||"

பிறகு கோபீசந்தனத்தை இவ்வாறு பிரார்த்திக்க வேண்டும். ஸ்ரீமந்நாராயணனின் தேகத்திலிருந்து உண்டானதும், எல்லாப் பாபங்களையும் போக்குகின்றதும், சக்ரத்தால் அடையாளம் செய்யப்பட்டதுமான ஓ! கோபீ சந்தனமே, உனக்கு நமஸ்காரம், உன்னை தரிசிப்பதால் (போட்டுக் கொள்வதால்) எனக்கு மோக்ஷத்தைக் கொடு, இவ்வாறு பிரார்த்தித்து நிர்மால்ய தீர்த்தத்தை இடது கையில் போட்டுக் கொண்டு,

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஆதாய மிருத்ஸ்னாம் வாமேன மூல மந்த்ராதி மந்திரிதாம் |
குர்யாத் த்வாதசபுண்ட் ராணி விப்ரச்சத்வாரி பாஹூஜ ||"

"ஓம் நமோ நாராயணாய" என்கிற மூல மந்திரத்தை ஜபித்துக் கொண்டு கோபீ சந்தனத்தைத் தேய்க்க வேண்டும். பிறகு பிராம்மணன் பன்னிரண்டு நாமங்களைப் போட்டுக் கொள்ள வேண்டும். க்ஷத்ரியன் நான்கு நாமங்களைப் போட்டுக் கொள்ள வேண்டும்.

"வைஶ்ய: புண்ட்$_3$ரத்$_3$வயம் குர்யாத் ஶூத்$_3$ராத்$_3$யா அபரேSகி$_2$லா:|
வேத$_3$ானதி$_3$ க்ருதா யே து ஸர்வேஷாமபி யோஷித :|
ஏகமேவப்ரகுர்வீரன் லலாடே தூர்த்$_3$வபுண்ட்$_3$ரகம் ||

வைச்யன் இரண்டு நாமங்களைத் தரிக்க வேண்டும். ஶூத்ரன் முதலான வேதத்தில் அதிகாரமில்லாதவர்களும், ஸர்வ வர்ணங்களில் (ஜாதியில்) இருக்கின்ற ஸ்த்ரீகளும் நெற்றியில் ஒரு நாமத்தை மாத்திரம் தரிக்க வேண்டும்.

"லாலடே ஹ்ருத$_3$யே நாபே$_4$ரூர்த்$_4$வம் குக்ஷித்வயே க$_3$ளே ||
கர்ணமூலத்$_3$வயே பா$_3$ஹ்வோ: ப்ருஷ்ட$_2$தே$_3$ஶே ச மூர்த$_4$னி ||
ஏவம் ஸ்த$_2$ானத்$_3$வாத$_3$ஶகே விப்ர: புண்ட்$_3$ராணி த$_4$ாரயேத் ||"

பிராம்மணன் நெற்றியிலும், ஹ்ருதயத்திலும் (மார்பு), நாபி (தொப்புள்)யின் மேல் பாகத்திலும், வயிற்றின் இரண்டு பக்கங்களிலும் கழுத்திலும் இரண்டு காதுகளுக்குக் கீழேயும், இரண்டு புஜங்களிலும், முதுகின் பின்புறமும், தலையின் மேலும் மொத்தம் பன்னிரண்டு நாமங்களைத் தரிக்க வேண்டும்.

"த$_3$ண்ட$_3$ாகாரம் லலாடே து பத்$_3$மாகாரம் து வக்ஷஸி |
அன்யத் ப்ரதீ$_3$பகலிகா ஸத்$_3$ருஶம் விஷ்ணுதத்பர: ||"

நெற்றியில் நாமம் தண்டம் (தடி) போலவும், மார்பில் போடும் நாமம் தாமரை இதழ் போலவும், பாக்கி நாமங்கள் விளக்கு ஜ்வாலை போல் நீண்டும் இருக்க வேண்டும்.

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

"ஊர்த்$_4$வபுண்ட்ரம் து நிச்சித்ரம் லலாடே யஸ்யகஸ்யசித் |
த்ருச்யதே தத்$_3$விஜானீயாத் ஶ்வ: பாதம் ந ஸம்ஶய: ||"

நெற்றி நாமத்தை விரலால் த்வாரம் செய்து அதன் மேல் முத்ரை போட்டுக் கொள்ள வேண்டும். நாமம் த்வாரம் செய்யாமல் இருந்தால் அது நாயின் காலுக்கு சமானமென்று அறிய வேண்டும்.

"ஊர்த்$_4$வபுண்ட்$_3$ரவிஹீனம் து ஶ்மஶானஸத்$_3$ருஶம் முக$_2$ம் |
தத்$_3$த்$_3$ருஷ்ட்வைவ நரஸ்தூர்ணம் ஆதி$_3$த்யமவலோகயேத்: ||"

எந்த பிராம்மணனின் முகத்தில் நெற்றி நாமம் இல்லையோ, அப்பேர்ப்பட்ட முகம் ச்மசான (சுடுகாடு)த்திற்கு சமம் என்று அறிய வேண்டும். அத்தகைய முகத்தைப் பார்த்தால் உடனே சூர்யபகவானை பார்க்க வேண்டும்.

"குர்யாத$_3$ஹரஹ: பஶ்சாத் திலகோபரி முத்$_3$ரிகா: |
கபோலத$_3$க்ஷிணே சக்ரமுத$_3$ரே சக்ரபஞ்ச$_1$கம் ||"

பிறகு நாமத்தின் மேல் முத்திரை போட்டுக் கொள்ள வேண்டும். வலது கபோலத்தில் ஒரு சக்ரமும், வயிற்றில் ஐந்து சக்கரங்களும்.

"ஹ்ருதி$_3$ த்ரீணி த்$_3$வயம் பார்ஶ்வே ஸ்தனே த்ரீணி பு$_4$ஜே த்வயம் |
கர்ணமூலே த்$_3$வயம் கண்டே$_2$ வாமே பா$_3$ஹௌ ததை$_3$ககம் ||"

மார்பில் மூன்று சக்ரங்களும், வலது பக்கத்தில் இரண்டு சக்ரங்களும், வலது மார்பகத்தில் மூன்று சக்ரங்களும், வலது புஜத்தில் இரண்டு சக்ரங்களும், வலது காதுக்கு கீழ் இரண்டு சக்ரங்களும், கழுத்தில் ஒரு சக்ரமும், இடது புஜத்தில் ஒரு சக்ரமும் போட்டுக் கொள்ள வேண்டும்.

"அத$_2$ வாமே கபோலே து ஶங்க$_2$மேகம் து பார்ஶ்வகே |
த்$_3$வயம் ஸ்தனே த்ரயம் ப$_3$ாஹௌ த்$_3$வயம் கர்ணேSத$_4$ரே
த்$_3$வயம்||"

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

பிறகு இடது கபோலத்தில் ஒரு சங்கமுத்ரையும், வயிற்றின் இடது பக்கத்தில் ஒன்றும், இடது மார்பகத்தில் இரண்டு சங்கமுத்ரையும், இடது புஜத்தில் மூன்று சங்கமுத்ரையும், இடது காதுக்குக் கீழ் இரண்டு ஶங்கமுத்ரையும் வலது புஜத்தில் ஒரு ஶங்கமுத்ரையும் தரிக்க வேண்டும்.

"ஏகம் தக்ஷிணபாஹௌ ஸ்யாதத கௌமோத கீம்ச்ருணு |

பிறகு கதாமுத்ரை போட்டுக் கொள்ள வேண்டும். அதன் விவரம்

"ஏகாலலாடேவாமேது பார்ச்வேச ஸ்தனதேசகே |
ஏகைகாஸவ்ய பாரனானது த்வயம் கார்யம்சபக்தித :||

நெற்றியில் ஒரு கதாமுத்ரையும், வயிற்றின் இடது பக்கத்திலும், இடது மார்பகத்திலும் ஒவ்வொரு கதாமுத்ரையும் இடது புஜத்தில் இரண்டு கதாமுத்ரைகளும் தரிக்க வேண்டும்.

"அத$_2$ பத்மத்$_3$வயம் வக்ஷஸ்ஸ்த$_2$லகே த$_3$க்ஷபாாஶ்வகே "

பிறகு மார்பிலும், வயிற்றின் வலது பக்கத்திலும் இரண்டிரண்டு பத்ம முத்திரைகளை தரிக்க வேண்டும்.

"ஸர்வத்ர நாமமுத்$_3$ராச ஏகைகா ச ந ஸம்ஶய:|

எல்லா நாமத்தின் பேரிலும் ஒவ்வொரு நாராயண முத்ரை போட்டுக் கொள்ள வேண்டும்.

ஸ்ரீமத்வாதிரார்ஜதீர்த்தர் அவருடைய தீர்த்தப்பிரபந்தம் என்கிற கிரந்தத்தில் கோபீசந்தனமாஹத்மியத்தைக் கீழ்க்கண்டவாறு வர்ணிக்கிறார்.

"இந்த கோபீ சந்தனத்தை நெற்றியில் வைத்துக்கொண்டால் துரத்ருஷ்டரேகைகள் அழிக்கப்படுகின்றன. ஊர்த்$_4$வபுண்ட்$_3$ரம் வைத்துக் கொள்வதனால் உத்தமலோகத்திற்குப் போவதற்கு வழி

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

காண்பிக்கப்படுகிறது. மேலும் ஜனங்களுடைய வினைகள் தீர்க்கப்படுகின்றன."

இத்தகைய மகிமையுள்ள கோபீ சந்தன நாமங்கள் சங்கு, சக்கரம் முதலிய விஷ்ணுவினுடைய ஆயுதங்களுடன் எல்லா மாத்வ ஜனங்களும் தரித்துக் கொள்ள வேண்டியவை. நாம, முத்திரா தாரணம் இல்லாமல், நிர்மால்ய தீர்த்தம் எடுத்துக் கொள்ளாமல் எந்தக் காரியம் செய்தாலும், அது பலனற்றுப் போய்விடும். ஆகையால் இது மிகவும் அவசியமானது."

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

In Public domain. Digitization Muthulakshmi Research Academy

ஸ்ரீ T. ராகவேந்திரன் அவர்கள் 63 வயது ஆன ஓர் இளைஞர். B.Com., பட்டதாரியான அவர், தில்லியில் 20 ஆண்டுக்கும் மேலாக வசித்ததனால் தன் பெயருடன் 'DELHI' யைச் சேர்த்துக் கொண்டுள்ளார். அன்னார் மத்திய அரசில், Ministry of Finance- ல் உயர் பதவி (Joint Controller) யிலிருந்து ஓய்வு பெற்று தன் சொந்த மாநிலமான கோயம்புத்தூருக்கு 2005-ம் ஆண்டு குடி பெயர்ந்தவர். இயல்பாகவே தீவிர கடவுள் பக்தியுள்ளவர். மேலும் மத்வ ஸித்தாந்தத்தில் மிகவும் ஈடுபாடு கொண்டு, தனது ஞான, பக்திகளை வளர்த்திக் கொள்ளும் பொருட்டு அயராது முயன்று வருபவர். இம்முயற்சியில் கடந்த நான்கு ஆண்டுகளாக, ஸ்ரீமதாச்சார்யரின் ஸர்வமூலக்ரந்தங்களையும், மற்றும் இதர க்ரந்தங்களையும், என்னுடைய சிஷ்யனாக இருந்து கற்றுக் கொள்வது குறித்து பெருமை கொள்கிறேன். எனது ப்ரிய சிஷ்யரான **ஸ்ரீ T. ராகவேந்திரன்** எழுதிய '**காயத்ரீயின் ஒளி**' என்ற புத்தகம் அவரது மூன்றாவது படைப்பு. அவரது இறைப்பணி மேன் மேலும் தொடர ஸ்ரீ ஹரி வாயுகுருகளிடம் பிரார்த்தனை செய்கிறேன்.

உள்ளகரம் N. ஸ்ரீ நிவாஸராவ்
கோயம்புத்தூர்
(மத்வ ஸித்தாந்த பாரதி.)

915002222

அச்சிட்டோர்
ஸ்ரீ சக்தி பிரமோஷனல் லித்தோ பிராசஸ்